வேலணை மேற்கு பெரியபுலம்

# மஹா கணபதிப் பிள்ளையார்

## (முடிப்பிள்ளையார்) ஆலயம்



புனராவர்த்தனப் பிரதிஷ்டா நூதன இராஜகோபுர

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

பார்த்திப வருடம் சித்திரை 30ஆம் நாள் 13.05.2005

உ

கணபதி துணை

## வேலணை மேற்கு பெரியபுலம்

# மஹா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயம்

புனராவர்த்தனப் பிரதிஷ்டா நூதன இராஜகோபுர

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

**பார்த்திப வருடம் சித்திரை 30 ஆம் நாள்**

**13.05.2005**

மலரின் பெயர் :- புனராவர்த்தனப் பிரதிஷ்டா நூதன இராஜகோபுர மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

உரிமை :- மலர்க்குழு

ஆசிரியர் : திரு.மு.திருஞானசம்பந்தபிள்ளை

காலம் :- 13.05.2005

பக்கங்கள் :- 144

வெளியீடு : நிர்வாகக்குழு,
மஹாகணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயம்.

பதிப்பு :- கரிகணன் பிறிண்டேர்ஸ்,
காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2717. 4590123



# சமர்ப்பணம்

கருணை மகாகணபதியே
பெரியபுல ஐங்கரனே அரிமருகா
உனை மறவாது அருள் பெறவே
வரந்தருவாயே

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோவில் (முடிப்பிள்ளையார் கோவில்) மூலமூர்த்திமுதல் பரிவார மூர்த்திகளுக்கும், புதிய இராசகோபுரத்திற்கும் மகா கும்பாபிடேகம் எனும் திருக்குடமுழுக்கு தாரண வருடம் பங்குனித் திங்கள் 17ஆம் நாள் (30.03.2005) புதன் கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது.

இச்சிறப்புநிகழ்வினை வரலாற்றில் பதியத்தக்கதாக கும்பாபிடேக சிறப்புமலர் ஒன்றினை வெளியிட வேண்டுமென ஆலய பரிபாலன சபையினரும் அடியவர்களும் விரும்பினர். புலம்பெயர்ந்து வாழும் விநாயகன் அடியவர்களாகிய நம் மூரவர்களும் ஊக்கப்படுத்தினர்.

சென்ற 1990ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிடேகத்தினை நினைவுகூர முதன்முதலாக கும்பாபிடேகச்சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட்டது அப்பணியினை நிறை வேற்றியவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப் பீடாதிபதியாக விளங்கிய அமரர் பேராசிரியர் செ.பாலச்சந்திரன் அவர்கள் .

அம்மலர் முகத்தில் அவர் "அடுத்த சிறப்பு மலர் இராஜகோபுர மகா கும்பாபிடேகச் சிறப்பு மலராகவும் சித்திரத்தேர் சிறப்பு மலராகவும் மலர ஐங்கரன் அருள்புரிவாராக" என வேண்டினார்.

அன்னாரின் வேண்டுதலில் ஒரு பகுதிப்பணி நிறைவு பெற்றபின் இம்மலர் மலர்ந்துள்ளது.

குறுகிய காலத்துள் இம்மலரினை ஆக்கஞ் செய்ய வேண்டியிருந்த போதிலும், மலர்க்குழுவினரதும், பரிபாலன சபைத் தலைவர், பொருளாளர்களினது ஊக்கத்தினாலும், அறிஞர் பெருமக்களது ஆதரவினாலும் மண்டலாபிடேகப் பூர்த்திநாளான இன்று மலர் வெளிவந்து மணங் கமழ்கின்றது.

இம்மலரின் நறுமணத்திற்கு உதவிய அன்பு உள்ளங்களுக்கும், மலரினை அழகுற வடிவமைத்து விளங்கச்செய்த யாழ்ப்பாணம் கரிகணன் பிறிண்டேர்ஸ் உரிமையாளர், ஊழியர் களுக்கும் மலர்க்குழுவின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்து விக்கினங்கள் யாவற்றையும் தீர்த்தருளும் விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களில் இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.

"வித்தக விநாயகன் விரைகழல் சரணே"

பெரியபுலம் மகா கணபதிப்
பிள்ளையார் ஆலயம்
வேலணை.
13.05.2005

மு.திருஞானசம்பந்தபிள்ளை
(மலராசிரியர்)

# மலர்க்குழு

1. திரு. மு.திருஞானசம்பந்தப்பிள்ளை – மலராசிரியர்

2. திரு.பொ.அருணகிரிநாதன்

3. திரு.ப.பாலசுப்பிரமணியம்

4. திரு.ந.பாலச்சந்திரன்

5. திரு.இ.யோகேஸ்வரன்



பரிபாலன சபை உறுப்பினர்களில் சமூகம் தந்தவர்கள்

# தற்போதைய
# பரிபாலன சபை உறுப்பினர்கள்

திரு. பொ. அருணகிரிநாதன் – தலைவர்
திரு. ந. கணேசபிள்ளை – உபதலைவர்
திரு. யா. இராமநாதன் – செயலாளர்.
திரு. ச. சடகோபன் – உபசெயலாளர்
திரு. மு. மகேந்திரன் – பொருளாளர்.

# உறுப்பினர்கள்

திரு. கு.கங்கைவேணியன்
திரு. தி. சீவரட்ணம்
திரு. சி. த. மகாலிங்கம்
திரு.ச.இளங்கோவன்
திரு. க.மகேந்திரலிங்கம்
திரு.ந. விஜயகுமார்
திரு.கோ.விஜயரூபன்.
திரு. பு.பாலசிறிதரன்
திரு.ச.சிறிகரன்
திரு.க.பேரின்பநாயகம்
திரு.ந.முத்துலிங்கம்
திரு.அ.வரதராசா
திரு.ப.தேவநாதன்
திரு.தி. பாலச்சந்திரன்
திரு.நா.பரமேஸ்வரன்
திரு.இ.திலீபன்
திரு.சி.சாம்பசிவம்
திரு.து.தவச்செல்வம்
திரு.ப.கார்த்திகேசு
திரு.ந.சிவபாலன்
திரு.ந.பாலச்சந்திரன்

# மலரின் உள்ளே....


| | | |
|---|---|---|
| 1. | ஆசிச்செய்திகள் | 1–14 |
| 2. | திருவூஞ்சல் | 15 |
| 3. | பிள்ளையாரின் திருவருளைப் போற்றுவோமாக | 20 |
| 4. | சிவாகம நெறியில் சிறந்து விளங்கும் கும்பாபிஷேகக் கிரியை | 21 |
| 5. | விநாயகர் தத்துவம் | 26 |
| 6. | ஆலயமும் உயிர்ப்பலியும் | 50 |
| 7. | பிள்ளையார் சுழி | 57 |
| 8. | கணபதி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் | 63 |
| 9. | திருமுறை தந்த விநாயகர் | 67 |
| 10. | சாத்திரங்களில் விநாயகர் | 75 |
| 11. | புராணங்களில் விநாயகர் | 81 |
| 12. | விநாயகர் விரதங்கள் | 87 |
| 13. | மகா கணபதியின் மகிமைகள் | 92 |
| 14. | விநாயகர் திரு அவதார மகிமை | 94 |
| 15. | விநாயகனை வணங்கி வாழ்வோம் | 98 |
| 16. | சைவ வாழ்க்கை முறை | 101 |
| 17. | திருவேடச் சிறப்பு | 109 |
| 18. | வேலணைப் பிரதேச அபிவிருத்தியும் முடிப்பிள்ளையார் ஆலய வளர்ச்சியும் | 111 |
| 19. | வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம் வரலாறும் வளர்ச்சி நிலைகளும் | 116 |
| 20. | ஆலயமும் கர்ணபரம்பரைச் செய்திகளும் | 127 |
| 21. | விநாயகப் பெருமான் துணை | 132 |
| 22. | சைவ சமய அன்பர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள் | 134 |
| 23. | இதயம் கனிந்த நன்றிகள் | 135 |



மலர்க்குழுவினர்



கனடா வாழ் வழிபடுநர் சபை

உ
சிவமயம்

# அருள் ஆசிச் செய்தி



விநாயகர் அடியார்களே !

வேலணைப் பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் பெரியபுலம் மஹா கணபதி விநாயகப் பெருமானிற்கு நடைபெற்ற கும்பாபிஷேகத்தை நிதர்சனம் ஆக்கும் பொருட்டு மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பல ஆலயங்களைக் கொண்ட பிரதேசம் வேலணை. கருங்கல்லுத் திருப்பணியாலும், தூலலிங்கம் ஆகிய இராஜகோபுரத்தையும் கொண்ட இவ் ஆலயம் இவ் ஊருக்கு சிறப்புக்களைத் தருவதாக அமைகின்றது. விநாயக வழிபாடு நம் சமயத்தில் முதன்மையானதாகும். மனித வாழ்வை உயர்நிலை அடையச்செய்வது இறை வழிபாடு ஆகும். அதனிலும் ஆலயத்தில் சென்று வழிபடுவது மனிதப் பண்புகளை உணர்த்துவதாகும். இதனை தேவாரமும், நித்தலும் எம்பிரானுடைய கோயிலுக்கு செல்ல வேண்டும் என வலியுறுத்தி நிற்கிறது. இதனை உணர்ந்த வேலணை மக்கள் ஞானக் கொழுந்தாகிய விநாயகப் பெருமானை அமைத்து மஹா கும்பாபிஷேகம் செய்து ஊருக்கும், சமயத்துக்கும் சிறப்பை ஏற்படுத்தியமை எல்லோரையும் ஆத்மீக வாழ்விற்கு அழைத்துச் செல்வதாகும். மலரை வெளியிடும் மலர் ஆசிரியரை வாழ்த்துகின்றோம். அனைவருக்கும் இறைவன் ஆசி கிடைப்பதாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சாரிய சுவாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.
நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

உ
சிவமயம்

# அருள் வாழ்த்துரை

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்"

– திருவருட்பயன்

யாழ்ப்பாணம் தீபகற்பத்தைச் சார்ந்த வேலணை மேற்கு பெரியபுலம் அருள்மிகு மஹா கணபதிப் பிள்ளையார் மஹா கும்பாபிஷேகம் 30.03.2005 அன்று நடைபெறவிருப்பதும், அதுபோழ்து சிறப்பு மலர் ஒன்று வெளியிட இருப்பதும் மகிழ்ச்சிக்குரியது.

"மண்ணுலகத்தினிற் பிறவி மாசற, எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுற, ஐந்து கரமும் ஆனை முகமும் கொண்டு விளங்கும் அருள்மிகு மஹா கணபதியை வணங்க வேண்டும். மஹா கணபதி "தனதடி வழிபடும் அடியார் இடர் தீர்ப்பவர்" ஆவார். இதனை திருஞான சம்பந்தப் பெருமான்

"பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"



என்று கணபதியின் சிறப்பினை அருளியுள்ளார்.

"உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர் பூட்டி
யிடைப் படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்"

என்று திருவிளையாடற் புராணம் அருளுவது போன்று அருள்மிகு மஹா கணபதியைத் தொழுது இன்பம் பெறவும், குடமுழுக்கு விழா இனிதே நடைபெறவும், சிறப்பு மலர் திருநெறிய மணம் வீசவும் நமது வழிபாட்டுக் கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

**சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்**
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்,
23ஆவது குருமகா சந்நிதானம்.

# அருள் ஆசியுரை




வேலணை மேற்கு பெரியபுலம் ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழாவும், மண்டலா பிஷேகமும் சிறப்பாக நடைபெற திரிகரண சுத்தியுடன் பிரார்த்தனை செய்து எமது வணக்கத்தையும் ஆசியையும் அன்புடன் சமர்ப்பிக் கின்றேன். அத்துடன் அன்புக்கும், மதிப்புக்கும் உரியகுருக்கள் பரம்பரையில் வந்து சகல ஆலயங்களிலும் உற்சவம், கும்பாபிஷேகம் போன்ற கிரியைகளை சிறப்புற நடத்திவைக்கும் தகமைசார் பிரம்மஸ்ரீ சிவக்கிரியா தத்துவ நிதியாக அமைந்த உத்தம சிவாச்சார்ய பரம்பரையில் வந்த பால பஞ்சாட்சர சிவாச்சார்யர் அவர்களின் தலைமையில் நடக்க இருக்கும் வேலணை மேற்கு திசையில் அமைந்த பெரியபுலம் பதியில் பன்னெடுங்காலமாக அமர்ந்து அடியார்களின் வினைகளைப் போக்கி குருமார்களுக்கும் ஆலய நிர்வாக சபையினருக்கும், அனைத்து மக்களுக்கும் விநாயகர் திருவருளுடன் குருமாரின் சிறப்புப்பொருந்திய யாகபூசை, ஹோமம், ஆகுதிகளின் மந்திர ஒலியுடன் குறித்த முகூர்த்தத்தில் சிறப்பாக நடைபெற இருக்கின்றது.

இவ் ஆலய மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவின் பலனாக சைவப் பெருமக்கள் கஷ்டமில்லா நிறைவு கொண்ட வாழ்வு பெறவும் இலங்கைத் திருநாட்டின் யாழ் மாவட்டத்தின் மக்கள் யுத்த பயம் நீங்கி சிறப்பாக வாழவும் சகல சம்பத்தும் உடல் நலமும் உயர்ந்த பதவியும் பெற்று நாட்டு மக்களின் மனங்களில் ஏற்பட்ட துன்ப துயரங்கள் நீங்கி ஆலயங்களின் பூஜை வழிபாடு, விழாக்கள் சிறப்புற்று மனோபலம் பெற்று வாழ சர்வவிக்கின நிவாரகரும் பிரணவப் பெருமா னாகிய ஸ்ரீ விநாயகப் பெருமான் திருவருள் குருமாருக்கும், ஆலய நிர்வாக சபையினருக்கும், சகல மக்களுக்கும் கிடைக்க எமது சிறந்த மனப்பூர்வமான அருள் ஆசியினை விநாயகப் பெருமான் பாத மலர் களில் அன்புடனும், திரிகரண சுத்தியுடனும் சமர்ப்பித்து பிரார்த்திக் கின்றேன்.

"சர்வே ஜனாஹா சுகினோ பவந்து"

**சாமி விஸ்வநாதக் குருக்கள்**
பிரதிஷ்டா சிரோமணி
42/9 சுவிசுத்தறாம வீதி. கொழும்பு - 06

# அருளாசி



யாழ்ப்பாணம் வேலணை மேற்குப் பெரியபுலம் என்ற இடத்தில் கோயில் கொண்டெழுந்தருளி அருளாட்சி நல்கும் முடிப்பிள்ளையார் என எல்லோராலும் அன்பாக அழைத்து வழிபட்டு வரும் ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையாரின் மஹா கும்பாபிஷேகம் 30-03-2005 ஆகிய இன்று அதிசிறப்புற நடைபெறுவதையிட்டு நான் மகிழ்வுறுகிறேன். வேலணை ஒரு பக்தி மேம்பாடு கொண்ட ஊராகும். இவ்வூரில் அமைந்துள்ள முடிப்பிள்ளையாரிடத்தில் அன்பர்கள் அதிக பக்தி கொண்டு விரத அநுஷ்டானத்துடன் வணங்கி வருகின்றனர். குறிப்பாக மஹோற்சவ காலத்திலும் ஏனைய வேண்டுதல் வழிபாட்டின் போதும் அடியார்கள் அதிகாலையிலேயே தோய்ந்து பச்சை அரிசியை ஊறவைத்து இடித்து மாவாக்கி உள்ளுடன் கலந்து மோதகஞ்செய்து அதனை அவித்துப் பிள்ளையாருக்கு அர்ப்பணிக்கும் முறை பக்தி மேலீட்டினாலாகும். இது இவ்வாலயத்திற்கான தனிச்சிறப்பு எனலாம். அதேவேளையில் சுவாமி நைவேத்தியமும் மடைப்பள்ளியில் தயாராவதையும் குறிப்பிட வேண்டும். வேலணை வாசிகள் இலங்கை எங்கும் வாழ்ந்து நல்லநிலையில் உள்ளனர். வேலணை மகா வித்தியாலயம் மாணவர் கல்விக்கு அருஞ்சேவை புரிகின்றது. முடிப்பிள்ளையாரின் பேரருளால் சிவபக்தி மிகு வாழ்வுக்கு என்றும் உறுதுணை புரிகின்றன.

வேலணை மக்களும் இவ்வாலய பரிபாலன சபையினரும் பிள்ளையாருக்கான மணிமண்டபம், பஞ்சதள ராஜகோபுரத்தையும் அமைத்து முழுஆலயத்திற்குள்ளான மஹா கும்பாபிஷேகத்தையும் பக்தி பூர்வமாகச் செய்கிறார்கள்.

இவ்வாலய மஹோற்சவ சிவாசார்யர்கள் ஆலய சிவாசார்யார் அனைவரும் பிள்ளையாரின் கிரியைகளைச் செவ்வனே செய்வதால் பிள்ளையாரின் அருள் எல்லோருக்கும் கிட்டுகின்றது.

முடிப்பிள்ளையாரின் மஹா கும்பாபிஷேகம் நன்றே நடைபெறுவதாகுக. பிள்ளையார் அடியார்கள் யாவரும் சகல சௌபாக்கியங்களுடனும் நல்வாழ்வு வாழ ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரனைத் துதித்து எனது நல்லாசிகளைக் கூறுகிறேன்.

**சி. குஞ்சிதபாதக்குருக்கள்,**

பிரதமகுரு. ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்
உறுப்பினர் இந்து சமய ஆலோசனைச் சபை கல்வி அமைச்சு.
தலைவர் அகில இலங்கை சிவப்பிராமண சபை
போஷகர் கொ. விவேகானந்த சபை

உ
சிவமயம்

# பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசியுரை

"லம்போதரம் மஹா காயம்
சர்வவிக்ன நிவாரகம்
சர்வ காரியார்த்த சித்தியர்த்தம்
த்யாயேத் சித்தி விநாயகம்"

உலகமெல்லாம் உணர்ந்து உய்திபெற வேண்டும் என்ற பெருங் கருணையினால் எல்லையற்ற பரம்பொருள் எடுத்த வடிவங்கள் எண்ணில. இதனை உணரும் வாய்ப்பு பிறவிகளிலே மேம்பட்ட பிறவியாகிய மானிடப்பிறவி எடுத்த எமக்கே உரித்தாகும். அதனால் தான்

"துர்லபம் மானுஷம் ஜென்ம
சிவ தர்மோபி துர்லப"



என ஆகமங்கள் கூறுகின்றன. இத்தகு வடிவங்களிற் சிறந்து விளங்குவது விநாயக வடிவமாகும். சகல செல்வங்களும் மலிந்து பொலிந்து விளங்கும், சைவமும், தமிழும், அன்பும், பண்பும் சிறந்து விளங்கும் மக்கள் வாழ்வாங்கு வாழும் வேலணை மேற்கு பெரியபுலம் என்னும் இந்த ஊராகும். விநாயகப் பெருமானின் அடியார்கள் பேரார்வத்துடன் பக்தி முயற்சியினால் கட்டப்பட்ட பஞ்சதள இராஜகோபுரம், மற்றும் மூல மூர்த்தியாகிய விநாயகர், பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் எல்லாம் வல்ல ஸ்ரீ விநாயகப் பெருமானின் பேரருளினால் சிறப்பாக நடைபெற்றது. மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் இந்த கும்பாபிஷேகத்தை தரிசித்தவர்கட்கு கிட்டும். வேலணை மக்கள் இலங்கையில், வெளிநாடுகளில் எப்பகுதியிலும் சென்ற, சென்ற இடமெல்லாம் சிறப்போடு விளங்குவதற்குக் காரணம் முடிப்பிள்ளையார் எனப் போற்றும் ஸ்ரீ மஹா கணபதிப் பிள்ளையாரின் அற்புத அருள் என்றே கூறலாம். 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பதை உணர்ந்து பஞ்சதள இராஜ கோபுரம் அழகுற அமைத்தது வேலணை மக்களின் பக்தியின் எழுச்சியை எடுத்துக் காட்டுகின்றது. இந்தக் கோயில் சாஸ்திர ரீதியாக

திருப்பணிகள் பூரணமாகி மேலான மஹா கும்பாபிஷேகம் இனிது நிகழத் தோன்றாத் துணையாக இருந்து அருள் பாலிக்கும் விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை முக்கரணங்களுடன் வணங்குகின்றேன். மஹா கும்பாபிஷேகங்கள் யாவும் செவ்வனே நிறைவுபெற பேருதவியாய் இருந்த சிவாச்சாரியார்களுக்கும், சிவநேயச் செல்வர்களுக்கும் ஆலய பரிபாலன சபை அன்பர்களுக்கும், திருப்பணி வேலைகளை அழகுற, சிறப்பாகச் செய்து முடித்த சிற்பக் கலைஞர்களுக்கும், வேலணை வாழ் நல்லோர்கள் அனைவருக்கும் கும்பாபிஷேகத்தை தரிசித்த பக்தர்கள் அனைவர்க்கும், ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய் ஆனைமுகன் தனது இன்னருளை வாரி வாரி வழங்கி அனைவரும் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி சகல சம்பத்தும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் என மனம் மொழி மெய்யாலே விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை பிரார்த்தித்து நல்லாசி கூறுகின்றேன்.

"உலோகா சமஸ்த்தா சுகுனோ பவந்து"

**சிவாகம கிரியா தத்துவநிதி**
**பிரம்மஸ்ரீ பால பஞ்சாட்சரச் சிவாச்சாரியார், ஊரெழு**
**பிரதம குரு. யாழ்/வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்**

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங்கை.

உ
சிவமயம்

# ஆலய நித்தியகுருவின்
# ஆசியுரை

"வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம்
மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு"



மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம். சைவமும், தமிழும் ஒருங்கே அமைந்த ஈழவள நாட்டின் வடபால் யாழ்ப்பாணம் வேலணையில் தன்னைத் துதித்தார்க்கும், துதியாதார்க்கும் ஒருங்கே அருள் பாலிக்கும் பெரியபுலம் மஹா கணபதிப் பிள்ளையாருக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் செய்வதற்கு அவன் அருள் பாலித்திருப்பது நாம் செய்த பூர்வ புண்ணியத்தில் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. வானுலகும், மண்ணுலகும் வாழ் வாங்கு வாழ ஓங்கார ரூபன் துணை நிற்பார் என்பது திண்ணம்.

உலக மக்களும். நம் ஊர் மக்களும் அனைவரும் அவன் அருளால் ஆசி வழங்கும் பாக்கியம் பெற்ற யானும் ஆசிகூறி அமைகின்றேன்.

"வாழ்க வளமுடன்"
"வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்"

**பிரம்மஸ்ரீ இ.சோமாஸ்கந்தக் குருக்கள்**
ஆலய நித்திய குரு

உ

சிவமயம்

# நலம் செழிக்க அருளுவாயே

அளவதிக பிரணவத்தின் வடிவே வேதம்
அசலத்தில் வரைந்தவனே, தாரணத்தின்
மிளிர்மாதம் பங்குனிபத் தேழு புந்தி
மேவும் அனு ஷம் பொருந்தும் இடபத்தானம்
குளிர்கும்பா பிஷேகமேற் றுவந்த செல்வா
கோபுரத்தோ டலங்காரக் கோயில் கொண்டு
வளரும்வே லணைப்பெரிய புலத்தமர்ந்த
மகாகணபதிப் பிள்ளை யாரே போற்றி




முடிப்பிள்ளை யாரென்று பேர்படைத்து
முந்திவந்து தொழுமடியார் கவலை தீர்ப்பாய்
படிப்படிநல் லலங்காரச் சிற்பம் பூத்த
பாங்கான கோபுரத்தில் தேவர் சூழ்ந்து
கடிக்கமலப் பதம்வணங்க வீற்றிருக்கும்
கணபதியே நின்கருணை விழியினாலே
அடித்தொண்டர் அகங்குளிர வளம்செழிக்க
அரியதமிழ் நலம் செழிக்க அருளுவாயே

அருட்கவி சீ. விநாசித்தம்பி M.A
நாகேஸ்வரம், அளவெட்டி,
இலங்கை.
தொலைபேசி :0602-212896

உ
சிவமயம்

# ஆசியுரை

*அருள்வளர் பெரியபுலம்*
*மஹா கணபதிப் பிள்ளையார் (வேலணை மேற்கு)*
*குடமுழுக்கு விழா*



சைவ மக்களுடைய வாழ்க்கையிலே குடமுழுக்கு விழாக்கள் சிறப்பாகப் போற்றப்படுகின்றன. ஆலயங்கள் இல்லாத இடத்திலே புதிதாக ஆலயங்கள் அமைத்தும், பழுதடைந்த ஆலயங்களை திருப்பணி செய்து, புதுப்பித்தும் குடமுழுக்கு செய்கின்ற ஒழுங்கு எம்மவருக்கு உண்டு. மேலும் இராஜகோபுரம், சுற்றுப்பிரகாரக் கோயில்கள் ஆகியவற்றையும் திருத்தி, புதிதாக அமைத்தும் குடமுழுக்கு விழாவை நடாத்துவது சிறந்த திருப்பணிகள் ஆகும். இந்த ஒழுங்கின் பேரில் வேலணை மேற்கிலுள்ள மஹா கணபதிப் பிள்ளையார் கோயிலில் மேற்படி விழா நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகளாகும். முடிப்பிள்ளையார் கோயில் என்று போற்றப்படுவது இவ்வாலயம் ஆகும். தீவுப்பகுதி மக்களின் பக்தி சிரத்தையையும் ஆலயங்களைப் பராமரிக்கும் சிறப்புக்களையும் நான் நன்கு அறிவேன்.

பெருஞ்சாந்தி விழா என்று போற்றப்படும் குடமுழுக்கு விழாக்களை காலத்துக்குக் காலம் ஆற்றி வருவது மானிடப்பிறவி எடுத்தவர்களுடைய மகத்தான கடமையாகும். "பழுதடைந்த ஒரு தூணையாவது செப்பனிடுவோர் திருவடிகள் என் தலைமேலென" என்று கல்வெட்டில் எழுதி வைத்தான் பராக்கிரம பாண்டியன். இந்த உணர்வு சைவமக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஏற்பட வேண்டும். எனவே வேலணை மேற்கை தமது சொந்த இடமாக மதிக்கும் ஒவ்வொருவரும் எமது பாராட்டுக்குரியவர்கள் ஆவார்கள். இந்த நேரத்தில் மஹா கணபதிப் பிள்ளையாரின் திருவருளை நாமும் வேண்டித் துதிப்போமாக.

**கலாநிதி செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா.

# பெரிய புலத்தானின் பேரருள் அனைவருக்கும் கிடைப்பதாக

வேலணை மேற்கு பெரியபுலம் மஹா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயத்தில் இன்று நடைபெறும் புனராவர்த்தன பிரதிஷ்டா நூதன இராஜ கோபுர நவகுண்ட மஹாயாக மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவைக் காண்பதற்கு அருள் கிடைத்த அனைவரும்.பாக்கியசாலிகள்.எம் பெருமானின் ஆலயத்தில் பல்வேறு திருப்பணிகள் நிறைவேறிய நிலையில் கும்பாபிஷேகம் நடைபெறுவது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.



1991 புலம்பெயர்வுக்குப் பின்னர் எமது ஊரவர்கள் உலகின் பல பாகங்களுக்கும் சென்றாலும் அனைவரையும் எம்பெருமான் ஒன்றிணைத்து இப்புனித கைங்காரியத்தைச் செய்வதற்கு அருள் பாலித்துள்ளார். பிள்ளையாரின் திருப்பணிகளிலும், கும்பாபிஷேக பணிகளிலும் எல்லோரும் சேர்ந்து நின்று ஒன்றாக அவன் அருள் வேண்டிப் பணிகின்ற பாக்கியம் எமக்குக் கிடைத்துள்ளது. ஐங்கரன் அடியார்களின் அளப்பரிய உதவிகள் கண்டு பரிபாலன சபையினர் பிரமித்து நிற்கிறார்கள். பிள்ளையார் மீது வைத்துள்ள பக்தி விசுவாசத்தை சொல்வதற்கு எமக்கு வார்த்தைகள் வரவில்லை. பெருமிதத்தில் பூரித்து நிற்கின்றோம்.

கடல் கடந்து, எல்லைகள் கடந்து எங்கு வாழ்ந்தாலும் நாம் உணர்வால், உறவால் ஒன்றாக நின்று, எம் பெருமானின் கும்பாபிஷேகத்தை மிக உன்னதமாக நடத்துவதையிட்டு எல்லையில்லா ஆனந்தத்தில் நாம் மிதக்கின்றோம்.

பெரியபுலத்தானின் பேரருள் எங்கள் எல்லோருக்கும் கிடைக்க அவனது பாதார விந்தங்களைப் பணிகின்றேன். அவன் திருவருளால் எம்மவர்கள் எல்லோரும் பேரானாந்தப் பெருவாழ்வு வாழ இந்த நன் நாளில் அனைவரையும் வணங்கிப் பணிகின்றேன்.

"விநாயகர் பாதம் தொழ மாண்புகழ் மிகுந்து வரும்".

**பொன்னம்பலம் அருணகிரிநாதன்**
தலைவர் ஆலய பரிபாலன சபை
பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயில்,
வேலணை மேற்கு.

# லண்டன் வாழ் முடிப்பிள்ளையார் வழிபடுனர்கள்



இலங்கையின் வடபால் யாழ் குடாநாட்டின் தென் திசையில் அமைந்துள்ள சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்கும் லைடன் தீவில் வேலணை மேற்கு கிராமம் குடியடர்த்தி கூடிய செழிப்பான கிராமம் எனலாம். இதன் செழிப்பிற்கு கட்டியம் கூறுவது போல் விளங்கும், எமது குலதெய்வம் முடிப் பிள்ளையார் என்று அழைக்கப்படும் வேலணை மேற்கு, பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. இக்கோயிலைச்சூழ உள்ள மக்கள் சைவத்தையும், தமிழையும் தம் இருகண்களாக பேணிப்பாதுகாத்து வந்துள்ளமை வரலாறு கூறும் உண்மை. இத்தகைய பெருமைக்குரிய, முடிப்பிள்ளையார் ஆலயத்தில் குடிகொண்டு அருள் பாலிக்கும் விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் குடமுழுக்கு நடைபெறும் இவ்வேளையில், லண்டன் வாழ் முடிப்பிள்ளையார் வழிபடுனர்களாகிய நாம், வாழ்த்துச் செய்தி தருவதில் பேருவகை அடைகின்றோம். மேலும் கோவிலின் திருப்பணிகட்கு எமது வேண்டுகோளிற்கு இணங்க நம்மாலான நிதியினைத் தந்துதவிய பக்தர்கள் அனைவருக்கும், நன்றி தெரிவிப்பதுடன், எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் நல் அருளும், நல்லாசியும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம். மேலும் எமது தாயகத்தில் நடந்த அனர்த்தங்களினால் எமது கிராமமும், தன் பொலிவிழந்து, கலையிழந்து, வாழ்வியல் நிலையிழந்து போய் இருந்த நிலைமாறி, சிறிது சிறிதாக மீண்டும் புதுப்பொலிவுபெற்று வரும் இவ்வேளையில் இக் கும்பாபிஷேகம் நடைபெறுவது எம்மவர் மத்தியில் புது நம்பிக்கை யொளியினைத் தருகின்றது. மீண்டும் எமது மண்ணும் மக்களும், முன்பிருந்த நிலைக்கு மாறி நல்ல வாழ்க்கை அமைந்து நிறைவுடன் வாழவேண்டுமென்று வேண்டுகிறோம்.

நன்றி

**ஆ. பொ. பராஜசிங்கம்,**
**து.திருக்குமாரன்.**
லண்டன் வாழ் முடிப்பிள்ளையார் வழிபடுனர்கள்.

இறை அருள்க

# வேலணை மேற்கு மகா கணபதிப் பிள்ளையார் அருள் வேண்டும்.

சைவமும் தமிழும் தழைத்திட வேண்டி வேலணை மூதூர் வாழ்ந்த மக்கள் அரன் மகன் ஐங்கரன் துணையை நாடி ஆங்கோர் கோவிலை அமைக்க விழைந்தனர். அவர் தம் நினைவு செயலதாகவே கேணிக் கரையின் மேற்கு மருங்கில் முடிப்பிள்ளை யாரென முன்னோர் போற்றிய கணபதி யார்க்கோர் கோவில் நிமிர்ந்தது.



காலித் துறையமர் கவினுடைய வர்த்தகர் சேயன்னாப் போனா போன்றவர் உழைப்பால் தென்னிலங்கைக் கருங்கல் கடல் வழி சேர்ந்து வேலணைக் கரையை அடைந்தது. காலப் போக்கில் கண்டோர் மெச்சிடும் கருங்கற் சுவரும் கருது மண்டபமும் கொடித் தம்பம் முதல் கோவிலுக்குரிய அனைத்து வளமும் அமைந்து வரவே வேலணை மேற்கூர் வியன்பதி யதனுடை மகிமையும் சேர மக்களும் மாண்புடன் கும்பாபிடேகம் குறைவிலா விழாக்கள் எடுத்தெடுத்தென்றும் இறை வழிபாட்டினைக் கோணாது செய்தனர். குறைகளில்லாது நெல் வளத்தோடு நிறைந்த நல் ஆவினம் சொரிந்திடு பசும் பால் தோட்ட வருவாய் யாவும் பெற்றே உய்ந்தனர். மக்கள் பொருட் செல்வத்தால் பூரிப்படைந்தவர் அருட் செல்வத்தினை அளிக்கும் கல்வியைத் தம் மக்கட்குத் தவறாது கொடுத்தனர். இளைஞர் ஊதியமும் இயல்பாய்ப் பெருகிற்று வேலணை மக்கள் விரதமேற்றனர். கணேச மூர்த்தியைக் கைதொழுதேத்தினர் வறுமை என்பதையே வாராதோட்டினர். பண்பு காத்தனர் பணமும் பேணினர் ஆண்டாண்டு காலமாய் அவர் தம் வாழ்வின் ஒளியென நின்ற ஈசன் மகன் தனை முடிப்பிள்ளை என்று முறையாய் வணங்கினர். ஆண்டுகள் கழிந்திட அனைத்திட மக்களும் வேண்டும் வரம் பெற விரைந்தனர் மேற்கூர் ஆதி சைவர் முதலில் வணங்கிய பிள்ளையார் சகலரினதும் சஞ்சலம் தீர்த்தார். சைவநெறியைக் காத்த நாவலரைச் சார்ந்தோரனைவரும் தம்மை அர்ப்பணித்தே தமிழையும் காக்கச் சலியாது உழைத்தனர்.

அமைதியோடு அச்சமே இன்றி இயற்கையோடியைந்து வாழ்ந்த மனிதர்க்குப் பெரும் பூகம்பம் போன்றதோர் அதிர்ச்சி பேசற்கரிய போர்ச் சக்திகளாய் ஒன்றாய்க் கூடி உருமி முழங்கின. எனினும் பிள்ளையார் கோவில் விளக்கோ அணையா விளக்காய் அமைந்த அதனால் அனைவரும் அற்புதம் என்றனர்.

கடந்த மார்கழிக் காலத்தில் நிகழ்ந்த கடலலை அனர்த்தமாம் கடற்கோளதுவும் பல்லின மாந்தரைப் பலி கொண்டதுவே காரணம் கண்டிட நாம் விழைந்திடிலோ கடலில் விழுந்த ஊசியைத் தேடும் கண்ணிலா மாந்தரை ஒத்தவராவோம். கொடுமைகள் விழைவதும் கொடூரங்கள் சேர்வதும் இயற்கையின் சீற்றத்திற்கிரையாகி விடுவதும் அட்டூழியங்களால் அழிவுகள் நேர்வதும் பாரம்பரிய மாய் பாரில் நடப்பன எனினும் இவற்றாற் சோர்வடையாது நம்பிக்கையோடு நல்வழிச் செல்வோர் நித்தமும் பக்தி நெறி கைக்கொண்டு வாழ்குவர் நல்லதோர் வழி பிறக்கும்வரை என்பதை வள்ளுவர் வாக்கிற்கேற்பப் பற்றுவோம் பற்றற்றான் பற்றினைத்தானே

பாரதத்தினைப் பாங்காய் எழுதவே
பக்குவம் பெற்ற பார்வதி மைந்தனை
நல்லருள் புரிந்தே ஞானம் தருவோனை
வாழ்த்தி வணங்குவோம் வரம்பல பெறுவோம்
இன்று எம் நாட்டுள இனசமாதானம்
நன்று வளர்ந்து நற்பயன் தந்திட
என்றும் அருள்வீர் எம்முடிப் பிள்ளையே
ஏகாந்த நாயகா எல்லோர்க்கும் அருள்வீர்!

ஐங்கரா ஆதிசிவன் தருமுதற் பிரணவா
திங்கள் சூடிய தேவதேவனின் மைந்தனே – எங்கிருப்பினும்
உனை ஏத்தியே சிரம் தாழ்த்துவோம்
பொங்கு வேலணைப் பதியமர் முடிப்பிள்ளையே

**திருமதி. வரதா சண்முகநாதன்**

# நம்நாடு சிறக்கவே நல்லெழில்
# குடமுழுக்கு இந்நாள் காண்கின்றார்

"முன்வினை யகற்றுமெம் முடிப்பிள்ளையாருக்கு
தன்னிக ரில்லா தலைவனவன் திருவடிக்கு குடமுழுக்கு
எண்ணி லெம் குல தெய்வமாம் கண்ணின்
மணியான கருங்கல்லிலுறை கற்பக த்திற்குக் குடமுழுக்கு.

காலிக் கருங்கல்லில் திருப்பணி சமைத்தோர் – காலமெல்லாம்
கைதொழு தேற்றவே காக்கு மெம் குல விளக்கை
காட்சிக் கெளியனாய் அற்புத விநாயகனாய்
துதிசெயும் வகையில் ராஜகோபுரமும் எழிலாய் சமைத்தனர்.



நாளும் வணங்கிடும் நம் வேலணையன்பர்கள் நானிலம் போற்றவே
பெரியபுல மகாகணபதி யென்றே போற்றினர்.
வாழும் வாழ்வின் ஒளி விளக்கெனவே
வானுயர் கோபுரமும் வகையாய் சமைத்தனர்.

வேலணை யூருறை வேழமுகவன் வேண்டும்
வரங்கள் குறை விலாதுநல் கவே பெரிய புலமதில்
பூசைகள் நிறைவொடு சிறக்கவே அருளது நல்கினான்.
போருமே நடந்த காலை போகவே யெமை விட்டு
நாளு மணையா ஒளியில் நம் சோம
ஸ்கந்தனார் குருவுடன் நம்பிக்கை வாழ்வை
நம் தமக் களித்தே நல்லெழில் குடமுழுக்கு
நம் நாடு சிறக்கவே இந்நாளில் காண்கின்றார்.


**"வேலணை பாலா"**
பிரதம எழுதுநர்.
பிரதேச சபை நல்லூர்.



கோவில் முகப்புத் தோற்றம் இராஜ கோபுரம், மணிமண்டபம்.



கும்பாபிஷேக காலத்தில் ஆலயத்தின் முகப்புத் தோற்றம்.



இராஜ கோபுரத் தோற்றம்



மூலமூர்த்தி



மூலஸ்தானத்தில் கோவில்
நித்திய குருக்கள் ஆராதனை



பிரதான யாக கும்பம்



கும்பாபிஷேக தினத்தில் எழுந்தருளி விநாயகர்

உ

வேலணை மேற்கு.

# மகாகணபதிப் பிள்ளையார்

# திரு ஊஞ்சல்

## ஆசிரியர் ஸ்ரீமான் வி. கந்தப்பிள்ளை

திருமருவி யாழ்ப்பாண மாதி னோங்கு
திலகமெனும் வேலணைநன் னகர மேற்கில்
தருமருவு பெரியபுலத் தருளின் மேவுந்
தந்தைமகா கணபதிமே லூஞ்சல் பாடக்
கருமருவு மடியர்மல மிரிய நீடு
கருணைமழை பொழிபரனு முமையு மீன்ற
உருமருவு கடதடகும் பக்க ளிற்றின்
உபயமலரடி தினமுங் காப்ப தாமே. 1

சீர்பூத்தமறை நான்குங் கால்களாகச்
சிறந்த உப நிடதமுயர் சட்ட மாக
நேர்பூத்த சிவாகமங்கள் பலகையாக
நிறையறுபா னான்குகலை கயிற தாகப்
பேர்பூத்த உபாகமங்கள் விட்ட மாகப்
பிறங்குபிர ணவமிலங்கு தவிச தாக
ஏர் பூத்த பெரியபுலத் தருளோ டோங்கும்
இறைவமகா கணபதியே யாடீ ரூஞ்சல். 2

திருமகணா யகனாதி யமரர் தங்கள்
சிந்தைமய லறவுதித்த வடுகன் றானும்
வருவீர பத்திரனுஞ் சூர னோடு
மலைபிளக்க வேல்விடுத்த குமரன்றானும்
மருவியிரு புறமுமலர் தூவிப் போற்ற
மலைமகளொ டிறைவனருள் மாரி தூற்ற
அரிகரபுத் திரனாதி முதல்வ ரேத்த
ஆதிமகா கணபதியே யாடீ ரூஞ்சல் 3

நந்திமகா காளர்பிருங் காதி யாக
நண்ணுசிவ கணங்கணறு மலர்தூ யேத்த
விந்தைபெறு மட்டவித்தே சுரர்க ளோடு
விளங்குபிர ணவர்முதலோர் விரவிச் சூழ
அந்தமில்சீ ருருத்திரருஞ் சனக னாதி
அரியமுனி வரரேழு கோடி யாக
வந்தமகா மந்திரங்கள், வணங்கித் தேங்க
மருவுமகா கணபதியே யாடீரூஞ்சல். 4

ஆரணமா கமங்கடெய்வ் வுருக்கொண் டேத்த
அரியநவ சத்திகளு மன்பாற் போற்றச்
சீரணவு சத்தமட மாதர் தேங்கச்
சித்திபுத்தி யிருபுறமுஞ் சிறந்தே யோங்க
ஆரபரா பரைபேத மாகி யோங்கும்
அமலசிவ சத்திகள் பாங்கன்பு கூரக்
காரணகா ரியமாகி, யதீத மாகக்
கருதுமகா கணபதியே யாடீரூஞ்சல் 5

மங்கலமார் பூதமைந்துங் கரண நான்கும்
மருவுதனமாத் திரைகன்மேந் திரிய மைந்துந்
துங்கமிகு ஞானவிந் திரிய மைந்துந்
துலங்குகலை காலமுத லேழி னோடு
தங்குசுத்த வித்தைமுத லைந்து மாகத்
தத்துவமுப் பத்தாறிற் கப்பா லாகி
அங்குதித்தே பெரியபுலத், தருளோ டோங்கு
மாசிமகா கணபதியே, யாடீரூஞ்சல். 6

இந்திரனல் லடைப்பைகொள வங்கி தீப
மேந்தயம னுடைவாளோ டினிது மேவ
வந்துகளாஞ் சியைநிருதி யெடுப்ப நல்ல
வருணனெழிற் சிவிறிகொடு மருங்கிற் றூவ
நந்தனிலன் கவரிகொளக் குபேர னோடு
நலங்குலவீ சானனறு மலர்தூ யேத்தச்
சுந்தரமார் பெரியபுலத் தருளோ டோங்கு
சோதிமகா கணபதியே யாடீரூஞ்சல். 7

திருமாலு மலரயனு மிருகை கூப்பச்
சிறந்தமுனி வரரமரர் வணங்கிப் போற்ற
வருமிரவி மதிகவிகை தாங்கி மேவ
வரமுறுநல் லடியர் மலர் மாரி தூவ
உருகவரு தும்புருநா ரதர்கள் பாட
வுயர்கணநா தர்கடுதிசெய் யோசை நீட
அருளுருவாய்ப் பெரியபுல மமர்ந்தே யோங்கு
மாதிமகா கணபதியே யாடீ ரூஞ்சல் 8

சங்கமொடு துடிமுரசு சின்ன மோங்கத்
தயங்குகொடி யாலவட்டம் பீலி தேங்க
மங்கையர்க ளெண்வகைமங் கலங்க டாங்க
மணமலர் தூ யரமகளிர் மகிழ்ச்சி தூங்கத்
துங்கமுறு வேலணைநன் னகரில் வாழுந்
துரியபர சிவனடியா ரெவரு மோங்க
அங்கெழில்சேர் பெரியபுலத் தருளோ டோங்கு
மாதிமகா கணபதியே யாடீ ரூஞ்சல் 9

ஆதிசிவ பாலகரே யாடீ ரூஞ்சல்
அன்பருளத் தமர்முதலே யாடீ ரூஞ்சல்
வேதசிவா கமப்பொருளே யாடீ ரூஞ்சல்
விளங்குமுமை திருமகனே யாடீரூஞ்சல்
ஓதபர பரஞானத் துண்மை யாகி
யோங்குசுத்த நிட்களரே யாடீ ரூஞ்சல்
சோதிசுயஞ் சோதிபரஞ் சோதி யாகித்
துலங்குமகா கணபதியே யாடீ ரூஞ்சல் 10

அந்தணரா தியர்வாழி யறங்கள் வாழி
யாவினமு மடியவரு மமர்ந்தே வாழி
சந்தமிகு வேதசிவா கமங்கள் வாழி
தயங்குதிரு நீறொடக்க மணியும் வாழி
வந்துமழை மும்மாரி பொழிந்து வாழி
வளமுறுவே லணைநகரோ ரெவரும் வாழி
சுந்தரமார் பெரியபுலத் தருளோ டோங்குஞ்
சோதிமகா கணபதியின் றுணைத்தாள் வாழி. 11

### எச்சரிக்கை

கடமார் கயமுகனே சிவன்மகனே யெச்சரிக்கை
கண் மூன்றுடையவனே கணபதியே யெச்சரிக்கை
திடமார்வரை யுமையா டருசெல்வா வெச்சரிக்கை
தேசார் கணராசா செகதீசா வெச்சரிக்கை
படமார்பணி மணியாலொளிர்முடியா யெச்சரிக்கை
பரனே யருள்வடிவே முத்திமுதலே யெச்சரிக்கை
தடமார் பொழிற் பெரிய புலஞ்சார்வா யெச்சரிக்கை
தகுமாருயி ரெவர்க்குமருள் தருவா யெச்சரிக்கை.

### பராக்கு

ஓசை தரு மோங்கார வொளியே பராக்கு
உண்மை நிறை நாதவிந்தி னுருவே பராக்கு
தேசுதரு சூரியப் பிரகாசா பராக்கு
சித்தி புத்தியான சத்தி நேசா பராக்கு
மாசிலுயிர்க் கருள்கனிந்த வரதா பராக்கு
மாமறையி னுருமுதலில் வருவாய் பராக்கு
பாசமவை நீக்கியருள் பரமா பராக்கு
பத்தர் நினைவொத்தவருள் பரனே பராக்கு

### மங்களம்

சீரேறு பரமசிவ னருளுருவ தாய்வந்த
செகதீச திருமங்களம்
தெய்வமறை முதலிலகு பிரணவப் பொருளாய்ச்
சிறந்தமுத திருமங்களம்
பேரேறு மடியரிடர் கெடவருள்செ யைங்கரப்
பெருமநற் றிருமங்களம்
பிரசவிழி யரியரவி னுருவகல வருள்செயும்
பிள்ளையடி திருமங்களம்
பாரேறு மலவிரு டுரந்துபர ஞானமருள்
பாசாங்குச திருமங்களம்
பரவுமம் பிகைபால கயமுக கணேசபர
பகவசுத திருமங்களம்
காரேறு மெயிலயி லணைப்பதியி னர்க்கருள்
கனிந்தருள்க திருமங்களம்
கவினிலகு பெரியபுல மமர்மகா கணபதிக்
கருணாநிதிக் கடவுளே

**வாழி**

தேமேவு கமலமல ரெனவிலகு கருணைபொழி
திருவதன மாறும் வாழி
திருவேர கரதியறு தலமோடு பலதளி
சிறந்ததிரு வருளும் வாழி
பூமேவு மருண்மாரி பொழிபனிரு நயனமொடு
பொலிவுபெறு தோள்கள் வாழி
பொருவி றெய்வத யானையொடு வள்ளிநாயகி
பொலிந்தினிது தினமும் வாழி
மாமேவு கிரஞ்வுச மலைகீறு வேலினொடு
மயில்சேவ றானும் வாழி
மலர்மேல் வர்க்குமுயர் குறுமா முனிக்குமருள்
வரதசிவ குமர வாழி
காமேவு மயிலணையி லமரடியர் பவநோய்
கழைந்தொழுகு கருணை வாழி
கருதுதமி ழாசிரிய பரமகுரு நாதனிரு
கழலிணைகள் வாழி வாழி.

முற்றிற்று

திகட சக்கரச்
செம்முகம் ஐந்துள்ளான்
சகட சக்கரத்
தாமரை நாயகன்
அகட சக்கர
வின்மணி யாவுறை
விகட சக்கரன்
மெய்ப்பதம் போற்றுவாம்.

திருவும் கல்வியுஞ்
சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும்
தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம
துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப்
பிள்ளையைப் பேணுவாம்.

# பிள்ளையாரின் திருவருளைப் போற்றுவோமாக

யா.இராமநாதன், செயலாளர்– ஆலய பரிபாலனசபை
பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயில்.

வேலணை மேற்கு மகா கணபதிப் பிளளையார் கோவில் பழ்ம்பெருமை வாய்ந்தது சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பே வழிபாடியற்றப் பெற்று அருள் பாலித்துக் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானின் அருள்பிரவாகம் அளவிடமுடியாதது.

எமது முன்னோர்கள் தம் வாழ்வில் ஐங்கரனை மறவாது கருமமாற்றினர். ஆலயப் பணிகளைத் தத்தமது நிலைகளுக்கு ஏற்ப ஆற்றினர் நாளாந்தம் கோவில் தரிசனம் செய்தனர். சிறப்பு நித்திய நைமித்திய கிரியைகளை நிறைவேற்றினர். வருடாவருடம் திருவிழாக்களைச் செய்து மகிழ்ந்தனர்.

கருங்கல் திருப்பணியால் கட்டப்பட்ட திருக்கோவிலுக்கு மேலும் அழகுற திருச்சுற்று வேலைகளையும், பரிவார மூர்த்தி கோயில்களை யும், கண்டாமணிக் கோபுரங்களையும், இராச கோபுரத்தையும் அமைத்தனர். புதிய சித்திரத் தேரையும் தேர் முட்டியையும் அமைக்கும் பணியும் பூர்த்தியடையும் நிலையம் எய்தி வருகின்றது.

இவ்வாறு ஆலயம் பல சிறப்புகளைப் பெற்று வளர்ந்து வருகின்ற நிலையில் மகா கும்பாபிடேக சிறப்பு மலரும் இவ்வாண்டு நடைபெற்ற நூதன இராசகோபுர கும்பா பிடேகத்தையும் புனராவர்த்தன கும்பாபிடேகத் தையும் முன்னிட்டு வெளியிடப்படுகின்றது. இம்மலரினை சிறப்புற அமைத்து வெளியிடுகின் றதற்கு அருள் புரிந்த மகாகணபதிப்பிள்ளை யாரின் திருவடிகளைப் போற்றுவோமாக.

என்னரேயாயினும் யாவதொன்றெண்ணுதல்
முன்னரே உனது தாள் முடியுறப் பணிவரேல்
அன்னர்தம் சிந்தைபோல் ஆக்குதி அலதுனை
உன்னலார் செய்கையை ஊறு செய்திடுதி நீ.

# சிவாகம நெறியில் சிறந்து விளங்கும் கும்பாபிஷேகக் கிரியை

பேராசிரியர்
கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்

வேதங்களும் ஆகமங்களும் சைவசமயத்தின் முதனூல்களெனப் போற்றப்படுவன. சமயத்துவ சிந்தனை வளர்ச்சிக்குப் பெருமளவில் முன்னோடியாக விளங்குபவை வேதங்கள் ஆகமங்கள், சமயம், தத்துவம், கலை ஆகிய மூன்று அம்சங்களையும் இணைக்கும் சாதனங்களாக விளங்குகின்றன. சைவ வழிபாட்டு மரபின் வளர்ச்சிக்கு இவற்றின் பங்களிப்பு அளப்பரியது. வேதநெறி தளைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் இவ்விரு முன்னூல்களும் உதவியுள்ளன. திருக்கோயிற் கிரியை மரபில் இவ்விரு நூல்கள் தரும் சமயக் கிரியை மரபுகள் சங்கமமாகின்றன. 'வேதமொடாகமம் மெய்யாமிறைவனூல்' என்ற திருமூலரின் கோட்பாட்டின்படி இவை சைவ பாரம்பரியத்திற்கு முதனூல்களாக விளங்குவதோடு கிரியை மரபுகளுக்கும் அடிப்படையாக உள்ளன.

சைவ சமயத்திற்கு இவ்விரு நூல்களினது முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில் சமயப் பெரியார்கள் வைதிக சைவம் என அழைப்பதும் இங்கு சிந்திக்கற்பாலது. இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை (1978 பக்கம் 131 –132) குறிப்பிடும் கருத்து இங்கு பொருத்தமாகும்.

"நமது சமயம் வைதிக சமயம் வைதிகம் வேத சம்பந்தம், சைவம், சிவ சம்பந்தம்...... வைதிகம் அறிவு, நெறி, அறிவுநெறி எனவும் படும் சைவம் சிவநெறி அருள் நெறி எனவும் படும். அறிவு நெறியாகிய வைதிகம் சைவத்திற் சென்று முற்றவேண்டும். அங்ஙனம் சென்று முற்றாதவழி அவைதிகமாம். சைவம் வேத நெறியாகிய வைதிகத்தின் வழி வருவது. அங்ஙனம் வாராதேல் அது அசைவமாம். .. வைதிகம் உடல்: சைவம் உயிர். உயிரைப் பிரிந்தவழி உடல் என்னாகும், உடம்பாலாய பயனைப் பெறாது உயிர் பிரிந்தவழி "அவ்வுயிர் என்னாகும்."

இக் கூற்றிலிருந்து வைதிக நெறியின் மூலமாகிய வேதங்களினதும் சைவ நெறியின் மூலமாகிய சிவாகமங்களினதும் முக்கியத்துவம் உணரப்பாலது.

இன்று நடைமுறையிலுள்ள திருக்கோயிற் கிரியைகளில் வேத மரபு, சைவ மரபு சார்ந்த சில கிரியைகள் இடம்பெறுவதை எடுத்துக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். வேதங்கள் கூறும் சமயத்தின் முக்கிய நோக்கம் இயற்கைச் சக்திகளை

தெய்விக நிலைப்படுத்தி வழிபடுதலாகும், இவ்வழிபாட்டுக்கு உரிய அடிப்படை யாகமாகும். யாகத்திலே உரிய தெய்வங்களைக் கூவி அழைத்து அத் தெய்வத்துக்குரிய அவிர்ப்பா கங்களை அக்கினி மூலம் வழங்குவதே இவ்வழிபாட்டின் முக்கிய அம்சமாகும். அக்கினி தெய்வத்தையும் வழிபடுவோனையும் இணைக் கும் நிலையில் சிறப்புற்றான். எனவே இத் தெய்வத்தோடு தொடர்புடைய வழிபாடு வேத காலத்தில் சிறப்படைந்தது. அக்கினியைத் தெய்வமாக வழிபடப்படும் பாடலில் இடம்பெறும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

தீ வேள்வியின் முன்னிற்பவன்: அதன் பருவங்களை வகுக்கும் தேவன்: அங்கு வானவரை அழைப்பவன்: அவனை வேண்டுகின் றேன். தீயே நெறியிலோங்கும் வேள்வியதனை தீ எப்புறத்தும் சூழ்ந்து காக்கிறாய். அஃதே வானவ வரிடம் சேரும் தீ. வானவரை அழைப்போன். புலமையுள்ள செய்கைத் திறமையோன். (இருக்கு வேதம் 1.1–1–5)

இக் குறிப்பு அக்கினி வழிபடப்படும் தெய் வத்தை அழைப்பவனாகச் சித்திரிக்கின்றது. அக்கினி தேவாகளில் முதறப்பட்டவனாகவும் முன்னோனாகவும் விளங்குபவன். அனைத்துச் செய்கைத் திறமை, உயிர், வலிமை, பொலிவு, ஒளி, மாட்சி ஆகிய அனைத்தும் அக்கினி தேவனுடைய விளக்கங்களாகத் திகழ்கின்றன.

வேதங்களில் இயற்கையோடு இயைந்த மூவகை நிலைகளில் தெய்வங்கள் வகுக்கப் பட்டன. விண்ணைச் சார்ந்தவையெனவும் மண்ணைச் சார்ந்தவையெனவும், இடைவெளி யைச் சார்ந்தவையெனவும் வகுத்து வழிபடப்பட் டமை குறிப்பிடத்தக்கது. பஞ்ச பூதங்கள் தெய் வங்களாக வழிபடப்பட்டன. விண்ணில் அதி தெய்வமான தீயென சூரியன் போன்றவையும் மண்ணுடன் தொடர்புடைய அக்கினி, சோமன், பிருதுவி போன்றவையும் ஆகாயத்துக்கும் பூமிக்கும் இடைப்பட்ட தெய்வங்களில் வாயு, பர்ஜன்யன், நீர்த் தெய்வமாகிய அப்பு ஆகியவை யும் இவ் வகையில் குறிப்பிடத்தக்கன. இந்திரன், விஷ்ணு, உருத்திரன், வருணன், பிருகஸ்பதி போன்ற தெய்வங்களிலும் மேற்குறித்த தெய்விகப் பண்புகள் ஏற்றிக் கூறப்பட்டன. இவை யாவற்றுக்கும் மேலாகப் பரம்பொருளை ஒளிவடிவில் போற்றப்பட்ட சிறப்பும் வேதத்தில் காணப்படுகின்றது. அனைத்து வழியைக் காட்டவும் பேரொளி நிலைபேறு கொண்டுள்ள சிறப்பை இருக்கு வேதம் கூறும் (இருக்கு வேதம் 6,9–5) சாமவேதம் ஒளியே தெய்வம், தெய்வமே ஒளி எனப் போற்றும்.



வழிபாட்டு மாபிலும் சுவறியுள்ளதை நாம் அவதானிக்கலாம் ஆகமம் வகுத்துக் கூறும் நைமித்திகக் கிரியைகளில் உயரிடம் பெறும் கும்பாபிஷேகக் கிரியையில் நாம் இச் சிறப்ப மிசங்களை உணரலாம்.

பிரதிஷ்டை என்ற சொல் குறிக்கும் பொருளை விளக்குவதன் மூலம் கும்பாபி ஷேகத்தின் உட் பொருளை நாம் உணரலாம். 'பிர' என்னும் பகுதிக்கு 'சிறப்பாக' என்றும் 'நன்கு புலனாகும்படி' என்னும் பொருள்படும். 'திஷ்ட' என்னும் பகுதிக்கு நிற்றல் என்ற பொருளும் உண்டு. எனவே பிரதிஷ்டை எனும் பொழுது 'ஏனைய இடங்களில் புலனாவதைக்

காட்டிலும் சிறப்பாக நிலை நிற்றல் என்றும் ஏனைய இடங்களில் நிற்பதைக் காட்டிலும் நன்கு புலனாகும்படி நிற்றல், என்றும் பொருள்படு கின்றது. இந் நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிஷ்டை ஆகும். பாரெங் கணும் பரந்து விளங்கும் பரம்பொருளைப் பசு வின் முலைகளினூடே பாலைத் தோற்றுவிப்பது போன்று திருக்கோயில் வெளிப்படுத்தும் கிரியை யின் வழிகளையே ஆகமம் எமக்கு எடுத்துரைக் கின்றன (கைலாசநாதக் குருக்கள் 1968)

பிரதிஷ்டை என்று கூறப்படும் கும்பா பிஷேகக் கிரியையின் போது குடத்தில் நிரப்பப் படும் புனிதநீரால் இறைவனின் திரு உருவத் துக்கு நிகழ்த்தப்படும் நீராட்டுதலே சிறப்பம்ச மாகும். இக் கும்பாபிஷேகக் கிரியை இறைவனை அகன்ற பரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒருவழிப்படுத்தி எழுந்தருளி நிலை நிற்கச் செய்யும் செயலைச் சுட்டுகின்றது. பரம் பொருளை நாம் படிப்படியாக உணரமுடிகின்றது. இறைவன் சிறு அளவில் புலனாகும் வண்ணம் ஆகாயமாக வெளிப்படுகின்றான். ஆகாயந் தானும் புலன்களால் செவ்விதாக கிரகிக்கப்பட முடியாது ஆகாயத்தைவிட வாயு சிறிது அதிகமாக உணரப்படக்கூடியதெனினும் கட்புலனாகாத தொன்றாகும். இதற்கு அடுத்த நிலை அக்கினியாகும். இது கட்புலனுக்கு உட்பட்டது. எமது வழிபாட்டு முறைகளில் அதிகம் இடம்பெற்று எம்மை ஈடேற்றவல்லது. அக்கினி யைப் பேணிப் பாதுகாப்பதும். தொடர்ந்து வழிபடுவதும் எளிதான காரியமல்ல, இந் நிலையிலிருந்து சற்று எளிமையாக விளங்குவது நீர் எனினும் கிரகிக்கத் தக்கவாறு நீரை ஒரே நிலையில் நிலைபெற நிறுத்தி அங்கு இறைவனைக் கண்டு தொடர்ச்சியாக வழிபடு வது எளிதன்று இதுவரை கூறிய வற்றினின்றும் வேறானது ஐந்தாவதாகிய மண் இதனிடத்து இறைவன் தெய்விக அம்சங்களை நிலை நிறுத்தித் தொடர்ச்சியாகக் கண்டு அவனைக் கிரகித்தல் ஓரளவு எளிதில் கைகூடும் நிலையாகும். இவ்வாறு இறைவன் அருவ நிலையினின்றும் இழிந்து ஆகாயம், வாயு, தீ, நீர், மண் ஆகிய ஐந்திலும் பரந்து விரிந்து விளங்கும் தன்மையை தைத்திரிய உபநிடதம்.

"ப்ரஹ்மண ஆகாச : ஸம்பூத:
ஆகாசாத் வாயு :
வாயோரக்நி:
அக்நேராப :
அத்ப்ய : பிருத்வீ"



எனக் கூறும். இம்மரபினை ஆகமங் கூறும் கிரியை மரபில் நாம் அவதானிக்கலாம். இறைவனை வழிபட நிறுவப்படும் மண் அம்சம் வாய்ந்த விக்கிர கத்தில் எழுந்தருளச் செய்வதற்காக விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்தும் கிரியைகளே கும்பாபிஷேகக் கிரியையின் உயர் நிலையைக் குறிக்கின்றன.

கும்பாபிஷேகக் கிரியை நிகழ்வதற்கு அமைக்கப்படும் யாகசாலை ஆகாய வெளியில் அமைவது குறிப்பிடத்தக்கது. இங்கு அமைக்கப் படும் குண்டங்களில் அக்கினியும் வாயுவும் ஒன்றிணைந்து விளங்குகின்றன. யாகசாலை யின் மையத்தில் விளங்கும் வேதியில் அமையும் கும்பத்தில் இருப்பது நீர். இவ்வாறு பஞ்ச

பூதங்களின் ஒடுக்கம் இறுதியில் பிரிதிவியோடு தொடர்புடைய திருவுருவத்தில் வந்து நிறைவுறு கின்றது. திருவுருவம் கும்ப நீரால் அபிஷேகிக் கப்பட்டவுடன் இறை அம்சத்துடன் தெய்விகப் பொலிவு பெற்று வழிபாட்டுக்கும் உபசாரத்திற் கும் உரியதாக விளங்குகின்றது. பிரபஞ்சத்தில் உள்ள பொருட்களில் இறைவன் விரவியுள்ள காரணத்தால் அட்டமூர்த்தி என சிறப்பிக்கப்படு கின்றான். மண், நீர், நெருப்பு, காற்று, வெளி எனப்படும் ஐம்பூதங்களும் இவற்றுக்குப் புறம்பாய் இருந்து, இவை விளங்கவும், வாழவும் ஆற்றல் பெருக்கும் சூரியனும் சந்திரனும் இவ்வேழு அம்சங்களின் வேறாய் நின்று இவற்றை உணரும் எசமானனும் ஆகிய எட்டுமே இதில் அடங்குகின்றன. இவ்வெட்டு அம்சங் களில் இறைவனை உணர்ந்து வழிபடுதலே கும்பாபிஷேகக் கிரியையின் உயர் நோக்கமா கும். கிழக்கு முதலாகிய எட்டுக் குண்டங் களிலும் இந்த அட்ட மூர்த்திகளில் பூசித்தலும் சிறப்புப் பெறுகின்றது. ஆகம நெறியில் இது உயர் நிலை வகிக்கின்றது. நவ குண்டங்களில் அக்கினியைப் பல்வேறு நிலைகளில் பூசித்து அந்தந்தக் குண்டங்களுக்குரிய சமித்து வகைகள் விசேட ஓமங்கள், பூர்ணாகுதி முதலி யன இடம்பெற்று யாகம் பூரண பொலிவு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கும்பாபிஷேகக் கிரியையின் பின்னர் இறைவன் ஆலயத்தில் சாந்நித்தியம் பெற்று அடியவர்களின் பக்திக்கு உரியவனாகிறான். தெய்விகப் பொலிவுபெற்று விளங்கும் இறை வனுக்கு பல்வகை உபசாரங்களும், அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், அர்ச்சனை, தோத்திரம் போன்றவையும், முறையாக இடம்பெறுவன. ஆகமங்கூறும் வழிபாட்டு மரபிற்கு யசுர் வேதமும் முன்னோடியாக விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. யசுர் வேதத்தில் இடம்பெறும் சதருத்திரியம் இவ்வகையிற் குறிப்பிடத் தக்கதாகும். இம்மரபு ஆகம வழிபாட்டில் உயர் தனியிடத்தைப் பெறுவதோடு தென்னாட்டுத் திருக்கோயில் வழிபாட்டிலும் பெரிதும் கையாளப்படுகிறது. இவ்வழிபாட்டு முறை தெய்வங்களை வசீகரித்துத் தன் உள்ளத்தில் வயமாக்கும் முறையைச் சார்ந்து நிற்பதாகும். வழிபடப்படும் தெய்வத்தைக் குறித்துப் பல பெயர்களைக் கூறும் இப் புதியதொரு முறை யசுர் வேதத்தில்தான் முதன் முறையாகக் குறிப்பிடப்படுகின்றது. யசுர்வேதத்தில் சதருத் திரியம் என்ற பகுதியில் உருத்திரன் என்ற தெய்வம் நூறு பெயர்கள் கொண்டு வழி படப்படுகின்றான்.



இப்பெயர்களில் சில சிறப்புப் பெயர் கள். சில காரணப் பெயர்கள் சில தெய்வங்களின் பண்பைச் சுட்டு வன. இத்தகைய பெயர்கள் நூறாகவும் ஆயிரமாகவும் தொகுக்கப் பட்டுப் புராணங்களில் காணப்படுகின்றன. ஆகம மரபில் தென்னாட்டு ஆலயங்களில் நிகழும் நித்திய வழிபாட்டில் இத்தகைய பல பெயர்களைக் கொண்டு இறைவனைச் சிறப் பித்து வழிபடும் முறை அருச்சனை எனப்படு வதாகும். அஷ்டோத்திரம், சஹஸ்ர நாமம், லட்சார்ச்சனை, கோடியர்ச்சனை என இவை விரிவுபெறுகின்றன.இம் மரபிலும் வைதிக ஆகமக் கிரியை மரபுகளின் சங்கமத்தைக் காண்கின்றோம். மந்திரங்களை உச்சாடனம் செய்து வழிபடும் முறைகள் இரு சமய மரபுகளிலும் சிறப்புற்று விளங்குகின்றன. தோத்திரங்களைக் கூறி வழிபடும் முறையும்

பொதுவாகவுள்ளது. ஆகம வழிபாட்டு மரபில் இசையுடன் பாடல்களைப் பாடும் மரபுக்குச் சாமவேதம் முன்னோடியாக விளங்கியிருக்கலாம்.

ஆகம மரபில் இறைவனுக்கு நிகழும் உபசாரங்களிலும் பஞ்ச பூத அம்சங்கள் விரவியுள்ளன. சந்தனம், கிழங்கு, பழம், புஷ்பம், இவைகளில் செய்யப்பெறுவன பார்த்திப உபசாரம். மண்ணின் தொடர்பைக் காட்டுவன. தீர்த்தம், பால், தயிர் போன்றவை நீரின் உபசாரமாக அமைவன. நவரத்தினம், தீபம் போன்றவை ஆக்னேய உபசாரம். அக்கினியின் தொடர்பைச் சுட்டுவன. தூபம், சாமரம், வாயு உபசாரங்களாகும், மணி, கானம், முதலியன ஆகாய சம்பந்தமான உபசாரம். எனவே இறைவனுக்குச் செய்யப்படும் அனைத்து உபசாரங்களும் ஐம்பூத ஆக்கமாக விளங்கு கின்றன. தென்னாட்டில் விளங்கும் பஞ்சபூதத் தலங்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. திருவாரூர் பிருதிவித்தலமாகவும், திருவானை க்கா அப்புத்தலமாகவும், திருவண்ணாமலை தேயுத்தலமாகவும் காளத்தி வாயுத்தலமாகவும், சிதம்பரம் ஆகாயத்தலமாகவும் சிறப்பிக்கப் படுகின்றன.

கும்பாபிஷேகம் முறையாக நிறைவேறிய பின் அஷ்டபந்தனம் சாத்தி, தோடி, நிவாரணம், அகோர சமயை முதலான தன் பொருட்டும் கும்பாபிஷேகம் செய்த பலனை அடைவதன் பொருட்டும் அவசியம் செய்ய வேண்டப்படுவதே மண்டலாபிஷேகமாகும். ஒரு மண்டலம் 45 நாட்களைக் கொண்டது. சிலர் 48 நாள் என்றும் கொள்வர் உத்தமமானது. 45 நாட்களைக் கொண்ட மண்டலமாகும். 48, 45, 24, 15, 12, 10 என மண்டலாபிஷேகத்தை அரைவாசி கால்வாசி என்ற கணக்கிலும் செய்யலாமெனக் கூறப்பட்டுள்ளது. மண்டலாபிஷேகம் சங்கா பிஷேகத்துடன் பூர்த்தியடையும்.

இவ்வாறு ஆலயக் கிரியைகளில் உன்னதமாக விளங்கும் கும்பாபிஷேகம் என்னும் பிரதிஷ்டைக் கிரியையில் வேத நெறியும் ஆகம நெறியும் கூறும் சங்கமமாகின்ற உயர் நிலையை அவதானிக்க முடிகின்றது. இயற்கைச் சக்திகளை தெய்விக நிலைப்படுத்தி வழிபடுதல், அக்கினி வழிபாடு, மந்திர உச்சாடனம், அருச்சனை, தோத்திரம் போன்ற அம்சங்களில்



இவற்றின் சிறப்பினை நாம் உணரலாம். எனவே ஆலயக் கிரியைகள் நீண்ட காலப் பாரம்பரியத்தின் நிகழ்காலச் சின்னங்களாக அமைந்து பக்தி உணர்வை வளர்ப்பதோடு ஆன்மிக ஈடேற்றத்திற்கும் உதவுவனவாக உள்ளன. எமது சமயப் பாரம்பரியத்தில் உன்னத வழி முறைகளாகவே ஆலயக் கிரியைகள் அமைந்து விளங்குகின்றன.

# விநாயகர் தத்துவம்

சித்தாந்த இரத்தினம் கலாநிதி. மா. வேதநாதன்,
பி.ஏ.(ஆனர்சு),எம். ஏ; பிஎச். டி.
இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம்.

**அறிமுகம்**

விநாயகர் வழிபாடு மிகவும் புராதன மானது. தனிப்பெருஞ் சிறப்புடைய இவ்வழிபாடு சிந்துவெளி நாகரிகத்தில் நிலவியதை அறிஞர் குறிப்பிடுகின்றனர். இருக்கு வேதத்தில் விநாய கர் "கணபதி" என்ற சொல்லினால் சுட்டப்பட் டுள்ளார். தேவாரங்களிலும் அவர் "கணபதி" என்ற சொல்லால் சுட்டப்படுவது இங்கு நோக்கு தற்குரியது. விநாயகர் வழிபாட்டினைக் "கணபதி வழிபாடு" என்றும் வழங்குவர். விநாயகரைப் பரம்பொருளாகக் கொள்ளும் அவரின் தத்துவம் "காணாபத்தியம்" எனப்படும். விநாயகரின் திருவடிவங்களும், திருவுருவங்களில் காணப் படும் ஆயுதங்களும், அவர் சத்தியுடன் விளங் கும் திருக்கோலங்களும், அவர் எழுந்தருளி யிருக்கும் வாகனங்களும், அவரின் திருநாமங் களும், விநாயகர் வழிபாட்டு முறைகளும் அறிவார்ந்த தத்துவப்பொருளை உணர்த்து பவையாக விளங்குகின்றன. அவற்றை எடுத்துக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**விநாயகர் வடிவங்களின் தத்துவநிலை**

விநாயகர் ஒருவரேயாயினும் "நிறுத் திடுவன் நினைத்த உரு நிமலன் தானே" என்ற சிந்தாந்த சைவ தத்துவ அடிப்படையில் அவர் அவ்வப்போது பற்பல வடிவங்கள் கொண்டதைச் சமய சாத்திர நூல்கள் நன்கு புலப்படுத்துகின் றன. **அகோர சிவாசாரியார் பத்ததி** பதினாறு வகையான விநாயகர் வடிவங்களைக் குறிப்பிடு கின்றது. **ஸ்ரீ தத்துவ நிதி** என்ற சிற்ப நூலில் விநாயகரின் முப்பத்திரண்டு வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. **கணபதி ஹ்ருதயம்** என்ற நூல் விநாயகரின் ஐம்பத்தொரு பேதங்களைச் சுட்டுகின்றது. ஸ்ரீ தத்துவ நிதி கூறும் விநாய கரின் முப்பத்திரண்டு திருவடிவங்களின் தத்துவ நிலை பற்றி முதலில் நோக்குவோம்.

**1. பால விநாயகர்**

இவர் குழந்தை வடிவத்தில் உள்ளவர். யானை முகத்தோடும், நான்கு திருக்கரங் களோடும் விளங்குகின்றார் மாம்பழம், வாழைப் பழம், பலாப்பழம் ஆகிய முக்கனிகளையும், கரும்பையும் தனது நான்கு திருக்கரங்களில் ஏந்தியுள்ளார். துதிக்கையில் ஒரு மோதகத்தைத் தாங்கியுள்ளார். இவர் இளம் சூரியனை ஒத்த நிறமுள்ளவர். பால விநாயகர் ஒரே இடத்தில் உட்காராமல் ஓடி விளையாடும் இயல்பினர். ஆரம்ப நிலையில் ஞானத்திற்குச் சலனம் உண்டு என்பதையே இத்திருவடிவம் உணர்த்து கின்றது.

**2. தருண விநாயகர்**

இவர் இளம் பருவத் தோற்றம் உள்ள வர். யானை முகத்தையும் எட்டுத் திருக் கரங்களையும் கொண்டவர். பாசம், அங்குசம், மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த கொம்பு, நெற்கதிர், கரும்பு என்பவற்றைத் தனது எண் கரங்களிலும் ஏந்தியுள்ளார். இவர் சிவந்த சூரியனின் நிறம் உடையவர்.

**3. பக்தி விநாயகர்**

இவர் யானை முகத்தையும், நான்கு திருக்கரங்களையும் உடையவர். தேங்காய், மாம் பழம், வாழைப்பழம், சர்க்கரைப் பாயாச பாத்திரம் ஆகியவற்றைத் தனது நாற்கரங்களிலும் ஏந்திய வராகக் காட்சி அளிப்பார். இவர் சரத்கால சந்திரனைப் போன்ற தூயவெண்மையான நிறம் உடையவர்.

**4. வீர விநாயகர்**

இவர் யானை முகத்தையும் பதினாறு திருக்கரங்களையும் உடையவர். கத்தி, வாள், வில், அம்பு, கேடயம், சம்மட்டி, தடி, அங்குசம், பாசம், சூலம், பரசு, குந்தம், வேதாளம், கதை, கொடி, சக்கரம் ஆகிய பதினாறையும் பதினாறு திருக்கரங்களில் ஏந்தி நின்ற கோலத்தில் பதினாறு பேறுகளைத் தருபவராக விளங்கு கின்றார். உணவுப் பொருட்கள் இல்லாமல் ஆயுதங்கள் மட்டும் ஏந்தியுள்ள வீரத் திருவுரு வம் இது ஒன்றே ஆகும்.

**5 சக்தி விநாயகர்**

இவர் யானை முகத்தையும் எட்டுக் கரங்களையும் உடையவர். தனது எட்டுக் கரங் களிலும் கிளி, மாதுளம்பழம், தாமரை, மணி. பொன்னால் செய்த நீர்ப் பாத்திரம், அங்குசம். பாசம், கல்பசாத்திரம் (மூப்பு வராமல் செய்யும் மருத்துவ நூல்) ஏந்தியவராய் விளங்குகின்றார். பச்சைத் திருமேனியுடைய தேவியை இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக் கொண்டுள்ள நிலை யில் காட்சி தருகின்றார். இவர் அந்திவானம் போன்ற செம்மை நிறமுடையவர்.

**6. துவிஜ விநாயகர்**

நான்கு திருக்கரங்களிலும், முறையே புஸ்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர். நான்கு யானை முகங் களை உடையவர் மின்னற் கொடிபோல விளங்கு கின்ற கைவளையல்களை உடையவர் சந்திரன் போல் வெண்மையானவர்.

**7. சித்தி விநாயகர்**



இவர் மாம்பழம், பூங் கொத்து, கரும் புத்துண்டு, எள்ளு ருண்டை, பரசு என்பனவற்றைத் தனது ஐந்து கரங்களில் தரித்தவரும், பொன்கலந்த பசுமை நிறமுடையவருமாக விளங்குகின்றார்.

**8. உச்சிஷ்ட விநாயகர்**

நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை இவற்றைத் தரித்தவரும், நீல நிறத்திருமேனி உடையவருமாக விளங்கு பவர். பிறிதொரு நிலையில் இவர் பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராக காம மோகிதராகவும், நீலவர்ணம் உடையவராகவும் விளங்குகின்றார் ஊச்சிஷ்டம் என்பதற்கு ஒரு வர் உபயோகித்த பின் ஒதுக்கிய அசுத்தமான

பொருள் என்பது கருத்து ஆகும். எச்சில் என்றும் அர்த்தம் உண்டு. சுத்தமான நிலையை மட்டுமன்றி அசுத்தமான நிலையினையும் கடந்து நிற்கும் நிலையே எமது வாழ்வின் குறிக்கோளாக இருக்கவேண்டும். அசுத்தமான பொருள்களும், செடி, கொடிகளுக்குப் பசளையாகி எமக்கு நலன் பயக்கின்றது. இவ்வாறு "அழுக்கை அழுக்காகக் கருதக் கூடாது அவையும் நன்மை செய்யும்" என்ற தத்துவத்தை உச்சிஷ்ட விநாயகர் வடிவம் சுட்டி நிற்கின்றது. சிற்றின்பம் தெய்வீக நோக்குடன் அமையும்போது பேரின்பம் பெறப்படும் என்பதும் இத்திருவடிவத்தின் நுண்பொருள் ஆகும்.

**9. விக்ன விநாயகர்**

சங்கு, கரும்புவில், புஷ்ப்பாணம், கோடரி, பாசம்., சக்கரம். கொம்பு, மாலை, பூங்கொத்து, பாணம். முதலியவற்றோடு கூடிய திருக்கரங்களையுடையவராகவும், ஆபரணங்களை நிரம்பத் தரித்தவராகவும் பொன்மேனியுடையவராகவும் விளங்குகின்றார்.

**10. ஷிப்ர விநாயகர்**

தந்தம், கற்பகக் கொடி, பாசம், ரத்ன கும்பம், அங்குசம் இவற்றை ஏந்தியவர். செவ்வரத்தம் பூப்போன்ற அழகிய மேனியர். செந்நிறமானவர்.

**11. ஹேரம்ப விநாயகர்**

அபயம், வரதமாகிய கைகளையுடையவர். பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானைமுகம் ஐந்துடையவர். பசுமைகலந்த கருமை நிறம் உடையவர்.

**12. இலட்சுமி விநாயகர்**

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம் பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப்பூவை ஏந்திய இருபெருந் தேவிமார் களோடு திகழுபவர்.

**13. மஹா விநாயகர்**

மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோற்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர் போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர், பிறை முடியர். மடிமீது எழுந்தருளியிருக்கிற – தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப் பெற்றவர்.



**14. விஜய விநாயகர்**

பாசம், அங்குசம், தந்தம். மாம்பழம் இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

**15. நிருத்த விநாயகர்**

இவரைக் கூத்தாடும் பிள்ளையார் என அழைப்பர். மோதிரங்களணிந்த விரல்களையுடைய கைகளால் பாசம் அங்குசம். அபூபம், கோடரி, தந்தம் என்பவற்றைத் தரித்தவர். பொன்போன்ற நிறமுடைய திருமேனியர். கற்பக விருட்சத்தினடியில் எழுந்தருளியிருப்பவர்.

**16. ஊர்த்துவ விநாயகர்**

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்பு வில், பாணம். தந்தம் இவற்றையுடையவர், பொன்வண்ண வண்ணர். பச்சைநிற மேனி யோடு விளங்குகின்ற தேவியைத் தழுவி யிருப்பவர்.

**17. ஏகாட்சர விநாயகர்**

செந்நிறமானவர்,. செம்பட்டாடையர். செம்மலர், மாலையர், பிறை முடியர், முக்கண் ணர், குறுந்தாளர், குறுங்கையர், மாதுளம்பழம் பாசம், அங்குசம், வரதம், இவை தாங்கிய கரங்களையுடையவர். யானை முகவர் பது மாசனத்திருப்பவர். பெருச்சாளி வாகனர்.

**18. வர விநாயகர்**

செவ்வண்ணர், யானை முகவர், முக் கண்ணர், பாசம் அங்குசங்களைத் தரித்தவர். தேன்நிறைந்த கபாலத்தை உடையவர், பிறை முடியர்.

**19. திரயாஷ்ர விநாயகர்**

அசைகின்ற செவிகளாகிய சாமரை யணிந்தவர். பொன்னிறமானவர், நான்கு கரங்களை உடையவர், பாசம், அங்குசம் தந்தம் மாம்பழம் இவற்றைத் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

**20. ஷிப்ரபிரசாத விநாயகர்**

பாசம், அங்குசம், கல்பலதை. மாதுளம் பழம். தாமரை. தருப்பை விடரம் இவற்றைத் தரித்தவர். திருவாபரணங்களை அணிந்தவர். பேழை வயிற்றையுடையவர்.

**21. ஹரித்திரா விநாயகர்**

மஞ்சள் நிறமானவர். நான்கு கரங் களையுடையவர், அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம், இவற்றைத் தரித்திருப்பவர். பத்தர்கட்கு அபயமளிப்பவர்.

**22. ஏகதந்த விநாயகர்**

பேழைவயிற்றுடன் நீலமேனியர் கோடரி, அட்சமாலை, லட்டு, தந்தம் இவற் றையுடையவர்.

**23. சிருஷ்டி விநாயகர்**

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தையுடையவர். சிவந்த திருமேனியர்.

**24. உத்தண்ட விநாயகர்**

நீலம், தாமரை, மாதுளம் பழம், கதை, தந்தம், கரும்புவில், ரத்ன கலசம், பாசம்,. நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக்கைகளை உடையவர். அழகிய தாமரைப் பூவை ஏந்திய பச்சைமேனியாளாகிய தேவியால் தழுவப் பெற்றவர். சிவந்த மேனியுடையவர்.



**25. ரணமோசன விநாயகர்**

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம், இவற்றைத் தரித்தவர். வெண்பளிங்கு போன்ற மேனியர் செந்நிறப் பட்டாடையுடுத்தியவர்.

**26. துண்டி விநாயகர்**

அட்சமாலை, கோடரி, ரத்னகலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

**27. துவிமுக விநாயகர்**

தந்தம், பாசம், அங்குசம், ரத்ன பாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர். பசுநீலமேனியர் செம்பட்டாடையும் ரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.

**28. மும்முக விநாயகர்**

வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை. வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம். அமுதகலசம், அபயம் இவற்றை உடையவர். பொற்றாமரையாசனத்தின் நடுப் பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளி யிருப்பவர். புரசம் பூப்போன்ற சிவந்த நிறம் உடையவர்.

**29. சிங்க விநாயகர்**

வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்னகலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடதுகை களையுடையவர். வெண்ணிறமான மேனியர். யானை முகவர். சிங்கவாகனத்தில் எழுந்தருளியிருப்பவர்.

**30. யோக விநாயகர்**

யோக நிலையில், யோக பட்டம் தரித்துக் கொண்டு, இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இந்திரநீலம் போன்ற ஆடையை உடுத்திக் கொண்டு, பாசம் அட்சமாலை, யோகதண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

**31. தூர்க்கா விநாயகர்**

சுட்ட பகம்பொன்னிறம், எட்டுக்கை, பெரியமேனி. அங்குசம், பாணம், அட்ச மாலை, தந்தம் இவைகளை வலது கைகளில் ஏந்தியவர். பாசம், வில், கொடி, நாவற்பழம் இவைகளை இடது கைகளில் உடையவர், செந்நிற ஆடையர்.

**32. சங்கடஹர விநாயகர்**

இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப்பக்கத் தொடையில் சத்தியை உடையவராக விளங்குகின்றார். சத்தி பசியமேனியளாக நீலப்பூவினை ஏந்தியவளாக இருப்பாள். வலது கையில் அங்குசம், வரதம் உடையவர். இடது கையில் பாசம், பாயச பாத்திரம் ஏந்தியவர். செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீலநிறமான ஆடையணிந்தவர்.

மேலே காட்டப்பட்டுள்ள விநாய கரின் திருவடிவங்களை நோக்கும்போது அவர் பொதுவாக யானை முகம் கொண்டவராகவும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்ற எண்ணிக்கை உடைய திருமுகங்களை உடையவராகவும், நான்கு, ஐந்து ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு, பதினாறு என்ற திருக்கரங் களைக் கொண்டவராகவும், அவற்றில் வெவ்வேறு ஆயுதங்களைத் தரித்துள்ளவரா கவும், செம்மை, வெண்மை, மஞ்சள், கருநீலம், நீலம் ஆகிய நிறங்களை உடையவராகவும், தேவி அற்ற திருமேனியராகவும், ஒரு தேவியை உடையவராகவும், இரு தேவியர்களுடன் விளங்குபவராகவும், எலி, சிங்கம் ஆகிய வாகனத்தில் எழுந்தருளியிருப்பவராகவும் விளங்குகின்ற தத்துவநிலை தெரியவருகிறது. மேலும் விநாயகர் படிமங்கள் நின்ற கோலத்தி



லும், அமர்ந்த கோலத்திலும், ஆடற் கோலத்தி லும் அமையும் மெய்மையும் புலப்படுகின்றது. நின்ற கோலத்தில் இயற்றும்போது ஆபங்கம் அல்லது சமபங்கத்தில் விநாயகரின் படிமம் அமைதல் வேண்டும். அமர்ந்த கோலத்தில் அமைக்கும் போது உடலையும் தலையினையும் நேரியதாக அமைத்து வலது காலை ஆசனத்தில் தொடையுடன் சேர்த்து, மடக்கி ஊன்றி, இடது காலைக் கிடத்தியதாயிருத்தல் வேண்டும். இல்லங்களில் வைத்து வழிபடுவதற்கும், கோயில்களில் பிரதிட்டை செய்வதற்கும் அமர்ந்த விநாயகர் கோலப்படிமமே ஏற்றதாகும். உற்சவங்களுக்கு அமர்ந்த கோலம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் நின்ற கோலமுடைய விநாயகரே விசேடமென்பது தத்துவமாகும்.

**விநாயகரின் திருவுருவத் தத்துவம்**

விநாயகர் திருவுருவத்தின் தத்துவ நிலை பரமரகசியமானதாகும். அவரின் தத்து வத்தையும் அவரின் வீரதீரச் செயல்களின் உட்பொருளையும் சிறப்பாகப் புலப்படுத்துவது "விநாயக புராணம்" ஆகும். ஔவையார் பாடி யருளிய "விநாயகர் அகவல்" விநாயகர் உருவம் பற்றியும் அவ்வுருவம் சுட்டும் தத்துவப் பொருளையும் விளக்கி நிற்கும் சைவத்தமிழ் இலக்கியமாகும். இவ்விலக்கியத்தில் விநாயக ரின் திருவுருவத்தில் சிலம்பு அணிந்து விளங்கும் திருவடிகள், பொன்னால் செய்யப்பட்ட இடைக் கொடி, பெருவயிறு, ஒற்றைக்கொம்பு, சிவந்த குங்குமப் பொட்டு, ஐந்து கரங்கள், அங்குசமும் பாசமும் தரித்த கைகள், நீலமேனி பெரியவாய், நான்கு திருத்தோள்கள், சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று திருக்கண்கள் கன்ன மதம், கைம்மதம், கோசமதம் என்னும் மதங் களைப் பொழிதலால் உண்டாகும் தழும்புகள் இரண்டு பெரிய காதுகள், பொன்னால் செய்யப் பட்ட கிரீடம், திரண்டு மூன்று வடமாக விளங்கும் பூணூல், பெருச்சாளி வாகனம் என்பன திகழ் வதையும் அவர் சொல்லும், பொருளும் கடந்த தத்துவப் பொருளாக விளங்குவதையும் தன் அடியவர்களுக்கும் தமது தத்துவப் பெருநிலை யைக் கொடுத்து ஆட்கொள்ளும் பேரருட் திறத்தையும் தத்துவார்த்த ரீதியாக விளக்கு கின்றது. இதனை ஔவையார் விநாயகர் அகவலில்.

"சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறியப்
பேழை வயிறும்
பெரும் பாரக்
கோடும்
வேழ முகமும்
விளங்கு சிந்
தூரமும்
அஞ்சு கரமும்
அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிருபுயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக்களிறே
முப்பழம் நுகரும் மூசிக வாகன
..........................................................................
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயகர் விரைகழல் சரணே"



என்று குறிப்பிடுவதால் அறியலாம் திருமூலரும் விநாயகரின் திருவுருவத்தை

"ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை" என்று திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார். அருணந்தி சிவாசாரியரும் விநாயகரின் திருவுருவத் தத்துவத்தை,

"ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாய்ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
தரும் ஒருவா ரணத்தின் தாள்கள்"

என்று மொழிவர். விநாயகர் தனது திருக்கையொன்றில் மோதகம் ஏந்தி விளங்குவதை ஆதி சங்கரா தனது கணேசபஞ்சரத்தின் முதற் பாடலில் " முதாகராத்த மோதகம்" என்று சுட்டுவதால் அறிய முடிகின்றது.

விநாயகரின் திருவுருவ உறுப்புக்கள் உணர்த்தும் மறைஞான தத்துவப் பொருளை இங்கு நோக்குவோம்.

**ஐந்து கரங்கள்**

விநாயகர் நான்கு கரங்களுடன் தும்பிக்கையையும் சேர்த்து ஐந்து கரங்கள் உடையவராக விளங்குகின்றார். பாசம் தரித்துள்ள கரம் படைத்தற்றொழிலைக் குறிக்கின்றது. அங்குசம் ஏந்திய கரம் அவரின் அழித்தற்றொழிலை அறிவிக்கின்றது. உயிர்களுக்கு அபயம் அளித்துக் காக்கும் அபயகரம் அவரின் காத்தற்றொழிலைச் சுட்டி நிற்கின்றது. மோதகம் ஏந்தி நிற்கும் வலதுகரம் உயிர்களுக்கு அருள்புரியும் அருளற்றொழிலைப் புலப்படுத்துகின்றது.

தும்பிக்கை எனப்படும் துதிக்கை உறு உணர்ச்சி, மணம் அறிதல், உணவை எடுத்தல் என்ற முத்திறங்களை உடையது. அத்துதிக்கை காட்டியும் மறைத்தும் நிற்கும் திரோதானம் ஆகிய மறைப்புத்தொழிலை உணர்த்தி நிற்கின்றது. இங்ஙனம் விநாயகரின் ஐந்து திருக்கரங்களும் படைத்தல், அழித்தல், காத்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்த தொழிலுக்கும் அவரே அதிபதி என்பதையும், இதனால் அவர் அளவில் ஆற்றல் உடையவராக விளங்குகின்றார் என்பதையும் உணர்த்தி நிற்கின்றன.

**யானை முகம்**

விநாயகர் யானை முகம் உடையவராக விளங்குவது அவரே "ஓம்" என்ற பிரணவப் பொருள் என்பதைச் சுட்டி நிற்கின்றது. அவர் ஓங்கார வடிவினன் என்பது, அவரின் அட்டோத்திர சத நாமங்களில் "ஓங்காராய நம" என்று அவர் துதிக்கப்படுவதால் உணரலாம். யானைக்கு



நினைவு வன்மை, காண்டல், கேட்டல், ஊறு, ஒன்றையும் ஒரு காலத்தும் மறவாமை, மிக்க வலிவு உடைமை, அளப்பரும் சாந்தமுடைமை, இதம் செய்பவர்களுக்கு வசமாய் உதவுவது ஆகிய இவை அருங்குணங்களாக உள்ளன. அதனாலேயே இக்குணங்களெல்லாம் ஒருங்கே அமைந்த விநாயகருக்கு யானைமுகம் அமைந்து விளங்குகின்றது.

**கொம்புகள்**

விநாயகரின் திருமுகத்தை நோக்கும் போது ஒரு பக்கம் யானைத் தந்தமாகிய கொம்பு காணப்படுகின்றது. இது ஆண்வடிவின் அடையாளமாகும். மறுபக்கம் யானைத்தந்த

மாகிய கொம்பு காணப்படவில்லை. இந்நிலை பெண்வடிவைச் சுட்டி நிற்கின்றது. இந்நிலை யானது விநாயகர் ஆண்பாலா பெண்பாலா என்று கேட்பவர்களுக்கு அவர் எப்பாலுங் கடந்த அப்பாலுக்கப்பாலாய் நிற்கும் இயல்பினர் என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. ஒடிந்த கொம்பு அபரஞானமாகிய விந்துவைக் குறிக் கும். மற்றயை ஒற்றைக்கொம்பு இறைவனை உணர்வதற்கு வாயிலாகவுள்ள பரஞானத்தைச் சுட்டி நிற்கின்றது. விநாயகரின் திருவுருவத்தில் காணப்படும் கொம்புகளைப் பதிஞானம், பாசஞானம் என்று கூறுதலும் உண்டு. வலது கொம்பாக விளங்கும் ஒடிக்கப் பெற்ற கொம்பு பாசஞானம் ஆகும். பாசஞானம், உணர்வரிய கலைஞானமாகிய சிவஞானத்திற்கு வாயிலாக விளங்கும் தன்மையது ஆகும். அதன் காரண மாகவே அது பாரதம் எழுத உதவிய எழுத்தாணி யாக உதவியது. இடது கொம்பு பதி ஞானத்தைச் சுட்டி நிற்கின்றது. அதனாலேயே அது விநாய கரைப் பொருந்திப் பிரிவின்றி இருக்கின்றது.

**மூன்று கண்கள்**

சூரியன் சந்திரன், அக்கினி என்ற முச்சுடர்களையும் கண்களைக் கொண்டு அவற்றிற்கு ஒளியைக் கொடுத்து நிற்பவர் விநாயகர் என்ற தத்துவத்தை அவரின் மூன்று கண்கள் சுட்டி நிற்கின்றன. பகலில் சூரியன் என்ற கண்ணாலும், இரவில் சந்திரன் என்ற கண்ணாலும், அக்கினி என்ற கண்ணால் எந்நேரமும் அறியும் ஆற்றல் உடையவர் என்பதே விநாயகரின் மூன்று கண்கள் புலப்படுத்தும் தத்துவமாகும்.

**மும்மதம்**

விநாயகர் அறிவு, இச்சை, தொழில் என்ற மூன்றும் உடையவர் என்பது மும்மதம் என்ற சொல்லால் சுட்டப்படும். உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் திருப் பெருகுசிவஞானம் என்ற மூன்று ஞானங்களும் மும்மதங்களாக சுட்டப் பெறுவதில் உண்டு. இதனடிப்படையில் இந்த மூன்று ஞானங்களை யும் உணர்த்துகின்றவர் விநாயகர் என்பதே மும்மதம் என்பதன் தத்துவப் பொருளாகும்.

**பெருவயிறு**

விநாயகரின் பெரு வயிறானது (பேழை வயிறு) எல்லா உலகங்களும் தம்முள் அடங்கியுள்ளன என்ற தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது.

**பாம்பாபரணம்**

விநாயகர் பாம்பை ஆபரணமாக அணிந்து விளங்குவது அவரின் திருவுருவத்தில் குண்டலினி சக்தியின்



தரிசனத்தை காட்டி நிற்கின்றது. பாம்பு குண்டலினி சத்தியின் குறியீடாக விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இங்கு "**இருத்தியே நாகரூபம்**" என்று குறிப்பிடுவது நோக்குதற்குரியது. இருத்தி என்பதற்கு நல்ல செல்வம், ஐஸ்வரியம், மேலாந் தன்மை என்பது பொருளாகும். இதனடிப்படையில் நோக்கும் போது இவைகளை உடையவர் விநாயகர் என்பது மட்டுமன்றி அடியவர்களுக்கு அவற் றைத் தருபவர் விநாயகர் என்பதையும் அவர் அணிந்துள்ள பாம்பாபரணம் புலப்படுத்து கின்றது. விநாயகரின் பூணூலும், அரைநாணும் பாம்பாகவும் விளங்குவது உண்டு.

**பிறை**

விநாயகர் பிறை சூடியிருப்பது. அறியாமை அகன்று மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்ற உயிர்களை உயர் நிலைக்கு உயர்த்தி உய்விப்பவர் என்பதையும், அவர் ஞானமே வடிவினர் என்பதையும் உணர்த்துகின்றது.

**பூணூல்**

விநாயகர் பூணூல் அணிந்துள்ளமை, அவர் பிரம்ம ஞான உபதேசத்திற்குரிய பிரம்ம ஞானி என்பதையும், அவர் முப்புரிநூல் தரித்துள்ளமையானது பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற முப்பெரும் கடவுளர்களும் அவருள் உறைகின்றனர் என்ற பெரும் தத்துவததையும் சுட்டி நிற்கின்றது. எங்கும் நிறைந்த அக்கினி வடிவானவர் என்பதையும் சுட்டி நிற்கின்றது.

**மோதகம்**

விநாயகர் மோதகம் ஏந்திய திருக்கையானது அனைத்து உலகங்களும், அவ்வுலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் விநாயகரிடத்தில் அடங்கியுள்ளன என்பதை உணர்த்துகின்றது. மோதகம் பூரணப் பொருளின் ஓர் அடையாளமாகும். மேலும் அடியார்கள் பசு ஞானத்தைக் கவளமாக மோதக வடிவில் படைக்கின்றனரென்பதையும், அவர் அதனை உண்டு தமது பேழை வயிற்றைத் திறந்து சிவ ஞானத்தை அவர்களுக்கு வழங்குகின்றார் என்பதையும் உணர்த்தவே கவள உணவாகிய மோதகத்தை அவர் கையில் கொண்டு காட்சி தருகின்றார் என்பது தத்துவமாகும். மேலும் விநாயகரின் திருக்கரத்தில் காணப்படும் மோதகம் அவருக்கு மோதகம் மீதுள்ள விருப்பத்தைப் புலப்படுத்துகின்றது. அவருக்கு மோதகம் படைத்து வழிபட்டால் அவ்வடியார்களுக்கு அவர் பேரின்பமாகிய முக்திப் பேற்றினைக் கொடுப்பார் என்பதை உணர்த்தவே ஆதிசங்கரர் தனது கணேச பஞ்சரத்தினத்தில் நுட்பமாக "முதாகராத்த மோதகம் ஸதாவி முத்தி சாதகம்" என்று அவரைப் பாடியுள்ளார் எனலாம்.

**பெரு வயிறு**

எல்லா உலகங்களும் உயிர்களும் தம்முள் அடங்கியுள்ளன என்ற தத்துவத்தை விநாயகரின் பெருவயிறு சுட்டி நிற்கின்றது.

**திருத்தாள்கள்**

விநாயகரின் திருவுருவமும் திருத்தாள்களும் ஞானத்தின் அடையாளங்களாகும். விநாயகர் ஞானக் குழந்தையாக விளங்குவதை "ஞானக் கொழுந்து" என்ற திருமந்திரக் குறிப்பால் அறிய முடிகின்றது. சிவபெருமானை ஞானத் திருவுருவாகக் காட்டும் குமரகுருபர அடிகள் அவரின் திருவடிகளும் ஞானம் என்பதைச் சுட்ட "ஞானம் திருவடி" என்றே குறிப்பிடுகின்றார். தத்துவ நோக்கில் உயிர்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களை இயக்கி அருமை யின்பத்தை அளிப்பது ஞானம் ஆகும். இந்த ஞானம் ஏற்பட்டதும் உயிர்கள் விளக்கம் பெறுகின்றன என்பது சைவ தத்துவ முடிவாகும். இவ்வகையில் உயிர்களை உய்வித்து அவ்வுயிர்களுக்குப் பேரின்பப்பேற்றை அளிக்கும் சித்தாந்த சைவ தத்துவத்தைச் சுட்டி நிற்பதாக விநாயகரின் திருத்தாள் விளங்குகின்றன.



**விநாயகர் ஏந்தியுள்ள ஆயுதங்களின் தத்துவம்**

விநாயகர் பிரணவ தத்துவ வடிவமா வார். அவர் தமது திருக்கரங்களில் பல வகை யான ஆயுதங்களை ஏந்தியவராக விளங்குகின் றார். (ஆயுதங்களின் விபரம் படத்தில் காண்க) அவ்வாயுதங்கள் நல்லவர்களைக் காப்பாற்ற வும்., தீயவர்களை அழிக்கவும், தம்மை வழிபடு கின்ற அடியவர்களின் இடையூறுகளைப் போக்கவும் பயன்பட்டதை விநாயகரின் தெய் வீக வரலாறு பற்றிய கதைகள் நன்கு புலப் படுத்துகின்றன.

தனது அடியவர்களுக்கு ஆன்மீக அழகுப் பொருட்களாகவும், அபயம் அளிக்கும் கருவிகளாகவும் காட்சி அளிக்கும் அவ்வாயுதங் கள் தீயவர்களுக்கு அச்சத்தைக் கொடுப்பன வாக விளங்குகின்றன.

விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதங்களைக் கூர்ந்து நோக்கி னால், அவர் வாழ்வில் வெற்றியீட்டித் தரும் வீரம்மிகு கடவுளாக விளங்குவது புலப்படுகின் றது. விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தி நிற்கும் ஆயுதங்கள் அவர் ஒரு வெற்றித் தெய் வம் என்ற விநாயக தத்துவத்தைப் புலப்படு த்துகின்றது. விநாயகர் தனது திருக்கரங்களில் ஏந்தி நிற்கும் ஆயுதங்கள் சுட்டும் தத்துவப் பொருளை ஈண்டு நோக்குவோம்.

**பாசம்**

இது விநாயகருக்குரிய சிறப்பான ஒரு போர்க் கருவியாகும். கயிறு என்றும் இதனை வழங்குவர். தீயவர்களின் கை கால்களைக் கட்ட இது பயன்படுகின்றது. இது மூன்று வடமாக வுள்ள கயிற்றை வளைத்துப் பிடித்த அமைப் பாகும். எளிதில் அவிழக்கூடிய முடிச்சாக முறுக்கி இதனை அமைப்பர். சுருக்கு இடாமல் வளையமாகவும் இது அமைதல் உண்டு. விநாயகருக்குச் சிறப்பான ஆயுதமாக அமையும் நாகமே, பாசமாக அமைவதும் உண்டு. இதனை "நாகபாசம்" என்பார். இது நான்கு வகைப்படும் யானையைப் பாசத்தால் கட்டுவது போல் ஆன்மாக்களின் ஆணவமலத்தைக் கட்டி, அதனை வலிகுன்றச் செய்ய உதவும் கருவி பாசம் ஆகும். மூன்று வடமாகவுள்ள பாசக் கயிறு "பாசத் திரயம்" என்ற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைக் குறிக்கும் விநாயகர் உயிர்களுக்குப் போகங்களைக் கொடுத்து, அதனோடு கட்டுண்டிருக்கச் செய்யும் கருத் தைப் பாசம் என்ற கயிறு சுட்டுகின் றது. பாசமாகிய பற்று அறுத்த லையும் பாசம் என் பது புலப்படுத்துகின்றது.



**அங்குசம்**

விநாயகர் தாங்கியிருக்கும் சிறந்த கருவிகளில் அங்குசம் ஒன்றாகும். இது யானையை அடக்கப் பயன்படுகிறது. யானைப் பாகன் இதனை யானையின் காதிலே மாட்டித் தொங்கவிட்டிருப்பான். உயிர்களைப் பாதிப் படையச் செய்யும் ஆணவமலத்தை பாசக்கயிற் றால் கட்டி அங்குசத்தில் அதனை அடக்கி மறைத்தல் என்னும் அருளைப் புரிபவர் விநாயகர் என்பதை அங்குசம் என்ற கருவி உணர்த்து கின்றது. இது வயப்படாத பொருளை வயப்

படுத்தும் ஆயுதமாகும். இது உயிர்களின் சித்த மலமாகிய ஆணவத்தை அடக்கி இறுதியில் உயிர்களைத் தன்வயப்படுத்துதலை உணர்த்தும் தத்துவத்தைச் சுட்டி நிற்கிறது.

**தந்தம்**

இது ஒடிந்த யானைக் கொம்பு ஆகும். வேதவியாசர் மகாபாரதத்தை எடுத்துரைத்த போது, அந்த இதிகாசம் அழியாது அதனை அனைவரும் படித்துப் பயன் பெறும் பொருட்டு விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை ஒடித்து அதையே எழுத்தாணியாகக் கொண்டு எழுதி வைத்தார். அந்த எழுத்தாணியே அவரது திருக்கரத்தில் விளங்கும் ஒடிந்த ஒற்றைக் கொம்பாகிய தந்தம் என்பதன் விளக்கம் ஆகும். இக்கொம்பானது "எழுத்தறிவித்தவன் விநாய கரே" என்ற விநாயக கல்வித் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது.

மேலும் விநாயகர் தந்தத்தைக் கையில் வைத்திருப்பது பிறிதொரு தத்துவ விளக்கத் தையும் தருகின்றது. ஓர் அசுரன் தனக்கு எந்த ஆயுதத்தினாலும் மரணம் நேரக்கூடாது என்ற வரத்தைப் பெற்றிருந்தான். வரம் பெற்ற காரணத்தினால் நல்லவர்களுக்கெல்லாம் சொல்லொண்ணாத் துயர் விளைவித்தான். ஆயுதப் பிரயோகம் இன்றி அக்கொடிய அசுரனைக் கொல்வதெப்படி என்று தேவர்க ளெல்லாம்அஞ்சி நின்ற வேளையில் விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை முறித்து அதனால் அசுரனைக் கொன்ற தத்துவப் பொருளை நினைவுபடுத்துவதாகவும், அவர் திருக்கரத்தில் திகழும் ஒடிந்த கொம்பாகிய தந்தம் விளங்கு கின்றது.

**வேதாளம்**

அச்சமும் அருவெறுப்பும் தரத்தக்க தசை நாரில்லாத பூதவடிவாக இது விளங்கு கிறது. பகைவர்களை விழுங்கச் செய்ய இது ஏவப்படும். வீர விநாயகரின் ஒரு கரத்தில் இது இருக்கின்றது.

**சக்தி**

இதனை வேலாயுதம் என்பர். இது முருகனுக்கும் சிறப்பாக அமைந்த ஓர் ஆயுதம் ஆகும். ஆறு கூரிய பகுதிகளை உடையது. தகட்டு வடிவானது விநாயகர் வீர கணபதியாக விளங்கும் போது இதனைத் தாங்கியிருப்பார். இது எதிரியை எறிந்து அழிக்க உதவும் ஒரு போர்க் கருவியா கும். இதனை நடு வில் பிடித்து எறியலாம். இரு பக்கமுங்குத்தும் இயல்பு இவ்வாயு தத்திற்கு உண்டு. இவ்வாயுதம், மூன்று சாய் சதுரங்களின் சோடிகள் ஒன்றோ டொன்று நெருங்கியிருக்குமாறும் வரிசை யாகவும் அமையப் பெற்று அப்பகுதி ஒரு தண்டத்தின் நுனியில் பொருத்தப்பட்ட நிலையிலும் அமையலாம். இதன் மேற்பகுதி இச்சா சத்தியையும், நடுப்பகுதி ஞான சத்தியையும், கீழ்ப்பகுதி கிரியா சத்தியையும் குறிக்கும். இதனடிப்படையில் நோக்கும் போது இச்சை, கிரியை. ஞானம் ஆகிய மூன்று சக்திகளும் விநாயகருள் அடங்கும் என்பது இவ்வாயுதத்தின் தத்துவப் பொருளாகும்.



**அம்பு**

இது வில்லை வளைத்து அதில் வைத்து எய்யப்பெறுங் கருவி. நுனி கூரிய முள்போன்றது. நுனி மட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகியிருப்பார்கள. அதனது வால்ப் பக்கத்தில் கழுகின் இறகுகளை யும், மற்றப் பறவை இறகுகளையும் கட்டியிருப் பார்கள், பெரும்பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காவே இறகு கட்டப்படுகின்றது.

**வில்**

இது அம்பு எய்யப் பயன்படுவது. மூங்கில், சிலையென்னும்மரம் முதலான வளை யக் கூடிய நார் மரத்தால் செய்யப் பெறுவது. இந்த வில்லில் தோல் அல்லது நார்க் கயிற்றானி யன்ற நாண் கட்டப் பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுகக் கட்டி அதன் நடுவில் அம்பை வைத்து விடுவது வழக்கம். எவ்வளவுக் கெவ்வளவு வில்லின் வலிமையும் நாணின் உறுதியும், இழுத்துவிடுபவனின் வன்மையும் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அம்பின் வேகமும்,. தைக்கும் வன்மையும் மிகும். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தேய்த்து வைத்தலும் வழக்கம் அம்பின் நுனி பிறைமதிபோலக் கவர்பட்டதாகவும் இருக்கும். இதற்குப் பிறையம்பு என்று பெயர்.

**சக்கரம்**

இது விநாயகருக்கும் விஷ்ணுவுக்கும் உரிய சிறப்பான ஆயுதம் ஆகும். விஷ்ணுவின் சக்கரத்திற்குச் "சுதர்சனம்"என்று பெயர். இதன் அமைப்பு அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. அதில் இருவகையுண்டு. ஒன்று தேருருளை போன்றது. மற்றது வளையம் போன்றது. இது வட்ட வடிவமாகவும், நான்கு திசைகளில் தீச்சுடர்களைக் கொண்டதாகவும் விளங்கும் சக்கரம் தர்மத்தின் அடையாளம் ஆகும்.

**கத்தி**

இது இன்று அறவே மறந்துபோன ஒரு கருவி. தலைப்பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக்கழியிற் கோக்கப் பெற்றுள்ள கருவி இதுவும் பகைவரை அடிக்கப் பயன்படுவது தலைப் பக்கம் ஒரு மண்டை ஓடு போலவும் கம்பி முழங்கால் எலும்பாகவுங்கூட அமைந்திருப்ப துண்டு. இதனைக் குத்துக்கத்தியாகிய பிச்சுவா என்பாரும் உளர்.

**கேடகம்**



இது கத்தி வெட்டைத் தடுப்ப தற்காகப் பயன் படுவது. பலகை யாலும், வலுவுள்ள காட்டெருமை, கடமா, நீர்யானை, காண்டாமிருகம், இவற்றின் தோலாலும் செய்யப்பெறும் சதுரம், நீள்சதுரம். வட்டம், முக்கோணம் முதலிய பலவடிவங்களிற செய்யப்பெறும். இன்னல். இடையூறுகள் என்பவற்றைத் தடுத்து நிறுத்தும் கேடயம் என்ற கருவி தர்மத்தின் ஓர் அடை யாளமாகக் கொள்ளப்படுகின்றது.

**சம்மட்டி**

இது இரும்பாலியன்ற கனத்த தலைப் பகுதியை உடையது. இதன் நடுவில் தொளை யிடப் பெற்றிருக்கும். இதில் கைபிடிக்கும் சிறுகழியைக் கோத்திருப்பார்கள். இதுவும் உடையவன் கையைவிட்டு அகலாதபடி எதிரியை அடித்துத் தாக்கப் பயன்படுத்தப்பெறும்.

**கதை**

குண்டாந்தடி, இதில் பலவகைகள் காலாந்தரத்தில் ஏற்பட்டன. பகைவர்களை அடித்து நொறுக்கப் பயன்படுவது. கையைவிட்டு அகலாதபடி. காவலாக இருந்து. உடையவனைப் பாதுகாப்பது.

**நாகபாசம்**

பாசவகைகளுள் "நாகபாசம்" என்பது ஒன்றாகும்.

**சூலம்**

இது மூன்று நுனிகளையுடையது விநாயகர் தரித்திருக்கும் இவ்வாயுதம் சிவபெருமானுக்கும் சிறப்பாக உரியது. கரைவரையிலும் எஃகு இரும்பாற் செய்யப் பெற்றது. நீளமான மரக்கம்பிற் கோக்கப் பெற்றிருக்கும். இதனை மூவிலை நெடுவேல், முத்தலைவேல் என்றும் கூறுவர். இதன் மூன்று நுனிகளும் ஆரணி. ஜெனனீ, ரோதயித்ரி என்ற முச்சத்திகளைக் குறிக்கும். ஜெனனீ ஆக்கலையும், ஆரணி அழித்தலையும், ரோதயித்ரி காத்தலையும் குறிக்கும் பிரம்மா, விஷ்ணு உருத்திரன் என்ற மும்மூர்த்திகளையும், சாத்துவிகம், ராஜசம். தாமசம் என்ற முக்குணங்களையும் சுட்டி உணர்த்துவதாகவும் இவ்வாயுதம் திகழ்கின்றது.

**குந்தாலி**

இன்று, வன்மையான நிலப்பாறைகளை உடைக்கப்பயன்பெறும். தலை கனத்துக்குரிய நுனியோடு இருக்கும். இரும்பானியன்ற கருவி இது, இதில் பலவகைகள் உள்ளன.

**மழு**


இன்று மரங்களை வெட்டப்பயன் பெறுவதாக எறியென்னும் பெயருடன் வழங்குகிறது. மிகக் கூர்மையானது 'வாய்ச்சி' என்னும் மரஞ்செதுக்கும் கருவியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. தீப்பிழம்பு என்பதும் உண்டு. சிவபெருமானுக்கு விருப்பான கருவி. விநாயகரின் சத்தியம் என்ற உயர் குணத்தைச் சுட்டும் கருவி மழு ஆகும்.

**கொடி**

கொடி வெற்றிக்கு ஓர் அடையாளம் ஆகும். துணியாலியன்றது. அடையாளம் எழுதப்பெற்றது. இதனையும் விநாயகப் பெருமான் தமது திருக்கையில் தாங்கியிருக்கின்றார்.

**தண்டம்**

இது நீளமான கைத்தடி ஆகும். மரத்தலானது. மரணத்தையும், தண்டனையையும் இது சுட்டிக் காட்டுகின்றது.



**கமண்டலம்**

நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் உண்டானது. முனிவர்கள் அந்தணர்கள் தங்கள் நாட்கடன்களைக் கழிப்பதற்காக அதனை வைத்திருப்பார்கள். இது ஆயுதமாக இல்லாவிட்டாலும், திருவுரு நிலையை அறிந்து கொள்ள உதவும் கருவி ஆகும். பரந்த ஞானம் தம்முள் நிறைந்தவர் என்பதைக் கமண்டலம் சுட்டி நிற்கின்றது.

**பரசு**

இது சற்றேறக்குறைய மழுப்போன்ற கருவி ஆகும். ஆனாலும் மழுவின்வாய் சதுரமாக இருக்கும். இதன் வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செறிக்

கப்பெற்றுப் பயன்படுத்தப்பெறும் கருவியாகும். விநாயகரின் சத்திய குணத்திற்கு இது ஓர் அடையாளமாகும்.

**கரும்பு வில்**

கரும்பால் செய்யப்பெற்ற வில். இது மன்மதனுக்குரிய சிறப்பான கருவி, யோகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும், காமேஸ் வரியாகிய காமாட்சியும் இதனைத் தாங்கி யிருப்பர்.

**சங்கு**

இது விநாயகருக்கு மட்டுமன்றி விஷ்ணுவுக்கும் சிறந்த ஆயுதம் ஆகும். இது வெற்றியை அளிக்கும் கருவியாகும். பகை வர்கள் இதன் ஒலி கேட்டதுமே ஒடுங்குவர் இது ஓர் அச்சக் கருவியாகும். இதிலும் பல வடி வங்கள் உள்ளன. சங்கு வலம் சுழித்ததாகவோ இடம் சுழித்ததாகவோ இருக்கலாம். சங்கி லிருந்து விநாயகரின் வடிவத்தைச் சுட்டும் ஓங்கார ஒலி எழும்புவதால் இது ஆக்கல் தொழிலைக் குறிக்கும் தத்துவச் சின்னத்தின் குறியீடு எனலாம்.

**புஷ்பபாணம்**

இது தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களால் இயன்ற பாணம் ஆகும். இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வன். இதனைப் போக நிலை யில் மற்றத் தெய்வங்களும் தாங்குவதுண்டு. காமத்தை எரிப்பவர் என்பது புஷ்ப பாணத்தின் நுண் பொருள் ஆகும்.

**கோடரி**

மரம் பிளக்கப் பயன்படும் கருவியைப் போன்று பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படும். இக்கருவி இரும்பால் ஆனது.

**அட்சமாலை**

இது உருத்திரா அட்சமாலை ஆகும். இது தனித் தனியே ஒரு மாலையாகத் திருவுருவங்களில் தொங்குவது உண்டு. மிகப் பழமையான திருவுருவங்களில் இது ஓராயுதம் போல் இருப்பதைக் காணலாம். அட்சமாலை கால தத்துவத்தின் ஓர் அடையாளம் ஆகும்.

**சாமரம்**

இது கவரிமானின் வால் மயிரால் ஆனது ஆகும். இது ஓர் ஆயுதம் அன்று. இருந்த போதிலும் விநாயகருடைய திருவுருவ அடையா ளங்களில் ஒன்றாகையால் ஆயுத வரிசையில் இதுவும் இடம் பெற்றிருக்கின்றது.

**கட்டுவாங்கம்**



இது ஒரு நீளமான கத்தியா கும். போரில் பகை வர்களை வெட்டப் பயன்படுகின்றது. இதில் ஒரு முனை யுடையதும் இரு முனையுடையதும் என இரு வகையுண்டு. குத்துக் கத்தியாகக் கூரிய நுனி யை உடையதாகவும் இது விளங்கும். இது உயிர்களின் மீது படிந்துள்ள பாசங்களை அறுக்கும் கருத்தைச் சுட்டி நிற்கிறது.

**தீ அகல்**

இது ஒரு தீப்பிழம்பு ஆகும். தீ அக லாகிய மழுவின் வடிவும் இதைப் போன்றே இருக் கும். இது விநாயகரின் அழிக்கும் ஆற்றலைக் குறிக்கும். உயிர்கள் மீது படிந்துள்ள பாசங் களைச் சுட்டு உயிர்களைத் தூய்மைப்படுத்து கின்ற இறைவனின் ஆற்றலைக் குறிக்கும் ஓர் அடையாளம் ஆகும்.

**வீணை**

இது ஓர் இசைக் கருவி ஆகும். போர்க் காலங்களில் தளர்ச்சியடைந்திருக்கும் படை வீரர்களுக்கு உணர்ச்சி ஊட்ட இக்கருவி பயன் படும்.

விநாயகர் தரித்திருக்கும் மேற் கூறப் பட்டுள்ள ஆயுதங்கள் சிவன், அம்பிகை விஷ்ணு முருகன் ஆகிய கடவுளர்களின் திருக்கரங் களிலும் விளங்கக் காணலாம். சிவனின் திருக் கரத்தில் திகழும், மழு, பரசு, சூலம் என்பன அம்பிகை கைகளில் ஏந்தியுள்ள அங்குசம். பாசம்., அட்சமாலை. கரும்புவில், கத்தி, வாள், வீணை ஆகியவை விஷ்ணுவின் கரங்களில் விளங்கும் சங்கு, சக்கரம் என்பவை. முருகன் திருக்கரங்களில் தரித்துள்ள சத்தி வேல், வில், அம்பு, தண்டம் போன்றவை விநாயகரின் திருக் கரங்களிலும் திகழ்வதைக் கண்டு மகிழ முடிகின் றது. கடவுள் ஒருவரே அவ்வப்போது பற்பல வடிவங்கள் எடுக்கிறார் என்ற ஓர் இறை தத்து வத்தை கடவுளர் எல்லோரிடத்திலும் ஒரே விதமாகக் காணப்படும் சிறப்புமிகு ஆயுதங்கள் நுட்பமாகப் புலப்படுத்துகின்றன எனலாம்.

**விநாயகர் வடிவங்களில் சத்தி தத்துவம்**

விநாயகர் வடிவங்களில் சத்தி இடம் பெற்றிருப்பதும் விநாயகரே சில இடங்களில் பெண்வடிவத்தில் காட்சி தருவதும் விநாயகரின் தத்துவச்சிறப்பை நன்கு புலப்படுத்துவதா கவுள்ளது.

தமிழகத்திலும், ஈழத்திலும் விநாய கரைப் பெரும்பாலும் பிரம்மச்சாரியராகவே வழிபடுவது பிரசித்தமாக வழிபாட்டு மரபாகக் காணப்படுகின்றது. **"பவன் பிரமச்சாரி"** என்ற சைவ சித்தாந்த தத்துவம் இங்கு நினைவு கூரத்தக்கதாகவுள்ளது. தமிழகம், ஈழம் போன்ற இடங்களில் விநாயகரைப் பிரமச்சாரியின் கோலத்தில் வழிபடுவதே சிறப்புற்றிருப்பினும், தமிழகத்தில் விநாயகர், வல்லபை என்ற சத்தி யுடன் கூடிய நிலையிலும் "சித்தி, புத்தி" என்ற இரு சத்திகளுடன் சேர்ந்த கோலத்திலும் தொழப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. வட இந்தியாவில் விநாயகர் பெரும்பாலும் சத்தி யுடன் சேர்ந்த நிலையிலேயே விளங்குகின்றார். இவ்வடிவத்தை அவர்கள் "லட்சுமி விநாயகர்" என அழைக்கின்றனர்.

தமிழகத்திலும், ஈழத்திலும் "வல் லபை" என்ற சத்தியுடன் விளங்கும் விநாயகரை "வல்லப விநாயகர்" அல்லது "வல்லப கணபதி" என்று வழங்குகின் றனர். வல்லபை என்ற சத்தியை விநாயகர் தனது இடது பக்க மடியில் அணைத்து வைத் திருக்கும் அமைப் பில் வல்லபை



விநாயகர் படிமம் காணப்படுகின்றது. சிவாக மங்கள் விநாயகரின் சத்தியாக வல்லபையைக் குறிப்பிடுகின்றது. வல்லபம் என்பதற்கு வல் லமை என்பது பொருளாகும். வல்லமை என்றால் ஆற்றல் என்பது கருத்தாகும். எனவே ஆற்ற லின் ஓர் அடையாளத்தைச் சுட்டி நிற்பதாக விநாயகருடன் வல்லபை என்ற சத்தி விளங்கு கின்றாள் எனலாம்.

உமாதேவியின் அம்சமான இவள் யமுனை ஆற்றின் அருகேயுள்ள ஒரு தடா கத்தில் ஒரு தாமரை மலரில் பெண்வடிவமாக அவதரித்து மரீசி முனிவரால் வளர்க்கப்பட்ட தெய்வீக சத்தியாவாள்.

விநாயகர் சித்தி, புத்தி என்ற இரு சத்திகளுடனும் "சித்தி விநாயகராக" விளங்கு கின்றார். சித்தியும், புத்தியும் பிரமதேவனது புத்திரிகளாவர். விநாயகர் சித்தி, புத்தி எனும் இரண்டு சத்திகளுடன் விளங்குவது பெரும் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது. சித்தி தேவி கிரியா சக்தியின் வடிவமாவார். புத்திதேவி இச்சா சத்தியின் அம்சமாவார். விநாயகர் பிரம்ம ஞான வடிவமுடையவர். இச்சையும், கிரியையும் இருந்தால் தான் ஞானத்தின் மூலம் ஒரு காரியத்தைச் செய்ய முடியும் என்ற தத்துவத் தைச் சுட்டவே விநாயகர் சித்தி, புத்தி எனும் இரு சத்திகளுடன் விளங்குகின்றார். இந்நிலையில் இவர் இல்லற ஞானியாகத் திகழ்கின்றார் என லாம். பிரபஞ்சம் ஒடுங்கும்போது இச்சை, கிரியை எனும் இரு சத்திகளை விநாயகர் தன்னுள்ளே ஒடுக்கிக் கொண்டு, தாம் ஞானவடிவமாகத் திகழ்கின்றார். அப்போதே விநாயகர் பிரம்மசாரி யாக விளங்குகின்றார்.

உலகில் அவ்வப்போது அஞ்ஞானத் தின் உருவமாகச் சில அரக்கர்கள் தோன்றி தர்மத்தை அழித்து அதர்மத்தை மேலோங்கச் செய்து உலகில் பெரும் கொடுமைகளைச் செய்ய முற்படும்போது விநாயகர் சித்தி, புத்தி எனும் தேவிகளின் பிரம்மச்சாரிய வடிவமாக தாம் மட்டுமே ஞான வடிவமாக நின்று, அதர்மம் செய்பவர்களை அழிக்கின்றார் என்று அவர் பற்றிய தெய்வீக வரலாறுகள் அமைந்து விளங்குகின்றன. அவருடன் பெண் அம்சமான சத்திகள் இருக்குமாயின் சத்தியின் இயல்பாக கருணை எண்ணமே மேலோங்கி நிற்கும். இதனால் அதர்மத்தை அழிக்க முடியாத நிலை ஏற்படும். தீயவர்களை அழித்து நல்லவர்களை காப்பாற்ற வேண்டிய வேளைகளில் கருணை யின் அடையாளமாக சத்திகளின்றி தாம் தனி யாகவே பிரம்மச்சாரியாக அவர் விளங்கு கின்றார். துட்ட நிக்ரஹ சிட்ட பரிபாலனம் செய்ய வந்ததே பிரம்மச்சாரிய விநாயகர் ஆவார். மேலும். விநாயகர் திருமாலின் புத்திரிகளான மோதை. பிரமோதை, சுமநசை, சுந்தரி. மநோ ரமை, மங்கலை, கேசினி, காந்தை, சாருஹாலை சுமத்தியமை, நந்தினி, சாமதை என்ற பன்னிரு வரை மணந்தார் என்றும் சமய நூல்கள் குறிப் பிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சத்தியுடன் விளங்கும் விநாயகர் படிமங்களாக சத்தி விநாயகர், லட்சுமி விநாய கர், மஹாவிநாயர், ஊர்த்துவ விநாயகர், உத்தண்ட விநாய கர், ஸ்ரீசங்கட ஹர விநாயகர், வல்லப விநாயகர், சர்ப்பா பரண விநாயகர் என்போர் காட்சி தருவது கண்டு களித்தற்குரியதா கும்.



மஹாவிநாயகர், சித்திவிநாயகர், சக்தி விநாயகர், மோட்ச விநாயகர், வித்யா விநாயகர் என்ற ஐந்து விநாயகர் வடிவங்களின் அரிய இணைப்பாகக் காட்சி தரும் "பஞ்சமுக விநாய கர்" வடிவம் விநாயகரின் சத்தி தத்துவத்தை மேலும் பெருமைப்படுத்தி நிற்கின்றது.

இவ்வாறு விநாயகர் சத்தியுடன் சேர்ந்த நிலையிலும் சத்தியுடன் சேராத நிலையி லும், சத்தியாகவே விளங்குகின்ற நிலையிலும் காணப்படும் விநாயக தத்துவ நிலை வியக்கத் தக்கதாகவுள்ளது.

**விநாயகரின் வாகனத் தத்துவம்**

விநாயகர் நான்கு யுகங்களிலும் நான்கு வாகனங்களில் விளங்குகின்றார். அவர் கிருத யுகத்தில் சிங்க வாகனத்திலும், திரேத யுகத்தில் மயில் வாகனத்திலும், துவார யுகத்தில் எலி வாகனத்திலும், கலியுகத்தில் குதிரை வாகனத்திலும் விளங்குவதாகச் சமய நூல்கள் குறிப்பிடுகின்றன. நந்தி, பூதம், கருடன் என்பனவும் விநாயகருக்கு வாகனங்களாக விளங்கக் காணலாம். விநாயகரின் சிறப்பான வாகனம் மூஷிகம் ஆகும். இன்றைய கால கட்டத்தில் விநாயகர் மூஷிக வாகனத்தில் விளங்குவதையே பெரிதும் காணமுடிகின்றது.

**மூஷிகவாகனம்**

விநாயகருக்கு மூஷிக வாகனன் என்று ஒரு பெயர் உண்டு. மூஷிகம் என்பது எலி. பெருச்சாளி என்பவற்றைக் குறிக்கும் வட மொழிச் சொல்லாகும். பென்னம் பெரிய விநாயகர் சின்னஞ்சிறிய மூஷிகத்தை (எலி, பெருச்சாளி) வாகனமாகக் கொண்டது. பெருந்தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது. நல்லவர்களைக் காப்பாற்றுதல், தீயவர்களை அழித்தல் என்ற இறை தத்துவத்தைச் சுட்டி நிற்பதே விநாயகர் எழுந்தருளியிருக்கும் மூஷிக வாகனமாகும்.

நல்லவர்களாகிய தேவர்களின் துயர் களைந்து, அவர்களைக் காப்பாற்றும் பொருட்டாகவே அசுரனாக விளங்கிய கஜமுகாசுரனை விநாயகர் அழித்தார். அசுரனாகிய கஜமுகாசுரனை அழித்தபோது அவன் பெருச்சாளி வடிவம் (எலி) பெற்று விநாயகருக்கு வாகனமாயினன் என்பது விநாயகரின் தெய்வீக வரலாற்றுக் கதைகளால் அறியப்படும் செய்தியாகும்.இக்கதை ஓர் அரிய சித்தாந்த சைவ தத்துவத்தைப் புலப்படுத்துகின்றது. ஆணவ மலத்தின் அடையாளமாக விளங்கிய கஜமுகாசுரன், அம்மலம் வலிகுன்றிய நிலையில் சின்னஞ் சிறிய பெருச்சாளியாக விளங்க அதனை விநாயகர் வாகனமாகக் கொண்டார், என்பது தத்துவமாகும். இவ்வகையில் நோக்கும் போது மூஷிக வாகனம் ஆணவமலத்தின் ஒரு குறியீடாக விளங்கும் தத்துவம் நன்கு புலப்படுகின்றது.

பாற்கடலில் தோன்றிய ஆணவமாகிய பெரும் விஷமானது. சிவபெருமானின் திருமிடற்றிலடங்கி முதல் கெடாது வலிகெட்டு நிற்பதைச் சுட்டுவது போலவே. ஆணவமல வடிவமாகிய கஜமுகாசுரனும் முதல் கெடாது வலிகெட்டு மூஷிக வடிவில் (எலி) விநாயகரின் வாகனமாக விளங்குவது புலப்படுகின்றது.



**சிம்ம வாகனம்**

விநாயகர் ஐந்து முகங்களுடன் விளங்கும் நிலையில் அவர் ஏரம்ப விநாயகர் என வழங்கப்படுகின்றார். ஏரம்ப விநாயகரின் வாகனம் சிம்ம வாகனம் ஆகும். விநாயகரின் திருநாமங்களுள் சிம்மவாகஹனாயக என்பது ஒன்றாகும். அம்பிகை காளியாக விளங்கும் நிலையில் அவள் சிம்மத்தை வாகனமாகக் கொண்டு விளங்குவாள் இதனால் அவளுக்குச் "சிம்மவாஹினி" என்ற பெயர் உண்டு. மிக கொடிய சிங்கத்தை அடக்கி ஆள்வதை சிம்ம வாகனம் காட்டுகின்றது. மிகக் கொடிய ஆணவ மலம் அழியாது அடக்கப்பட்டிருத்தலையே விநாயகரின் சிம்மவாகனம் சுட்டி நிற்கின்றது.

**யானை வாகனம்**

யானை முகக் கடவுளாகிய விநாய கருக்கு யானை வாகனம் அமைந்து விளங்கு வது பொருத்தமாக உள்ளது. திருச்செந்தூர் ஆவுடையார் குளக்கரையிலுள்ள அரசாள்வார் விநாயகர் முன்பும், ஸ்ரீவில்லி புத்தூர் (காமராசர்) மடவார்வளாகம் வைத்தியநாத சுவாமி கோயில் நுழைவாயில் உள்ள கல்யாண விநாயகர் முன்பும் யானை வாகனம் காணப்படுகின்றது. யானை ஆணவ மலத்தின் ஓர் அடையாளமாகும். அதனை அடக்குவதைக் காட்டுவதே யானை வாகன விநாயகர் சுட்டும் தத்துவமாகும்.

**மயில் வாகனம்**

திருச்சியிலுள்ள திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி கோயிலில் காணப்படும் ஓவியத்தில், விநாயகர் மயில் வாகனத்தில் உள்ளார். பாண்டிச்சேரி மலைக்குகை விநாயகர் கோயிற் சுவரிலுள்ள கதைச் சிற்பத்திலும் விநாயகர் மயில் மீது காட்சி தருகின்றார். அருப் புக்கோட்டை தாதன் குளவிநாயகர் கோயிலிலும் மயில் வாகனம் உள்ளது மயிலும் ஆணவமலத் தின் குறியீடாகும். மயில் வாகனம் இதையே சுட்டி நிற்கின்றது.

**குதிரை வாகனம்**

குதிரையானது மூன்று விதமான கோலங்களில் வாகனமாகக் கொள்ளப்படும். நின்ற கோலம். பாய்ந்து நிற்கும் கோலம். நாட்டியக் கோலம் ஆகியவை அம்மூன்று கோலங்களாகும். குதிரை யோகத்தின் ஓர் அடையாளம் ஆகும். குதிரைகள் திசைகளையும், புலன்களையும் குறிக்கின்றன. கடலூர் வட்டம். சென்னப்ப நாயக்கன் பாளையம். மலையாண் டவர் விநாயகர் கோயிலில் குதிரை வாகனம் அமைந்துள்ளது. கோயம்புத்தூர் குருபதேசிக கவுண்டர் விநாயகர் கோயிலிலும் குதிரை வாகனம் உள்ளது.

**நந்தி வாகனம்**

நந்தி தர்மத்தின் அடையாளம் ஆகும். சுசீந்திரம், வில்லி புத்தூர் மடவார்வளாகம், இராசபாளையம் முதலிய இடங்களில் உள்ள விநாயகர் கோயில்களில் நந்தி வாகனம் உண்டு.

**பூதவாகனம்**

மதுரை திருப்பரங்குன்றம் பழைய சொக்கநாதர் கோயில் முன் மண்டபத்தூணில் போருக்குப் புறப்படும் நிலையில் விளங்கும் சிற்பம் ஒன்றைக் காணலாம்.



**கருட வாகனம்**

விநாயகர் விஷ்ணுவின் அம்ச மாகவும் விளங்கு வதால் அவருக்கு முன் கருடனை நிறுவலாம் என்று விஸ்வக்சேன சம்ஹிதை குறிப்பிடுகின்றது.

**விநாயகரின் நாம தத்துவம்**

விநாயகருக்குப் பல நாமங்கள் உள் ளன. அவற்றுள் அவரின் அருட் பேராயிரத்தைக் கூறும் "ஸ்ரீமஹா கணபதி ஸஹஸ்ரநாமா வளி"யும் முந்நூறு நாமங்கள் கொண்ட "த்ரிசதீ நாமாவளி"யும் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் வரும் திருநாமங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் தத்துவப் பொருளைப் புலப்படுத்துகின்றன. விநாயகரின் முக்கிய திருநாமங்கள் சுட்டும் தத்துவப் பொருள் பின்வருமாறு அமைகின்றது.

**விநாயகர்**

விநாயகர் என்ற பெயர் பல தத்துவப் பொருள்களைத் தந்து நிற்கின்றது. விநாயகர் என்பதற்கு தமக்குமேலொரு நாயகரும் (தலை வரும்) இல்லாதவர் என்பது பொருளாகும். அதாவது தலைவரற்றவர் என்பது பொருளாகும். இதனை வி+நாயகர் – விநாயகர் – நாயகன் இல்லாதவர் என்று நோக்கி அறிய முடிகின்றது. (வி+மலன்–விமலன் மலமில்லாதவன் எனப் பொருள்படுவது போல) ஆதி சங்கரர் தனது கணேச பஞ்சரத்தினத்தின் முதலாவது சுலோகத்தில் "அநாயகைக நாயகம்" என்று விநாயகரைக் குறிப்பிடுகின்றார். இந்த "அநாயகைக நாயகம்" என்பது அநாயக, ஏகநாயகம் என்ற இரு சொற்களால் ஆனது. இதன் பொருள் "தனக்கு ஒரு நாயகன் இல்லாத அநாயக நிலையிலும் எல்லா நாயர்கட்கும் நாயகராகிய நிலையிலும் உள்ளவர் என்பதாகும். மேலும் 'வி' என்றால் கல்வி நாயகர் என்றால் தலைவர். இதன்படி தன்னை வணங்குபவர்களுக்குக் கல்வியைத் தருபவர் என்பது பொருளாகும். இதனையே உமாமதிசிவாசாரியரும் "நற்குஞ் சரக் கன்று நண்ணில் கலைஞானம் கற்கும் சரக்கன்று காண்" என்று ' திருவருட்பயன் ஆரம்பத்தில் குறிப்பிடுகின்றார். அடுத்து 'வி' என்றால் திசை என்றும் நாயகர் என்றால் தலைவர் என்றும் பொருள் கொண்டு "எத்திசைக்கும் தானே தலைவர்" என்றும் விநாயகர் என்ற சொல்லுக்குப் பொருள் கூறலாம். விநாயகர் எனும் பெயரின் தத்துவப் பொருள் விநாயக புராணத்தில்,

"விக்கின முழுது நீக்கி வேண்டிய வரங்கணல்கி
மக்கள் விண்ணவர்கள் யாரும் வழிபடு
தெய்வமாகி
யெக்கடவுளர்க்கு முன்னர்ப் பூசனையேற்பா
ராகி
மிக்கவரின்மை தோன்ற விநாயக ரெனும் பேர்
தாங்கி"

என வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**வக்கிர துண்ட விநாயகர்**

பிரளய முடிவில் தோன்றி பிரமன் விஷ்ணு உருத்திரன் என்ற மூவர்களைப் படைத்து படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத் தொழில்களைக் கற்பித்தமையால் "வக்கிர துண்ட விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**சிந்தாமணி விநாயகர்**

கபிலருடைய சிந்தாமணியைக் கவர்ந்து சென்ற கணராஜனை வென்று அதனை மீட்டு அவர்க்கு அளித்தமையால் "சிந்தாமணி விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.



**கஜானன விநாயகர்**

பிரமதேவனின் கொட்டாவியினின் றும் தோன்றிய சிந்தூரனைக் கொன்று தேவர்களைக் காத்தமையால் "கஜானன விநாயகர்" என்னும் பெயர் பெற்றார்.

**விக்கினராஜ விநாயகர்**

காலரூபனென்கின்ற விக்கினனை அழித்து உலகத்தைக் காத்தமையால் "விக்கின ராஜ விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

## பால கணபதி



வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம்
கரும்பு , மோதகம் இவற்றை வைத்துக்
கொண்டிருப்பவரும், பால சூரியனைப்
போன்ற சரீர காந்தியை உடையவருமாவார்.

## தருண கணபதி



கைகளில் பாசம், அங்குசம்,அபூபம்
விளாம்பழம்,நாவல்பழம்,தன்னுடைய ஒரு
தந்தம், நெற்கதிர், கரும்பு வைத்துக்
கொண்டிருப்பவர்.

## பக்தி கணபதி



தேங்காய், மாம்பழம், வாழைப்பழம்,
பாயசத்துடன் சரத்கால சந்திரனின்
வெண்ணிற சரீரத்தையுடையவர்.

## வீர கணபதி



வேதாளம், சக்தி,ஆயுதம்,அம்பு,வில்,
சக்ராயுதம், கத்தி, கட்வாங்கம், முத்கரம்
கதை, அங்குசம், நாகம்,பாசம்,சூலம்,
குந்தம்,மழு, த்வஜம் தரித்திருப்பார்.

## சக்தி கணபதி



சந்தியா காலத்தைப் போல சிவந்த நிறமுடையவராக இருப்பவரும், பாசம், அங்குசம் இவற்றை வைத்துக் கொண்டிருப்பவருமான பயத்தைப் போக்கும் சக்தியுமுடையவர்.

## த்விஜ கணபதி



புத்தகம், ஜபமாலை,தண்டம், கமண்டலம் உடையவரும், கங்கணம் முதலான ஆபரணங்களைக் கைகளில் அணிந்திருப்பவரும், சந்திரனின் வெண்ணிறமுடையவரும்.

## சித்தி கணபதி



மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை,பரசு, இவற்றைத் துதிக்கை உட்பட ஐந்து கரங்களில் தரித்தவரும், பொன் கலந்த பசுமை நிறமுடையவர்.

## உச்சிஷ்ட கணபதி



இவரை விஜய கணபதி என்று ஸ்ரீ தத்துவ நிதி கூறுகிறது. இவருக்கு மற்றொரு தோற்றமும் உண்டு.

## துர்கா கணபதி



எட்டுக்கை, அங்குசம்,பாணம்,
அட்சமாலை, தந்தம், பாசம், வில்,
கொடி, நாவற்பழம் ஆகியவற்றைக்
கொண்டவர். பொன்னிற மேனியர்.

## சங்கடஹர கணபதி



இளஞ்சூரியனின் நிறத்தோடு,
இடது தொடையில்
அம்மையை உடையவர். நீலநிற
மேலாடை அணிந்துள்ளவர்.

## மகா கணபதி



மாதுளை கதை, கரும்பு வில், சக்கரம், தாமரை,
பாசம், நீலோத்பலம், நெற்கதிர், தந்தம்,
ரத்னகலசம், இவற்றை ஏந்தியவர்,செங்கதிர்
நிறத்தவர். முக்கண்ணர். பிறைமுடியுடையவர்.

## விஜய கணபதி



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத்
தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில்
ஏறியிருப்பவர், செந்நிறமானவர்.

## ஷிப்ர கணபதி



தந்தம், கற்பக விருட்சத்தின் கிளை, பாசம், ரத்னகலசம், அங்குசம் இவற்றைத் தரித்துக் கொண்டிருப்பவர் அழகான சிவந்த சரீர காந்தியையுடையவர்

## விக்ன கணபதி



சங்கு, கரும்பு. வில், புஷ்ப பாணம், கோடரி, பாசம், சக்கரம், தனது தந்தம், பூங்கொத்து போல சுருட்டிய மாலை ஆகியவற்றுடன் பொன்மேனி ரூபமாக விளங்குகிறார்.

## ஹேரம்ப கணபதி



அபய வரத முத்திரைகளுடன் பாசம், தந்தம், ஜபமாலை, அங்குசம், கோடரி, முத்கரம், மோதகம், பழம் இவற்றைத் தரித்துக் கொண்டு சிம்ம வாகனத்தில் ஐம் முகங்களுடனிருப்பார்.

## லக்ஷ்மி கணபதி



மிகவும் பிரகாசிக்கின்ற ஜோதியாகிய அமிருதப் பிரவாகத்தையுடையவரும், நீலோத்பலத்தைக் கையில் கொண்டவரும், இரு தேவிகளை இருபக்கத்திலும் கொண்டவரும், வரதஹஸ்தத்தோடு இருப்பவருமாவார்.

## நிருத்த கணபதி



பாசம், அங்குசம், அதிரசம், கோடரி
ஆகியவற்றை ஏந்திய, கற்பக விருட்சத்தினடியில்
இருக்கும் நர்த்தன கணபதி வேறு தியானத்தில்
ஆயுதங்கள் மாறியும் இருக்கும்.

## ஊர்த்துவ கணபதி



செங்கழுநீர்ப்பூ, நெற்கதிர், தாமரைப்பூ, கரும்பு
வில், அம்பு, தந்தம், இவற்றைக் கரங்களில்
கொண்டவரும், தங்க நிறம் கொண்டவருமாவார்.

## ஏகாட்சர கணபதி



செந்நிறமானவர், செம்பட்டாடையர், செம்மலர்
மாலையர், பிறைமுடியர், முக்கண்ணர், குறுந்தாளர்,
குறுங்கையர், மாதுளை பாசம், அங்குசம், வரதம்
இவற்றைத் தாங்கியவர்.

## வர கணபதி



செவ்வண்ணர், யானைமுகவர், முக்கண்ணர்,
பிறை முடியர். பாசம், அங்குசம் தரித்தவர்.
தேன் நிறைந்த கபால பாத்திரத்தை ஏந்தியவர்.

## திரயாக்ஷர கணபதி



பொன்னிறமானவர், நான்கு கரத்தவர்,
பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத்
தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதம் உடையவர்.

## க்ஷிப்ரபிரசாத கணபதி



பாசம், அங்குசம்,கற்பகக் கொடியின் சுவைதரும்
மாதுளம்பழம், துதிக்கையில் தாமரை மொட்டு
இவற்றைத் தரித்தவர். பேழை வயிற்றை உடையவர்.

## ஹரித்திரா கணபதி



மஞ்சள் நிறமானவர், நான்கு கரத்தவர், அவற்றில்
பாசம், அங்குசம், தந்தம், மோதகம், தரித்திருப்பவர்.
பக்தர்களுக்கு அபயமளிப்பவர்.

## ஏகதந்த கணபதி



பேழை வயிற்றுடன் நீல மேனியர், கோடரி,
அட்சமாலை, லட்டு, தந்தம், இவற்றையுடையவர்.

## துவிமுக கணபதி



தந்தம், பாசம், அங்குசம், ரத்னபாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர். மயில் நீல மேனியர். செம்பட்டாடையும், ரத்தின கிரீடமும் அணிந்தவர்.

## மும்முக கணபதி



வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுத கலசம்,அபயம் இவற்றை உடையவர்.

## சிங்க கணபதி



வீணை, கற்பகக்கொடி,சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்ன கலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது கைகளையுடையவர். வெண்ணிற மேனியர்.

## யோக கணபதி



யோக நிலையில், யோக பட்டம் தரித்து, இளஞ்சூரியனது நிறமொடு ஒளிர்ந்து, பாசம், அட்சமாலை, யோக தண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

## சிருஷ்டி கணபதி



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தையுடையவர். சிவந்த திருமேனியர்.

## உத்தண்ட கணபதி



நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்பு வில், ரத்னகலசம், பாசம், நெற்கதிர், மாலை, இவற்றையேந்திய பத்துக் கைகளை உடையவர். சிவந்த மேனியையுடையவர்.

## ரணமோசன கணபதி



பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம், இவற்றைத் தரித்தவர், வெண்பளிங்கு நிறமேனியர், சென்நிறப் பட்டாடையுடுத்தியவர்.

## தண்டி கணபதி



அட்சமாலை, கோடரி, ரத்ன கலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

**மயூரேச விநாயகர்**

பிரமதேவனிடமிருந்து வேதங்களைக் கவர்ந்து சென்ற கமலாசுரனையும், தேவர் களைச் சிறை வைத்த சிந்தாசுரனையும் கொன்று ஏனைய அவுணர்கள் செய்த மாயை யினை ஒழித்து மீட்டும் அவ்வேதங்களைப் பிரம தேவனுக் கீந்து தேவர்களை மீட்டு உலகுக்கு இதஞ் செய்தமையால் "மயூரேச விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**பாலசந்திர விநாயகர்**

யமனிடத்தினின்றும் உதித்த அனலா சுரனை ஒரு சிறு பிராமணப்பிள்ளை போல் சென்று அவ்வசுரனை விழுங்கித் தேவர்களைக் காத்தமையால் "பால சந்திர விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**கணபதி விநாயகர்**

கஜமுகாசுரனைக் கொன்று விஷ்ணு வின் சாபம் தீர்த்தமையால் "கணபதி விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**தூமகேது விநாயகர்**

மாதவராசனுக்கும் அவர் மனைவி யாகிய தமதைக்கும் தீங்குசெய்த தூபராசனைக் கொன்று அவ்விருவரையும் காப்பாற்றிய மையால் "தூமகேது விநாயகர்" என்று பெயர் பெற்றார்.

**கணேச விநாயகர்**

தன்னிடத்தில் அளவற்ற வரங்களைப் பெற்ற பெபி என்ற ஓரசுரன் மூவுலகங்களையும் அழிக்கமுற்பட்டபோது தேவர்கள் விநாயகரை வேண்டுதல் செய்ய அவர் ஐந்து முகங்களோடு தோன்றி அவ்வசுரனை அழித்து தேவர்களைக் காப்பாற்றியதால் "கணேச விநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**மகோற்கடவிநாயகர்**


நராந்தகனையும், தேவாந்தகனையும் நாசம் செய்து காசிராஜனுக்கு முத்தி அளித்த மையால் "மகோற்கட விநாயகர்" என்றும் பெயர் பெற்றார்.

**துண்டி விநாயகர்**

துராசதனை வென்று திவோதரசன் மனத்தைக் மகிழ்வடையச் செய்து விஸ்வநாத மூர்த்திக்குக் காசிமாநகரை அளித்தமையால் "துண்டிவிநாயகர்" எனும் பெயர் பெற்றார்.

**கணபதி**

விநாயகருக்குக் "கணபதி" என்பதே தொன்மையான பெயராக உள்ளது. கணபதி என்பதற்கு பிரம கணம், தேவ கணம், பூதகணம், அசுரகணம். மனித கணம் முதலிய எல்லாக் கணங் களுக்கும் தலை வர் என்பது பொருளா கும். "கணபதி" என்ற பெயரில் உள்ள "க" என்பது புத்தி. "ண" என்பது ஞானம். "பதி" என்பது தலைவர். இதனடிப் படையில் நோக்கும்போது, "கணபதி" என்பதற் குப் புத்திக்கும் ஞானத்திற்கும் தலைவர் (அதிபதி) என்பது பொருளாகின்றது. இதனால் புத்தியையும் ஞானத்தையும் வளர்த்துக் கொள் ளுதலே உண்மையான கணபதி வழிபாட்டின் தத்துவப் பொருள் என்பது புலப்படுகின்றது.



**விக்கினேஸ்வரர்**

விக்கினேஸ்வரர் என்பதற்கு விக் கினங்களை (இடையூறுகளை) ஆக்கவும், நீக்க வும் வல்லவர் என்பதே மெய்ப்பொருளாகும்.

**பிள்ளையார்**

விநாயகரைப் பொதுவாக எல்லோரும் "பிள்ளையார்" என்றே அழைப்பர். சிவசக்திக்கு முதற்பிள்ளை என்பதால் முதலில் "பிள்ளை" என்னும் பெயர் பெற்றார். மரியாதைக்காக "பிள்ளை" என்பதுடன் "யார்" என்ற விகுதி சேர்க்கப்பட்டு பிள்ளையார் என்று பின்னர் அவர் அழைக்கப்பட்டார். பிள்ளை என்றால் "குழந்தை" என்ற எண்ணமே முதலில் வருகின்றது. இதனைக் கருதியே அவரை "ஞானக் கொழுந்து" என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். பொதுவாக ஒரு கிராமத்திலோ அல்லது சிற்றூர்களிலோ இருக்கும் பெரிய குடும்பத்துப் பிள்ளை, எல்லோருக்கும் குழந்தையாகவே செல்வாக்கின் காரணத்தால் செல்லமாகக் கருதப்பட்டு அழைக்கப்படுவதைக் காண்கிறோம். இவ்வாறே அனைத்து உலகங்களுக்கும் தந்தையான சிவபெருமானின் முதற்பிள்ளை என்ற காரணத்தால் அவர் பிள்ளையும் அனைவராலும் "பிள்ளை" என்றே அழைக்கப்பட்டு பின்னர் மரியாதைக்காக "யார்" என்ற அடைமொழி சேர்க்கப்பட்டு "பிள்ளையார்" என அழைக்கப்படுகின்றார், எனக் காஞ்சிப் பெரியவர் குறிப்பிடுவதும் இங்கு எண்ணி மகிழ்வதற்குரியது. பிள்ளைச் செல்வத்தை வழங்கும் தெய்வம் என்பதாலும் "பிள்ளையார்" எனும் பெயர் பெற்றார்.

**நவக்கிரக விநாயகர்**

விநாயகரை வணங்கினால், நவக்கிரக வழிபாடும் நிறைவுறுமென்பது நவக்கிரக விநாயகர் சுட்டும் தத்துவமாகும். இதனைப் புலப்படுத்தும் விதத்தில் விநாயகரின் திருவுருவத்தில் ஒன்பது நவக்கிரகங்களும் அமைந்து விளங்கக் காணலாம். இத்தகைய வியத்தகு விநாயகர் வடிவத்தினையே "நவக்கிர விநாயகர்" என அழைக்கின்றனர். இவ்வாறான நவக்கிரக விநாயகரின் திருவுருவத்தில் அவர் தனது நெற்றியில் சூரியனையும், நாபிக்கமலத்தில் (தொப்பூழ்) சந்திரனையும், வலது தொடையில் செவ்வாயினையும், இடது தொடையில் கேதுவையும் வலது மேற்கையில் சனியையும், வலது கீழ்க்கையில் புதனையும். இடது மேற்கையில் இராகுவையும்., இடது கீழ்க்கையில் வெள்ளியையும் தலையில் வியாழனையும் கொண்டவராகக் காட்சியளிக்கின்றார். நவக்கிரக தோசம் உடையவர்கள் விநாயகரை வழிபடுவதன் மூலம் தோச நிவிர்த்தி பெறுவர் என்பது நவக்கிரக விநாயகர் வழிபாட்டின் தத்துவநிலை ஆகும். தமிழகத்திலுள்ள சில விநாயகர் ஆலயங்களில் நவக்கிரக விநாயகர் வடிவத்தை ஓவிய வடிவத்தில் கண்டு வணங்க முடிகின்றது.



**விநாயகரின் வழிபாட்டுத் தத்துவம்**

விநாயகரின் வழிபாட்டுத் தத்துவத்தில் விநாயகர் விரதங்கள், அறுகம்புல்லினால் அர்ச்சித்தல், தோப்புக் கரணம் போட்டு வழிபடல், சிதறு தேங்காய் உடைத்தல் என்பன தத்துவப் பொருள் உணர்த்துகின்றனவாக விளங்குகின்றன.

**விரதங்கள்**

விநாயகர் வழிபாட்டிற்குரிய விரதங்களில் ஆவணிச் சதுர்த்தியும், மாசிச் சங்கடஹர சதுர்த்தியும் விசேடமானவை ஆகும். குற்றம் செய்கின்றவர்களை மன்னித்து அவரவர் விரும்பிய போக மோட்சங்களை விநாயகர் அளிக்கின்றார் என்பதே ஆவணி மாத விநாயகர் சதுர்த்தியின் உட்பொருளாகும்.

### அறுகால் அர்ச்சித்தல்


விநாயகரை அறுகு மற்றும் வன்னிப் பத்திரங்கள், மந்தாரைப்பூ என்பவற்றால் அர்ச் சித்தல். அறுகம்புல் அர்ச்சனை மிகு சிறப்புடைய தாகும். வழக்கமாயினும் கூறப்படுகின்றது. அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்ததால் இடபம், கழுதை, புலைச்சி என்போருக்குச் சாலோக முத்தி கிடைத்ததாக விநாயகபுராணம் குறிப்பிடுகின்றது. எனவே அறுகம்புல்லால் விநாயகரை அர்ச்சித்தால் பெறுதற்கரிய முத்திப் பேரின்பம் கிடைக்கு மென்பது அறுகம்புல்லின் தத்துவச் சிறப்பாகும். அறுகு ஒரிடத்தில் முளைத்துக் கொடிபோல் நீண்டு ஆறிடங்களில் வேரூன்றிப்படர்ந்து கொண்டே போகும் இயல் புடையது. அங்ஙனமே மூலாதார மூர்த்தியாக விளங்கும் விநாயகர் மூலாதாரம். சுவாதிட் டானம், மணிபூரகம், விசுத்தி, அநாகதம் ஆஞ்ஞை என்ற ஆறிடங்களிலும் பரந்து விளங்கி சகஸ்ரதளத்தில் விளங்கி அருளுகின் றார் என்பது அறுகம்புல் உணர்த்தும் தத்துவப் பொருளாகும். ஆறிடங்களில் படர்ந்து வேரூன் றும் இயல்பு அறுகுக்கு மட்டுமே இருப்பது குறிப்பிடத்தக்கது. அதன் இருப்புத்தன்மை உறுதியானது என்பதையே 'அறுகுபோல் வேரூன்றி' என்ற பழமொழியும் சுட்டி நிற்கின்றது.

### தோப்புக்கரண வழிபாட்டு முறை

விநாயகரை வழிபடுகின்றவர்கள் முதலில் தோப்புக்கரணம் போட்டு அவரை வழிபடத் தொடங்குவர். வலக்கையால் இடக் காதின் கீழ்ப்பகுதியினையும், இடக்கையால் வலக்காதின் கீழ்ப்பகுதியையும் பிடித்துக் கொண்டு நின்ற நிலையில் மூன்றுமுறை அல்லது பலமுறை உட்கார்ந்தும் எழுந்தும் வழிபடுவர். தோர்பி, கர்ணம் என்ற இரண்டு சொற்களும் இணைந்தே தோப்புக்கரணம் என மருவி வந்துள்ளது. தோர்பி என்றால் கைகளி னால் என்றும், கர்ணம் என்றால் காது என்றும் பொருளாகும். எனவே தோர்பிகரணம் எனின் கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது என்பது கருத்தாகும். இதுவே மருவி தோப்புக் கரணம் என வழங்குகின்றது தோப்புக் கரணம் போட்டு விநாயகரைவழிபடும் வழிபாட்டு முறையானது உடலின் நரம்புமண்டல நல்லியக்கத்திற்கு வழிவகுக்கும் ஆன்மீக தத்துவ சாதனை முறையாக விளங்குகின்றது.

### சிதறு தேங்காய் உடைத்தல்

விநாயகரை வழிபடும் முறைகளுள் "சிதறு தேங்காய் உடைத்தல்" சிறப்பிடம் பெறு கின்றது. சிதறு தேங்காய் உடைத் தல் என்பது ஒன்று அல்லது பல தேங் காய்களை எடுத்து அது பல சிறு துண் டுகளாகச் சிதறு மாறு விநாயகர் ஆலயமுகப்பில் உள்ள ஒரு கல்லில் அல்லது அதற்குரிய இடத்தில் எறிந்து உடைத்தல் எனப் பொருள்படும். சிதறுதேங்காய் உடைத்தல் என்பதே இன்று எல்லோரும் செய்யும் விநாயகர் வழிபாடாக விளங்கக் காணலாம். உயர்வு தாழ்வு எதுவும் இன்றி எவரும் செய்கின்ற விநாயகர் வழிபாட்டு முறையாக இது நடைபெறுகின்றது. சிதறு தேங்காய் உடைக்கும் வழிபாட்டு முறை பற்றிய தத்துவ விளக்கம் பின்வருமாறு அமைகின்றது.



விநாயகர் ஒருமுறை தன் தந்தை யாகிய சிவனிடம் சென்று அவரது தலையைத் தனக்குப் பலியாகத் தரவேண்டும் என்று

கேட்டாராம். "மூன்று கண்கள் உடைய எனது தலையைத்தானே வேண்டும்" என்று சிவன் விநாயகரிடம் கேட்டபோது, விநாயகர் அதற்கு "ஆம்" என்று பதில் கூறினார் இதன் பிரகாரம் சிவனே மூன்று கண்களை உடைய தேங்காயை எறிந்து உடைத்தார். இந்த விளக்கத்தின் பிரகாரம் சிதறு தேங்காய் உடைத்தல் என்பது. ஒருவன் தனது கண்கள் உள்ள தலைப் பகுதியை இறைவனுக்குத் தியாகம் செய்யும் மாபெரும் வழிபாட்டுத் தத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது. இது பலி வழிபாட்டின் ஒரு வளர்ச்சி நிலையாகும். இன்று விநாயகர் ஆலயங்களில் சிதறு தேங்காய் உடைத்து வழிபடும்முறை காணப்படுகின்றபோதும், ஈழத்தில் உள்ள "திருமுறிகண்டி விநாயகர்" கோயிலில் நாளாந்தம் ஆயிரக் கணக்கில் சிதறு தேங்காய் உடைத்து வழிபடும் மரபு சிறப்பாக நடைபெறு கின்றது. தமது பிரயாணம் தங்கு தடையின்றி நடைபெறவேண்டும் என்பதற்காக இவ்வாலய வீதியால் செல்லும் பயணிகள் சிதறுதேங்காய் அடித்து முறிகண்டி விநாயகரை வழிபட்டு வருகின்றனர். சிதறு தேங்காய் உடைத்தல் என்பது மக்களின் உள நல தத்துவ வெளிப்பாடா கவே விநாயகர் ஆலயங்களில் சிறப்பாக நிகழ்த்தப்படுகின்றது.

**முடிவுரை**

இவ்வாறாக விநாயகர் வியக்கத்தக்க விதத்தில் பற்பல திருவுருவங்களைக் கொண்டு திகழ்வதையும், அவரின் திருவுருவ உறுப்புக் களும், அவர் தனது திருக்கரங்களில் ஏந்தி யுள்ள ஆயுதங்களும். அவரின் திருநாமங்களும், அவர் எழுந்தருளும் வாகனங்களும் மற்றும் அவரின் வழிபாட்டு முறைகளும் விநாயகர் தத்துவத்தைச் சிறப்பாக வெளிப் படுத்தி நிற்பதை யும் அறியமுடி கின்றது.




## துணை நூல்கள்


1. ஏகாம்பரநாதன் **ஏ.கோயிலும் இறைவழிபாடும்,** திருநெல்வேலி. தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிட்டெட், சென்னை. 1986.
2. கணபதி ஸ்தபதி, **வை. சிற்பச் செந்நூல்,** தொழில் நுட்பக் கல்வி இயக்க வெளியீடு, சென்னை 1978.
3. கல்யாண சுந்தரம், **ந. தமிழ்நாட்டில் கணபதி வழிபாடு.** திருக்குமரன் பதிப்பகம், திருச்செந்தூர் 1994.
4. சுவாமி சித்பவானந்தர், **கடவுளின் வடிவங்கள்** திருச்சி 1956
5. சுப்பையா, **மு. பிள்ளையார் ,** பாரி அச்சகம் சென்னை 1975
6. செந்தில் துறவி, **காணாபத்யம் (கணபதி வழிபாடு)** சாஸ்தா பதிப்பகம், சென்னை.
7. தண்டபாணி தேசிகர் **ச. கணபதி** திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை 1992
8. நடராஜன், **எஸ் கணபதி ஹ்ருதயம்,** பிரதிபா பிரசுரம், சென்னை, 1978
9. பிள்ளை **கா.சு தமிழர் சமயம்** சென்னை 1969
10. மறைமலையடிகள், **தமிழர்மதம்,** சென்னை, 1958
11. வடிவேலன் **சு. கணபதி** வரலாறு திருவாவடுதுறை ஆதீனம். திருவாவடுதுறை 1984
12. **வெற்றிக் கடவுள் பிள்ளையார்,** திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட், சென்னை 1976
13. ஜெயா **பி. விநாயகர் வழிபாடு,** நாகர் கோயில் 1972
14. Ramasubramaniam V. ``The origin and development of Ganapatyam`` Sankara nad Shanmata Madras, 1969.

# விநாயகரின் ஆயுதங்கள்

1. பாசம்
2. அங்குசம்
3. தந்தம்
4. வேதாளம்
5. சத்தி
6. அம்பு
7. வில்
8. சக்கரம்
9. கத்தி
10. கேடகம்
11. சம்மட்டி
12. கதை
13. நாகபாசம்
14. சூலம்
15. குந்தாலி
16. மழு
17. கொடி
18. தண்டம்
19. கமண்டலம்
20. பரசு
21. கரும்புவில்
22. சங்கு
23. பஷ்பபாணம்
24. கோடரி
25. அக்ஷமாலை
26. சாமரம்
27. கட்டுவாங்கம்
28. தீ அகல்
29. வீணை



# ஆலயமும் உயிர்ப்பலியும்

திருமதி. க.இராமநாதன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

இன்றைய சமுதாய கலாசார பண்பாட்டுச் சூழலை அவதானிக்கும் போது எமது வாழ்வானது எங்கே எதை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கின்றது என்ற சிக்கலான வேதனையான ஒரு வினாவை எம்முன் வைத்துள்ளது. சோதனைகளும் வேதனைகளும் மலிந்த ஒரு காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நமது சமய கலாசார விழுமியங்கள் அனைத்தும் மீளாய்வு செய்யவேண்டியதொரு நிர்ப்பந்தமான நிலை உருவாகிவருகின்றது. ஐரோப்பிய சமூகங்களிலும் போர் இயற்கை அனர்த்தம், அணுப்பரிசோதனை இவற்றினால் மனித சமுதாயம் பெரும் இன்னல்களைச் சந்தித்தும் வருகின்றது. இந்துக்கள் இன்று தாம் வழிபடும் ஆலயங்கள் அனைத்திலும் அமைதியும், சாந்தி சமாதானமும் வேண்டியே பிரார்த்தனை செய்கிறார்கள். கிரியைகள், சடங்குகள் என்ற வகையிலே மகோற்சவங்கள் பல்கிப் பெருகி கலாச்சார விழுமியங்களை சமூகப் பாரம்பரியங்களைப் பேணி வருகின்றன. அவற்றைப் பேணுவதில் இந்து ஆலயங்களே இன்று பெரும்பங்கு வகிக்கின்றன என்பதை எவரும் மறுக்கமுடியாது. அதேசமயம்மனித மேம்பாடு, மனித விழுமியங்கள் பற்றியும் பல கருத்தரங்குகள் பெரியோரால் நடாத்தப்பட்டு வருகின்றன. இளம் சிறார்கள், வரும்கால சந்ததியைப் பேணுவோர்களை மனித நேயம் மிக்கவர்களாக ஆன்மீக ஒருமைப்பாட்டில் நிலைபெறச் செய்பவர்களாக உருவாக்குவதில் இந்து ஆலயங்களின் பணி அதி முக்கியமான இடத்தினை வகிக்கின்றது.

அத்தகைய கருணை, பரிவு, இரக்கம், அருள், அன்பு, அமைதி, எளிமை, சமூக ஒருமைப்பாடு, உயிர்களில் நேயம் போன்ற உன்னதமான பண்புகளை உருவாக்கும் சக்தியும் தெய்வீகப் பொலிவும் வாய்ந்த ஆலயங்களில் உயிர்ப்பலி – வேள்விகள் நடைபெறுவது எந்தவகையிலும் பொருத்தமற்றது – என்பதனைக் கல்வி ஞானத்தில் சிறந்தோா புராதன காலந்தொட்டே கண்டித்து வந்துள்ளனர். வேத உபநிடத நூல்களும் வேள்விகளை முழுமனதுடன் வரவேற்றதாகக் குறிப்புக்கள் இல்லை. ஆரம்பகால வாழ்விலே வேள்விச் சடங்குகளை ஆற்றி வாழ்வை நடத்திய வேதகால மக்கள் பிராமண இலக்கியங்களின் தகவலின்படி அப்படியான வேள்விச் சடங்குகளின் உச்ச நிலைக்குச் சென்றபோது சடங்குக் கொள்கையே காலப்போக்கில் ரிஷிகளாலும் ஞானிகளாலும் முற்று முழுதாக நிராகரிக்கப்பட்டன. வைதீகக் கல்வி, வேள்வி ஆகியனவற்றிற்கு எதிர்ப்புக்கள் புராதனகாலம்

தொட்டு நிலவி வந்துள்ளன என்று பாறூவா என்பாரும் குறிப்பிட்டுள்ளார். இருக்குவேதம் மண்டுக சூக்தத்திலும் (7,165) ஐதரேய ஆரண்யம் (111.2.6.8), கௌஷீதகி உபநிடதம் (2.5) ஆகியவற்றிலும் இத்தகைய போக்கினைக் காணலாம். வேள்விகளை இயற்ற வேண்டும் எனக் சொல்பவர்கள் அது ஏன் இயற்ற வேண்டும் என்பதன் பொருளையறியாதவர்களாக உள்ளனர் என்கிறது ஐதயே ஆரண்யகம் (2.1.2) இத்தகைய எதிர்ப்புக்கள் ஐயப்பாடுகள் பிற்பட்ட வேதகாலப் பகுதியிலேயே ஆரம்பமாகிவிட்டன. வேள்வியில் பலியிடப்பட்ட உயிர்கள் வேள்வி முடிவில் மீள உயிர்ப்பிக்கப்பட்டாலே வேள்வி களின் பயன் பூரணத்துவமடையும் எனவும், அப்படியில்லாதவிடத்து வேள்வி செய்தோர் தீரா நரகமடைவர் எனவும் பிற்பட்ட வேதகால ஞானி கள் உணர்த்தினர். வேள்விச் சடங்குகளில் அதிருப்தியுற்றோர் வனம் சென்று வேள்வி களைப் பற்றித் தியானம் செய்து இவ்வாறு அவற்றின் உட் பொருள்களை விளக்கினர்.

வேதகாலம் வேள்விகள் நடைபெற்ற போதும் பசுவதை தடுக்கப்பட்டிருந்தது. பசு கொல்லத்தக்க பிராணியல்ல என்ற பொருளில் 'அகன்யா' என்று சிற்சில இடங்களில் கூறப்பட் டுள்ளது. வேள்விகளை ஒரு காலத்தில் அனு மதித்த மனுதர்ம சாஸ்திரம் கூட வேள்விகள் துவாபரயுகத்திற்குரியன எனவும் கலியுகத்திற் குரியவை தானமும் பிறருக்குத் தாராளமாகப் பொருள் வழங்குதலுமே யுகதர்ம மாகும் எனவும் சுட்டுகின்றன. மாமிசம் உண்ண அனுமதித் துள்ளபோதும் மனுநூலானது,

"எந்தமிருகத்தையாவது கொன்று தின்ன வேண்டு மென்ற
விருப்புண்டாயின் நெய் அல்லது மாவினால் அம்மிருகம்
போன்ற உருவைச் செய்து உண்ணலாமேயன்றி வீணே பசுவைக் கொல்ல மனதாலும் நினைத்த லாகாது" (5-37) எனவும்

"உயிர்வதை ஒருபோதும் செய்யத்த காதது, (புலால் தவிர்த்தல் நன்று. உயிர்களை கொல்வதால் பேரின்பம் கிடைக்காது. எனவே புலால் தவிர்க்கப்பட வேண்டியது") (5 -45) "நூறாண்டுகள் அஸ்வமேதம் செய்வதும் இறக்குமளவும் புலால் தவிர்ப்பதும் இணையான பலன் தருபவை" (5– 45)

"யாகம், யக்ஞம் ஆகிய சாதனைகள் – அவற்றால் பெறும் பயன்கள் அழிவுறத் தக்கவை, ஆகையால் 'ஓம்' என்னும் பரப்பிரம்ம அட்சர உச்சாடனம் வேள் விகளைக் காட்டி லும் பன்மடங்கு சிறப்புடையது ஆயிரம் மடங்கு மேன்மைதருவது " (2 – 84, 85) என்ப



துவே தர்ம சாஸ்திரங்களின் முடிபாகவுள்ளது. ஆனால் அறிவியல் வளர்ச்சி பெற்ற தற்காலத்தி லும் உயிர்களைப் பலியிட்டு அதன் இரத்த வெள்ளத்திலே தான் நாடும் மக்களும் சுபீட்ச மடைய முடியும் எனவும், வேத நூல்களும் அவ் வாறு கூறுவதாக வக்காலத்து வாங்குவதும் கல்வியாளர் சமூகத்தைச் சேர்ந்த சிலரும் அதனை ஆமோதிப்பதுமே இன்றைய நிலையில் மிக வேடிக்கையானது. விநோதமானது.

இப்படியான பெரியோர்க்கு வேதநூல் கள் வேள்விகளை மட்டுமல்ல தானதர்மங் களையும் தான் பெருமளவில் எடுத்துச் சொல் கின்றன என்பது ஏனோபுலனாகாமற் போனது

விந்தையே. அதுமட்டுமன்றி வேதநூல்களில் எங்கும் ஆலயங்களில் தெய்வத்தின் சன்னி தானத்தில் உயிர்ப்பலி நடைபெற்றதாகக் குறிப் புக்களே கிடையாது. அன்றுள்ள யாகசாலை களும் யாகத்தூண்களும் பிற்காலம் சிவாகமங் களினால் ஆலயங்களில் பூசைகளாகவும் மாற் றப்பட்டதுடன் 'பலி' என்பதனையும் பலிபீடமாக உருவகித்து – மனதிலுள்ள ஆசாபாசங்களை, துர்க்குணங்களைப் பலியிடவேண்டும் எனவும் அவற்றினை வழிபாட்டுக் கிரியைகளாக் மாற்றிக் கொடுத்தன. பலி என்பதன் பொருளே 'நிவேதனம்' எனப்படும். நிவேதனம் என்பது எல்லாவற்றையும் உயிர்கட்கு வாரிவழங்கும் இயற்கைக்கு – இறைமைக்கு சகலதையும் அர்ப்பணித்து பின் தான் அனுபவித்தல் என்ப தாகும். தன்னைத் தானே தனது ஆத்மாவை இறைவனுக்கு நிவேதனம் செய்தல் என்பதே பலிபீடத்தின் தாற்பரியமாகும். சுத்துப்பலி, திருப் பலி கொடுத்தல் என்பதெல்லாம் திக்குபால கர்க்கும், ஏனைய தேவதைகட்கும் நிவேதனம் அளித்தலைச் சுட்டுமே தவிர உயிர்ப்பலியிடு வதைக் குறிப்பதல்லவாம்.

இன்றும் சில ஆலயங்களில் இரதோற்ச வத்தின் போது சேவலின் பூவில் சிறு பகுதியைச் சீவி ரத்தம் காட்டுவதும், குடிபுகுதல் விழா, ஏனைய தீட்டுக்களை விலக்குமிடத்து பூசணிக் காய், எலுமிச்சம்பழத்தில் சிவப்பு குங்குமம் பூசி வீதியோரம் வீசுவது யாவும் பழங்காலப் பலியி டலின் எச்சமாகவும், உருவகமாகவும் பாரம்பரிய முறைகளைப் பேணும் பொருட்டு இந்துக்கிரியை களில் மாற்றம் பெற்று மேற்கொள்ளப்படு வதுண்டு. நல்லூரில் மகோற்சவ காலம் முடிய நடக்கும் வேள்வியை நாவலர் பெருமான் தடுத்து நிறுத்தியதை நாவலர் வரலாறிலும் காண் கிறோம்.

இவ்வாறாக உயிர்ப்பலி கி.பி.4ஆம் ,5ஆம் நூற்றாண்டுகளிலேயே தேய்ந்து மறைந்துவிட்ட ஒருவிடயமாகும். அதனை மீண்டும் உயிர்ப்பிப்பது மனிதன் மிகவும் கீழ்த்தரமான மனிதநேயத்தை, சமயத்தின் சாராம்சத்தையே உருக்குலைப்பது போன்ற தாகும். 'அன்பே சிவம்' என்பது சைவசித்தாந் தம். புறச்சமயிகளால் மேற்கொள்ளப்பட்ட பசு வதையைத் தடைசெய்ய முடியாது வேதனையு டன் நாட்டைவிட்டு வெளியேறியவர் ஞானப்பிர காச சுவாமிகள். கலியுகத்தில் யாகம் தடை செய்யப்பட்ட கிரியை என மனுநூலே கூறும். பலியிட்ட உயிரை உயிர்ப்பித்து வேள்வியின் பலனை அடைந்த கதைகள் பல பெரியபுராணத் திலும் உண்டு.



சிறுத்தொண்டர் கதையும் இவ்வா றானதென்றே கருதவேண்டும். முதலை வாய்ப்பட்ட பிள்ளையை மீட்ட வரலாறு, பூம்பா வையை உயிர்ப்பித்த வரலாறுகள் போன்ற வற்றையும் வேள்விக் கிரியைகளின் ஒரு பரிணாமமாகக் கொண்டாலும் அவை உயிர்ப்பிக் கப்பட்ட சம்பவங்களை நினைவூட்டுவனவாகும். கண்ணப்பர் மிருகத்தைக்கொன்று இறைச்சி படைத்தவர் என்ற தர்க்கவாதங்களும் ஒரோ விடத்துக் கற்றவர்களினாலும் முன்வைக்கப்பட் டன. கண்ணப்பர் இறைச்சி மட்டும் படைக்க வில்லை தன்னையும் தன் கண்ணையுமே நிவேதனமாகப் படைத்த ஆத்மஞானி. அதுமட்டு மல்ல இறுதியில் தன் கண்ணையும் மீளப் பெற்றுக் கொண்ட மெய்யன்பராவார். அன்பே யுருவான சிவம் தனது பக்தனைத் தண்டித்த தாக எண்ணுவது வரலாற்றுத் தெளிவின்

மையைத்தான் புலப்படுத்துகின்ற தெனக் கருத முடியும்

உபநிடத காலங்களில் யாகம், வேள்வி கட்குப் பெருத்த இடர்ப்பாடு தோன்றியது. யாகங்கள் உருவத்திலுள்ள இப்படகுகள் பலவீனமானவை. அஞ்ஞான வசப்பட்டு யாகம் செய்வோர் மீண்டும் மீண்டும் முதுமையும் மரணமும் அடைகின்றனர். இந்த அப்பாவிகள் சடங்குகள் மீதுள்ள பற்றால் உண்மைக் கார ணத்தை அறிந்து கொள்வதில்லை. தவத்தாலும், பக்தியாலும் அமைதியுடன் வனத்தில் வாழும் மக்களே அமுத மயமான அழிவற்ற ஆத்மபுருசன் இருக்குமிடத்தை அடைகின்றனர்" என முண்டகோபநிஷத் தெரிவிக்கின்றது. சடோப நிடதத்திலும். நசிகேதஸ் என்பவரின் தந்தை விஜ்ஜிரவஸ் என்பவர் யாகமுடிவில் உபயோக மற்ற பசுக்களைத் தானம் செய்வதைப் பொறுக் காது நசிகேதஸ் தானத்தில் தன்னைத் தானே பலியாகக் கொடுத்து யமனிடமும் சென்று மீண்டகதையாகப் பொருட்களில் இறப்பவை மீண்டும் உயிர்பெற்றெழுவதையே விளக்கி நிற்கின்றது. வேள்விச் சமயமாகவிருந்த பிரா மண கால யாகமுறைகளின் அர்த்தம் மாற்றம் அடைந்தமையினை நோக்குமிடத்து வேள்வி யின் சாராம்சம் ஒருவன் தனது பொருளை இறைவனுக்காகத் தியாகம் செய்வதாகும். இத்தியாகம் உண்மையோடும் நம்பிக்கை யோடும் செய்யப்பட வேண்டும். நம்பிக்கையுடன் செய்யப்படாத வேள்வி பயனற்றுப் போவதையே நசிகேதஸ் கதை மூலம் இங்ஙனம் உணர்த்தப் பட்டது. இவ்வாறாக உபநிடதங்களிலும் யாகம் என்பது ஆத்ம தியாகமாக மாற்றிக் கொடுக்கப் பட்ட வரலாற்றையே அவை காண்பிக்கின்றன. இவற்றை எல்லாம் விடுத்து இந்துமத நூல்கள் வேள்விகளை, உயிர்ப்பலியை வற்புறுத்து கின்றன என்ற தவறான எண்ணக்கரு மக்க ளிடையே இன்று விதைக்கப்படுவது இந்துசமய த்தையும் மக்களையும் திசைதிருப்பும் நடத் தைக்கு அடிகோலுவதாகவே அமையும்.

புராதனகால மக்கள் தாம் அன்றாடம் புலம்பெயர்ந்து நாடோடிகளாக அலைந்து மிருகங்களை வேட்டையாடி, கொன்றுவந்த மிருகத்தை உணவுக்கும் பயன்படுத்துமுன் அக்கினியில் போட்டு நெய்யில் வாட்டி அதை அக்கினி மூலம் இறைவனுக்கு நிவேதனம் செய்த பின்னரே யாவரும் உண்டு பசியாறி வாழ்ந்தனர். காலப்போக்கில் விவசாய வளர்ச்சி கள் வேளாண்மைத் தொழில்கள், நதிக்கரை நாகரிகங்களாக மலர்ச்சி பெற்றதும் அவை வெறும் சம்பிரதாயச் சடங் குகளாகத் தொடர் ந்திருக்க வேண் டும் ஆயினும் வேள்



வி என்ற பெயரில் பெரிதும் உயிர்க் கொலைகள் வளர்ச்சி கண்டபோது இந்துக்களில் ஒரு சாராரே ஞானிகள் துறவிகள் என்போரே முதலில் அதற்கு எதிர்ப்புக் காட்டியவர்களாக இருந்ததை உபநிடத காலம் பார்க்கிறோம். தொடர்ந்து பௌத்த, சமணத் துறவிகளும் அவற்றினை நிராகரித்துக் கண்டித்தனர். வேள்வி உணவு உண்ணும்போது தெய்வத் தொடர்பு கொண்டிருப்பதாகவோ அல்லது தெய்வ வசப்பட்டிருப்பதாகவோ வழிபடுவோர் நம்பிவந்தாலும் அது அகநிலை மாறி வெறும் புறச் சடங்காக மாறியதும் இந்நிலை விரைவில் மறைந்து விட்டது.

இவ்வாறாக சமய வழிபாட்டிலே உயிர்ப்ப லியிடுதல் முன்னொரு காலம் வழக்கில் இருந்த போதும் உயிரினங்கள் மீது இரக்கம் கொள்ளும் மனப்பாங்கும் வளர்ந்து வந்துள்ளன. உயிர்ப் பலிக்குப் பதில் பிண்டங்களைப் பலியாக அளிக்க லாம் என கிருஷ்கிய சூத்திரங்களும் அனுமதித் துள்ளன. மனிதனுக்குத் துணையாயிருக்கும் விலங்கினங்களின் உணவை அந்தணர்கள் புசிப்பதில்லை என கிரேக்க லத்தீன் ஆசிரியர் களும் குறிப்பிட்டுள்ளனர். பசுக்களிடமும் இரக் கம் கொள்ளும் இந்து சமயக் குறிப்புக்கள் பற்றி ஒனெசிக் கிரிட்டோஸ் என்னும் வெளிநாட்டவர் குறிப்பிடும் போது அகிம்சை அல்லது துன்புறுத் தாமை என்பது துறவிகளாலும் ஞானிகளாலும் மிகக் கவனமாகவும் ஊக்கத்துடனும் எடுத் தாளப்பட்டுள்ளன எனக் கூறியிருப்பதும் நினைவு கூரற்பாலது.

"தேவர்களே நாம் எந்த வேள்விப் பணயமும் வைப்பதில்லை புனிதமான வேத பாடல்களையே பாடி மகிழ்கிறோம்"

என்கிறது சாமவேதம். வேள்வி என்பது வேத மோதலையே தெளிவாகக் காட்டியது என்பதை மனு நூலும் காட்டியுள்ளது "வேதமும் வேள்வியுமாயினார்" என மாணிக்கவாசகரும், 'நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க' எனக் கச்சியப்பரும் 'வேள்வி' எனக் கூறுவது வேதமந்திரங்கள் கூறும் காயத்திரி யையும் அற ஒழுக்க வழிபாட்டையுமே குறிக்கும் என்பதும் இவற்றால் புலப்படும்.

"நீர்நிலைகளின் கரையிலோ நடமாட்ட மில்லாத இடத்திலோ ஒரு வழிப்பட்ட மனதுடன் தினமும் இயற்றத்தக்க பிரம யக்குத்தை முடித்து காயத்திரி ஓதுக" காயத்திரி முதலானவை வேள்வி என மதிக்கத்தக்கன (மனு 5: 104 , 106)

எனவும் இப்படியாக வேத வேள்விகளின் தாற்பரியம் தர்மசாஸ்திரங்களிலும் உணர்த்தப் பட்ட பின்பும் உயிர்ப்பலியை அதுவும் ஆலயங் களில் வற்புறுத்துவது எந்தவகையிலும் நியாயப் படுத்த முடியாதது.

வேத சாஸ்திர நூல்களில் வேள்வி பற்றி விளக்கப்பட்டதே தவிர, பணம் சம்பாதிக்கும நோக்கிலே உயிர்ப்பலி எங்கும் கற்பிக்கப்பட்ட தேயில்லை. வேள்வி என்பதற்குரிய பொருளைத் தத்தமக்கேற்றவாறு திரித்துப் பொருள் கொள்வதும் அவற்றிற்கு வக்காலத்து வாங்கும் பொருட்டு சிவரூபமான யசுர் வேதத்தைத் துணைக்கழைப்பதும் விசித்திரமானது. இத்த கைய செயல்கள் யாவும் வளரும் இளம் சிறார்களி டத்தும் எதிர்காலச் சந்ததியினரிடத் தும் சமயத் திரு நூல்களில் நம்பிக் கை இழக்க வைப் பதுடன், வன்முறைக் கலாச்சாரத்தினைத் தூண்டுவதாகவுமே அமையலாம். ஆலயங்கள் அருள் கொழிக்கும் நிலையங்கள் என்பது உண்மையானால், அம்மையப்பரே உலகுயிர்கள் அனைத்திற்கும் அம்மையப்பராவார் எனில் தெய்வ சந்நிதானத்தில் உயிர்ப் பலியை மீண்டும் உயிர்ப்பிப்பது சனாதனமான இந்து தர்மத் திற்கே விரோதமானது சகல ஜீவராகிகளிலும் அன்பு பூண்டு மனிதநேயத்தை நிலைபெறச் செய்து ஆலயத்தில் உயிர்ப்பலியைத் தவிர்ப்போ மாக. பெற்றவர்களே தன் குழந்தைகளை பலியிட ஒருப்படுவார்களா? அப்படியானால் தாய்மை, கருணை, பரிவு, இரக்கம், அகிம்சை, கொல் லாமை, உயிரிரக்கம் என்னும் தர்மீகப் பண்பு



களின் பொருள் என்னாகும்? அசைவம் உண்ணக்கூடாது என்பது இவற்றின் பொருளல்ல. அப்படியாரையும் இந்துமதம் நிர்ப்பந்தித்ததுமில்லை. கிறிஸ்தவம், இஸ்லாம், மதங்களிலும் புலால் உண்ணல் அனுமதிக்கப்படுவது போல இந்துமத சாத்திரங்களும் ஒரோவிடத்து மனித ஆசாபாசங்கட்கு இடமளித்து அதனை அனுமதித்த போதிலும் கோயில்களைக் கொலைக் களமாக்குமாறு அவை உத்தரவிடவில்லை. பலிபீடங்களாக ஆலயங்களில் மாற்றியமைத்த பெருமை சைவாகமங்களைச் சாரும்.

புராதன தமிழ் நூல்களிலும் மாமிச உணவு புசித்து வந்தமை அனுமதிக்கப்பட்ட போதும் அவற்றை அடுத்து வந்தகாலங்களிலும் எழுந்தநூல்களில் திருக்குறள், திருமந்திரம் போன்றவை அறத்தின் அகிம்சையின் கொல்லாமையின் மகிமையை மிகவும் மேன்மைப் படுத்தியிருந்தன.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்துண்ணாமை நன்று"

எனவும்,

"கொல்லான் புலாலை மலுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்பதும் அனைவரும் அறியாததல்ல. சமயநூல்களின் பொருளை அறிவதில் இப்படியான மயக்கம், குழப்பம் ஏற்படலாம் என எண்ணித்தானோ என்னவோ மெய்கண்ட சாத்திரங்கள் இக்குழப்பத்தை நீக்கியமைந்தன.

" வேத சிரப்பொருளை மிகத் தெளிந்து
சென்றார் சைவத்திறத்தடைவர்"

(சித்தியார்)

என வருமடிகளில் வேதசிரசான உபநிடதப்பொருளை மயக்கமற தெளிந்து உணர்ந்தவர் தான் சைவராக முடியும். ஏனையோர் 'சைவராகார்' என தெளிவுபட விளக்கியது. எனவே இந்துக்களாக வாழ்ந்து மெய்ஞானத் தெளிவு பெற்றவர்களே அன்பெனும். சிவத்தை அடையும் சைவ நெறியைச் சார்ந்தவர்களாகின்றனர்.

"வேதாந்தத்துச்சியிற் பழுத்த ஆரா அருங்கனி
யெனும்
சைவசித்தாந்தத் தேனமுதருந்தினர் சிலர்"


(தாயுமானார்)



என்பதற்கிணங்க 'கற்ற அன்பினில் நிற்போரே கணக்கறிந்தோர்' எனத் திருமந்திரமும் செப்பியது. 'சைவ நீதி விளங்குக உலகமெலாம்' என்றுதான் கந்தபுராணமும், கூறியதே தவிர 'சைவசமயம்' விளங்குக எனக் கூறவில்லை என்பதிலிருந்தும் 'சைவநீதி' என்பது அன்பு, அகிம்சை, அறம் என்பதன் வழியில் ஒருவர் தன்னை நிலைபெறச் செய்து ஆத்மஞானம் அடைதலேயன்றி, ஆலயங்களில் அதர்மத்தை வளர்ப்பதல்லவாம்.

# அடிக்குறிப்புகள்


1. சிவசாமி, வி., ஆரியர் ஆதிவரலாறும் பண்பாடும், கலைவாணி அச்சகம், யாழ்ப்பாணம், 1978, பக். 55.
2. Barua, B., Pre Buddist Indian Philosophy, Vol.I, cambrige. London, p. 31.
3. சிவசாமி, வி., மு.கு. நூல்., பக். 59. field Rig Veda Samhitas with the Comantry of Sayanasarya Vol.1-4, Maharastra university of Poona, R.T.H Griffith (trans) Banares, 1896 - (1933 - 1946).
4. மங்கள முருகேசன், ந, க., இந்திய சமுதாய வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975, பக். 67.
5. திரிலோக சீதாராம் (தமிழில்) மனுதர்ம சாஸ்திரம், சென்னை, 1986, சு. 1 – 86.
6. ராகுல் காங்கிருத்தியாயன், இந்துதத்துவ, இயல், நியூ சென்சரி புக் ஹவுஸ், சென்னை, 1985, பக். 50 – 51
7. கடோபநிடதம் (தமிழில் ) உரையாசிரியர் அண்ணா, இராமகிருஷ்ண மடம், சென்னை.
8. ஹரியண்ணா, எம்., இந்திய தத்துவம், பகுதி 1, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1966, பக் . 26.
9. குப்புசாமி, தி.வெ., இந்தியாவின் சிறப்பு வரலாறு பகுதி 1 , (தமிழில்) தமிழ்ப்பாடநூல் நிறுவனம், சென்னை, 1971, பக். 105.
10. குப்புசாமி, மு.கு. நூல், பக். 105 106
11. திரிலோக சீதாராம், மனுதர்ம சாஸ்திரம், 5– 106.

(மறு பிரசுரம்)

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.



# பிள்ளையார் சுழி

தமிழண்ணல்

பிள்ளையார் சுழி போட்டாயிற்றா? என்பது ஒரு பழமொழி. ஒரு நற்காரியம் தொடங்கியாயிற்றா, ஒரு தொழில் அல்லது வணிகம் தொடங்கிவிட்டதா என்பதை இவ்வாறு கேட்பர்.

நம் பெரியவர்கள் பிள்ளையார் சுழி போட்டே எதனையும் தொடங்குவர். கடிதமானா லும் கட்டுரையானாலும் ஒரு நூலானாலும் முதலில் 'உ' எனப்படும் பிள்ளையார் சுழி போட்டுவிட்டே தொடங்குவர்.

பிள்ளையார் என்று ஏன் பெயர் வந்தது? அவர் சிவபெருமானின் மூத்த பிள்ளை இளைய பிள்ளை முருகன். ஆர் இறுதி மதிப்புக் கருதிச் சேர்ப்பது. பிள்ளை என்பது வீரன், மைந்தன் என்றும் பொருள்படும். பிள்ளையார் அரசமரத் தின் அடியிலும் இருப்பார். ஆலயங்களிலும் முதல்வராக முதலிடத்தில் இருப்பார். பிள்ளை யார் மிகமிக எளியவர். "பிடித்துவைத்தால் பிள்ளையார்" என்பது ஒரு பழமொழி மஞ்சளை அல்லது குழைத்த மண்ணைப் பிடித்துவைத்துப் பிள்ளையார் எனக் கும்பிடுவர்.

**பிள்ளைகளின் பிள்ளையார்**

இளம் பிள்ளைகளுக்குப் பிள்ளையாரின் வடிவத் தோற்றத்தில் ஒரு கவர்ச்சி உண்டு. யானை மணி ஓசை கேட்டதும் அப் பெரிய உருவத்தை, இவர்கள் வியப்போடு விழித்துப் பார்ப்பர். யானைமுகக் கடவுளும், தும்பிக்கை யுடன் இருப்பதால், அக்காட்சி பிஞ்சு மனங்களில் பதியமாகும். அதனால்தான் ஔவையார் கடவுள் வணக்கப் பாடல்களைக் குழந்தைகளுக்கு ஏற்பப் பாடியுள்ளார்.

நாட்டுப்புற மக்கள் குழந்தையைப் பாடவைக்கும் முதற்பாட்டு எது தெரியுமா?

குள்ளக் குள்ளரே
குண்டு வயிறரே
வெள்ளிப் பிள்ளையாரே
விநாயக மூர்த்தியே!

என்று சிரிப்புக் கலந்து பாடும் இப்பாடல் தான் அது. இதைப் பிள்ளைகள். மழலைச் சொற்களில் திரும்பப் பாடும்! இப்படிப்பட்ட நாட்டுப்புற இலக்கியப் பாடல்கள் மிகப் பலவுள. ஏற்றப் பாட்டிலும் பிள்ளையார்தான் முதலில் வருவார். ஆழமான வயல் கிணறுகளில், ஏற்றல் இறைப்பவன்.

பிள்ளையாரே வாரும்
பிழைவராமல் காரும்

என ஒரு வாளி தண்ணீரை இறைத்து ஊற்றுவான். பாட்டிமார்கள் தம் பேரன் பேர்த்தி

களுக்கு இவ்வாறு இரண்டடிப் பாடல்கள் பலவற்றைப் பாடி. அப்பிள்ளைகள் நெஞ்சில் பக்தியையும் பண்பாட்டையும் பதியம் போடுவர்.

குள்ளக் குள்ளனைக் குண்டு வயிறனை
வெள்ளைக் கொம்பனை விநாயகனைத் தொழு!
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் தொடரும் வினைகளே!
அது மட்டுமா?
முப்பழம் வெல்லம் மோதகம் தின்னும்
தொப்பை யப்பனைத் தொழவினை இல்லையே

என்று பாடிப் பிள்ளைகளை மகிழ்விப்பர். இது "கைத்தல நிறைகனி, அப்பமொடு அவல் பொரி கப்பிய கரிமுகன்" என்ற அருணகிரிநாதரின் திருப்புகழ்போல் உளது.

பள்ளியில் வேழமுகம் என்று ஒரு பாடலை முன்பு கற்பிப்பார்கள். அதுவும் நாட்டுப்புற இலக்கிய வழக்கே ஆகும்.

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்!
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே.
அப்பம் முப்பழம் அமுதுசெய் தருளிய
தொப்பை யப்பனைத் தொழவினை அறுமே!

நாடோடிப் பாடல்கள் இவ்வாறு இடத்திற்குத் தகவும் பாடுபவர்க்குத் தகவும் சிறுசிறு வேறுபாடுகளுடன் பாடப்படுவது அவற்றின் இயல்பு. ஏட்டில் எழுதாமல், நினைத்ததும் பாடுபவை அவை.

வேழமுகப் பாட்டு என்பது போற்றிப் பாட்டு. பிள்ளையாரைத் தொழப் பிள்ளைகள் முதல் பெரியவர்வரை அது பயன்படும்.

சிந்தித்தவர்க்கு அருள் கணபதி சயசய
சீரிய ஆனைக் கன்றே சயசய
அன்புடை அமரர்கள் காப்பாய் சயசய
ஆவித்துணையே கணபதி சயசய
இண்டைச் சடை முடி இறைவா சயசய
ஈசன் தந்தருள் மகனே சயசய
உன்னிய கருமம் முடிப்பாய் சயசய
ஊர் நவசந்தி உகந்தாய் சயசய
எம் பெருமானே இறைவா சயசய
ஏழ் உலகும் தொழ நின்றாய் சயசய
ஐயா கணபதி நம்பியே சயசய
ஒற்றை மருப்புடை வித்தகா சயசய
ஓங்கிய ஆனைக் கன்றே சயசய
ஔவியம் இல்லா அருளே சயசய
அக்கரப் பொருள் ஆனவா சயசய
கணபதி என் வினை கரைவாய் சயசய
நப்போல் மழு ஒன்று ஏந்தியே சயசய



சங்கரன் மகனே சதுரா சயசய
ஞயன் நம்பினர்பால் ஆடில் சயசய
இடம் பட விக்கின விநாயகா சயசய
இணங்கிய பிள்ளைகள் தலைவா சயசய
தத்துவ மறைதரு வித்தகா சயசய
நன்னெறி விக்கின வினாயகா சயசய
பள்ளியில் உறைதரும் பிள்ளாய் சயசய
மன்றுள் ஆடும் மணியே சயசய
இயங்கிய ஞானக் குன்றே சயசய
அரவக் கிண்கிணி ஆரப்பாய் சயசய
இலவக் கொம்பு ஒன்று நந்தியே சயசய
வஞ்சனை பலவும் தீர்ப்பாய் சயசய
அழகிய ஆனைக் கன்றே சயசய
இளமதயானை முகத்தாய் சயசய

இறகு "பதி விக்கின விநாயகா சயசய
அனந்தலோடு" ஆதியில் அடிதொழ சயசய

இதனை வேழமுகம் என்றும் பிள்ளையார் சிந்தனை என்றும் கூறுவர். ஐயம்வெற்றி பேச்சில் சயம் என்பர். இதனைப் போற்றி என்றும் சரணம் என்றும் முடிப்பதுண்டு.

தமிழ் எழுத்துக்கள் முப்பது மட்டுமே. உயிர் 12; மெய் 18 இப்பாடலில் உயிர் 12 வரிசையாய் வருகிறது. அக்கரம் என்பதில், மெய்க்கு அடையாளமாகப் புள்ளி யுள்ள எழுத்து உளது.

பிறகு க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன எனும் 18 மெய்யும் வரிசை மாறாமல் இடம் பெறுகின்றன. பாட்டுக்குப் பாட்டும் ஆயிற்று. படிப்புக்குப் படிப்புமாயிற்று. ஒருவாறு தமிழ் நெடுங்கணக்கு அகரவரிசை அரிச்சுவடி மழலை கள் நெஞ்சிலும் நாவிலும் பதிந்துவிடுகின்றன அல்லவா?

உயிரும் மெய்யுமே தமிழ் முதலெழுத்துக் கள். ஆங்கிலம் 26 என்றால் தமிழ் 30 மட்டுமே.

சார்பெழுத்துக்கள் என்பன மொழியிடையே வரும்போது, பொருள் வேறுபாடு தருவன. அவை தனி எழுத்துக்களல்ல. அவ்வாறு பார்த்தால் பிறமொழிகளில் சொல்லிடையே வரும் சார் பெழுத்துக்கள் மிகப் பலவாகும். உயிர் மெய்யெ ழுத்துக்கள் தமிழுக்குக் கிடைத்த கொடை. க் இ என்று எழுத வேண்டியதை (ki போல) கி என ஒரே வடிவமாக்கினர்: க் உ என்பதை (Ku) இரண்டெழுத்து ஆகாமல் கு என ஒரே எழுத்தில் அடக்கினர். அவை தனி எழுத்துக் களல்ல. இடச்சுருக்கம், காலச் சுருக்கம், முயற்சிச் சுருக்கம் மற்றும் சிக்கனம் கருதிப் படைக்கப்பட்ட 'வடிவங்கள்'. இது தெரியாதார் உயிர்மெய் 216 என்று (12x18) கொண்டு, தமிழ் எழுத்துக்கள், ஆய்தத்துடன் 247 என்பர். இத்தனை எழுத்துக்களா என மயங்குவர். இவ் வேழமுகம் தமிழ் முதல் எழுத்துக்களை அறிமுகப்படுத்துவது சிறப்பு. ஆத்திசூடி தமிழ் நெடுங் கணக்கைக் கற்றுத் தருவது போன்றதே இதுவும். முற்காலத்தில் இது திண்ணைப் பள்ளியில் பாடமாக இருந்தது என்பதற்கு, 'பிள்ளைகள் தலைவன்', 'நன்னெறி', 'பள்ளியில் உறைதரும் பிள்ளை' போன்ற தொடர்கள் சான்றாக உள்ளன.

கடவுள் வணக்கப்பிள்ளையார்



எதனையும் பிள்ளையார் சுழி போட்டு எழுதத் தொடங்குவது; திருக்கோயில்களில் முதலில் பிள்ளையாரை வணங்கிவிட்டுப் பிறகு தந்தையும் தாயுமாகிய அம்மையப்பரைக் கும்பிடுவது ; எந்த ஒரு நூலையும் பிள்ளையார் வணக்கத்துடன் தொடங்குவது என்பன கடந்த ஆயிரம் ஆண்டுகளாக உள்ள நடைமுறை களாகும்.

கூட்டம் தொடங்கும் போது, பதினோராம் திருமுறைப் பாடல் ஒன்றைப் பாடுவர்.

திருவாக்கும், செய்கருமம் கைகூட்டும்,
செஞ்சொற் பொருவாக்கும், பீடும் பெருக்கும் –
உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

நிகழ்ச்சி தடங்கலின்றி இனிதே முடிதற் பொருட்டு, பிள்ளையார் வணங்கப் பெறுகிறார். அது போலவே நூல்களை எழுதத் தொடங்கு பவர்கள், முற்காலத்தில் சிவனையோ, திரு மாலையோ வணங்கிப் பாடிப் பிறகு நூலை எழுதுவர். இடைக் காலம் முதல் நூற்கடவுள் வணக்கமாகப் பிள்ளையாரைப்பாடுவது பெரு வழக்காயிற்று. பிள்ளையார் கடவுள் வணக்கப் பாடல்கள் ஆயிரக் கணக்கில் உள்ளன. அவற் றுள் நீதி நூல்களைச் சிறிய வயதினர்க்காகப் பாடிய ஔவையார், புதுமை தோன்றப் பாடியவற்றை மட்டும் பார்க்கலாம்.

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே

ஆத்தி மாலையைச் சூடிக்கொண்டு, ஆலமரத்தடியில் அமர்ந்து உலகோர்க்குப் போதித்த சிவனே ஆத்தி சூடி எனப்பட்டனன். ஆலமர் செல்வன், தென்முகக் கடவுள். இன்று தட்சிணா மூர்த்தி என்பர், அவ்விறைவன் உல கோர்க்கு ஞானத்தைப் போதித்தவன். முனிவர் களுக்கு என்பது, அவர் வழியாக நமக்கேயா. கும். அந்த 'ஆத்திசூடியாம் சிவபெருமானால் விரும்பப்பட்ட தேவன் பிள்ளையாா (அமர்ந்த விரும்பிய), அப்பிள்ளையாரை 'ஏத்தி ஏத்தித்' தொழுவோம் ஏத்தி ஏத்தித் தொழுவது புகழ்வது. அதுதான் அருச்சனை எனப்படுவது. இதில் சிவனையும் கூறி, அவருடைய பிள்ளையாரை வணங்கும் சாதுரியம் காணப்படுகிறது.

கொன்றை வேந்தன் செல்வன் அடியினை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே

ஆத்தி மாலை போலக் கொன்றை மாலையும் சிவனுக்குரியது. அதனை அணிந்த தலைவன் சிவபெருமான். அவனது செல்வன் பிள்ளையார் அப் பிள்ளையாரது அடியினை என்றும் புகழ்ந்து பாடி வணங்குவோமாக!

ஆத்தி சூடி இரண்டு சீர்களாலானது; கொன்றை வேந்தன் ஒவ்வோர் அடியாலானது. திருவள்ளுவர் ஒன்றேகால் அடியிற் சொன்ன தைவிடச் சுருக்கமாகப் பாடிப் பார்த்த ஔவை யார் திறம் வியக்கத்தக்கது. அவற்றிலுள்ள கடவுள் வணக்கங்களோ, ஈரடியால் உலகளந்த மாயவனின் தோற்றம் போல். பொருள் பொதிந்து விரிந்து செல்கின்றன.

ஔவையார் மூதுரைக்குப் பாடியுள்ள வாழ்த்து பள்ளிப் பிள்ளைகளுக்காகப் பாடி யதுபோல் உளது. நல்வழிப் பாடலும் அது போன்றதே.



வாக்கு உண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்கு உண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்புஆர் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

வாக்கு, நல்லமனம், செல்வம் தரும் திருமகளின் நோக்கு (பார்வை) யாவும் கிடைக்குமாம். உடம்பு சோம்பற்படாது, பூக்கொண்டு பிள்ளையாரை வணங்குப வர்களுக்கு (துப்பு – பவளம்) எல்லா நலமும் கிடைக்கும் என்பது கருத்து. நல்வழிப் பாடல் மேலும் சிறப்புடன் உளது.

பாலும் தெளிதேனும்
பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு
நான்தருவேன் – கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத்
தூமணியே! நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா!

பிள்ளைகள் இப் பிள்ளையார் வணக்கத் தைப் படித்தா .் தமிழறிவு தானாக வரும்

இப் பாடலில் உள்ள நயங்கள் பல. ஒருவரிடம் ஓர் உதவியை வேண்டும்போது, அவரைப் பாராட்டி ஓரிரு வார்த்தை சொல்லி விட்டுத் தொடங்கினால் காரிய வெற்றி நிச்சயமாகும். ஊரார் உங்கள் பெருந்தன்மையை மெச்சுகிறார் என்று பலப்பல கூறிவிட்டு, நன்கொடைச் சீட்டை நீட்டினால், பெருந்தொகை எழுதப்படக்கூடும், துங்கக் கரிமுகத்துத் தூ மணியே! (சிறந்த அழகிய யானை முகமுடைய தூய மாணிக்கமே) என்றால், பிள்ளையார் திரும்பிப் பார்க்காமல் இருப்பாரா? தும்பிக்கை முகத்தை யார் இவ்வளவு பாராட்டப் போகிறார் கள்?

நான் தருவேன் ஏதோ மிகப் பெரிய பரிசு தரப்போவது போல் அல்லவா இது தொனிக் கிறது?

என்னென்ன அவை? பால், தெளிதேன், வெல்லப் பாகு, பருப்பு எல்லாம் இனிப்பு ஔவையார் 'பேரம்' பேசுவதில் வல்லவராகத் தோன்றுகிறார் நாம் கூடுதலாக விலை கொடுத்து வாங்கியதைச் சிலர் சாதுரியமாகப் பேசிக் குறைந்த விலைக்கு வாங்கிவிடுவார்கள்.

ஔவையார், 'நான் நான்கு பொருள் தருகிறேன் நீ மூன்று பொருள் தந்தால் போதும்' என்று கூறுகிறார். எண்ணிக்கையைப் பார்த் தால், ஔவையார் கொடுப்பது தான் கூடுதல். ஆனால் கேட்பது, 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்பது இயல்தமிழ் (இலக்கியம்), இசைத்தமிழ், நாடகத்தமிழ் – எவ்வளவு சிறந்த பெரிய அரிய பொருள்கள். ' அப்பமொடு அவல் பொரி கப்பிய கரி முருகனிடம் பால் தேன் போன்றவற்றைச் சொல்லி தமக்குத் தமிழைக் கேட்ட ஔவை யாரின் இப் பாடலைப் படிக்கும் ஒவ்வொருவரும். அக்கடவுளிடம் தமிழைப் பெற்றுக் கற்றுத் தெளிவரென்பது உறுதி. ஒருவருக்குப் பிடித்த மானதைக் கொடுத்து நமக்கு வேண்டியதைப் பெறுவது போன்றது இது. பிள்ளையார்க்கு மிகப் பிடித்தமானவை அப்பம், அவல், பொரி, மோதகம், பால், தேன் போன்ற எளிய பொருள்களே. எளி யவையாயினும் அவர் விரும்புவன, அதனால் நாம் கேட்பது கிடைப்பது உறுதி.



**மக்கள் போற்றும் பிள்ளையார்**

எங்கு நோக்கினும் ஊர்த்தெரு, நெடுஞ் சாலைகள், சந்து, மன்றம், மரத்தடி தோறும் பிள்ளையார் இருப்பதால் ஏழைகளும் எளியோ ரும் தொட்டு வணங்கும் கடவுளாக இவருள் ளார். அவரை எளிதில் நெருங்க முடிகிறது!

மக்கள் இவர்மீது வைத்திருக்கும் அன்பை, அவருக்குச் சூட்டியிருக்கும் ஆயிரக் கணக்கான பெயர்களைக் கொண்டு அறியலாம்.

வழிவிடும் பிள்ளையார், வெயிலுகந்த பிள்ளையார், வரசித்தி விநாயகர், கற்பகப் பிள்ளையார், துணைவந்த விநாயகர், உச்சிப் பிள்ளையார் (திருச்சி), பணக்காரப் பிள்ளையார் (காரைக்குடி), கடுக்காய் விநாயகர், கூப்பிடு பிள்ளையார், முக்குறுணிப் பிள்ளையார், பொல்லாப் பிள்ளையார், வலம்புரி விநாயகர், மாற்றுரைத்த விநாயகர், சாலக்கிராம வினாயகர், சித்தி விநாயகர், மாணிக்க விநாயகர், பால கணபதி இவ்வாறு ஒரு கலைக் களஞ்சியம் தொகுக்குமளவு சண்பக விநாயகர் விளங்குகிறார். இவை தனியே தொகுத்து ஆராயத் தக்கன. மக்களுடன் நெருங்கிய உறவுடைய கடவுளர்கள் முருகனாம் தண்டாயுதபாணியும் பிள்ளையாருமே எனலாம்.

**குறிப்புகள்**

1. முனைவர் தமிழண்ணல் விநாயகரை விநாயகரென்றும் செண்பகத்தை சண்பகமென்றும் பழைய முறையில் எழுதுவதே சிறப்பு எனக் கருதுபவர் 'னா' வைப் பயன்படுத்தினால் தான் 'வினை' என்ற வேர்ச் சொல்லோடு தொடர்புபடுத்தி நினைக்க ஏதுவாகும் என்று சொல்கிறார்.

சண்பகத்தில் 'ச' வை 'செ' ஆக எழுதுவதில் பொருள் மாறாததால் தவறேதுமில்லையெனினும் அகரத்தை எகரமாக மாற்றி எழுதும் பழக்கம் தண்டாயுதபாணியை தொண்டாயுத பாணி என்று விபரீதமாகப் பொருள் மாறும்படி எழுதவைத்து விடும் என்பதால் அதைத் தவிர்க்க வேண்டு மென்கிறார்.

2. உன்னிய – நினைந்த

3. நவ – புதுமையான ; சந்தி – தெருககள் சந்திக்குமிடம்

4. அக்கரப் பொருள் – அகரத்தின் பொருள், முதல்வனாவது

5. மழு – மழு ஆயுதம், சூலம்

6. ஞயம் – நயம், நன்மை

7. விக்கினம் இடம்பட – துன்பம் விலக

8. இயங்கிய – அசைகின்ற



9. அரவ – ஓசையிடுகின்ற

10. இலவம் – மரக் கொம்பு

11. இறகு – மயிற்பீலி

12. அனந்தல் – முடிவு முதலிலிருந்து முடிவுவரை உனைத்தொழ அருள் செய்

(மறு பிரசுரம்)

மண்ணுலகத்தினிற்பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்றுமாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.



# கணபதி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

மு. நளினி – இரா கலைக்கோவன்

தமிழர் வாழும் இடமெல்லாம் இன்று தழைத்துப் பெருகியிருக்கும் கணபதி வழிபாடு, தமிழ்நாட்டில் எந்தக் காலத்தில் தோன்றிய தென்பது குறித்துப் பல ஆய்வுகள் நிகழ்ந் துள்ளன. எனினும் அவற்றுள் எந்த ஆய்வும் திடமான முடிவுகளை முன்வைக்காமை பெருங் குறையே.

தமிழர் வரலாறு போதுமான சான்று களைக் கொண்டு தொடங்குவது சங்க காலத்தி லிருந்துதான். கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலி ருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டுவரை செழித்திருந்த இச்சங்க காலத் தமிழர் வரலாற்றைத் தெளிவுற அறிய இலக்கியங்களும், கல்வெட்டுகளும் அகழ்வாய்வுச் சான்றுகளும் நன்கு உதவுகின்றன. இக்காலகட்டத் தமிழர் சமய வரலாறு. பல்துறை அறிஞர்களால் தொகுக்கப் பெற்றுள்ளது. சேயோன் (முருகன்), மாயோன் (திருமால்), இந்திரன், வருணன், பழையோள் (கொற்றவை), முக்கண்ணன் (சிவபெருமான்), பலராமன் எனத் தமிழர் வழிபட்ட தெய்வங்களைச் சங்க இலக்கியங்கள் பல பாக்களால் அறிமுகப் படுத்துகின்றன. சங்க இலக்கியங்களுள் காலத்தால் பிற்பட்டதாகக் கருதப்படும் கலித்தொகை, பரிபாடல் ஆகிய இரண்டும் இறை சார்ந்த பல தொன்மங்களை விளக்குகின்றன. சங்க காலத்திற்குச் சற்று முற்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொல் காப்பியமும் தமிழர் வழிபாட்டுச் சிந்தனைகளை முன்வைக்கிறது. இவ்விலக்கியங்களுள் ஒன்றுகூட, மறை பொருளாகவேனும், பிள்ளை யார் வழிபாட்டைப் பற்றியாண்டும் குறிப்பிடாமை நினைவு கொள்ளத்தக்கது.

"நல்லவுந் தீயவும் அல்ல குவியிணர்ப் புல்லிலை எருக்கமாயினும் உடையவை கடவுள் பேணேம் என்னா" என்னும் புறநானூற்றுப் பாடலடி (புறம் 106) கொண்டு, அதன் பொருளை யுணர்ந்தும் உணரார் போல் சிலர் சங்க காலத்தில் பிள்ளையார் வழிபாடிருந்ததாகக் கூறுவது பிழையாகும். நல்லதென்றும் தீயதென் றும், வகைப்படுத்த இயலாத எருக்கம்பூ தரினும் தெய்வங்கள் அவற்றை மறுப்பதில்லை எனும் பொருளமைந்து இப்பாடல் தெய்வங்களின் சார்பற்ற தன்மையைச் சுட்டுகிறதே தவிர பிள்ளையார் வழிபாட்டை அல்ல. எருக்கம்பூ, சிவபெருமானால் விரும்பிச் சூடிக் கொள்ளப் பட்ட பூவாக அப்பர் பெருமானால் சுட்டப்படு வது நோக்க, பின்னாளிலேயே இது பிள்ளை யாருக்கு உகந்த பூவாக மாற்றப்பட்டமை

தெளிவாகும். எவ்வித அடிப்படைச் சுட்டலும் இல்லாத இப்பாடலடி கொண்டு பிள்ளையார் வழிபாடு சங்க காலந்தொட்டே இருந்தது எனக் கூறுவார் கூற்று எவ்விதத்தாலும் உண்மையா காமை கண்கூடு.

தமிழ்நாடு முழுவதுமாய் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாய்வுகள் இக்காலகட்டச் சான்று களைப் பலவாய்த் தந்திருந்தாலும். பிள்ளையார் வழிபாட்டைக் குறிக்கும் எத்தகு அடையாளங் களையும் இன்றுவரை தரவில்லை. தமிழ்நாட்டின் இயற்கைக் குகைத்தளங்களில் காணப்படும் இக்காலகட்டத் தமிழ்க் கல்வெட்டுகளும் இது குறித்து மௌனமாகவே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க காலத்தையடுத்தமைந்த மூன்று நூற்றாண்டுகளில் (கி.பி 200 – கி.ப 500) தமிழ்நாடு தமிழர் கையிலிருந்து மாறிப் பல்லவர் களப்பிரர் வயமாயிற்று. இக்காலகட்ட வரலாற்றையறிய பல்லவர்களின் பிராகிருத வடமொழிச் செப்பேடுகளும் இலக்கியங்களும் உதவுகின்றன. பல்வேறு அறிவியல் பூர்வமான சான்றுகளின் அடிப்படையில் தமிழ்நாடு இலங்கை, ஜப்பான் சார்ந்த அறிஞர் பெருமக்கள் சிலப்பதிகாரம் மணிமேகலை, திருக்குறள் முதலிய இலக்கியங்களை இக்காலகட்டம் சார்ந்தவையென அடையாளப்படுத்தியுள்ளனர். இவ்விலக்கியங்களுள். தமிழ் சமய வரலாறு குறித்த அரிய பல தரவுகளை உள்ளடக்கியிருக் கும் சிலப்பதிகாரம் புகாரிலும் மதுரையிலும் இருந்த இறைக்கோயில்களை வகைப்படுத்தியும் வரிசைப்படுத்தியும் காட்டுகிறது.

பிறவா யாக்கைப் பெரியோன் (சிவபெரு மான்) அறுமுகச் செவ்வேள் (முருகன்), வாலியோன் (பலராமன்), நெடியோன் (திருமால்), இந்திரன், கொற்றவை. கதிரவன் எனப் பல்வேறு முதன்மைத் தெய்வங்களைச் சுட்டும் சிலப்பதி காரம் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம், வேற்கோட்டம், வச்சிரக்கோட்டம் என இறை சார்ந்தவற்றிற்கமைந்த கோயில்களையும் காட்டுகிறது. சிறு தெய்வ வணக்கம் பற்றியும் விரித்துரைக்கும் இவ்விலக்கியத்தில் பேரூர் சார்ந்தோ சிற்றூர் சார்ந்தோ எவ்விடத்தும் பிள்ளையார் வழிபாடு பேசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தைச் சேர்ந்த தாகக் கருதப்படும் பூலாங் குறிச்சிக் கல்வெட்டு கோயில்களைப் பற்றியும் இறைவழிபாடு பற்றியும் கூறினாலும் பிள்ளையார் பற்றிய குறிப்புக்களைக் கொண்டிருக்காமை கருதத்தக்கது.



பிள்ளையாரை முதன் முதலாக அறிமுகப் படுத்தும் இலக்கியங்கள் அப்பர். சம்பந்தர் திருமுறைகளே இந்த ஆறு திருமுறைகளிலும் அப்பரும் சம்பந்தரும் பிள்ளையாரைப் பற்றி மிகக் குறைவான இடங்களிலேயே குறிப்புத் தருகின் றனர். இப்பெருமக்களின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கமென அறிஞர் கொள் வர். இக்குறிப்புகளால். பிள்ளையார் சிவபெருமா னால் தோற்றுவிக்கப்பட்டவரென்பதையும் கயாசுரனைப் போரில் வென்றவரென்பதையும் அறியமுடிவதுடன் அவரது தோற்றம் பற்றிய வர்ணனைகளையும் ஓரளவிற்குப் பெறமுடி கிறது.

உமை பெண் யானையின் வடிவம் கொள்ள, சிவபெருமான் ஆண் யானையின்

வடிவம் கொண்டு இணைந்ததன் பயனாய்ப் பிறந்தவர் பிள்ளையார் என்பதை இரண்டு பதிகங்களால் விளக்குகிறார் சம்பந்தர். தம்மை வழிபடும் அடியவர்தம் இடர்களைத் தீர்ப்பதற்காக இறைவன் அருளிய கொடையே கணபதி என்று பிள்ளையாரின் பிறப்பிற்குக் காரணம் காட்டும் சம்பந்தர் (சம். 1 : 123 :5. 126 :6) "தந்த மதத்தவன் தாதை" (1:11 5:2) "மருப்புறுவன் தாதை" (1.117:8) "கரியின் மாமுகமுடைய கணபதி தாதை" (2:232:3) என்று சிவபெருமானைச் சிறப்புச் செய்யுமாறு பிள்ளையாரின் தோற்றம் காட்டுகிறார்.

நாவுக்கரசர் சம்பந்தரின் கூற்றைக் "கைவேழ முகத்தவனைப் படைத்தார்." (6:74:7) "கணபதி என்னும் களிறு" (4:2:5) எனும் பல்வேறு தொடர்களால் உறுதிப்படுத்துகிறார். கயாசுரனைக் கொல்லச் சிவபெருமான் பிள்ளையாரைப் பயன்படுத்திக் கொண்ட தகவலைத் தரும் நாவுக்கரசர். அதற்காகவே பிள்ளையார் பிறப்பிக்கப்பட்டாரெனக் கருதுமாறு பாடலமைத்துள்ளார் (6:53:4).

முருகப்பெருமானைப் பற்றி நாற்பத்தேழிடங்களில விதந்தோதும் இவ்விரு சமயக் குரவரும், பிள்ளையாரைப் பற்றி மிகக் குறைவான அளவிலேயே குறிப்புகள் தந்திருப்பதை நோக்க. இவர்தம் காலத்திற்குச் சற்று முன்னதாகவே பிள்ளையார் வழிபாடு தமிழ்நாட்டில் கால்கோள் கொண்டதாகக் கருதலாம்.

தமிழ்நாட்டில் இன்றைக்கும் காணப்படும் இறை கோயில்களுள் காலத்தால் பழமையானவை குடைவரைகளே. குன்றுகளைக் குடைந்தும். பாறைகளைச் செதுக்கியும் இத்தகு குடைவரைகள் அமைக்கப்பட்டன. வடதமிழ் நாட்டில் இத்திருப்பணியைத் தொடங்கியவர் பல்லவப் பேரரசரான முதலாம் மகேந்திரவர்மர். இவர் காலத்தனவாகக் கொள்ளத்தக்க குடைவரைகள் எவற்றிலும் பிள்ளையார் சிற்பம் இடம்பெறவில்லை. திருக்கழுக்குன்றத்தில் உள்ள ஒருகல் மண்டபம் முதலாம் நரசிம்மவர்மரின் திருப்பணியாகக் கருதப்படுகிறது. இதிலும் பிள்ளையாரின் வடிவமில்லை. இராஜசிம்மரின் குடைவரைகளிலும் பிள்ளையாரின் சிற்பம் இறைவடிவமாகக் காட்டப்படவில்லை என்றாலும் மாமல்லபுரம் இராமாநுசர் குடைவரையின் கணவரியில் பிள்ளையார் இடம்பெற்றுள்ளார். இராஜசிம்மர் காலப் பணியாகக் கருதப்படும் மாமல்லபுரம் தருமராஜர் ரதத்தின் கணவரியிலும் பிள்ளையார் எனக் கொள்ளத் தக்க வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. இராஜ சிம்மரின் கற்றளிகளில் பிள்ளையார்



கூடுகளிலும் கோட்டங்களிலும் இடம்பெறத் தொடங்குகிறார். சிராப்பள்ளியிலுள்ள கீழ்க் குடைவரை, சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பட்டூர்க் கயிலாசநாதர் கோயில். செங்கற்பட்டு மாவட்டம் வல்லத்திலுள்ள கந்தசேனரின் குடைவரை ஆகியவற்றில் பிள்ளையார் கோட்டத் தெய்வமாகக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கால கட்டத்தைக் கி.பி எட்டாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியாகக் கொள்ளலாம். இதனால் வடதமிழ்நாட்டு இறைக் கோயில்களில் பிள்ளையாரின் சிற்பங்கள் சம்பந்தர், அப்பர் காலத்திற்கு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டிற்குப் பிறகே இடம்பெறத் தொடங்கியமை தெளியப்படும்.

தென் தமிழ்நாட்டில் பாண்டியர், முத்தரையர் கைவண்ணமாகப் பிறந்த குடைவரைகள் பலவற்றில் பிள்ளையாரின் சிற்பம் காணப்படுகிறது. இவற்றுள் குறிப்பிடத்தக்கது பிள்ளையார் பட்டி. இங்குள்ள பிள்ளையார் இன்றைக்கு முதன்மைத் தெய்வமாக வழிபடப்பட்டாலும், உருவான காலத்தில் சிவன் கோயிலின் பக்கச் சுவரில் கோட்டத் தெய்வமாகச் செதுக்கப்பட்டவரே ஆவார். இக்குடைவரையில் இடம் பெற்றுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு. "எக்காட்டுருக்கோன் பெருந்தசன்" எனும் பெயரைத் தருகிறது. இக்கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இதை ஆறாம் நூற்றாண்டென்பர் அறிஞர்கள். இக்கருத்து ஏற்புடையதாயின் பிள்ளையார் பட்டிக் குடைவரையின் காலமும் ஆறாம் நூற்றாண்டாகிவிடும். எனில், தமிழ்நாட்டின் காலத்தால் முற்பட்ட பிள்ளையார் சிற்பமாகப் பிள்ளையார்பட்டிக் குடைவரைப் பிள்ளையாரையே கொள்ள வேண்டிவரும். குடைவரையின் அமைப்பு, சிற்பங்களின் செதுக்கு நேர்த்தி கொண்டு இக்குடைவரையின் காலத்தை ஏழாம் நூற்றாண்டாகக் கொள்வாரும் உண்டு. இரண்டில் எதை ஏற்பினும் இப்பிள்யைாரே தமிழ்நாட்டின் காலத்தால் முற்பட்ட பிள்ளையார் என்பதில் ஐயமில்லை. திருமலைப்புரம். செவல்பட்டி. தேவர்மலை. அரிட்டாபட்டி. மலையக் கோயில். திருப்பரங் குன்றம், மலையடிப்பட்டி, குன்றக்குடி, கோகர்ணம் முதலிய பல பாண்டியர், முத்தரையர் குடைவரைகளில் பிள்ளையார் சிற்பம் இடம் பெற்றுள்ளமையை நோக்க, தமிழ்நாட்டில் பிள்ளையார் வழிபாடு காலூன்றிய இடமாகப் பாண்டியமண்ணையே கொள்ள வேண்டியுள்ளது. கி.பி ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளில் சிராப்பள்ளிக்குத் தெற்கே காலூன்றிப் பரவிய இப்பிள்ளையார் வழிபாடு எட்டாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் தான் வடதமிழ் நாட்டிற்குள் குடிபுகுந்தது எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகும் தமிழ்நாட்டுச் சமய வரலாற்றில் முருகப்பெருமானுக்குக் கிடைத்த இடம் பிள்ளையாருக்குக் கிடைக்கவில்லை. என்பதே உண்மை.

பல்லவர், பாண்டியர், முத்தரையர் குடைவரைகளில் கோட்டத் தெய்வமாக இடம்பெற்ற பிள்யைார், தொடக்கக் காலப் பல்லவக் கற்களில் ஆங்காங்கே இடம் பெற்றாலும் தொடர்ந்த கற்றளிகளில்தான் உள்மண்டபத் தென் கோட்டத் தெய்வமாக நிலைபெற்றார். இந்நிலை பேறு சோழர் காலத்தில் உறுதியாக்கப்பட்டது.

சோழர் காலக் கற்றளிகளின் திருச்சுற்றில் சுற்றாலைக் கோயில்கள் உருவானபோது எண்பரிவாரத்துள் ஒன்றாகப் பிள்ளையாருக்கும் இடம் கிடைத்தது. திருச்சுற்றின் தென்



மேற்கு மூலை பிள்ளையாருக்கு உகந்த இடமாக ஒதுக்கப்பட்டு அவர்க்கெனத் தனித்திருமுன் அமைக்கப்பட்டது. இத்தகு பிள்ளையார் திருமுன்களைச் சோழர் கற்றளிகளிலும் பின்னால் வந்த பிறமரபுப் பேரரசுக் காலக் கற்றளிலும் இன்றும் காணலாம்.

கோட்டத் தெய்வமாகவோ, சுற்றாளைத் தெய்வமாகவோ மட்டுமே அமைந்த பிள்ளையாருக்குத் தனிக்கோயிலமைக்கும் பழக்கம் மிகப் பிற்பட்ட காலத்திலேயே ஏற்பட்டது. தமிழ்நாட்டுக் கோயில்களில் கிடைக்கும் பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுகளும் இதையே உறுதி செய்கின்றன.

(மறு பிரசுரம்)



# திருமுறை தந்த விநாயகர்

சுப திண்ணப்பன்

திருமுறை என்னும் தொடர் தெய்வத் தன்மை வாய்ந்த நூல்களைக் குறிக்கும். சைவ சமயத்தவர்க்கு வேதம் போல விளங்குவன திருமுறைகளே ஆகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடிய தேவாரப் பாடல்களும், மாணிக்கவாசகர் பாடிய திருவாச கப் பாடல்களும் திருக்கோவையாரும், சேந்த னார் முதலிய ஒன்பது பேர் பாடிய திரு இசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களும், திருமூலர் இயற்றிய திருமந்திரமும், திருவாலவாயுடையார் முதல் நம்பி ஆண்டார் நம்பி ஈறாகப் பாடிய பாடல்களும், சேக்கிழர் இயற்றிய பெரிய புராணமும் திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றன. இவற்றைத் தொகுத்துத் தந்தவர் நம்பி ஆண்டார் நம்பி என்பர். திருமுறைகள் பகுப்பால பன்னிரண்டு. இயற்றியவர் எண்ணிக்கை இருபத்தேழு. இத்திருமுறைகள் சிவபெரு மானை முழுமுதற் பொருளாகக் கொண்டு பாடப் பெற்றவை. இத்திருமுறை ஆசிரியர்கள் அனை வரும் இறைவனின் திருவருளைப் பெற வழி காட்டியவர்கள். அத்தகைய வழிகாட்டிய அரு மறைகளே திரு முறைகள். இவை தமிழில் பக்தி இலக்கியம் தழைக்க வழிவகுத்தன. இத்தகைய திருமுறைகளுக்கும் விநாயகப் பெருமானுக்கும் இருக்கும் தொடர்பினைத் திருமுறை தந்த விநாயகர் என்னும் தலைப்பில் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

திருமுறை தந்த விநாயகர் என்னும் தலைப்பினை இரண்டு வகையாக நோக்கலாம். திருமுறைகளைத் தந்த விநாகர் என்பது ஒரு வகை நோக்கு; திருமுறைகள் தந்த விநாயகர் என்பது மற்றொரு வகை நோக்கு. முதல் நோக் கில் திருமுறைகள் வெளிப்பட – உலகுக்குக் கிடைக்க காரணமாக இருந்த விநாயகரைப் பற்றி விளக்கப்படும். இரண்டாம் நோக்கில் திருமுறைகள் காட்டும்–விவரிக்கும் விநாய கரைப் பற்றிய செய்திகள் இடம்பெறும்.

திருமுறைகள் எழுதப்பெற்ற ஏட்டுச் சுவடிகள் எவ்வாறு கிடைத்தன? அவை எவ் வாறு தொகுக்கப்பெற்றன? என்பதைத் திரு முறை கண்ட புராணம் என்னும் நூல் தெளிவாக விளக்குகின்றது. அதனை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார் எனக் கூறுவது மரபு. இதன்வழி விநாயகர் திருமுறைகளை வெளிக்கொணர் வதற்கு எவ்வாறு காரணமாக இருந்தார் என்பதைக் காண்போம். சோழப் பேரரசன் இராச ராசன் ஒரு நாள் திருவாரூர்த் தியாகேசரை வணங்கிக் கொண்டிருந்த போது சைவ அன்பர்

சிலர் தேவாரப் பதிகம் ஒன்றைப் பாடக்கேட்டுக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நின்றான். அந்நாள் முதலாகத் தேவாரப் பாடல்களைத் தேடித் தொகுக்க வேண்டும் என்னும் முயற்சி யில் ஈடுபட்டான். அப்போது திருநாரையூரில் உள்ள பொல்லாப் பிள்ளையார் என்னும் விநாய கப் பெருமானுக்குப் பூசை செய்யும் மரபில் தோன் றிய நம்பியாண்டார் நம்பி என்னும் சிறுவனைப் பற்றிக் கேள்விப்பட்டான். அச்சிறுவன் தன் தந்தையார் வெளியூர் சென்றிருந்தபோது விநாயகருக்குப் பூசை செய்தான்.அப்போது அவன் வைத்த அமுதினை (நிவேத்யத்தை) பொல்லாப் பிள்ளையாராகிய விநாயகப் பெரு மான் உண்ணாதிருக்கக் கண்டு வருந்தித் தன் தலையைக் கல்லில் மோதப் போனான். உடனே பொல்லாப் பிள்ளையார் தோன்றித் தடுத்து அமுது உண்டார். அவர் அருளால் வேதம் முதல் பல கலைகளைக் கற்றறிந்தான். இந்த அதிச யத்தை அறிந்த சோழப் பேரரசன் இராசராசன் தானும் அளவிலாத பொருள்களைத் திரு நாரையூர் பொல்லாப் பிள்ளையா ருக்குப் படைக் கத் திருநாரையூர் வந்து வணங்கி நின்றான். நம்பியின் வேண்டுதலுக்கு இணங்கி அரசன் அளித்த பொருள்களையும் பொல்லாப் பிள்ளை யாா அமுது செய்து அருளினாா. இந்த அதிசயத தைப் பார்த்த அரசன் விநாயகரிடம் மூவர் தேவாரப் பாடல்கள் இருக்கும் இடம் கேட்டறிந்து சொல்ல வேண்டும் என நம்பியிடம் வேண்டி னான். அதற் கேற்ப நம்பியும் பொல்லாப் பிள்ளை யாரை வேண்டி வழிபட்டார்.

நம்பியின் வழிபாட்டுக்கு இரங்கிய பொல்லாப் பிள்ளையார் தேவாரத் திருமுறைப் பாடல்கள் உள்ள ஏட்டுச் சுவடிகள் சிதம்பரத்தில் நடராசப் பெருமான் திருக்கோயிலில் ஓர் அறை யில் கைகள் அடையாளமிட்டு வைக்கப்பட் டுள்ளதாக நம்பிக்குக் கூறி அருளினர். மேலும் அவற்றை இயற்றிய அன்பர் பெருமைகளை எடுத்து உரைத்தார். பிறகு நம்பி இவற்றை அரசனுக்கு எடுத்துக் கூற முற்பட்டார். சிவபெருமான் அருளிச் செய்த மந்திரங்களே திருமுறைகள். இப்பாடல்களை ஞான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் வாயிலாகத் தேவாரமாக இறைவன் வெளிப்படுத்தினான் என்றும் இவை ஆயிரக் கணக்கான பாடல்கள் என்றும் நம்பி அரசனுக்குக் கூறினார். பிறகு அரசன் இத் தகைய செய்திகளை நம்பிக்கு அருளிச் செய்த பொல்லாப் பிள்ளையாரின் பெருங் கருணைத் திறத்தைக் கண்டு வியந்து நின்றான். பிறகு தில்லைக்கு – சிதம்பரத்துக்குச் சென்று அந்தணர்களிடம் முறையிட்டுத் திரு முறைகள் இருந்த அறையைத் திறந் து பார்த்தான். அங்கே ஏடுக ளைக் கறையான் அரித்திருக்கக் கண்டு கவலையுற்றான். எஞ்சிய பாடல்களைக் கொண்ட ஏட்டுச் சுவடிகளை நம்பியிடம் கொடுத்து அவற்றைப் பகுத்து முறையாகத் தொகுக்கச் சொன்னான். அதற்கேற்ப நம்பியும் "தோடுடைய செவியன் முதல் தொடங்கிக் "கல்லூர்ப் பெருமணம் "என முடியும் பாடல்கள் வரையுள்ள ஞானசம்பந்தர் பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாகவும். "கூற்றாயின வாறு" எனத் தொடங்கி "ஒருமானைத் தரிக் கும்" என முடியும். திருநாவுக்கரசர் பாடல்களை 4,5,6 திருமுறைகளாகவும் "பித்தா பிறை சூடி" எனத் தொடங்கி "ஊழிதோறும்" என முடியும் சுந்தரர் பாடல்களை ஏழாம் திருமுறையாகவும் தொகுத்தருளினார். இவ்வாறே பின்னர்



திருவாசகம். திருக்கோவையார் எட்டாம் திருமுறையாகவும், திருவிசைப்பா திருப்பல் லாண்டு ஒன்பதாம் திருமுறையாகவும். திரு மந்திரம் பத்தாம் திருமுறையாகவும் திருவால வாயுடையார் முதல் நம்பி ஆண்டார் நம்பி முடியப் பதினொருவரின் பாடல்கள் பதினோராம் திரு முறையாகவும், சேக்கிழாரின் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் தொகுக்கப் பெற்றன. எனவே திருமுறை கண்ட புராணம் கூறும் வரலாற்றின் அடிப்படையில் பார்த்தால் திருமுறைகளை உலகிற்குத் தந்தவர். அதாவது தில்லையில் பூட்டி வைக்கப்பெற்ற திருமுறைச் சுவடிகளைக் காட்டி உலகிற்கு வெளிப்படுத்தி யவர் பொல்லாப் பிள்ளையார் ஆகிய விநாயகப் பெருமானே என்னும் கருத்துத் தெரியவரும். எனவேதான் இன்னும் சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலில் மேற்கு வாசற் படிக்கட் டுக்கு எதிரில் "திருமுறை காட்டிய விநாயகர்" திருவுருவச் சிலை இருப்பதைப் பார்க்கலாம்.

இனித் திருமுறைகள் விளக்கும் விநாய கப்பெருமானின் சிறப்புகளைப் பார்ப்போம். முதல் ஏழு திருமுறைகளாகிய தேவாரத்தில் விநாயகப் பெருமானுக்குரிய இடம் யாது என்பதை முதலில் காணலாம். தேவாரம் இயற்றிய ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் சிவபெருமானைத் தவிர வேறு தெய்வத்தை வணங்கும் இயல்பினர் அல்லர். எனவே சிவபெருமானோடு தொடர்பு படுத்தியே விநாயகரைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகின்ற னர்.

ஞானசம்பந்தர் பின்வரும் தேவாரப் பாடலில் விநாயகப் பெருமானின் தோற்றத்தைப் பற்றிக் கூறுகின்றார்.

பிடியதன் உரு உமைகொள, மிகு கரியது
வடி கொடு தனது அடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலி வலம் உறை இறையே.

இப்பாடலில், உமை அம்மையார் பெண் யானை வடிவம் கொள்ளவும், சிவபெருமான் ஆண் யானை வடிவம் கொண்டு தன்னை வணங்கும் அடியவர்களின் துன்பத்தைப் போக்க விநாயகப் பெருமானைத் தோற்றுவித்தார் என்னும் கருத்தை ஞானசம்பந்தர் கூறுகிறார். விநாயகப் பெருமானை இங்கு கணபதி என அழைப்பதால் அவர் தேவகணம், பூதகணம், மனிதகணம் முதலிய எல்லாக் கூட்டத்தினருக் கும் பதி – அதாவது தலைவர் என்னும் செய்தியும் தெரிகிறது. இதே கருத்தை "நீள் கோதைத் தெரியிழை பிடியது வாய். புகர்முக



இறையைப் பெற்றிட்டே" என்று கூறி வலியுறுத் துகிறார். மேலும் இப்பாடலில் விநாயகரைச் சிவபெருமான் தோற்றுவித்ததன் நோக்கமே உலகிலுள்ளோர் துயரத்தையும் பிறவி நோயை யும் போக்குவது தான் என்று கூறுகிறார்.

"புகர்முக இறையைப் பெற்றிட்டே, மற்று இப்பார் பெருத்து மிக்க துக்கமும் பேரா நோய்தாம் மேயாமைப் பிரிவு செய்தவன்" என்னும் இப்பாடல் அடி இதனைக் காட்டும். புகர்முக இறை என்னும் தொடர் யானை முகத் தோன் விநாயகன் என்பதைக் கூறும். "கரியின் மாமுகம் உடைய கணபதி" என்றும் ஒரு பாடலில்

சம்பந்தர் குறிப்பிடுகிறார். "ஒற்றைச் சேர் கொம்புடையான்" "முற்றற் கொம்புடையான்" "மருப்புருவன்" என்றெல்லாம் விநாயகப் பெருமானின் தந்தம் பேசப்படுகிறது. அவரின் முக்கண், தடக்கை பற்றிய குறிப்புகளும் உள்ளன. சிவபெருமானைக் "கணபதி தாதை" என்றும் மூன்று பாடல்களில் சம்பந்தர் குறிப்பிடு கின்றார். எனவே ஞானசம்பந்தர் தேவாரத்தில் விநாயகர் தோற்றம் இடர்களையும் இயல்பு, வேழ முகம், முக்கண், தடக்கை கொண்ட உருவம் ஆகியவை இடம்பெற்றிருக்கக் காணலாம். தமிழ் இலக்கியத்தில் ஞானசம்பந்தர் தேவாரத் தில் தான் விநாயகரைப் பற்றிய குறிப்பு முதல் முதலாக வருகிறது என்பதை மையமாகக் கொண்டு ஞானசம்பந்தர் காலமாகிய கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பிறகு தான் தமிழ் நாட்டில் விநாயகர் வழிபாடு தோன்றியதாக அறிஞர் கருவர்.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் விநாயகர் "ஆனை முகன்" "கடமா முகத்தினான்" "கணபதி" "வாரணன்" "விக்கின விநாயகன்" "விநாயகன்" "வேழமுகத்தவன்" என்னும் திருப் பெயர்களால் குறிக்கப் பெறுகிறார். கடமா என்பதும் யானையைத் தறிக்கும். இடர் கடி கணபதி என்பதையே இவர் விக்கின விநாயகன் என்று கூறுகிறார். வாரணம் என்பதும் யானை யைக் குறிக்கும் சொல்லே. விநாயகன் என்னும் திருப்பெயர் சிறப்புமிக்க தலைவன் – தன் ஒப்பார் இல்லாத தலைவன் என்பதை உணர்த் தும், இச்சொல்லைத் தமிழ் இலக்கியத்தில் முதல் முதல் கையாண்டவர் நாவுக்கரசரே மேலும் திருவாய்மூரில் சிவபெருமான் காட்சி தந்த போது "விநாயகனும் தோன்றக் கண்டேன்" என்று நாவுக்கரசர் குறிப்பிடுவதை நோக்கும் போது விநாயகப் பெருமான் திருக்காட்சியை முதன் முதல் கண்டு நமக்குக் காட்டியவரும் நாவுக்கரசரே எனக் கூறலாம். "விநாயகனும் போற்றிசைப்ப" என்று இன்னொரு பாடலிலும் இதனை வலியுறுத்துகிறார். அவர் மேலும், "ஆனை முகற்கு அப்பன்" என்றும் "தண்கடமா முகத்தினாற்குத் தாதை காண்" என்றும் சிவபெருமானை அவர் அழைக்கிறார். "கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும் கயாசுரனை அவனால் கொல்வித்தார் போலும்" என்னும் பாடல் அடியின் வாயிலாகச் சிவபெருமான் விநாயகனைப் படைத்துக் கயாசுரனை அழித்த வரலாற்றை நாவுக்கரசர் கூறுகிறார். இது ஒரு புதுச்செய்தி. கயாசுரனை விநாயகப் பெருமான் அழித்த கதை தோன்ற இந்த அடிகளே காரணமாக அமைந்தன போலும், இன்னொரு செய்தியும் இவர் கூறுகிறார். "பல பல காமத்தராகிப் பதைத்து எழுவார் மனதுள்ளே கல



மலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறு" என்னும் அடிகளின் வாயிலாக விநாயகப் பெருமான் பக்தர்கள் ஆசைகளை அகற்றித் தெளிவு தரும் ஞானப் பண்பினர், விருப்பங்களை நிறைவேற்றும் ஆற்றலுடையவர் என்பதை அறிய முடிகிறது.

சுந்தரர் தேவாரத்தில் கணபதியைப் பற்றிய குறிப்பு இரண்டு பாடல்களில் இடம்பெறு கிறது. "எண்ணிலியுண் பெருவயிறன் கணபதி ஒன்றறியான்" "கணபதியேல் வயிறு உதாரி" என்று கணபதியின் தொந்தி வயிற்றினைக் கூறிச் சிவபெருமானுக்கு அடிமை செய்யமாட் டேன் என்று தம் நண்பரிடம் (சிவனிடம்) எள்ளி

நகையாடுகிறார் சுந்தரர். எல்லை கடந்த – எண்ணுக்கு அடங்காத (Infinity) பொருள் களை உள்ளடக்கியவர் விநாயகர் என்பதை அவர் பெருவயிறு காட்டுகிறது. இதனைத் தானே சுந்தரர் நமக்குச் சொல்லாமல் சொல்கி றார்.

எட்டாம் திருமுறையாகிய மாணிக்க வாசகரின் திருவாசகம், திருக்கோவையார் ஆகியவற்றில் விநாயகர் பற்றிய குறிப்பு இல்லை.

ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசை ப்பா, திருப்பல்லாண்டு ஆகியவற்றிலும் விநாய கர் பற்றிய செய்திகள் மிகுதியாக இல்லை. திருமாளிகைத் தேவர் பாடிய திருவிசைப்பா ஒன்றில் சிவபெருமானைக் "குமர விநாயக சனக!" (அதாவது முருகனையும் விநாயகனை யும் தோற்றுவித்தவனே!) என்று அழைக்கும் தொடர் ஒன்று இடம்பெறுகிறது. இவ்வாறே சேந்தனார் பாடிய திருவிடைக் கழித்திரு விசைப்பாவில் முருகனைக் "கணபதி பின் இளங்கிளையே" என்று (விநாயகர் தம்பி முரு கன் என்று) அழைப்பதைப் பார்க்கிறோம்.

பத்தாம் திருமுறையாகிய திருமூலரின் திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

என்னும் கடவுள் வாழ்த்துடன் தொடங்கு கிறது. ஐந்து திருக்கைகளை உடையவர். ஆனை முகத்தை உடையவர். சிவபெருமான் மைந்தர் ஞானத்தின் கொழுந்தாக விளங்குபவர் விநாயகர் என்னும் செய்தியை இப்பாடல் உணர்த்துகிறது. இத்தகையவரை என் மனத்தில் வைத்து வணங்குகிறேன் என்று இப்பாடல் கூறுகிறது. எனவே இதனைத் தியானத்திற்குரிய பாடல் எனச் சொல்லலாம். இந்து மதத்தில் எந்தக் காரியத்திற்கும் – சடங்குக்கும் முதலில் கூறப்படும் "சுக்லாம் பரதம்" என்னும் வடமொழிப் பாடலுக்கேற்ற தமிழ்ப்பாடலாக இதனைக் கூறலாம். இப்பாடல் திருமந்திரத்தில் இடைச்செருகல் எனக் கருதுவாரும் உள்ளனர்.

பதினோராம் திருமுறையில்தான் விநாயகருக்கும் முருகனுக்கும் தனித்தனியாக நூல்கள் இடம் பெற்றுள்ளன. இத் திருமுறையில் இடம்பெற்ற கபில தேவ நாயனார் இயற்றிய மூத்த பிள்ளையார் திரு மும்மணிக்கோவை என்னும் நூலும், நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணி மாலை என்னும் நூலும் விநாயகப் பெரு மானையே முழுமுதற்பொருளாகக் கொண்டு போற்றுகின்றன. விநாயகரின் சிறப்பை எல்லாம் விரிவாகப் பேசுகின்றன. விநாயகர் மூத்த பிள்ளையார், மூத்தநாயனார் என அழைக்கப் பெறுவதை இந்நூல் தலைப்புகள் எடுத்துக் கூறுகின்றன.



கபிலதேவ நாயனார் இயற்றிய நூலில் தான் "திருவாக்கும் செய்கருமம் கைக்கூட்டும்" "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்" ஆகிய புகழ் மிக்க பாடல்கள் இடம்

பெற்றுள்ளன. இவர் விநாயகருக்குத் தனியே நூல் ஒன்று இயற்றி இருந்தாலும் சிவபெருமானுடன் சார்த்தியே விநாயகரைப் பேசுகிறார். சிவபெருமானைப் பற்றி இத்திருமுறையில் இவர் இரண்டு நூல்கள் இயற்றியுள்ளார். இந்த இரட்டை மணிமாலையில் வெண்பா பத்தும், கட்டளைக் கலித்துறை பாடல்கள் பத்தும் ஆக இருபது பாடல்கள் உள்ளன. விநாயகரைப் படைத்தான் என்றும், விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதன் என்றும், விநாயகர் வெவ்வினையை அறுத்து, ஆசையையும் அறுப்பவர் என்றும், விநாயகரை வணங்கியவர்கள் திருமகள் அருள் பெற்றுச் செல்வராய்த் திகழ்வார் என்றும் கபிலதேவ நாயனார் கூறுகிறார். தேவர் வணங்கும் விநாயகர் அப்பம், இடி அவல், எள்ளுருண்டை, வாழை, பலா, மா ஆகிய முக்கனிகள் விரும்பும் பெருவயிறன் என்று இந்நூலில் பேசப்படுகிறார். யானை முகத்தான், சிவன்சேய், மால்மருகன், உமையாள் காதற் புதல்வன், ஒரு கோட்டன், இரு செவியன், முக்கண்ணன், செம்மேனியன் என்றெல்லாம் விநாயகர் இங்கே விவரிக்கப்படுகிறார். விநாயகன், கணபதி என்னும் பெயர்களும் இடம்பெறுகின்றன. பெரும்பாலான பா ல்களில் சிவபெருமானின் புதல்வன் என்னும் செய்தியே உள்ளது.

அதிரா அடிகள் இயற்றிய மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவையில் அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த முப்பது பாடல்கள் விநாயகரைப் பற்றிப் பேசுகின்றன. இப்போது 23 பாடல்களே இந்நூலில் உள்ளன. எஞ்சிய ஏழு பாடல்கள் கிடைக்கவில்லை. "சேவடி யுகளம் அல்லது யாவையும் இலம் இனி இருநிலத்திடையே" என்றும் "எந்தை அல்லது மற்று யாவுள சிந்தை செய்யும் தேவதை நமக்கே" என்றும் வரும் இவர் பாடல் அடிகள் இவர் விநாயகரிடம் கொண்டிருந்த பக்தியை விளக்குகின்றன. கணபதி, போதகம், வேழக்கன்று, துளைக் கடவுள், கும்பக் குழவி என்ற சொற்களால் விநாயகரை இவர் அழைக்கிறார். கணபதியின் விசுவரூபம் பேருரு – அடி முதல் முடிவரை ஒரு பாடலில் அழகாகப் புனையப்படுகிறது. (பா,22) மேலும் கணபதி அரக்கரை வென்றமை, வியாசர் கூறிய பாரதக் கதையை மேரு மலையில் விநாயகர் எழுதிய வரலாறு, சிவபெருமான் திரிபுரம் எரித்தபோது விநாயகர் உதவியது, மாங்கனி பெற முருகன் உலகை வலம் வந்தமை ஆகிய புராணச் செய்திகளை அதிராவடிகள் கூறுவதை இந்நூலில் காண முடிகிறது.



மேலும் உமையம்மை ஈன்ற சேயாகிய விநாயகர் நிலம், மேரு மலை, வானம் எல்லாம் நடுங்கச் சப்பாணி (கை) கொட்டிய செய்தி பற்றியும் (2) ஏழு மலைகள், திக்கு யானைகள் பேர்ந்தாடச் செங்கீரை ஆடிய (மழலை பேசிய) செய்தி பற்றியும் இந்நூல் கூறுகின்றது. முருகன் உலகை வலம் வரத் தந்தையாகிய சிவனை வலம் வந்து மாங்கனி பெற்ற விநாயகர் வரலாற்றை முதன்முதலில் அதிரா அடிகளே கூறுகின்றார். இந்நூலில் இடம் பெற்றுள்ள ஒரு பாடல் வருமாறு.

மொழியின் மறைமுதலே முந்நயனத்து ஏறே
கழிய வரு பொருளே கண்ணே – தெழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலாது ஐயனே சூழாது என் அன்பு

நம்பியாண்டார் நம்பி அருளிய திருநாரையூர் விநாயகர் திரு இரட்டை மணிமாலையில் வெண்பா கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த 20 பாடல்கள் உள்ளன. இவை அந்தாதி முறையில் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலிலும் நாரையூர் என்னும் சொல்லாட்சி வருகிறது. ஏனைய பாடல்களில் கணபதி, ஐங்கரத்தான், சிவக்களிறு. ஒரு கொம்பன், கரிவதனன், முக்கண் அரசு, அத்திமருப்பினன் என்று விநாயகர் அழைக்கப்படுகிறார். மேலும் அடுமருப்பினன், பெருச்சாளி ஊர்தி உடையவன், செந்தீவண்ணன், கையில் மாங்கனி, கொம்பு அண்டம், பாசம், மழு உடையவன் என்று விநாயகர் இயல்புகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. மேலும் இமையவள் (உமை) தான் பெற்ற யானை என்றும், நாரையூர் மன்னும் சிவம் மகன் என்றும், குமரற்கு முன்னவன் என்றும் நம்பி விநாயகரைப் பற்றிக் கூறுகிறார். தந்தையை வணங்கி மாங்கனியைப் பெற்றுக் கொண்டவர் விநாயகர் என்னும் கதைச் செய்தி இரண்டு பாடல்களில் வரக்காணலாம். (3,8) மேலும் விநாயகர் தம் கொம்பொன்றையே படையாகக் கொண்டு கயமுகாசுரனை (யானை முக அசுரனைக்) கொன்ற கதையும் ஒரு பாடலில் வருகிறது "என்னை நினைத்து அடிமை கொண்டு என் இடர் கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான்" நாரையூர் விநாயகப் பெருமான் என்று இந்நூலை நம்பி தொடங்குகிறார்.

இம்மூன்று நூல்களைத் தவிரப் பதினோராம் திருமுறையில் சேரமான் பெருமான் நாயனார் இயற்றிய திருக்கைலாய ஞான உலாவில் வேழ முகத்து விநாயகனை உள்ளுறுத்து மங்கையர் சூழ இறைவன் உலா வந்த செய்தி வருகிறது. பட்டினத்தாரின் திருவிடைமருதூர் மும்மணிக் கோவை என்ற நூலில் பவள மால்வரை போல்பவன். பணைக் கையோன், தாழ்ந்த செவி உடையவன் விநாயகர் என்னும் செய்தி இடம் பெறுகிறது. பக்தர்கள் குறைகளைத் தம் தாழ்ந்த காதுகளால் கேட்டு, அவர்கள் கேட்பனவற்றைத் தம் பெரிய கைகளால் வாரி வழங்குபவர் அல்லவா விநாயகர்? இவை தவிரப் பதினோராம் திருமுறையில் விநாயகர் பற்றிய குறிப்பு வேறு இடங்களில் இல்லை.

பன்னிரண்டாம் திருமுறையாகிய சேக்கிழாரின் பெரிய புராணத்தில் விநாயகர் பற்றிய செய்திகள் மிகுதியாக இல்லை. பாயிரத்தில் வாழ்த்துப் பாடல்களில் ஒன்றாக வரும் பாடல் கீழே தரப்பட்டுள்ளது.



எடுக்கும் மாக்கதை இன் தமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கு அருள் செய்திடத்
தடக்கை ஐந்து உடைத் தாழ் செவி நீள் முடிக்
கடக்களிற்றை கருத்துள் இருத்துவாம்

இப்பாடலில் பெரியபுராணம் இன் தமிழ்க்காப்பியமாய் இலங்கிடத் தமக்கு அருள் புரியுமாறு விநாயகரைச் சேக்கிழார் வேண்டுகிறார். ஐந்து பெரிய கைகள், தாழ்ந்த காதுகள், நீண்ட முடி, ஆண்யானை வடிவம் உடையவர் விநாயகர் என்று இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. பிறகு சிறுத்தொண்ட நாயனார் புராணத்தில் திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் வழிபட்ட திருக்கோயிலின் பெயர் கணபதீச்சரம்

என்னும் ஒரு செய்தியை மட்டுமே சேக்கிழார் கூறுகிறார் இங்கு கணபதி வழிபட்ட கோயில் என்னும் கருத்து ஒன்றே வெளிப்படுகிறது. இவை தவிரப் பெரிய புராணத்தில் பிற செய்திகள் விநாயகர் பற்றிக் காண இயல வில்லை. எடுத்த காரியம் இனிது நிறைவேற உதவுபவர் விநாயகர் தானே. சிறுத்தொண்ட ராகிய பரஞ்சோதியார் நரசிம்மவர்ம பல்ல வனின் (கி.பி° ஆறாம் நூற்றாண்டு) படைத் தலைவராக இருந்து வாதாபியை வென்று அங்கிருந்து விநாயகர் திருவுருவச் சிலையைத் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவந்து திருச்செங் காட்டங்குடியில் பிரதிஷ்டை செய்தார் என்றும் அறிஞர் எண்ணுவர்.

விநாயகப் பெருமானே திருமுறைகள் இருக்கும் இடத்தைக் காட்டி உலகிற்குத் தந்தவர் என்பதைப் பற்றியும், திருமுறைகள் காட்டும் விநாயகரின் தோற்றம், உருவம், பெயர், பெருமை, புராணக் கதைக் குறிப்பு ஆகியவை பற்றியும் இக்கட்டுரை வாயிலாக அறிந்து கொண்டோம். எனவே தமிழ் வேதமாகிய திருமுறைகள் தரணியில் பரவ வேராகவும் விழுதாகவும் இருந்த விநாயகப் பெருமானை வணங்கி வழிபடுவோமாக.

(மறு பிரசுரம்)

## தேவாரப் பொன் மொழிகள்


"நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"
"ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை"
"அம்பலக்கூத்தனைத் தினைப் பொழுதும் மறந்துய்வனோ"
"படைக்கலமாக உன்நாமத்தெழுத்தஞ்சும் என்நாவிற் கொண்டேன்"
"பொற்பாதம் காணப்பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே"
"முதல்வன் பாதமே பற்றாநின்றாரைப் பற்றா பாவமே"
"கற்றல கேட்டல் உடையார் பெரியர்"

***

"எல்லாப் பொருள்களிலும் ஒரு பொருள் உனது அதுவே ஒன்றைப் பலவாக உண்டாக்குகின்றது. அப்பொருளைத் தங்கள் அகத்தே காண்பவரே அழியாத இன்பத்தைப் பெறுவர் – உபநிடதம்

"ஞால நின்புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம்மாதியே"

– ஞானசம்பந்தர்



# சாத்திரங்களில் விநாயகர்

திரு.கு.வைத்தியநாதன்

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு என்பதை,

உந்தி, களிறு, உயர்போதம், சித்தியார்,
பிந்தி ருபா, உண்மை, பிரகாசம் – வந்த அருள் ,
பண்புவினா, போற்றி, கொடி, பாசமிலா நெஞ்சு விடு,
உண்மை நெறி, சங்கற்பம் உற்று

என்னும் பழம் பெரும் வெண்பாவால் அறியலாம்.

அவை : திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் (சுபக்கம் X பரபக்கம்), இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் பதினான்கும் ஆகும்.

இவற்றுள், திருவுந்தியாரும் திருக்களி ற்றுப்படியாரும் முறையே திருவியலூர் உய்ய வந்த தேவநாயனாரும், திருக்கடலூர் உய்ய வந்த தேவநாயனாரும் அருளிச் செய்தவை. இவை சிவஞானபோதம் தோன்றுவதற்கு முன்பே உள்ளன ஆகும்.

சிவஞானபோதம் அருளிச் செய்தவர் மெய்கண்ட தேவநாயனார் ஆவார். இவர் வழியில் வந்த மரபே மெய்கண்ட சந்தானம் எனப் பெயர் பெறும். இவரது தலை மாணாக்கர் அருணந்தி சிவம் அருளிச் செய்த நூல்கள் இரண்டு ஆகும். ஒன்று சிவஞானசித்தியார் (சுபக்கம் X பரபக்கம்), மற்றொன்று இருபா இருபஃது. அருணந்தி சிவத்தின் மாணவர் மறைஞான சம்பந்தர் ஆவார். இவர் நூல் ஏதும் செய்யவில்லை.

மறைஞான சம்பந்தரின் மாணவர் உமாபதி சிவம் ஆவார். இவர் எழுதிய நூல்கள் எட்டு ஆகும். இவை "சித்தாந்த அட்டகம்" எனப் பெயர் பெறும். அந்த எட்டு நூல்கள் வருமாறு :–

சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்.

**விநாயகர் வழிபாடு காணப்பெறும் சாத்திரங்கள்**

மேற் குறிப்பிட்ட பதினான்கு சாத்திரங் களில் கீழ்க்காணும் ஆறு சாத்திரங்களில் மட்டுமே விநாயகர் வழிபாடு காணப்பெறுகிறது: அவை வருமாறு,

சிவஞானபோதம், சிவஞானசித்தியார் (சுபக்கம் பரபக்கம்), உண்மை விளக்கம், சிவப் பிரகாசம், திருவருட்பயன், சங்கற்ப நிராகரணம்.

திருவுந்தியாரிலும் திருக்களிற்றுப் படியாரிலும் விநாயகர் வழிபாடு இடம்பெற வில்லை. எனவே சிவஞானபோதத்தில் தான் முதன்முதலாக விநாயகர் வழிபாடு காணப் படுகிறது என்பது போதரும். மெய்கண்டாரின் மற்றொரு மாணவர் ஆகிய மனவாசகங் கடந்தார் அருளிய "உண்மை விளக்கம்" என்னும் நூலிலும் விநாயகர் வழிபாடு உள்ளது. உமாபதி சிவம் அருளிச் செய்த எட்டு நூல்களில் சிவப்பிரகாசம், திருவருட்பயன், சங்கற்ப நிராகரணம் ஆகிய மூன்று நூல்களில் மட்டுமே விநாயகர் வழிபாடு இடம் பெற்றுள்ளது. அவரது எஞ்சிய ஐந்து நூல்களில் விநாயகர் வழிபாடு காணப்பெறவில்லை. இதற்குக் காரணம் புரியவில்லை.

இனி விநாயகர் வழிபாடு இடம் பெற்றுள்ள சாத்திரங்களைக் காண்போம்.

**சிவஞான போதம்**

சிவஞான போதம் தொடங்கும் முன்பு, "மங்கல வாழ்த்து" என்னும் தலைப்பில் மெய்கண்டார் ஒரு விநாயகர் வாழ்த்து அருளிச் செய்துள்ளார் அது வருமாறு:

கல் ஆல் நிழல் மலைவு
இல்லார் அருளிய
பொல்லார் இணை மலர்
நல்லார் புனைவரே

இதன் பொழிப்புரை வருமாறு:

அருள் வடிவாகிய கல் ஆல் நிழலில் எழுந்தருளி இருந்து, நந்தி பெருமானுக்குச் சிவஞானபோதம் என்னும் இந்நூலினால், மலைவு தீர்த்து அருளிய முதலாசிரியர் ஆகிய சிவபெருமான், மேலும் மேலும் கருணைகூர்ந்து அருளும் பொருட்டு, பொல்லாப் பிள்ளையா ருடைய ஞானசக்தி, கிரியாசக்தி என்னும் இரண்டு திருவடித் தாமரைகளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்கள், தம்முடைய ஞானசக்தி கிரியாசக்திகளிலும் வியாபகமாகக் கொண்டு தாடலை (தாள் + தலை) போல், அடங்கி நிற்பர்.

மங்கல வாழ்த்து என்பது சிவபெருமா னைக் குறித்து வாழ்த்தப்படுவது ஆகும். சிவபெருமானின் அருளை வேண்டி வாழ்த்தும் பொழுது, விநாயகப் பெருமானை வாழ்த்திய தன் நோக்கம் குறித்துச் சிவஞானபோதச் சிற்றுரையில்



"அவ்விருவரும் தம்முள் வேற்றுமை யின்மை பெற்றாம்" என்று சிவஞான முனிவர் விளக்கம் அளித்துள்ளார். அஃதாவது, சிவபெருமான் வேறு, விநாயகன் வேறல்லர், இருவரும் வடிவில் வேறானவரே அன்றி, தன்மையால் வேறல்லர் என்பது கருத்தில் இருத்தத்தக்கது ஆகும்.

இந்த மங்கல வாழ்த்தில் இன்னும் சில நயங்கள் உள்ளன. பொல்லாப் பிள்ளையார் என்பவர், உளி கொண்டு பொள்ளாமல், தாமே முளைத்து எழுந்தவர் ஆவார். திருவெண்ணெய் நல்லூரில் உள்ள பொல்லாப்பிள்ளையாரையே இம் மங்கல வாழ்த்து குறிப்பிடுகிறது. நம்பி யாண்டார் நம்பிகள் வழிபட்ட பொல்லாப்

பிள்ளையார் திருநாரையூரில் எழுந்தருளி யுள்ளார். அவரும் சுயம்பு மூர்த்தி ஆகலின் அப்பெயர் பெற்றார்.

இந்த மங்கல வாழ்த்தில்,

"கல், ஆல், நிழல், மலைவு, இல்லார், அருளிய, பொல்லார், இணை, மலர், நல்லார், புனைவர், ஏ" எனப் பன்னிரண்டு சொற்கள் உள்ளன. அதுபோல இந்நூலில் பன்னிரண்டு நூற்பாக்கள் (சூத்திரங்கள்) உள்ளன.

'நல்லார்' என்பதற்குக் கேட்டுச் சிந்தித் துத் தெளிந்த மெய்யன்பர் என்று பொருள் உரைத்திருப்பது நூலின் பயன் கருதிச் சொன்ன தாகும் அதன் பயன் ஆவது 'தாடலை' போல் அடங்கி நிற்றல் ஆகும். தாள், தலை, என்னும் இரண்டு சொற்கள், " தாடலை" என்னும் ஒரு சொல் ஆகி, அடங்கி ஒன்றுபட்டு நிற்பது போல, சிவபெருமான் திருவடிகள் (தாள்), தம் தலைமேல் (தலை) என்றும் நிற்பதாக நினைந்து அடங்கி நிற்பதே நல்லார் இயல்பு ஆகும். ஆகவே "புனைவர்" என்பது அந்நினைவோடு நிற்ப வரையே குறிக்கும். இன்னும் எத்தனையோ நயங்கள் இருப்பினும் காலத்தின் அருமை கருதி, இதனுடன் இதனை நிறைவு செய்கிறேன்.

**சிவஞானசித்தியார் - சுபக்கம்**

ஒரு கோட்டன், இரு செவியன், மும்மதத்தன்,
நால்வாய், ஐங்கரத்தன், ஆறு
தருகோட்டம், பிறை இதழித் தாழ்சடையான்,
தரும் ஒரு வாரணத்தின்தாள்கள்
உருகோட்டு அன்பொடும் வணங்கி, ஓவாதே
இரவு பகல் உணர்வோர் சிந்தைத்
திருகு ஒட்டும், அயன் திருமால் செல்வமும் ஒன்றோ
என்னச் செய்யும் தேவே.

இதன் பொழிப்புரை வருமாறு.

ஒற்றைக் கொம்பையும், இரண்டு செவி யையும், மூன்று மதத்தையும், நான்ற வாயையும் ஐந்து கரத்தையும், உடையவன் விநாயகப் பெருமான். கங்கை ஆறும், கோணல் பிறையும் கொன்றை மாலையும், தாழ்ந்த சடையினையும் உடைய சிவபெருமான், இந்த விநாயகப் பெருமானை நமக்குத் தந்தருளியுள்ளான்.

இத்தகு யானை முகக் கடவுளின் திருவடிகளை உள்ளம் உருகி, அன்போடு வணங்கி, இரவும் பகலும் ஓயாமல் நினைப் பவரின் நெஞ்சில் மயக்கம் வராமல், அவன் காத்தருள்வான். எனவே, பிரம விட்டுணுக் களின் பதவிகளை ஒரு பொருட்டாக மதிக்காதவர்களுக் குப் பேரின்பப் பெரு நிலையை அவனே தந்தருள்வான்.



| | | |
|---|---|---|
| ஒரு கோட்டன் | – | பரஞானத்தலைவன் |
| இரு செவியன் | – | முற்றறிவையும் முடிவிலாற் றலையும் உடையவன். |
| மும்மதம் | – | இச்சா ஞானக் கிரியா சத்திகள் |
| நால்வாய் | – | தூங்குகின்ற வாய். |
| ஐங்கரத்தன் | – | படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளால் என்னும் ஐந்து தொழில்களைஉடையவன் |
| வாரணம் | – | ஆனை முகம், பிரணவ வடிவம். |

தாள்கள் – ஞானசக்திகளையும் கிரியா சக்திகளையும் குறிப்பன.

சிந்தைத்திருகு ஒட்டும் – மாறுபட்ட ஆணவ மலப் பற்று ஆகிய குற்றத்தைப் போக்கும்.

**சிவஞானசித்தியார் - பரபக்கம்**

சிவஞானசித்தியார் சுபக்கத்தில் உள்ளது போல, 'ஒரு கோட்டன்' எனத் தொடங்கும் காப்புச் செய்யுள் ஒன்று பரபக்கத்திலும் உள்ளது. மேலும், விநாயகக் கடவுள் என்னும் தலைப்பில் ஒரு பாட்டு உள்ளது.

அது வருமாறு;

இயம்புநூல் இருந்தமிழின் செய்யுள் ஆற்றால்
இடையூறு தீர்ந்து, இனிது முடிய வேண்டித்
தயங்கு பேர் ஒளியாகி எங்கும் நின்ற
தலைவனார் மலைமாது தன்னோடு ஆடிப்
பயந்த ஐங்கரம் நால்தோள் முக்கண் இருபாதப்
பரியது ஒரு நீள் கோட்டுப் பெரிய பண்டிக்
கயம்தன் அடிக்கமலங்கள் நயந்து போற்றிக்
கருத்தில் உற இருத்தி, மிகக் காதல் செய்வாம்

இதன் பொழிப்புரை வருமாறு:

பெருமைக்குரிய தமிழினால் செய்யப்படும் இந்தச் சிவாகம நூல், செய்யப்படும் பொழுது ஏற்படும் குற்றங்கள் இல்லாமல், சிறப்பாக நிறைவேற வேண்டும் என இறைஞ்சி, விநாயகப் பெருமானைச் சிந்தையில் வைத்துத் துதிக்கின்றேன்.

சிவபெருமான் முழு நிறைவுடையவன். அவன் எங்கும் விளங்கும் பேரொளியை உடையவன். கயமுக அசுரனைக் கொன்று காத்தருளும் பொருட்டு, அம்மையப்பராய் இருக்கும் சிவபெருமான், ஐந்து கைகளையும், நான்கு தோள்களையும், மூன்று கண்களையும், இரண்டு திருவடிகளையும், பெரியதொரு நீண்ட கொம்பினையும் பெரிய வயிற்றினையும் உடைய ஆனைமுகக் கடவுளின் வடிவம் கொண்டு நமக்கு அருளிச் செய்துள்ளான். இத்தகு பெருமைக்குரிய விநாயகப் பெருமானின் திருவடித் தாமரைகளை விரும்பிப் போற்றி, என் சிந்தையில் வைத்து, அன்பு மீதூர நிற்கின்றேன்.

இந்தப் பாடலில் காணப்படும் விநாயகக் கடவுள், இருபத்தைந்து மூர்த்தங்களில் ஒன்று ஆகிய "கஜமுகானுக்கிரமூர்த்தி" யைக் குறிக்கும். இது மகேஸ்வர மூர்த்தங்களில் ஒன்று ஆகும்.



**உண்மை விளக்கம்**

மெய்கண்டாரின் மற்றொரு மாணவர் ஆகிய மனவாசகங்கடந்தார், தாம் அருளிச் செய்த "உண்மை விளக்கம்" என்னும் நூலில் காப்புச் செய்யுளாகக் கீழ்க்காணும் வெண்பா உள்ளது :

வண்மை தரும் ஆகம நூல் வைத்த பொருள் வழுவா
உண்மை விளக்கம் உரை செய்யத் திண் மதம் சேர்
அந்தி நிறத் தந்தி முகத் தொந்தி வயிற்று ஐங்கரனைப்
பந்தம் அறப் புந்தியுள் வைப்பாம்

இதன் பொழிப்புரை வருமாறு:

சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் நான்கு பாதங்களின் வளப்பத்தைச் சிவாகமங்கள் பேசுகின்றன. அவற்றுள் ஞானபாதத்தில், இறை, உயிர், தளை என்னும்

முப்பொருள்களின் உண்மையும் தன்மையும் அருளப்பட்டுள்ளன. அவற்றின் தன்மை ஆகிய இயல்புகளை ஐயம் திரிபு அற்ற முறையில் உரைக்கும் நூல்களுள் "உண்மை விளக்கம்" என்னும் நூல் ஒன்றாகும். இந்நூலின் வாயிலாக இவற்றைத் தெளிவாகக் கூறும் பொருட்டு விநாயகப் பெருமானை வழிபடுவோம்.

விநாயகப் பெருமான் செந்நிறமான மேனியை உடையவர் ஆனை முகத்தையும் பருத்த வயிற்றையும் ஐந்து திருக்கைகளையும் உடையவர். யான், எனது என்னும் செருக்கு நம்மை விட்டு நீங்கும் பொருட்டு, அவரை நினைவில் கொள்வோம்.

**சிவப்பிரகாசம்**

உமாபதிசிவம் அருளிச் செய்த சிவப்பிர காசம் என்னும் நூலில் காப்புச் செய்யுள் ஒன்று, விநாயகக் கடவுள் வழிபாடு ஒன்று என இரண்டு பாடல்கள் விநாயகரைப் பற்றி இடம்பெற் றுள்ளன. காப்புச் செய்யுள் வருமாறு.

ஒளியான திருமேனி உமிழ்தானம் மிக மேவு
களியார வரும் யானை கழல், நாளும் மறவாமல்
அளி ஆளும் மலர்தூவும் அடியார்கள் உளமான
வெளி ஆகும் வலிதாய வினைகூட நினையாவே

இதன் பொழிப்புரை வருமாறு

ஒளி மிகுந்த திருமேனியில் உள்ள முகத்திலிருந்து பொழிகின்ற மதநீரும், பெருகி வரும் மகிழ்ச்சியும் உடைய ஆனை முகத்தினை உடைய விநாயகப் பெருமானின் திருவடிகளை, என்றும் மறவாமல், வண்டுகள் ஆளும் மலர் களைத் தூவி வழிபடும் அடியார்களின் உள்ளம், அஞ்ஞான இருள் நீங்கப் பெற்று ஞான ஒளி உடையது ஆகும். ஆகவே, வினைகள் அவர்களைச் சாரமாட்டா.

**விநாயகக் கடவுள்**

நலம் தர நூல் இரும்தமிழின் செய்யுள் குற்றம்,
நண்ணாமை, இடையூறு, நலியாமை, கருதி
இலங்கும் இரு குழை அருகு பொருது வரி சிதறி
இணை வேல்கள் இகழ்ந்த கயற் கண்ணி
– யொடும் இறைவன்
கலந்து அருள வரும் ஆனை முகத்தான் மும்மைக்
கடம் அருவிஎன நிலவும் கணபதியின் அருளால்
அலர்ந்து மது கர முனிவர் பரவ வளர் கமலம்
அனைய திருவடி இணைகள் நினைதல் செய்வாம்

இதன் பொழிப்புரை வருமாறு

சிவப்பிரகாசம் எனும் இந்நூலைக் கற்றுத் தெளிபவர்க்கு, எல்லா நன்மைகளும் வழங்கும் பெருமைக்குரிய தமிழ் மொழியில் உள்ள செய்யுள் குற்றம் கற்போரை வந்து சேராது. இந்நூலைச் செய்து முடிப்பதற்கு எந்தவித இடையூறும் வந்து சேராது. இத்தகு பயன்களை நினைந்து விநாயகப் பெருமான் திருவடிகளைச் சிந்திப்போம்.



அத்திருவடிகள் எத்தகு சிறப்புடையன என்பதை உமாபதிசிவம் கீழ்க்காணுமாறு அருளிச் செய்கிறார்.

விளங்கும் இரு காதுகளில் மகரக் குழை சென்று மோதி, செவ்வரி பரந்து இரண்டு வேல்களைப் பழித்த கயல் போன்ற கண்ணினை உடைய உமையம்மையோடு பரமேஸ்வரன் கூடி அருள எழுந்தருளியுள்ள ஆனை முகத்தை உடையவர்; மும்மதங்களும் அருவிபோல் விளங்கப்பெற்ற கணத்தலைவர் முனிவர்கள் அவரைப் பரவி வழிபடுகிறார்கள்.

இங்கு "செய்யுள் குற்றம்" என்றது, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் இலக்கணங்களைப் பற்றி வரும் குற்றங்களைக் குறிக்கும்

**திருவருட்பயன்**

திருவருட்பயன் என்னும் நூல் திருக் குறளைப் போன்ற யாப்பினை உடையது. இதில் உள்ள காப்புச் செய்யுள் வருமாறு:–

நற்குஞ்சரக்கன்று நண்ணில், கலை ஞானம்
கற்கும் சரக்கு அன்று காண்.

இதன் பொழிப்புரை வருமாறு:

நல் அருளைப் பொழிவதும், பிரணவ வடிவம் ஆகிய ஆனைமுகத்தைப் போன்றதும் ஆகிய திருமுகத்தை உடையவரும், எப்பொழுதும் இளமையாக உள்ளவரும் ஆகிய விநாயகக் கடவுளை, ஒருவர் மனத்தினாலும், சொல்லினாலும் உடலினாலும் வழிபடுபவர் ஆயின், அவருக்கு ஞானசாத்திரம் ஆகிய சிவாகமம், வருந்திக் கற்க வேண்டிய பொருளன்று ; அஃதாவது எளிதில் கற்கக் கூடியதாகும்.

**சங்கற்ப நிராகரணம்**

சித்தாந்த அட்டகத்தின் எட்டாவது நூல் ஆகிய சங்கற்ப நிராகரணம் என்னும் சாத்திரத்தில் காப்புச் செய்யுள் ஆக வருவது விநாயகர் வணக்கம் ஆகும். அது வருமாறு;

திருந்திய அருந்தவம் பொருந்து பல் முனிவர்
கமையாக் காதல் அமையாது பழிச்சும்
நிகரில் செக்கர்ப் புகர் முகத்து எழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப் பெருங்கோட்டுத்
தழை செவி மழை மதப் புழை நெடும் தடக்கை

வாமடு ஆகும் மும்மை நாட்டம் நால்விதப்
பாசம் அங்குசம் தேசுறு எய்து ஒண்
கனி இவை தாங்கும் புனித நாற்கரத்து
அங்கதம் கடகம் பொங்கு இழை ஆரம்
நிறைமணிச் சுடிகைக் கறை அணல் கட்செவி
கொண்ட திண்பெரும் பண்டிக்குறும்தாள்
களிறு தன் இரு கழல் கருதா
வெளிறுஉரு துயரம் விட்டினம் பெரிதே.

இதன் பொழிப்புரை வருமாறு:

அருள் நூல்களில் விதிக்கப்பட்ட, அரிய தவங்களோடு கூடிய மாமுனிவர்கள் பலர் கூடி, என்றும் நிரம்பாத ஆர்வத்தோடு வழிபடப்படுகின்றது யானையின் முகம். அந்த யானை ஒப்பிட்டுக் கூற முடியாத சிவந்த நிறத்தை உடையது இள வெண்பிறை போன்ற ஒப்பற்ற கொம்பினை உடையது. மென்மையான செவியையும் மழை போன்ற மதத்தையும், இரு துவாரத்தோடு கூடிய பருத்த துதிக்கையையும் உடையது.



ஒளியினை உடைய மூன்று கண்களையும், நான்ற வாயினையும் உடையதாய், பாசம், தோட்டி, ஒளிர்கின்ற கொம்பு, அழகிய மாங்கனி ஆகியவற்றை உடைய தூய்மையான நான்கு கைகளையும் உடையது அந்த யானை. தோள்வளை, இரத்தினக் கடகம், நவரத்தினங்களால் ஆன ஆரம் ஆகியவற்றை நிறைவாக அணிந்து, இரத்தினத்தை உடைய தலையினையும், கறுத்த கண்டத்தையும் உடையது. வயிற்றினையும், குறுகிய காலினையும் உடையது அந்த ஆண் யானை, அதன் திருவடிகள் இரண்டையும் உளமார நினைந்து அறியாமை காரணமாக ஏற்பட்ட துன்பங்களை நிச்சயமாகப் போக்கிக் கொள்வோமாக.

பதின்மூன்று வரிகளில் அமைந்துள்ள இந்த விநாயகர் காப்பு மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

(மறு பிரசுரம்)



# புராணங்களில் விநாயகர்

திரு.ச.சாம்பசிவன்

தமிழகத்தில் பிள்ளையார் வழிபாடு நெடும் பல்லாண்டுகளாக இருந்து வருவதாம். ஆனால் சிலர் "கி.பி. 7ஆம் நூற்றாண்டில், நரசிங்கவர்ம பல்லவனின் படைத்தலைவராக இருந்த 'சிறுத்தொண்டர்' என்ற பரஞ்சோதியார் தான், வாதாபி எனும் இடத்தில் புலிகேசி மன்னனை வென்று, ஆங்கே கோட்டை வாயிலில் இருந்த கணபதி உருவத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தார், அதன் பின்பே பிள்ளையார் வழிபாடு ஏற்பட்டது" என்று கூறுவர். இசையரங்குகளில் முதன் முதல் பாடப்படும் 'வாதாபி கணபதி' என்ற பாடல் இதற்குச் சான்று என்றும் கூறுவர்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் சிறுத் தொண்டர். இந்நாயன்மார்களின் வரலாறு கூறவந்த சேக்கிழார், தமது பெரிய புரணத்தில், சிறுத்தொண்டர் பற்றிய பகுதியில் வாதாபி கணபதியைப் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை! திருஞானசம்பந்தரின் சமகாலத்தவர் சிறுத்தொண்டர், இவரது அன்பு வேண்டுகோளுக்கு இணங்கச் சம்பந்தர், திருச்செங்காட்டங்குடிக்கு (அஃதாவது சிறுத்தொண்டரின் ஊர்) எழுந்தருளினார் அவ்வூரில் உள்ள கணபதீச்சரரைப் பாடித் துதித்தார், 'பைங்கோட்டு' என்று தொடங்கும் திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாட்டிலும் திருத்தொண்டரின் பெயரைக் குறிப்பிட்டு அவர்தம் பக்தியைப் பாராட்டுகின்றார். ஆனால், ஓரிடத்திலும், வாதாபி கணபதியைப் பற்றிக் குறிப்பிடாதது சிந்திக்கத்தக்கது.

அன்றியும், திருச்செங்காட்டங்குடிக்குச் சம்பந்தர் எழுந்தருளியதற்கு முன்பே, சீகாழியில் பாடிய 'பந்தத்தால்' என்று தொடங்கும் திருப்பதிகம் 6 ஆவது பாடலில்,

ஒற்றைச் சேர் முற்றக் கொம்பு
உடைத் தடக்கை

என்று, நீண் துதிக்கையும், ஒற்றைக் கொம்பும் கொண்ட இறைவனாகிய விநாயகரைப் பற்றிக் குறிப்பிடுவதும் நோக்கத்தகும்.

சைவ மெய்யன்பர்கள், நாளும் மேற்கொள்ளும் சிவபூசையின்போது, முதற்கண் பாடும் பாடல், சம்பந்தர் அருளியதாம்.

பிடியதன் உரு உமைகொள, மிகு கரியது
வடி கொடு தனது அடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலி வலம் உறை இறையே

இது திருவலிவலம் பதிகத்தில் இடம் பெறுவது. "அடியவர்களின் இடரினைப் போக்கும் கணபதி" என்ற பொருளில், 'வழிபடும் அவர் இடர் கடி கணபதி' என வருதல் காணலாம், கி.பி 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் 'கல்லாடம்' என்ற நூலிலும் 'கணபதி வணக்கம்' இடம் பெற்றுள்ளது. இப் பிள்ளையார் வழிபாடு குறித்து அற நெறியண்ணல் கி. பழநியப்பனார், ஓர் அரிய ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார், ('தமிழ்மாருதம்', பொதி – 1, ஏடு – 1, சித்திரை, 1991) அதன்கண் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் ஏற்புடையனவாக உள்ளன.

**பெரியபுராணம்**

பிற்காலத்து எழுந்த நூல்கள் பலவற்றிலும், நூலினைத் தொடங்குமுன், விநாயகப் பெருமானுக்கு வாழ்த்துப் பாடுவதை மரபாகக் கொண்டுள்ளமை காணலாம். அதற்குக் 'காப்புச் செய்யுள்' என்று பெயர்.

பெரியபுராணத்தில், தில்லை நடராசப் பெருமானே 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுத்தமையால், முதற் செய்யுள் அவருக்கே உரியதாயிற்று. ஆனாலும் சேக்கிழார், 'வாழ்த்துப் பகுதியில் விநாயகருக்கு வணக்கம் சொல்கின்றார்,

இப்பெரிய புராணம், உயிர்க்கூட்டமனைத்தையும் பாவமாகிய குற்றத்திலிருந்து மீளச் செய்யும் தன்மை கொண்டது. இஃது இன்றமிழ்ப் பாடல்களால் இனிதாக நிறைவேறி, உலகில் பொருந்திய மேன்மையை நமக்கு அருள்செய்யும் பொருட்டு, ஐந்துபெரிய கைகளும், தாழ்ந்த காதுகளும் கொண்டுள்ள விநாயகப் பெருமானை உள்ளத்தே பதிய வைப்போம்" என்னும் பொருள் படச் சேக்கிழார் பாடும் பாடல் வருமாறு.

எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக் களிற்றைக் கருத்துள் இருத்துவாம்

**சித்திவிநாயகர்**

பிள்ளைத் தமிழ் நூல்கள் அனைத்திலும் பொதுவாக, 'விநாயகக் கடவுள் துதி' அமைந்திருப்பதைக் காணலாம். மதுரை மீனாட்சியம்மையைப் பாடவந்த குமரகுருபரர், தமது 'பிள்ளைத் தமிழ்' நூலில், மதுரைத் திருக்கோயில் தலவிநாயகராக அருள் பாலிக்கும் சித்தி விநாயகருக்கெனத் தனியாகக் 'காப்புப் பருவத்'தில் ஒருபாடல் புனைந்துள்ளார்.



சித்தி விநாயகன் இசையைப் பழிச்சுதும்.

முத்தமிழ் தேர்தரு மதுரைத் தலத்துறை
முத்தன மேவுபெண் அரசைப் புரக்கவே

என்பது அடிகள் வாக்கு!

**விகடசக்கரன்**

கந்தனைப்பற்றி விரிவாகச் சொல்லும் நூல் கந்தபுராணம். புராணம் என்பதற்குப் பழைய வரலாறு என்று பொருள். இதனைப் பாடியவர், காஞ்சிபுரம் கச்சியப்ப சிவாச்சாரியார், முருகப் பெருமான், அவரது கனவில் தோன்றித் 'திகட சக்கரம்' என்று பாடலடியையும் எடுத்துக் கொடுத்தார். அதனையே முதற்பாடலாகக் கொண்டு 10,345 செய்யுட்கள் பாடினார் கச்சியப்பர்.

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

இப்பாடலில் வரும் விகட சக்கர விநாயகர், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயில் வெளித் திருச்சுற்றில், 'கம்பாநதி' என்ற தீர்த்தத்துக்கு அருகில், ஆயிரக்கால் மண்டபத்தில் எழுந்தருளியிருக்கின்றார்.

"திகழ்கின்ற பத்துத் திருக்கைகளும், செம்மையான ஐந்து திருமுகங்களும் கொண்டவர் சிவபெருமான். அவருடைய தேருக்குச் சக்கரமாக நின்றவன், தாமரைக்குத் தலைவனான சூரியன், அச்சூரியனைத் தன் வயிற்றில் ஒளிவீசும் வட்ட மணியாகக் கொண்டுள்ள விகடசக்கர விநாயகரின் சத்தியத் திருவடிகளை இந்நூல் இனிது முடித்தற்பொருட்டு யாம் வணங்குவோம்" என்பது இப்பாடற் பொருள்.

இதே நூலில் விகடசக்கர விநாயகருக்கு "உச்சியின் மகுடம் மின்ன" என்ற மற்றொரு பாடலும் பாடியுள்ளார் கச்சியப்பர்.

**விநாயக புராணம்**

கந்தனது வரலாறு உரைக்கும் நூல் கந்தபுராணம் அவ்வாறே விநாயகரது வரலாறு உரைக்கும் நூலுக்கு 'விநாயக புராணம்' என்று பெயர். விநாயகபுராணம் பாடியவர் அதே ஊரைச் சேர்ந்த கச்சியப்ப முனிவர் ஆவார். இவர், மெய்கண்டார் அருளிய 'சிவஞான போதம்' என்ற நூலுக்குச் 'சிவஞான மாபாடியம்' எனும் பேருரை கண்ட மாதவச் சிவஞான சுவாமிகளின் தலை மாணவர்.

பிருகு முனிவர் என்பவரால், வடமொழியில் இயற்றப்பட்டது விநாயக புராணம். இஃது ' உபாசனா காண்டம், லீலா காண்டம் ' எனும் இரு காண்டங்கள், 250 பிரிவுகள், 12.000 சுலோகங்கள் கொண்டது.

'தமிழ்ப் பெருமக்கள் இதனையறிந்து உய்ய வேண்டும்' எனும் நோக்கத்தால், கச்சியப்ப முனிவர் இதனைத் தமிழில் பாடியுள்ளார். மூலநூல் போன்றே இதுவும் அதே இரண்டு காண்டங்கள் கொண்டது. உபாசனா காண்டத்தில் கடவுள் வாழ்த்து முதலான ஆறு பகுதிகள் தவிர, 69 படலங்கள், 3047 பாடல்கள், லீலா காண்டத்தில் 16 படலங்கள், 3178 பாடல்கள் உள்ளன. இவ்வகையில் மொத்தம் 6225 பாடல்கள் எனின் கச்சியப்ப முனிவரின் பெருமையை ஒருவாறு உணர்தல் கூடும்.



இந்நூலில் சொல்லப்படும் கருத்துக்கள் பலவாம் : உமா தேவியார், சண்முகர், பிரமன், விட்டுணு, உருத்திரர், அகத்தியர், இந்திரன், பரசுராமன், காசிபரன் முதலானோர் விநாயகப் பெருமானை வழிபட்டு வரம் பெற்றமை; சுக்கில பட்ச விநாயக சதுர்த்தி, சங்கடகர சதுர்த்தி, ஆவணித் திங்கள் சதுர்த்தி ஆகிய விரதங்களின் மகிமை; இவற்றை அனுட்டித்தோர்க்குக் கிடைத்த அரிய பேறுகள்; விநாயகருக்கு உகந்த அறுகு, வன்னி, மந்தாரை எனும் பொருட்கள்; விநாயகப் பெருமான், 'சித்தி புத்தி' எனும் இருவரைத் திருமணம் முடித்தமை, மும்மூர்த்திகளான பிரமன், விஷ்ணு, உருத்திரர் ஆகியோரு

க்கு விநாயகர், 'விசுவ ரூபம்' காட்டியமை ; தீராத நோய் கொண்ட சோமகாந்தன் என்பவன் பிருகு முனிவரை வணங்கி, அவருடைய அருளுரையால், 'விநாயக புராணம்' என்னும் நன்மருந்தினால் நோய் நீங்கியமை; மன்னன் சோமகாந்தன் வரலாறு மூலம், நாட்டை ஆள்வோர் கடைப்பிடிக்க வேண்டிய அரசியல் நெறிமுறைகள், விநாயகரின் பெரும்புகழ் பாடும் அரிய திருநாமங்கள், அவற்றை நாளும் ஓதுவதால் உண்டாகும் நற்பலன்கள் ஆகிய பல்வேறு செய்திகள், முதற்காண்டத்தில் மொழியப்படுகின்றன. அவ்வாறே இரண்டாம் காண்டத்திலும், விநாயகர் மேற்கொண்ட பன்னிரு திருவவதாரப் பெருமை; அடியார்களைக் காக்கும் பொருட்டு எடுத்த திருமேனிகள்; நின்மல விநாயகரைப் பிரமன் முதல் வானவரனைவரும் திரண்டுவந்து துதித்தல்; அமரர் முன் அப்பெருமான் காட்சியளித்து அன்னாரின் கவலைகளை அகற்றுதல்; சிவபெருமானும் விநாயகரும் வேறல்லர் ஒருவரே என்றல்; சைவசித்தாந்தக் கருத்துக்கள்; சோமகாந்த மன்னனுடன் நகரமக்கள் அனைவருமே விமானம் ஏறி, விநாயகர் உலகம் அடைந்து, 'சாமீப பதம்' பெற்றமை; இப்புராணத்தைப் பக்தியோடு கேட்போர்க்கு உண்டாகும் பயன்கள்; அவ்வாறே இந்நூலைத் தத்தம் வீட்டில் வைத்திருப்போர் பெறும் நன்மைகள்; இவ் அருள் நூலை அன்போடு படிப்பவர்க்கு உண்டாகும் உயர்வு எனப் பலவும் விரிவாக எடுத்துரைக்கப் படுகின்றன.

இந்நூலில் முதற்கண் இடம் பெற்றுள்ள விநாயகர் வாழ்த்தில் "விநாயகர், உலகம் முழுதும் அகரம் என அறிவாகி அமர்ந்துள்ளார்; அகர, உகர, மகரம் எனப்படும் ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் மூலப் பொருளாக உள்ளார்; பல்வேறு திருமேனிகளைத் தரித்துள்ளார்; 'அறம் பொருள் இன்பம் வீடு' எனும் நான்கு பொருளை இடர் ஏதுமின்றி எய்த விநாயகப் பெருமானை வழிபட வேண்டும்; அவ்வாறு வழிபடுபவர்க்கு அறக்கருணை புரிகின்றார்; அல்லாதோர்க்கு மறக்கருணை புரிந்து ஆட்கொள்கின்றார். இத்தகைய விநாயகரை எண்ணி வாழ்வோம்" என்ற பொருளில் கச்சியப்ப முனிவர் பாடும் பாடல் வருமாறு:—

அகரம் என அறிவாகி உலகம் எங்கும் அமர்ந்து
அகர உகர மகரங்கள் தம்மால்
பகரும் ஒரு முதலாகி வேறுயிராகிப் பல்வேறு
திருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருள்
நான்கினையும்
இடர்தீர்ந்து எய்தப்
போற்று நருக்கு
அறக் கருணை
புரிந்து அல்
லார்க்கு
நிகரில் மறக்
கருணை புரிந்து ஆண்டு கொள்ளும் நிரு
மலனைக் கணபதியை நினைத்து வாழ்வாம்



விநாயக சதுர்த்தி விரதம் மேற்கொள்வதால் உண்டாகும் நன்மைகளைக் கச்சியப்ப முனிவர் விரிவாக விளம்புகின்றார்: "அறம் முதலான நால்வகைப் பயன்களைத் தரவல்லது; வரவிருக்கும் துன்பங்களை அறுக்கக்கூடியது; கொடிய நோய்களை நீக்கத்தக்கது ; வலிய பகைகளையும் போக்கும் இயல்பினது; தாம் விரும்பும் பொருளனைத்தும் கொடுக்கும் மேன்மையது.

அரும்பிய விடரெலாம் அறுக்கத் தக்கது!
பெரும்பிணி முழுவதும் பெயர்க்கத் தக்கது!
பொரும்பகை வலிகளும் போக்கத்தக்கது!
விரும்பிய பொருளெலாம் விளைக்கத் தக்கது!
என்கிறார் கச்சியப்பர்.

சதுர்த்தி விழாவின்போது பிள்ளையாரை, நல்ல மண்கொண்டு செய்து வழிபடலாம்; அல்லது தங்கம் முதலான உலோகங்களாலான விக்கிரகங்களையும் வழிபடலாம் (1:38:12); உப்பு இல்லாமல், பழம் பால் மட்டுமே உண்டு, முப்பது நாள் தவறாமல் விரதம் இருக்கலாம்; அப்போது இருபத்தொரு பேர்க்கு உணவு வழங்குவது சிறப்பு (1:38:21) இல்லையேல், அன்போடு மூன்றுநாள் விரதம், முறையாகக் கடைப் பிடித்தால், துன்பம் தரும் நோய் நீங்கும் ; தீர்க்க முடியாத வேறு துன்பங்களும் அகலும்; ஒன்பது நாள் பூசை செய்தால், தம்மைப் பிடித்த பீடைகள் எல்லாம் அகல்வதைக் காணலாம் அனைத்துக் காரிய சித்தியும் கைகூடும் (1:38:30) என்கின்றார் கச்சியப்பர்.

இந்நூலில் 'காசிபர் முதலியோர் அனுட்டித்த படலம்' என்ற ஒன்று உள்ளது. அதில் வரும் எட்டுப் பாடல்கள் (1 : 68:20 – 27) 'விநாயகர் தோத்திர அட்டகம்' எனப்படும். இவை, விநாயகரின் பெருமைகளைப் புகழ்வன. அவற்றில் வரும் கருத்துக்களிற் சில : உலகம் முழுதும் நீக்கமின்றி ஒன்றாய் இருக்கும் பொருள் எவன்? உலகம் புரியும் வினைப்பயன்களை ஊட்டும் தலைவன் எவன்? உயிர்களின் அறியாமையை நீக்கி, அறிவு கொளுத்துபவன் எவன்? அவரவர் செய்த வினைகளை அவரவரே நுகரும்படி செய்பவன் எவன்? வேதங்களாலும் அறிவதற்கு அரியவன் எவன்? பரநாத முடிவில் வீற்றிருக்கும் நாதன் எவன்? எண் குணமுடையவன் எவன்? நீரிடை நான்காய், தீயிடை மூன்றாய், வளி (காற்று) யிடை இரண்டாய், வானிடை ஒன்றாய் விளங்குபவன் எவன்? பாச அறிவினாலும், பசு (உயிர்) அறிவினாலும் பற்றுதற்கு அரியவன் எவன்? அவனே இறையாம் கணபதி!

இந்நூலின்கண் அமைந்துள்ள 'சகத்திர நாமப் படலத்'தில் "ஓம் அனந்த, ஆனந்த சகாய நம" எனும் மந்திரத்தை நிறைவாகக் கொண்டு. கணேசப் பெருமானின் புகழினைப் பாடும் பல அரிய திருப்பெயர்களைக் காணலாம். இதில் வரும் 1024 திருநாமங்களை நாள்தோறும் சொல்லித் துதிக்க வேண்டும்!



இம் முதற் காண்டத்தின் இறுதியில் கச்சியப்ப முனிவர் பாடும் போற்றிப் பாடல், நாளும் துதிக்கத்தக்கது;

தேவர்தொழுது எழும் கருணைச் செல்வனே போற்றி!
சிறந்து ஒளிரும் மங்கல சொரூபனே போற்றி!
ஒவறு சித்திகள் அனைத்தும் உதவுவோய் போற்றி!
ஒலிகெழு கிண்கிணி பாதசால நூபுரங்கண்
மேவி ஒளிர் சரணனே போற்றி! மததாரை விரவிய
திண் கபோலனே போற்றி! நினது அருளால்
பாவமொடு பலபிணியின் பம்பு வறுமைகளும்
பலவான இடர்களையும் பாற்றுக இன்புறவே!
(1: 69:71)

முருகப் பெருமானுக்கெனக் 'கந்தர் சட்டி கவசம்' உண்டு என்பதைப் பலரும் அறிவர். அவ்வாறே விநாயகருக்கென 'விநாயகர் கவசமு'ம் உண்டு. இந்நூலின் இரண்டாவது 'லீலா காண்டத்தி'ல், 'பிந்திய மயூரேசர்

திருவவதாரப் படலத்'தில், 136ஆவது பாடல் முதல் 144 முடியவுள்ள ஒன்பது பாடல்களில் 'விநாயகர் கவசம்' இடம்பெற்றுள்ளமை அறியத்தக்கது.

தடவிழிகள் பாலசந்திரர் காக்க!
நாசியைச் சிந்திதார்த்தன் காக்க!
இதயம் தன்னைத் தோமகலும் கணநாதர் காக்க!
பக்கம் இரண்டையும் தராதரர் காக்க!
தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க!
நகங்கள் விநாயகர் காக்க....!

என்பனபோல் அமைந்துள்ள இக் கவசத்தைப் பயணத்தின் போது தோத்திரம் செய்தால் சகல துன்பங்களும் இரிந்தோடும்; மூத்த பயன் கைகூடும்!

இக்காண்டத்து, இறுதியில் உள்ள 'உபதேசப்படலத்'தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றைக் கச்சியப்பர் எடுத்து மொழிவதும் இவண் அறியத்தகும்.

இப்புராண நூலைப் பக்தியுடன் கேட்போர்க்குக் கிடைக்கும் நன்மைகள் பலவற்றைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார் கச்சியப்பமா முனிவர்

....உயர்ந்த இப் புராணம்தன்னைத்
தெளிதரப் பத்தியுள்ளம் திகழ்தரக் கேட்டோர்க் கெல்லாம்
வளர் பெருஞ் சனனப் பீழை மரணம் என்றிரண்டும் இல்லை!
இடர் இல்லை வறுமை இல்லை இன்னநோய் சிறிதுமில்லைத் தொடர்தரு துக்கம் இல்லைச் சோகமோகங்கள் இல்லை!
அடர்தரும் பாவம் இல்லை! அரிட்டங்கள் ஏதும் இல்லை!
படர்தரு பகைகள் இல்லை ! பயமில்லை இடையூறு இல்லை (2: 85:36--37)

இம்மட்டோடு பயன்கள் முடிவுபெறவில்லை! மேலும் உள: "கன்னிப்பெண் இப் புராணம் கேட்டால், நல்ல கணவனை அடைவாள்: விருப்போடு கேட்டால், பேடு நீங்கி, நன் மக்களைப் பெற்று வாழ்வாள். பொருள் இல்லாதோர் கேட்டால், 'பொன்' பெறுவர்: மேலும் கல்வி வல்ல புலவருமாவர்! (2:85:50)

**எளிய முறையில் வழிபாடு**

மேலும் பிள்ளையார் வழிபாடும் மிகமிக எளிதானது. அவரது திருவுருவத்தை அமைப்பது கடினமன்று! சந்தனம், மஞ்சள், களிமண், சாணம் போன்று எளிதாகக் கிடைக்கும் பொருளே போதும். அதனை உருட்டி வைத்துப் 'பிள்ளையார்' என வழிபடுவரை இன்றும் தமிழகத்தில் காணலாம். அன்றியும் அர்ச்சனைக்கு மலர்கள் தேடி எங்கும் அலைய வேண்டாம்! அறுகம்புல்லே போதும்! இவை தவிரப் பிள்ளையாரை வழிபட எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை! ஒரு குறிப்பிட்ட சாதியினர்தாம் பிள்ளையார் திருவுருவத்தை எழுந்தருளச் செய்ய வேண்டும், பூசை வழிபாடு செய்ய வேண்டும் என்பதுமில்லை! "பிள்ளையார் திருமுன் உயிர்ப்பலியும், புலாலும் கூடாது" என்ற ஒரே விதிதான் உண்டு! "சுருங்கக் கூறின், பிள்ளையார் ஒரு பொதுவுடைமைத் தெய்வம்" என்கின்றார் அறநெறியண்ணல் பழநியப்பனார் சாதிப்பாகுபாடு இன்றி, அனைவர் உள்ளங்களிலும் குடிகொள்ளும் தெய்வப் பிள்ளையாரே அவர்!



(மறு பிரசுரம்)



பரிவாரமூர்த்தி - கௌரியம்பாள்



சண்டேஸ்வர மூர்த்தி



நவக்கிரக மூர்த்திகள்



வைரவ மூர்த்தி



# விநாயகர் விரதங்கள்

எஸ்ஸாரெம்

விநாயகப்பெருமானுக்குரிய விரதங்கள் நான்கு. ஒவ்வொரு வாரத்திலும் வரும் வெள்ளிக் கிழமையும் (சுக்கிரவாரம்), ஒவ்வொரு மாதத் திலும் வரும் வளர்பிறைச் சதுர்த்தியும் தேய் பிறைச் சதுர்த்தியும் (சங்கட ஹர சதுர்த்தி) விநாயக சஷ்டியுமே அவை. சிறப்பாக ஆவணி மாத வளர்பிறையில் வரும் சதுர்த்தியையே, மக்கள் விநாயக சதுர்த்தி எனக் கொண்டாடு கின்றனர்.

மிகப் பழங்காலத்தில், ஆவணித் திங் களை முதல் மாதமாகக் கொண்டு மாதங்களைக் கணித்தல் பழக்கத்தில் இருந்திருக்கிறது. ஞாயிற்றுக்கிழமைக்குரியது சிங்க ஓரை (சிம்ம இலக்கினம்) என்றும் அதற்குரிய திங்கள் ஆவணி ஆதலின், ஆவணி தொடங்கி மாதங் களைக் கணக்கிடுதல் ஒரு முறை என்றும் பண்டையோர் கொண்டிருந்தனர்.

இந்த ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியே விநாயகர் அவதரித்த நாளாகும் என்பர். ஒரு சமயம் உமாதேவியார் விநாயகர் மந்திரமாகிய ஏகாக்ஷரத்தை உபதேசமாகக் கேட்டுப் பிள்ளை யாரை உபாசித்து வந்தார். விநாயகர் ஆறு திருக்கரங்களோடும், யானை முகத்தோடும், வெண்ணிறமான குழந்தையாகப் பாலசந்திர விநாயகர் என்ற திருப்பெயர் தாங்கி, உமா தேவிக்கு மகனாகத் தோன்றினார்.

அந்நாள் ஆவணி வளர்பிறைச் சதுர்த் தியும், விசாக நட்சத்திரமும் (முருகன் அவதரித் ததும் விசாக நட்சத்திரமே என்பது குறிப்பிடத் தக்கது.) சோமவாரமும் (திங்கட் கிழமை), சிம்ம இலக்கினமும் கூடிய நாளாகும். ஆகையால் ஆவணிச் சதுர்த்தி மிகச் சிறப்புடையதாகக் கருதப்பெறுகிறது.

விநாயக சதுர்த்தியன்று புற்று மண்ணால் விநாயகப் பெருமானின் திருவுருவம் அமைத்து, அதில் விநாயகரை மந்திரம், பாவனை, கிரியைகளால் எழுந்தருளச் செய்து, அபிஷேக அலங்காரங்கள் செய்து நிவேதனப் பொருட்கள் வைத்துப் போற்றி வழிபடுதல் முறையாகும்.

நிவேதன வகையில் மோதகம், அப்பம், எள்ளுருண்டை, அவல், பொரி, கரும்பு, விளாம்பழம் முதலியவை சிறந்தவையாகும். அவருக்கு உகந்த மலர்கள், தும்பை, வன்னி, எருக்கு, அறுகு, கொன்றை முதலியவையாகும்.

இவ்விதம் பெருமானை வழிபட்டு மறுநாள் அவ்வுருவத்தைத் திருக்குளத்திலோ, புண்ணிய ஆறுகளிலோ விட்டுவிடுவார்கள்.

ஒவ்வொரு மாதமும் வளர்பிறை – தேய்பிறைகளில் வரும் சதுர்த்தித் திதிகள்[2] வழிபாட்டுக்கு உகந்தவை.

வளர்பிறை (சுக்லபட்ச) சதுர்த்தி திதியின் அதிபதியான தேவி, தன்னை அவருடைய இருப்பிடமாகச் செய்துகொள்ளுமாறு வேண்டினாள். அதற்கு அருள் புரிந்த விநாயகர், 'நான் உனக்கு மத்தியானத்தில் காட்சி அளித்த படியால், சுக்லபட்ச சதுர்த்தியும் மத்தியானமும் கூடிய நன்நாளில் என்னை வழிபடுவோர், என் அருளைப் பெறுவர். சதுர்த்தியன்று ஆகார மில்லாது என்னை வழிபடுவோருக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறு களையும் வழங்குவேன்' என்றார்.

ஆவணித் திங்கள் வளர்பிறையில் வரும் சதுர்த்தி நாளில், இந்தச் சதுர்த்தி விரதத்தைத் தொடங்க வேண்டும். அன்று விடியற் காலையில் எழுந்து நீராடி அன்றாடக் கடமைகளைச் செய்த பிறகு. அர்ச்சனைக்குரிய மலர்களையும், மற்றும் அபிஷேகப் பொருட்கள், தூபதீபம், பூசைக்குரிய பொருள்களயும் சேகரித்துப் பூஜை மண்டபத்தை அமைத்து விநாயகரை வழிபட வேண்டும். இவ்வாறு அடுத்த மாத வளர்பிறைச் சதுர்த்தி வரையில் நாள்தோறும் முறைப்படி பூஜை செய்ய வேண்டும்.

இந்த முப்பது நாள்களிலும் ஆகாரம் பகலில் உறக்கம் இல்லாமல், இந்திரிய ஆசை களை நீக்கி, இறை எண்ணத்திலேயே ஈடுபட வேண்டும். 31 ஆவது நாள் விருந்தினர், ஏழை களோடு இருந்து உணவு உண்ண வேண்டும்.

முப்பது நாள் உண்ணாவிரதம் இருக்க இயலாதவர்கள், பூஜைக்கு முதல் நாளாவது அப்படி இருந்து மற்ற நாட்களில் பால், பழம், அவிசு (உப்பின்றி சமைத்த உணவு) முதலிய வற்றில் ஏதேனும் ஒன்றை உண்ணலாம், முப்பது நாள் விரதம் இருக்க முடியாதவர்கள், பூஜை தொடங்கிய ஒரு நாளாவது உணவு உறக்கம், இச்சை முதலியவற்றை நீத்து, இவ்விரதத்தைக் கடைபிடிக்கலாம்.

கிருஷ்ணபட்ச சதுர்த்தியின் அதிபதி யான சக்தி, விநாயகரை வழிபட்ட போது அவர் கூறினார். 'சந்திரோதயத்தில் நீ என்னை வழிபட்டதால், கிருஷ்ணபட்ச சதுர்த்தியும், சந்திரோதயமும் கூடிய காலம் முக்கிய விரத நேர மாகும். அப்போது என்னை வழிபடுவோருக்கு என் அருள் நிச்சயம் கிட்டும். சங்கடஹர சதுர்த்தி விரதம் கடைப்பிடிப்போரின் சங்கட மெல்லாம் தீர்ந்துவிடும் உனக்கும் சங்கஷ்ட ஹரணி என்ற பெயர் உண்டாகட்டும் என்றார்.



அங்காரகன் விநாயகரை ஒரு செவ் வாய்க்கிழமை சதுர்த்தியில் (மாசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தி) பூஜை செய்து பேறு பெற்றான். அதனால் செவ்வாயும் சங்கடஹர சதுர்த்தியும் சேரும் நாள் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். மாசிமாதம் தேய்பிறைச்

செவ்வாய்க்கிழமையன்று சதுர்த்தி வருமானால், அன்று கணபதிக்கு உகந்த சங்கடஹர சதுர்த்தி விரதத்தைத் தொடங்குவார்கள்.

சங்கடஹர சதுர்த்தியன்று காலை முதல் சந்திரோதயம் வரை, நீர் தவிர வேறு எதும் உட்கொள்ளாமல் சந்திரனைப் பார்த்த பின்னர் அருக்கியம் கொடுத்து (மந்திர நீர் இறைத்தல்) 21 அறுகம் ல் கொண்டு, விநாயகனின் 21 திருப்பெயர்களை அருச்சித்து, அதன்பின் உப்பு, காரம் சேர்க்காத உணவை உட்கொள்ள வேண்டும்.

இரவு கண்விழித்து விநாயகரின் கதைகளைக் கேட்க வேண்டும் இவ்வாறாக ஓராண்டு காலம் சதுர்த்தி நாட்கள் தோறும் விடாமல் விரதம் மேற்கொள்ள வேண்டும்.

ஆண்டு முழுவதும் 24 சதுர்த்திகளிலும் விரதம் மேற்கொண்டு, ஆவணி சுக்ல சதுர்த்தி யில் விரதத்தைப் பூர்த்தி செய்து விநாயகரை வழிபடுவதன்வழி பெறற்கரிய பேறுகளைப் பெறலாம்.

விநாயகரை வழிபடுவதற்கு ஏற்ற 21 பத்திரங்கள் (இலைகள்) வருமாறு ; அலரி, துளசி, மருதமர இலை, எருக்கு, அறுகு (வேரு டன் கூடிய வெள்ளறுகு மிகச் சிறந்தது என்று கூறுவர்), கையாந்தகரை (கரிசிலாங் கண்ணி), முள்ளி, அரசமர இலை, பச்சை (மாசிப்பச்சை), நாயுருவி, நாவல்மர இலை, எலுமிச்சை இலை, நொச்சி, சாதிப்பூ இலை, இலுப்பைமர இலை, இலந்தைமர இலை, தேவதாருமர இலை, மாதுளை இலை, விஷ்ணுகாந்தி இலை.

**விநாயக சஷ்டி**

ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியும், விசாக நட்சத்திரமும், சோம வாரமும், சிம்ம இலக்கினமும் கூடிய நன்னாளில் கயமுகாசுர னைச் சம்ஹரிக்கும் பொருட்டு விநாயகர் அவதரித்தார். அவர் கயமுகாசுரனை அடக்கி வாகனமாக்கிக் கொண்ட வரலாற்றையும் அறிந்துள்ளோம்.

முருகனைப் போலவே விநாயகப் பெருமானுக்கும் சஷ்டி விரதம் உகந்ததாகிறது. ஒரு முறை சிவபெருமானும் உமாதேவியும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்த போது, மகாவிஷ்ணு பொய்ச்சாட்சி சொல்லும்படி ஆகிவிட்டது. அதனால் கோபமுற்ற உமாதேவி, மகாவிஷ்ணுவைக் குருட்டு மலைப் பாம்பாகப் போகுமாறு சபித்து விட்டார்.அவருக்கு ஆறுதல் கூறிய சிவபெருமான் கயமுகாசுரவதம் நடைபெறும் வரை காத்திருக்குமாறு சொன் னார்.



விநாயகர் கயமுகாசுரனுக்கு முத்தி கொடுத்த பின்னர், கணபதீச்சரத்திலிருந்து மூஷிஹ வாகனத்தில் திரும்பும் வழியில், ஆலங்காட்டில், மலைப்பாம்பாக மாறியிருந்த மகாவிஷ்ணுவைக் கண்ணுற்றார். அவர் பார்வை பட்ட மாத்திரத்தில் மகாவிஷ்ணு தம் சுய உருவைப் பெற்றார் மகிழ்ச்சி அடைந்தார். விநாயகரே! எனக்குக் காட்சியளித்து நன்மை

புரிந்த இந்த மார்கழித் திங்கள் சஷ்டி நாளில் உம்மை யார் வழிபட்டாலும் அவர்கள் சகல துயரங்களிலிருந்தும் விடுபட்டுச் சகல விருப்பங் களையும் அடையும்படி அருள்புரிய வேண்டும் என்று கோரினார் அதற்கு விநாயகரும் மகிழ்ச்சியோடு இசைந்தார்.

இது விநாயக சஷ்டி என்றும் மார்கழி சஷ்டி, குமார சஷ்டி, பெருங்கதை விரதம் என்றும் கூறப்பெறுகிறது.

கார்த்திகைத் திங்கள் கிருஷ்ண பட்சப் பிரதமை முதலாக மார்கழித் திங்கள் (வளர் பிறை) சஷ்டி இறுதியாகவுள்ள இருபத்தொரு நாளும் இந்த விரதம் கடைப் பிடிக்கப் பெறுகிறது. சைவர்களுக்கு இக்காலம் மிகவும் புனிதமான காலமாகும்.

இவ்விரத காலத்தில் 21 நூல் இழை களினால் ஆகிய காப்புக் (காவல்) கட்டிக் கொள் வர். (ஆண்கள் வலது மணிக்கட்டிலும் பெண்கள் இடது மணிக்கட்டிலும் கட்டிக் கொள்வர்.)

21 நாட்களும் ஒரு பொழுது உண்டு, இறுதி நாளில் உபவாசம் இருந்து, இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை முதலானவற்றை நிவேதித்துச் சிறப்பு வழிபாடு செய்ய வேண்டும் 21 நாட்களும் பெருங்கதை எனப்பெறும் விநாயக புராணம் (பார்க்கவ புராணம்) படிக்க வேண்டும் கேட்கவேண்டும். (இந்த 21 நாட்களிலும் விநாயக கவசத்தை நாள் ஒன்றுக்கு 21 முறை முறை பாராயணம் செய்தால் நினைத்த காரியம் கை கூடும்)

அடுத்த நாள் ஏழை எளியவரோடு இருந்து உணவு உண்டு, விரதத்தை நிறைவேற்ற வேண்டும்.

**குறிப்புகள்**

1. விநாயகருக்குரிய ஷோடச (16) நாமாக் களில் இது ஒரு பெயர்; Baala - Chandran, அதாவது குழந்தை சந்திரன் என்று நிறையப்பேர் இதைத் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கி றார்கள். Baa இல்லை; அது தப்பு. Bhaa என்பதே சரி, Pa Pha, Ba, Bha என்ற சம்ஸ்க்ரு தத்தில் நாலு இருப்பதில், நாலாவதான Bha காரம் போட்டு Bhaala chandran என்று சொல்ல வேண்டும். Bhaalam என்றால் நெற்றி அல்லது முன்தலை. முன்னந்தலையில் எவர் சந்திரனை தரித்துக் கொண்டிருக்கிறாரோ அவர் Bhaala Chandran, அல்லது இரண் டாவது ப. வாக, Phaala என்றும் சொல்லலாம். அப்படிச் சொன்னால், கேசத்தில் இரண்டு பக்கங் களில் ஒன்று, ஈசுவ ரன் ஜடாபாரத்தில் நேராக சந்திரனை வைத்துக் கொள் ளாமல், இடப்பக்கமாகச் சாய்த்து வைத்துக் கொண்டிருப்பதாக அநேக சில்ப – சித்திரங் களில் பார்க்கிறோமல்லவா? அங்கே பரமசிவன் Phaala ஆகிறார், ஆனால், பாலச்சந்திரன் என்ற பெயர், முக்கியமாகப் பிள்ளையாருக்குத் தான். காஞ்சிப் பெரியவர் சங்கராச்சாரிய சுவாமிகள், தெய்வத்தின் குரல், 4ஆம் பாகம்.



2. சாதாரணமாக ஒவ்வொரு தெய்வத்துக் கும் ஒரு குறிப்பிட்ட திதி விசேஷமானதாகும். அது வளர்பிறை, தேய்பிறை என்கிற இரண்டில் ஏதோ ஒன்றில் வருவதாகத்தான் இருக்கும். முருகனுக்கு சஷ்டி என்றால் அது சுக்கல சஷ்டிதான். பரமேஸ்வரனுக்குச் சதுர்த்தசி

என்றால் கிருஷ்ணபட்ச சதுர்த்தசிதான்.அதற்கு மாத சிவராத்திரி என்று பெயர். இராமருக்கு நவமி பூஜை என்றால் சுக்கல நவமிதான். கிருஷ்ணருக்கு அஷ்டமி பஜனை என்றால் கிருஷ்ணபட்ச அஷ்டமிதான். அம்பாளுக்குப் பௌர்ணமி அது சுக்லபட்சத்தில் மட்டும்தான் உண்டு. ஆனால் பிள்ளையாருக்கு மட்டும் சதுர்த்தி விசேஷம் என்றால், சுக்லபட்ச சதுர்த்தி, கிருஷ்ணபட்ச சதுர்த்தி இரண்டுமே அந்த விசேஷத்துக்கு உரியவனாக இருக்கின்றன காஞ்சிப் பெரியவர், தெய்வத்தின் குரல் 4 ஆம் பாகம்.

3. சங்கடஹர சதுர்த்தி என்றால் உபத்திரவங்களைப் போக்குகிற சதுர்த்தி என்று அர்த்தம். ஆனால் ஹர என்ற இந்த முக்கியமான வார்த்தையை விட்டு விட்டு சங்கட சதுர்த்தி என்று சொல்கிறார்களே என வருத்தப்படுகிறார் சங்கராச்சாரிய சுவாமிகள்.

4. இந்தப் பூஜை முடியும்போது ரோஹிணி சமேதனான சந்திரனையும் பூஜை பண்ண வேண்டும் என்று, புராணத்தில் விநாயகர் குறிப்பிடுவதாகக் காஞ்சிப் பெரியவர்கள் கூறுகிறார்கள்.

5. விநாயகப் பெருமானைச் சதுர்த்தி நாட்களில் வழிபடுவதால் கிடைக்கும் 21 பெரும் பேறுகள்; தர்மம், பொருள், இன்பம், சௌபாக்கியம், கல்வி, பெருந்தன்மை, நல்வாழ்வுடன் கூடிய மோட்சம், முகத்தில் பால் வடியும் தன்மை, வீரலக்ஷ்மி கடாட்சம், விஜயலக்ஷ்மி கடாட்சம், எல்லோரும் தன்னிடம் அன்பாக இருக்கும் தன்மை, குடும்பத்தில் கர்ப்ப ரக்ஷை, மக்கட்பேறு , நுண்ணறிவு, நற்புகழ், சோகத்தினால் வாடாத தன்மை, அசுபங்களை அகற்றல், தன் வாக்குக்கு எதிர்வாக்கு அடங்கிப் போதல், கோபங் கொண்டவர்களைச் சாந்தப்படுத்தும் தன்மை, பிறர் ஏவும் ஆபிசாரம் (பகைவன் மரணம் அடையும்படி செய்யும் கொடுந்தொழில்), அடக்குதல், துயர் தீர்த்தல், நஜன், வினை தீர்க்கும் விநாயகர்.



6. அரும் பாத்தை வேதவிநாயகர் பிள்ளைத் தமிழ்ப் பாடல் ஒன்றில் (வருகைப் பருவம்) இவை குறிப்பிடப் பெறுகின்றன.

(மறு பிரசுரம்)

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார் மிசைவிளங்க
ஞானமத ஐந்து கர மூன்று விழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிறப்பாம்.

# மகா கணபதியின் மகிமைகள்

ஐங்கரன் அடியார்
ந.ஜவகர்லால் நேரு குடும்பம்

இந்துமா சமுத்திரத்தில் அமைந் துள்ள எழில்மிகு நாடாம் தமிழீழத்தின் காவலூராம் தீபகற்பத்தின், மணிமுடியாம் வேலணை எனும் சைவமும் தமிழும் கொஞ்சி விளையாடும் அழகிய கிராமத்தின் நடுவே மின்னும் சுடரொளி யாய் நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும் முடிப்பிள்ளையார் கோயிலே, எம்குலத் தெய்வம் குடியிருக்கும் கோயிலாகும்.

இக்கோயிலானது, மிகவும் பழமை வாய்ந்த, ஓர் ஒப்பற்ற கலைக்கோயிலாகும். இதுவே இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள ஒரே ஒரு கருங்கற் கோயிலாகும். இதைவிட போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் அவர்கள் அனைத்துக் கோயில்களின் முடிகளையும் அழித்தபோது இக்கோயில் முடி மட்டும் அழியாது நிமிர்ந்து நின்றபடியால்தான் அதற்கு முடிப் பிள்ளையார் என்னும் பெயர் நிலைத்தது. இவ் ஆலயத்தில் அமைந்துள்ள வண்ண ஓவியங் களும், வளைமாடங்களும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த வாயிற் கதவுகளும், சந்நிதிகளும் எம் ஊரின் கலை வளர்ச்சிக்குக் கட்டியம் கூறி நிற்கின்றன. அத்தோடு இக் கோயிலானது எம் சமய வரலாற்றை தன்னகத் தே கொண்டுள்ளதோடு மட்டுமல்லாது அதை மக்களுக்கு இலகுவாகப் புரியவைக்கும் ஓர் இணையற்ற ஊடகமாகவும் திகழ்கிறது. இதைவிட எத்தனை இடர் வந்தபோதும் இழுத்து மூடப்படாத கோயிலாக இன்றுவரை திகழ்வது எம் முடிப்பிள்ளையார் கோயில் ஒன்று மட்டுமே யாகும். இவையெல்லாம் எம் முடிப்பிள்ளை யாரின் மகிமைகளுக்கு சான்றுகள்

இன்று எல்லாம் வல்ல எம்பெருமான் மகா கணபதிக்கு மகா கும்பாபிஷேகமாம் இதைக் கேட்கும் போதே மெய் சிலிர்க்கிறது. எம் பெருமானின் ஒப்பற்ற சக்தியை நினைக்கும் போதே கண்ணீர் மல்குகிறது. எம் ஊரில் உள்ள அனைத்து மக்களையும் அத்தனை பிரச்சினை களிலிருந்தும் காப்பாற்றி அவர்கள் அனைவருக் கும் நல்வாழ்வு கொடுத்து, இன்று மீண்டும் அவர்களை தன்னிடம் அழைத்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் எம் பெருமானின் மகிமைகளை எடுத்தியம்புவதற்கு வார்த்தைகள் போதாது.

புலம்பெயர்ந்து வாழும் மக்களும் புண்ணிய தரிசனமான இந்த மகா கும்பாபிஷே கத்தைப் பார்க்கப் பெரியபுலத்தான் தான் அருள்

பாலிக்க வேண்டும். இக்கோயிலின் வளர்ச்சி, இத்தோடு நிற்காமல் எதிர்காலத்தில் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் வந்து தங்கி நின்று தரிசனம் பார்த்துச் செல்ல தங்குமிட வசதிகளும், எம் ஊர் மக்கள் தம் பிள்ளைகளின் திருமண வைபவங்களை நடாத்தி வைக்க கல்யாண மண்டபமும், எப்போதும் நிறைந்த மனத்தோடும், பசியில்லாமலும் வீட்டுக்குப் போக நித்திய அன்னதானம் வழங்க அன்னதான மண்டபமும் இன்னும் பல வளர்ச்சிகளோடும் திகழ வேண்டும். இதற்கு எம்மூர் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கப் பிள்ளையார் தன் பரிபூரண ஆசியை இந்த நல்ல தினத்தில் எமக்கு வழங்க வேண்டும் என்று பிரார்த்தித்து அனைத்து மக்களுக்கும் பெரியபுலம் மகா கணபதியின் அருட் கடாட்சம் எப்போதும் கிடைக்க வேண்டும் என்றும் இம் மகாகும்பா பிஷேக தினத்தில் வேண்டுகிறோம்.

## கடவுள் உறைவிடம்

"தேடிக்கண்டு கொண்டேன்
திருமாலொடு நான் முகனும்
தேடித்தே டொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

– திருநாவுக்கரசர்

"இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் – அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து

– மணிவாசகர்

" பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்கே ஒத்த தேவர் பிரான்
செய்யானுங்கரிய நிறத்தானும் தெரிவரியான்
மையார் கண்ணியொடு மகிழ்வான் கழிப்பாலையதே"

– சுந்தரர்



# விநாயகர் திரு அவதார மகிமை

எஸ். ஐ. தனபாலசிங்கம்
சமாதான நீதவான்.

"அல்லல் போம் வல்வினை போம் அன்னை வயிற்றிற் பிறந்த
தொல்லை போம் போகாத்துயரம் போம் – நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்தில் விற்றிருக்கும்
கணபதியைக் கை கொழுதக்கால் "

விநாயகப் பொருமானின் திருவுருவத்தைக் கவனிப்போமாகில் அதில் தத்துவங்கள் பல நிறைந்து இருப்பதைக் காண்போம். நாம் ஒரு கருமத்தைச் செய்யத் தொடங்குமுன் பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்குவது மரபாகும். ஐங்கரனது திருமுக வடிவானது பிரணவ உருவாகும். துதிக்கையோடு இருக்கின்ற சிரசு, கையிலே இருக்கின்ற மோதகம் இவற்றை எல்லாம் சேர்த்துப் பார்த்தால் பிரணவ வடிவம் தோன்றும். பிரணவத்தில் அகாரம், உகாரம், மகாரம் ஆகிய மூன்று எழுத்துக்கள் அடங்கி உள்ளன. ஒலி வடிவமான இவை முறையே பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும் மூர்த்திகளைக் குறிக்கும் என்பர். பிள்ளையார் சுழியில் உள்ள வட்டமும், நீட்டமும், பிந்துவையும், நாதத்தையும் குறிக்குமென்பர்.

சிவனும், சக்தியும் எண்கோண மண்டபத்தைச் சுற்றிப் பார்த்து வரும்போது அங்கிருந்த "ஓம்" என்ற மந்திரத்தைக் கண்ணுற்றனர். அவ் ஒலி வடிவமானது சமஷ்டிப் பிரணவம், வியஷ்டிப் பிரணவம் ஆக இரு கூறுகளாகி அகாரமாகிய சிவம் ஆண் யானை வடிவாகவும், உகாரமாகிய சக்தி பெண் யானை வடிவாகவும் பிரணவத்தினின்று வெளிப்பட்டுத் தோன்றிய சேர்க்கையினின்றே பிரணவ சொரூபியாம் ஐங்கரன் அவதாரம் செய்தார். இத்தோற்றத்தின் பின் களிறும், பிடியும் பிரணவமாகிய ஓங்காரத்துடன் மீண்டும் ஒன்றிப் பழமை போலாகின. அந்தப் பிரணவத்தைப் புருவத்தின் மத்தியில் நினைந்து தியானம் பண்ணிக் கொண்டு ஔவையார் அருளிய கிரந்தம்தான் "விநாயகர் அகவல்" ஆகும். யோக சாஸ்திர தியானம் பண்ணுகிற முறை எல்லாம் அதில் அடங்கி உள்ளது.

விநாயகன் என்றால் தனக்கும் மேல் ஒரு தலைவன் இல்லையென்று பொருள்படும். கணபதி (கணேசன்) – க = ஞானம், ண = மோட்சம், பதி = தலைவன் ஞானத்தைத் தந்து மோட்சத்தை அளிப்பவன் என்று விநாயகர்

திருவவதாரத்தைக் கந்தபுராணத்திலே ததீசி முனிவர் கூறினார். விநாயகரது ஐந்து கரங்களும் ஐந்தொழிலுக்கும் அதிபதி என்பதை உணர்த்துகின்றன. அவரது மத்தள வயிறும் (மத்தள வயிறன் உத்தமி புதல்வனை – திருப்புகழ்), பேழை வயிறும் (பேழை வயிறும் பெரும்பாரக் கோடும் – விநாயகர் அகவல்) அண்டங்களெல்லாம் அவனில் அடக்கம் என்பதையும், நாகாபரணம் – குண்டலினி சக்தியை ஆள்பவரெனவும், அங்குசம் – ஆன்மாக்கள் ஐம்பொறிகளாகிய மத யானையை அடக்க உதவுபவர் எனவும், பாசம் – உயிர்களைப் போக போக்கியங்களிற் பிணிப்பவர் எனவும், சிவபெருமானிடம் இருந்து மாங்கனியைப் பெற்றமையால் ஞான வடிவினர் எனவும், தாயையும் தந்தையையும் சுற்றி வலம் வந்து மாங்கனியைப் பெற்றமையால் "அம்மை அப்பரே உலகம்" என்பதைச் செயல் வடிவில் உணர்த்தியவர் எனவும், ஒருபால் தந்தத்துடனும் ஒருபால் இல்லாமலும் இருப்பது ஆண்,பெண் ஒன்றிய வடிவான அர்த்தநாரீஸ்வரர் வடிவினர் எனவும் நமக்கு உணர்த்துகின்றன.

விநாயகர், பார்வதி, பரமேஸ்வரருக்குப் பிள்ளையாக இந்த உலகத்திற்கே மூலத்திலிருந்து உற்பவித்ததனால் அவரை நாம் விநாயகர் என்பதைவிட பிள்ளையார் என அழைக்கின்றோம். இவரைப் பிரதான மூர்த்தியாக வைத்து வணங்குவதை அல்லது வணங்கும் மதத்திற்குக் காணாபத்தியம் என்று பெயராகும். பிள்ளையாரைத் தெய்வமாகவும், அம்மை அப்பனாகவும், நண்பனாகவும், குழந்தையாகவும் நினைந்து வழிபட எக்குறையும் வாராமல் காப்பார். எழைகளுக்கு எளியவர் அவருக்கு என்று இருக்க உரிய இடம் ஒன்று இருந்தாலும் எங்கும் இருப்பார் மண்வீட்டிலும், ஓலைக் கொட்டிலிலும், மர நிழலிலும் வீற்றிருப்பார். உதாரணமாக :– சிவன் திருக்கைலாயம், அம்பிகை – மணித்துவீபம், பிரம்மா சத்திய லோகம், விஷ்ணு – வைகுண்டம், முருகன் – கந்தமாதன்மலை, விநாயகர் – ஆனந்தலயம்.

இறைவன் மிக உயர்ந்த ஞான நிலையில் பரஞ்சோதியாக நாம ரூபமற்றவனாக விளங்கினாலும், ஸகுணமாக குணம் குறி உள்ள பரம் பொருளாகவே வழிபடுவர். ஸகுண நிலையிலே பிள்ளையார், முருகன், சிவன், சக்தி, விஷ்ணு, பிரம்மா, வயிரவர், வீரபத்திரர், ஐயனார், முதலிய நாமங்களோடும் அவற்றோடு தொடர்புடைய குணாதிசயங்களையும் பெறுவான். பரம்பொருள் ஒன்றேயாயினும் பல பெயர்களால் அழைக்கப்படுவதும், பல்வேறு நோக்கங்களுக்காக பல்வேறு வடிவங்களை வெவ்வேறு காலகட்டங்களில் தாங்கி அதர்மத்தை, ஆணவத்தை அழித்து தர்மத்தைக் காத்தருளினான் எனவும் கூறப்படுகிறது. இங்கே,



"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை உரு நாம் அறியஓர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்
ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ

என்ற மணிவாசகரின் 'திருத்தெள்ளேணப்' பாடலிலும்
"அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடி

நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந் தம்
சலமுகத்தால் ஆங்காரந் தவிரார்காண் சாழலோ"

என்ற மணிவாசகரின் 'திருச்சாழல்' பாடலிலும்,

"நானெனும் ஆணவம் நாசமதாகத்
தானென வந்து தயக்கந்தீர ஆன குருவாய்
ஆட்கொண்டருளி" என்ற நக்கீரதேவரின் விநாயகர் 'திருவகவல்' மூலமாகவும் மேற் கூறியவற்றிற்கு விளக்கம் காணக்கூடியதாகவுள்ளது.

விநாயகர் புராணம் தோன்றக் காரண கர்த்தாவானவர் பிருகுமா முனிவர் ஆவார். இப்புராணத்தின் மறுபெயர் பார்க்கவ புராணம் எனப்படும். வடமொழியில் இருந்த விநாயக புராணத்தைத் திருவாவடுதுறை ஆதீனத் தலைவராகிய கச்சியப்ப முனிவர் தமிழில் பாடினார். தமிழ்ப் பாடல்களின் எண்ணிக்கை 6225 ஆகும். புலவர் அ. இராமலிங்கம்பிள்ளை அவர்கள் இவற்றை வசன நடையில் எழுதினார். வசன நடையில் உள்ள விநாயக புராணத்தைப் பிள்ளையார் பெருங்கதை எனவும் அழைப்பர். இது இருபெரும் பிரிவுகளைக் கொண்டது.

உபாசனைக் காண்டம் – 12 அத்தியாயம்
லீலா காண்டம் – 50 அத்தியாயம்

விநாயகருக்கு ஐம்பத்தொரு வடிவங்கள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ள போதும் முதல் முப்பத்திரண்டு வடிவங்களே முக்கியமானவை; அவற்றுள்ளும் முதல் பதினாறு வடிவங்கள் மிக முக்கியம் வாய்ந்தவை எனவும் கூறப்பட்டுள்ளது.

விநாயகர் அவதாரத்தின் மகிமையை கஜமுகசூரனின் வரலாற்றால் அறியக் கூடியதாகவுள்ளது. அசுரர் குலம் தழைக்க சுக்கிர பகவான் மூலம் அசுரர் தலைவன் விபுதை என்ற பெண்ணை மாகதர் என்ற முனிவரிடம் அனுப்பியதன் காரணமாகவே கஜமுகசூரன் பிறந்தான். இவனது தலைநகரம் மாகததேசம் எனப்படும். கஜமுகசூரன் சிவனை நோக்கி நாலூ கோடி ஆண்டுகள் தவம் செய்தான்.

முதலாம் கோடித்தவம் – தண்ணீர்
இரண்டாம் கோடித்தவம் – காற்று
மூன்றாம் கோடித்தவம் – அன்னாகார மின்றி
நான்காம் கோடித்தவம் – ஒன்றுமே இன்றி

கஜமுகசூரனின் கடும் தவத்தை மெச்சி சிவபெருமான் காட்சி கொடுக்க, அவரிடம் நான்கு வரங்கள் கேட்டான்



1. உயர்திணையாலோ அஃறிணையாலோ அழியக்கூடாது
2. எந்த அஸ்திரத் தாலும் அழிவு நேரக்கூடாது
3. சிவன் அம்சமின்றி எந்த அம்சமும் கொல்லக் கூடாது
4. அப்படி யாரும் கொன்றால் என்றும் என்னை நினைந்து தோப்புக்கரணம் போடவேண்டும் என்பதாகும்.

"தோர்புகர்ணம்" என்பதே தோப்புக் கரணமாக மாறியது தோர்பு என்றால் கைகளால் என்று அர்த்தம்; கர்ணம் காது என்று அர்த்தம். தோர்பிக்கரணம் என்பது கைகளால் காதைப் பிடித்துக் கொள்வதாகும்.

கஜமுகசூரன் கேட்ட வரங்களைச் சிவபெருமானும் கொடுத்தார் – கொல்லவும் வழி வகுத்தார். விநாயகர் தோன்றிக் கஜமுகசூரனை அழிக்கத் தனது கொம்பொன்றை எறிந்து கொன்றார். இவனுக்கு அளித்த வரங்களுக்கு இது அப்பாற்பட்டது என்பது கவனத்துக் குரியதாகும். இறந்த கஜமுகசூரன் பெருச்சாளி வடிவம் எடுக்க விநாயகர் பார்வையாலே அவனுக்கு நயன தீட்சையையும், திருக்கரங் களினாலே தொட்டு உத்தரிய தீட்சையையும் வழங்கி ஆணவம் கொண்ட அவனை அடக்கி தனது வாகனமாக்கினார். ஆணவம் ஒரு போதும் அழிவதில்லை. அது வலிமை குன்றும், சூரனது ஆணவம் அழியாது வலிகுன்றி சேவலும், மயிலுமாக மாறியமையும் மற்றும் "ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தரு வாய்" எனும் சிவபுராணமும் நோக்கற்பாலது. கணபதியைக் காட்டிலும் சரீரத்தில் பருமனான தெய்வங்கள் வேறு இல்லை என்றாலும், இவரே எல்லோரிலும் பார்க்கப் பாரத்தில் குறைந்தவரா வார். சகல சீவராசிகளும் இவ்வுலக வாழ்வில் ஆண் துணை இன்றிப் பெண்ணும் பெண் துணை இன்றி ஆணும் தனித்து வாழ்வது என்பது பூரணப்படுத்தப்படாத வாழ்வு என உணர்த்திக் காட்டும் வகையில் சிவன் – பார்வதி, திருமால் – லக்குமி, பிரம்மா – சரஸ்வதி, முருகன் – வள்ளி, தெய்வானை, பிள்ளையார் – சித்தி, புத்தி ஆகிய சக்திகளை இணைத்துக் காட்டுவதனை புராணங்கள் வாயிலாக அறிவோமாக.

30.03.2005 அன்று அருள்மிகு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையாருக்கு மகா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா அவரது அனுக்கிரகத்தால் எவ்வித விக்கினமுமின்றி நடைபெறும் வேளையில் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என எண்ணி விநாயகரின் திருவருளைப் பெற்று வாழ்வோமாக!



"எட்டுத்திசையும் பதினாறு கோணமு மெங்கு மொன்றாய்
முட்டித் ததும்பி முளைத் தோங்கு சோதியை மூடரெல்லாம்
கட்டிச் சுருட்டித் தங்கத்தில் வைப்பர் கருத்தில் வையார்
பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகரே

– பட்டித்தடிகள்

# விநாயகனை வணங்கி வாழ்வோம்

வேலணை மேற்கு, மகா கணபதிப்பிள்ளையார்
ஆலய வழிபடுநர் சபை
கனடா

சீலமொடு செந்தமிழும் சிவநெறியும் போற்றி
ஞாலமெலாம் தம் பெயரோச்சி
நலமொடும் வாழ
கால மெலாம் கைகொடுக்கும்
வேழ விநாயகனுக்கு
கோலமாய் கோபுரம் கட்டி

குடமுழுக்காட்டும் இந்நன்நாளில் சாலவும் மகிழ்ந்து வணங்கி வாழ்த்துகின்றோம்.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வு இலாச்
செல்வரும் சேர்வது நாடு

திருவும் கல்வியும் அழகும் கொண்டது வேலணையூர். தலவிருட்சமாய் கற்பகதருவாம் பனையும் செந்நெல்வயல்களும், தோட்டம் துரவுகளும் ஆலயங்களும் பாடசாலைகளும் நிறைந்த கிராமம். தெய்வ சிந்தனையும் அயராமுயற்சியும் இயல்பான மதிநுட்பமும் கொண்ட மக்கள் வாழும் திருப்பதி. வந்தவினை போக்கி வருவினை தவிர்க்கும் விந்தைமிகு விநாயகனை அவர்களது குல தெய்வமாக வழிபட்டு வருகிறார்கள், இவர்கள்.

எமது ஆலயம் நீண்ட பாரம்பரியமும் சிறப்புகளுமுடைய ஆலயம். இலங்கைத்தீவில் கருங்கல்லினால் கட்டப்பட்ட கோவில்கள் மிகச் சிலவற்றுள் இதுவும் ஒன்று என்ற சிறப்புப் பெற்றது. மேலும் மக்கள் இடப்பெயர்வின் போது பல ஆலயங்கள் இழுத்து மூடப்பட்டன. ஆனால் எமது ஆலயக் குருக்கள் நீ இருக்கப் பயமேது என அங்கேயே இருந்து விநாயகனுக்கு நித்திய நைவேத்திய கருமங்களை ஆற்றினார். மேலும் ஆலயம் பல அகதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தது. அமுதசுரபியாம் ஆகாரமும் கொடுத்தது. விநாயகரின் இந்த அற்புதங்கள் எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. அவனிலே மேலும் பற்று வைராக்கியத்தை வலுவடையச் செய்கின்றன. கோயிலுக்கு அழகு கோபுரம் என்ற வகையிலே வேலணை கிராமசபை ஆட்சி வீச்சுக்குள் கோபுரம் கொண்ட கோயிலினுள் அமர்ந்திருப்பவன் விநாயகன் என்று மேலும் ஒரு சிறப்பை தட்டிக்கொண்டார்.


பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும்
நற்றவ வானிலும் நனிசிறந்தனவே

புலம் பெயர்ந்து வாழும் மக்கள் 20 ஆண்டுகளாகியும் இன்னும் பிறந்த மண்ணையே நேசித்துக் கொண்டிருக்கிறார்கள். தேசங்கள் பிரித்தாலும் நேசங்கள் விட்டகலா. சுனாமி

அழிவுக்கு பெரிதும் கைகொடுத்தது வெளி நாட்டு உடன்பிறப்புகளே என்பதை யாரும் மறுக்க முடியாது. மேலும் அவர்கள் வழிபட்ட தெய்வங்களையும் மறக்கவில்லை. அவர்களின் பங்களிப்புடனேயே இக்கோயில்கள் பல புனருத் தாரணம் செய்யப்பட்டு சோழர் காலத்துமறு மலர்ச்சியை நினைவு கூர்ந்து நிற்கின்றன. இப்பணியிலே பெரியபுலத்தான் அடியார்களும் பின்னிற்கவில்லை. வேலணை பெரியபுலத்தான் அடியார்கள் பலர் வாழ்கின்றோம். நாம் வே.மே.ம.க.பி.ஆ வழிபடுநர்சபை ஒன்றை திரு.ச.நல்லைநாதன் அவர்களின் முயற்சியோடு ஆரம்பித்து செயற்பட்டுக் கொண்டிருக்கின் றோம். இதில் 15பேர் கொண்ட நிருவாக உறுப்பினர்கள் உள்ளனர். பலரும் முயற்சியும், சுறுசுறுப்புமுடைய இளைஞர்கள் இச்சபையின் நோக்கங்கள்.

1. கோயில் திருப்பணிகளுக்கு உதவுதல்
2. கனடாவாழ் வழிபடுநர்களின் நலன் கருதி சமய சமூக கலாசார நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடாத்துதல்.
3. கோயில் வருடாந்த உற்சவ காலத்தில் இங்கு ஒரு ஆலயத்தில் விசேட பூசை ஒழுங்குகள் செய்து இவர்களது விநாயகனை நினைவு கூரல்
4. தாயகத்தில் வாழும் கோயில்களோடு தொடர்புடைய சிறுவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவுதல்.

16.12.2001 அன்று நிருவாக சபை கூடியபோது தலைவர் அவர்கள் ராஜதுரை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கோபுரம் நீண்ட காலம் கட்டிமுடிக்கப்படாமல் இருப்பதை நினைவு கூர்ந்து அந்தப் பணியை நாம் முன்னெடுத் தால் என்ன என ஓர் அச்சம் கனிந்த தொனியில் கேள்வி எழுப்பினார். சற்று அமைதியின் பின் எல்லோரும் முன் மொழிவை ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். அதற்கான உத்தேச செலவு விபரம் ஆலய நிருவாகத்திடம் கோரப்பட்டு அது கிடைத்ததும் சற்று தயங்கினோம். இருந்தும் வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் உடன் பிறப்புகளையும் இணைத்துக் கொள்வது என்ற துணிவுடன் நிதி சேகரிப்பதை ஆரம்பித்தோம். கனடாவாழ் ஐங்கரன் அடியார்கள் மனமுவந்து தங்கள் பங்களிப்பை செய்தார்கள். முதற் தொகுதி பணம் அனுப்பப்பட்டதும் பாரிய கோபுர வேலை தொடங்கியது. எம் பெருமானின் கருங்கற் திருப்பணிக்கு ஏற்றதாக இராஜ கோபுரத்தின் அமைப்பும் கருங்கல்லினால் அமைய வேண்டும் என்ற எண்ணத்தினால் அமரர் கணபதிப் பிள்ளை இராஜ துரை அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இராஜகோபுரம் கருங்கல்லால் நிர் மாணிக்கப்பட்டது. ஆலய பரிபாலன சபை இராஜ கோபுர உபயகாரர்களை தொடர்பு கொண்டு இராஜகோபுர மிகுதிவேலை பூர்த்தி செய்வதற்குஅனுமதி பெற்று வேலைகள் தொடங்கப்பட்டன.



கற்சிலைக் கலைஞரின் கைகள் கருங்கல்லில் பாய்ச்சிய உளிகளின் ஓசை உலகெலாம் விநாயகனின் விண்ணப் பமாய் ஒலித்தது. பணம் பவுணாய் வெள்ளியாய், டொலராய் இன்னும் பலவாய் குவிந்தது. கோபுரத்தோடு முன்தோற்று வாயில் மணிமண்டபமும் அழகுப்பொலிவோடு அற்புதமாய்க் காட்சி கொடுக்கின்றது. இதுவே கோபுரம் கட்டிமுடிக்கப்பட்ட வரலாறு காலத்தால் அழியாத கலைக்கோயிலாக சமகால மக்களின்

பக்தி வைராக்கியத்தை வருங்கால சந்ததியி னருக்கு காவிச்செல்லும் கருவூலமாக அமைந்து நிற்கப் போகின்றது.

மேலும் இத்தனை சிறப்பும் பெருமையும் உடைய விநாயகன் வீதிஉலா வரும் போதும் கம்பீரமாக வர அழகு சித்திரத்தேரும் பெருஞ் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இப் பாரிய தேரில் ஆரோகணிக்க தேர்முட்டியும் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது. இவை இரண் டும் தனிப்பட்ட உபயங்கள் இவர்களுக் கும் எமது பாராட்டுதலுடன் கூடிய நன்றிகள்.

இப்பாரிய திருப்பணிகளை ஏககாலத்தில் செய்து முடிக்க இணைந்து கொண்ட இதயங் களுக்கும் உடலால், உள்ளத்தால் ஒய்வின்றி களத்தில் நேரடியாக நின்று உழைத்த ஆலய நிருவாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் மொத்தத்தில் அனைவருக்கும் கனடாவாழ் ஐங்கரனடியார்கள் நெஞ்சம் நிறைந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

எமது அடுத்த நோக்கம் எமது கிராமத்தின் வருங்கால முதுகெலும்பாக அமையப்போகும் சிறார்களின் மேம்பாடாகும். கேடில் விழுச் செல்வம் கல்வி எனும் பாரம்பரியமுடையவர்கள் தமிழர். இன்றைய காலச் சூழல் கல்விக்கு தடையாக உள்ளதை நாமறிவோம். இதை ஈடுசெய்ய ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அங்கிருந்துதான் நாம் எதிர்பார்க்க முடியும். கோயிலை மையமாகக் கொண்டே கல்வி முன் னெடுக்கப்பட்டது. சரித்திரம் எனவே ஆலயத் தையும் கல்வி மேம்பாட்டையும் இணைத்தே நோக்குகின்றோம். ஆலய நிருவாகிகள் கல்வி யில் ஆர்வமும் திறமையும் இருந்தும் வறுமை காரணமாக தொடர முடியாதவர்களை இனம் கண்டு தெரியப்படுத்தினால் முன்னுரிமைப்படி நாம் உதவ என்றும் விருப்பமாக உள்ளோம். ஒரு ஒளியில் இருந்து பல ஒளிகள் பிரகாசிக்கலாம். இது எப்படிக் கோபுரத் திருப்பணி ஆர்வத்தோடு முன்னெடுக்கப்பட்டதோ அதேபோன்று விநா யகரின் அடியார் களின் உலகளா விய ஒரு தொடர் வலையாக்கம் ஏற் பட்டு ஒரு முன் மாதிரிக் கிரா மமாக ஏற்படுத் தலாம்.



தனிமரம் தோப்பாகாது ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் ஒரு நிலைப் படுத்தி செயற்பட எல்லாம் வல்ல விநாயகனை வேண்டி நிற்போம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"



வசந்த மண்டப முகப்புத் தோற்றம்



பரிவார மூர்த்தி -இலட்சுமி



பரிவார மூர்த்தி - சந்தான கோபாலர்



பரிவார மூர்த்தி - முருகன் வள்ளி தெய்வயானை



# சைவ வாழ்க்கை முறை

திரு.அ. பக்தவத்சலம்

சைவம் சிவ சம்பந்தம் உடையது. சிவம் என்ற சொல்லிற்கு அன்பு எனும் பொருளைத் தருகிறார் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த திருமூலநாயனார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்திலர்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே
– திருமந்திரம்

எனவே சைவ வாழ்க்கை முறை என்பது அன்பு வாழ்க்கை முறையே ஆகும். அன்பு வேறு சிவம் வேறு இல்லை. அன்பு என்பதன் பொருள் சுயநலம் இல்லாமையே ஆகும்.

(அல்+பு =அன்பு=தான் அல்லாத தன்மை)

அன்பு இலார் எல்லாம் தமக்குரியர் அன்பு உடையார்
என்பும் உரியர் பிறர்க்கு – திருக்குறள்

ஒருவர் அன்புடையவர் என்றால், அவர் சுயநலம் அற்றவராக இருத்தல் வேண்டும். தன்னுடைய உடம்பு கூடப் (எலும்பு கூட) பிறருக்குச் சொந்தமாக நினைப்பார்கள்.

இதன் அடிப்படையில் நின்று சைவ வாழ்க்கை முறையினைக் காண்போம்.

**நல்லவனவற்றை மட்டுமே நினைக்க வேண்டும்.**

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லை நும்சித்தத்து
நன்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே
–திருமந்திரம்

(நமன்=எமன் தேவன்=கடவுள் புகும்கதி= சேரும் வழி சித்தம் = மனம்)

உலகில் பிறந்த எல்லோரும் ஒரு குலமே. கடவுளும் ஒன்றுதான். நல்லனவற்றையே எண்ணுங்கள். எமன் உங்களிடம் வர மாட்டான். கடைத்தேறும் வழி வேறு இல்லை. நல்ல எண்ணங்களே மனதில் நிலைத்து நிற்கும்படி நினைந்து பழகுங்கள். இதுதான் இப் பாடலின் திரண்ட கருத்து ஆகும்.

நாம் எதைப் பற்றிச் சிந்திக்கின்றோமோ அதுவாகின்றோம் என்பது தான் உண்மை. மாட்டைத் தொடர்ந்து வண்டிச் சக்கரம் செல்வது போலவும் நம்மை நிழல் தொடர்ந்து வருவது போலவும் நல்ல எண்ணங்கள் உடையவர்களின் வாழ்வில் மகிழ்ச்சியும் தொடர்கிறது.

நன்மைக்குத் துணைவன், இறைவன், தீமைக்கு விரோதி. தூய எண்ணம் உடைய வர்களுக்கு வானுலகில் வாழும் யோகிகளும் முனிவர்களும் தங்களது ஆசிகளை வழங்கிக் கொண்டே இருப்பார்கள்.

வெற்றியைப் பற்றியே சிந்திப்பவன் வெற்றி அடைகிறான் மாறாகத் தோல்வியைப் பற்றியே சிந்திப்பவன் தோல்வி அடைகிறான். இதுதான் உலகில் நாம் காணும் உண்மை.

நல்லனவற்றை நினைப்பவர் நல்லன வற்றை அடைகிறார். இவர்கட்கு நல்லவர்களின் தொடர்பு தானாகவே கிடைக்கிறது. காரணம் ஒத்த எண்ணம் உடையவர்கள் ஒன்று சேருகி றார்கள். இது இயற்கையின் நியதி. கடவுளின் கட்டளை.

நமது எண்ணங்கள் தான் நமது வாழ்வு. நம்முடைய ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் நம்முடைய நல்ல எண்ணங்கள் வெளிப்பட வேண்டும்.

வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு — திருக்குறள்

குளத்தில் உள்ள நீர் மட்டம் உயரு மானால் தாமரைத் தண்டும் உயரும். நம் உள்ளம் உயர்ந்தால் நமது வாழ்வும் உயரும்.

**நல்லனவற் றையே நினைப்பது எப்படி?**

கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத் தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியே னாகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன்.
உள்குவார் உள்கிற் றெல்லாம் உடனிருந்து அறிதி என்று
வெள்கினேன் வெள்கி நானும் விலாஇறச் சிரித்திட்டேனே — திருநாவுக்கரசர்

பாடலின் கருத்து எனது மனதில் எழும் எண்ணங்கள் யாருக்கும் தெரியாது என்று எண்ணிக் கள்ளத்தனமாக வாழ்ந்து வந்தேன். ஆனால் மனதில் எழும் எண்ணங்களையும் ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று தெரிந்த உடன் வெட்கமும் சிரிப்பும் வந்தது.

எண்ணங்கள்தான் செயல்களாக வடி வெடுக்கின்றன. எனவே நம் மனதில் எழும் எண்ணங்களையும் ஒருவர் பார்த்துக் கொண் டிருக்கிறார் என்று தெரிந்தால், நாம் தீய எண்ணங்களை மனதில் எழவிடமாட்டோம். தீய எண்ணங்கள் எழவில்லையானால் தீயசெயல்களைச் செய்யமாட்டோம்.



குற்றம் செய்தபிறகு தண்டனை மூலம் திருத்த முயல்கிறது நம் சமுதாயச் சட்டம். ஆனால் குற்றம் செய்யாமலேயே வாழ உதவு பவை நம்முடைய சைவம் சார்ந்த நூல்கள்.

**அன்றாடக் கடமைகள்**

யாவர்க்குமாம் இறைவற் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற் கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப் பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே
— திருமந்திரம்

அதிகாலை ஐந்து மணிக்கு எழ வேண்டும். குளித்து முடித்து "சிவாய நம" என்று சொல்லி திருவெண்ணீறு அணிய வேண்டும்.

முதல் வேலையாக நமை ஆளும் இறைவர்க்குப் பச்சிலை அல்லது வாசனையுள்ள மலர்கள் சூட்டி வணங்குதல் வேண்டும். தெய்வ யாகம் – இறைவர் சம்பந்தமுடைய கடமை.

பசு, காகம், குருவி, பூனை, குரங்கு, எறும்பு போன்ற பிராணிகட்கு ஒருகைப்பிடி உணவு தினமும் அளிக்க வேண்டும். பூத யாகம் – நம்மைச் சுற்றியுள்ள உயிரினங்கள் தொடர்பானது.

ஏழைகட்குச் சிறிதளவாவது இன் சொல் கூறி உணவளிக்க வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு மனிதனுக்காவது உணவளிக்க வேண்டும். மனித யாகம் – உடன் வாழும் மனித இனத் தொடர்புடையது.

"போற்றிசைத்தும் புகழ்ந்தும் புனிதன் அடி தேற்றுமின்" ஒரு நாளைக்கு ஒருமுறையாவது ஒரு தமிழ்வேதப் பதிகத்தை அல்லது ஒரு பாடலை வாயினால் பாடித் துதித்திடல் வேண்டும். பிரம்ம யாகம் ஆன்ம சம்பந்தமுடைய செயல்.

ஒவ்வொருவரும் இந்த நான்கு விதக் கடமைகளை அன்றாடம் செய்யவேண்டும். இவற்றைக் கூட நாம் செய்யவில்லை என்றால் இயல்பாக நமக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்காமல் போகும். உதாரணமாக நமது நிலத்தில் விளைச்சல் இருக்காது. பிள்ளைகட்குப் படிப்பு வருவதில்லை. பசு மாடு பால் சுரப்பதில்லை. கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு உண்டாகும். தொழில் வளர்ச்சி பெறுவதில்லை, உடல் நலம் குறையும், இப்படி ஏதாவது ஒரு குறைபாடு இருந்து கொண்டே இருக்கும்.

**இறைவருடைய நாமத்தைச் சொல்லுதல் வேண்டும்**

கொல்வாரேனும் குணம்பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயே.

– திருஞானசம்பந்தர்

ஒரு சாதாரணத் தமிழனை மாண்புள்ளவனாக்கி, அவனைத் தெய்வ நிலைக்குக் கொண்டு செல்லும் ஆற்றல் தமிழ் வேதங்கட்கே உண்டு. தமிழ் வேதஒலி அலைகள், தீய ஒலி அலைகளைப் போக்கும் ஆற்றல் உடையவை.



நம் வீடுகளில் தேவையற்ற வார்த்தைகளைக் கொட்டி நிரப்பி இருப்போம். இறைவரது நாமத்தை (சிவாய நம) வாய்விட்டுச் சொல்வதன் மூலம் வீட்டையும் தூய்மைப்படுத்தலாம். ஊரையும் உலகையும் தூய்மைப்படுத்தலாம்.

காலையில் 108 முறை, மாலையில் 108 முறை செபித்து வரலாம்.

**புறங்கூறுதல் கூடவே கூடாது**

அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்

செவ்வியா னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக்கொடுண் மின் தலைப்பட்ட போதே
– திருமந்திரம்

அவ்வியம் = பொறாமையால் புறங் கூறுதல் வெவ்வியனாகி = தீயகுணம் உடைய வனாகி வவ்வன்மின் = அபகரித்தல். செவ் வியனாகி = நற்குணம் உடையவனாகி. தவ்வி = சிறிது.

மக்களாய்ப் பிறந்த நாம் பொறாமையின் காரணமாக மற்றவர்களைப் பற்றிப் புறங் கூறுதல் (அவதூறு பேசுதல்) கூடவே கூடாது. இதனால் நமது புண்ணியம் குறைந்துவிடும். அத்துடன் யாரைப் பற்றிப் புறங்கூறினோமோ, அவர் செய்த பாவத்தில் ஒருபகுதி நம்மை வந்தடையும்.

தீயகுணம் உடையவராய்ப் பிறர் பொருளுக்கு ஆசைப்படவேகூடாது. நம் பொருள் பிறரால் கொண்டு செல்லப்படும். இதுதான் இயற்கையின் நியதி. கடவுளின் கட்டளை.

முன்னே செய்த புண்ணியத்தின் பய னாய் நல்ல உணவை உண்ணும் நாம், ஒரு பிடி உணவையாவது பிறருக்குக் கொடுத்து உண்ண வேண்டும்.

**சிவத் தலங்களுக்குச் சென்று வழிபடுதல் வேண்டும்.**

நாடும் நகரமும் நல்திருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்தைக் கோயிலாக் கொள்வனே
– திருமந்திரம்

தலயாத்திரை செல்ல வேண்டும். நல் திருக்கோயிலைக் கண்டு, அங்கே எழுந் தருளியுள்ள சிவபெருமானைப் பாட்டினால் பணிந்து வழிபடவேண்டும். பாடும் பொழுது நமது நெஞ்சம் நெகிழ ஆரம்பிக்கும். நெகிழ்ந்த நெஞ்சத்தை இறைவர் கோயிலாகக் கொண்டு எழுந்தருளுவார். இதனையே இறந்தாரை எழுப்பிய திருநாவுக்கரசு சுவாமிகளும்.

"தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடிவந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்"

என்று அருளியுள்ளார்.

**ஊனினை நீக்க வேண்டும்.**

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மாமல
ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி
உண்பவர்க் கல்
லது
தேனமர் பூங்கழல்
சேரவொண் ணா
தே.



– திருமந்திரம்

(கானுறு கோடி = காட்டில் உள்ள கோடி சந்தனம் வானுறு மாமலர் = வானளாவிய மலர்கள் ஊனினை நீக்கி = உடம்பின் மீதுள்ள பற்றினை நீக்கியும் மாமிச உணவை விட்டும். தேனமர் பூங்கழல் = இறைவரது திருவடி)

அளவில்லாத நறுமணம் கமழும் சந்தனமும், வானளாவிய மலர்களும் சாத்தி இறைவரை வழிபாட்டாலும், பிற உயிரைக் கொல்லாமலும், கொன்றதைத் தின்னாமலும் இருக்கும் உயர்ந்த நெறி நின்று இறைவழிபாடு

செய்ய வேண்டும். இத்தகையவர்கட்கே இறையருள் கிட்டும் என்பதுதான் மேலே கண்ட பாடலின் கருத்தாகும்.

"பல்லுயிராய்ப் பார் தோறும் நின்றாய் போற்றி" என்பது திருநாவுக்கரசு சுவாமிகளின் திருவாக்கு ஆகும். எல்லா உயிர்களிலும் இறைமை விளங்குகின்றது எனும் மிக உயர்ந்த கொள்கையினை உடையது சைவ வாழ்க்கை முறை.

ஓடும் ஒரு சிறிய எறும்பை நசுக்கி விடுகின்றோம். ஓடிக் கொண்டிருந்த எறும்பு அசைவற்றுப் போயிற்று. அந்த எறும்பின் உடலுக்குள் நீக்கிய உயிரை நம்மால் மீண்டும் புகுத்திவிட முடியுமா?

நம் பெட்டியில் பணத்தை வைக்கின்றோம். வைத்த நாம் உரிமையுடன் எடுக்கிறோம். வேறு ஒருவர் எடுத்தால் தவறு. அவரைத் தண்டிக்கின்றோம். பணத்தைப் பெட்டியில் வைத்தவரே எடுக்க வேண்டும். என்பது தான் நியதி. அதைப்போல எறும்பு போன்ற பல சீவராசிகளின் உடம்பினுள் உயிரை நாம் வைக்கவில்லை. எனவே அந்த உயிரை எடுக்கும் உரிமையும் நமக்கில்லை. எடுத்தால் இயற்கை நம்மைத் தண்டிக்கும்.

பிற உயிரைக் கொல்வது என்பது இயற்கையின் நியதிக்கு மாறானது என்பதை நாம் உணரவேண்டும்.

**தான தருமங்கள் செய்தல் வேண்டும்**

இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமம் செயாதவர் தம்பால தாகும்
உருமிடி நாகம் உரோணி கழலை
தருமம் செய்வார் பக்கல் சாரகிலாவே

– திருமந்திரம்

(உருமிடி = பேரிடி, நாகம் = பாம்பு, உரோணி = நோய் கழலை = கட்டி, பக்கல் = திசை)

இருமல், சோகை, சளி, காய்ச்சல் போன்ற பலவகை நோய்களும், இம்மைத் துன்பங்களும் தருமம் செய்யாதவர்க்கே வரும்.

பேரிடி விழுதல், பாம்பு முதலியவற்றால் துன்பம் நேரிடுதல், கட்டி வருதல் ஆகியவை தருமம் செய்வார் வாழும் திசையைக்கூட பாரா. எனவே நோய் வருதல், இயற்கையில் ஏற்படும் அபாயங்கள், பிற கொடிய உயிரினங்களால் வரும் துன்பம் ஆகிய எல்லாம் அவரவர் செல்வ நிலைக்கேற்ப தருமம் செய்யாததால் வருவனவே என்பதைச் சந்தேகமின்றி உணர வேண்டும். இதைச் சொல்வது மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த திருமூலர்.



இந்த உண்மை ஒரு தத்துவத்தின் (Logic) அடிப்படையில் அமைந்ததாகும். வெளியிலிருந்த தண்ணீரும் உணவும் உடம்பினுள் செல்கின்றன. உடம்பினுள்ளே இருந்து சிறுநீரும் மலமும் வெளியே வரவேண்டும். அப்படிப் போகவில்லை என்றால் துன்பம் (நோய்) உண்டாகும். இதுதானே உலக இயற்கை.

அதைப்போலவே, பலவகைத் தொழில்களைச் செய்கிறோம். உலகிலிருந்து (வெளியிலிருந்து) நம் பெட்டிக்குள் பணம் செல்கிறது.

அப்பணம் தருமமாக வெளியே வரவேண்டும். உள்ளேயே தங்கிவிட்டால் நோய் (துன்பம்) தான் வரும், இதைத்தான் அன்றே கூறினார்கள்.

**சைவ வாழ்க்கையில் கோபத்திற்கு இடமில்லை**

செல்லும் அளவில் விடுமின் வெகுளியை
செல்லும் அளவும் செலுத்துமின் சிந்த தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே

– திருமந்திரம்

(செல்லும் அளவு = முடிந்த அளவு. வெகுளி – கோபம், சிந்தை = மனம், கல்லும் = பாசமும் ,பிளந்து = நீங்கி, கடுவெளி = முத்திப்பேறு)

கோபம் கொள்வதைத் தவிர்த்து வாழ் வதே சைவ வாழ்க்கை முறையாகும். அப்படிக் கோபம் கொள்ளக்கூடிய சூழ்நிலை வரும் பொழுதும் நாம் வணங்கும் முழு முதற்பொரு ளான சிவபெருமானை நினைக்க வேண்டும். (செல்லும் அளவு செலுத்துமின் சிந்தையை) இதுபோன்ற சந்தர்ப்பங்களில் 'சிவசிவ" என்று சொல்லிப் பழகவேண்டும். இப்படிப் பழகி விட்டால் நாளடைவில் கோபம் கொள்ளாமல் வாழ்ந்து விடலாம். கோபம் கொள்வதால் நாடியில் அதிர்ச்சி உண்டாகும் உடல் நலம் வெகுவாகப் பாதிக்கப்படும்.

**உண்டியைச் சுருக்கி வாழ்தல் வேண்டும்**

அண்டஞ் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டஞ் சுருங்கில் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கிடில் உபாயம் பலவுள
கண்டங் கருத்த கபாலியு மாமே

– திருமந்திரம்

(அண்டம் = தலை, பிண்டம் = உடல், பிராணன் = பிராணவாயு, உபாயம் = நன்மை, உண்டி = உணவு கபாலி = சிவபெருமான்)

இன்றைய உலகில் உடல் எடை குறைக்க வேண்டும். அதனால் எல்லா நோய்களையும் வராமல் தடுக்கலாம் என்று மருத்துவர்கள் கூறுவதைக் காண்கிறோம்.

உடல் எடையைக் குறைப்பதற்கு நவீன மருந்துகளைச் சாப்பிட்டு மரணத்திற்கு ஆளானவர்களும் உண்டு. எடையைக் குறைக்க தினமும் நடக்கிறார்கள். நவீன எந்திரங்களைப் பயன்படுத்துகிறார் கள்.



ஐந்தாம் நூற்றாண்டிலேயே நம் பத்தாவது தமிழ்வேதம் உடல் எடையைக் குறைப் பதால் பல நன்மைகள் உண்டு என்றும், ஏன் ஆயுள் நீடிக்கும் என்றும் கூறுகின்றது. உடல் எடையைக் குறைக்கும் வழியையும்கூடக் கூறுகிறது. இருபதாம் நூற்றாண்டிற்குத் தேவையான உண்மைகளை ஐந்தாம் நூற் றாண்டிலேயே கூறும் தமிழ் வேதங்களின் (திரு முறைகளின்) அருமையை நம்மால் அளவிடத் தான் முடியுமா?

உணவைக் குறைத்து உண்டால் உடல் இளைக்கும்,. எடை குறையும் பிராணவாயு வயப்பட்டு வாழ்நாள் நீடிக்கும்.

**முழு முதற் பொருள் சிவபெருமானே**

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவது ஒன்றில்லை
அவனன்றி ஊர்புகு மாறு அறியேனே

– திருமந்திரம்

(மூவர் = பிரம்மா, நாராயணர், உருத்திரன்; அமரர் = இறவாதவர், ஊர்புகுதல் = முக்தியடைதல்)

சைவ வாழ்க்கை வாழும் ஒவ்வொருவரும் சிவபெருமான்தான் முழுமுதற் பொருள் என்று தெளிவடைய வேண்டும். அவரை விடுத்துச் செய்யும் வழிபாடு உலகில் ஏதுமில்லை.. பிறவா நிலையை அளிக்கும் கடவுள் சிவபெருமான் ஒருவரே ஆவார்.

**வெற்றுச் சடங்குகள், ஆரவாரம் இன்றி வாழ்தல்**

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீருங் கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே

– தமிழ் வேதம் –5

(நெக்கு நெக்கு = மனம் நெகிழ்ந்து உருகி, புக்கு = புகுந்து, பொன்னார்சடை - அழகிய, சிவந்தசடை பொக்கம் = பொய் நாணி = வெட்கப்பட்டு, நகுதல் சிரித்தல்)

அன்பு மீதூர மனம் நெகிழ்ந்து இறைவரை நினைப்பவர்களின் நெஞ்சத்தில் புகுந்து நிற்பவர் அவர். பொய்மையாகப் (ஆடம்பரத்திற்காக) பூவும் நீரும் அளிப்பவர்களைக் கண்டு இறைவரே வெட்கப்பட்டுச் சிரிக்கிறார் என்பது தான் மேலே உள்ள பாடலின் கருத்து. வெற்றுச் சடங்குகட்கு சைவ வாழ்க்கையில் இடமே இல்லை. மனம் ஒருமைப்படுதல் தான் அவசியம்.

**பொறிபுலன்களை மடைமாற்றம் செய்ய வேண்டும்**

சைவ வாழ்க்கை முறை அறிவியல் நுட்பம் வாய்ந்தது. மெய், வாய், கண், மூக்கு, காது ஆகியவற்றை அடக்கக்கூடாது. மரத்தின் கிளையைத் தாழ்த்திப் பிடித்துக் கொண்டிருக்கின்றவரையில் தாழ்ந்து நிற்கும், விட்ட உடன் தன் பழைய நிலைக்கே சென்றுவிடும். இதைப் போலவே பொறி புலன்களையும் அடக்கினால் அடங்குவது போல இருக்கும், சந்தர்ப்பம் கிடைத்த காலத்து, தனது பழைய போக்கிலேயே சென்று விடும்.



தீக்குச்சியைக் கொண்டு விளக்கையும் ஏற்றலாம், வீட்டையும் எரிக்கலாம். பொறி புலன்களைக் கொண்டு புண்ணியங்களைச் செய்து இனிப் பிறவாமையைப் பெறலாம். பாவங்களைச் செய்து மேலும் துன்பத்தையும் தேடிக்கொள்ளலாம்.

ஐந்து பொறிகளையும் வீடு பேறு அடைவதற்குரிய சாதனங்களாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றன நமது தமிழ் வேதங்கள். அதற்கு ஏற்ற எளிய வழியைக் கூறும் தமிழ் வேதப் பாடலைக் காண்போம்.

சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணினைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்கு உன்

மணிவார்த்தைக் காக்கிஜம் புலன்கள் ஆர
வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை

மாலமுதப் பெருங்கடவே! மலையே! உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே! இரண்டுமிலித் தனிய னேற்கே.

– திருவாசகம்

(சிந்தனை = நினைத்தல், போது = மலர், ஆர = நிரம்ப, விச்சை = வித்தை, மால் = வியப்பு தனியன் = வேறுபற்று ஒன்றில்லாதவன்)

உலகப் பொருள்களையெல்லாம் நினைத்திருந்த மனம் இறைவரின் திருவுருவத்தை நினைத்துப் பழகவேண்டும். கண்கள் இறைவரின் திருவடிகளைக் கண்டு பழக வேண்டும். கைகள் இறைவரை வணங்க வேண்டும். வாய் பெருமானது புகழைப் பாடவேண்டும்.

**அமைதியான வாழ்வு**

ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இலங்கிழை யோனே

– திருமந்திரம்

(ஆவ = அழகு, அழிவ = அழியும், புகுவன = வருவன, காவலன் = இறைவர், சிவபெருமான் இலங்கிழையோன் = விளங்குகின்ற மெய் நூல் உணர்ந்தோர்)

தற்காலத்தில் ''டென்ஷன்" (மன அலைச்சல்) எனும் வார்த்தை எல்லா இடங்களிலும் சொல்லப்படுவதைப் பார்க்கிறோம். அமைதியாக வாழ்வதால் பல நோய்கள் – இதயக் கோளாறு, மனநிலை பாதித்தல், ஆஸ்துமா போன்ற உயிர்க்கொல்லி நோய்களைத் தவிர்க்கலாம் என்கின்றனர் மருத்துவர்கள். ஆனால் அமைதியாக வாழ்வது எப்படி என்று தமிழ் வேதம்தான் கூறுகிறது.

ஆகவேண்டியவை ஆகுமே அன்றி அழியா, அழிய வேண்டியவை அழியுமே அன்றி அழியாது நிற்கா.



போக வேண்டியது போகத்தான் செய்யும். வரவேண்டியது வந்தே தீரும், வராமல் போகாது. இது உலக இயற்கை. எல்லாம் சிவபெருமானது அருளாணையின்படியே நடக்கின்றன என்றுணர்ந்து அமைதியாக வாழ்வோமாக.

சிவமே நமக்குப் பொருள்.

(மறு பிரசுரம்)

# திருவேடச் சிறப்பு

சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர்
மு. திருஞான சம்பந்தபிள்ளை

சிவபெருமான் பிறப்பு இறப்பு இன்றி என்றும் உள்ளவர் ; எங்கும் நிறைந்தவர், எல்லாம் செய்ய வல்லவர் இயல்பாகவே எல்லாம் அறிபவர். தமது அனுபவத்தின் பொருட்டுப் பிறிதொன்றையும் வேண்டாதவர். தம்வயமுடையவர். ஆன்மாக்களிடத்துள்ள இரக்கமே திருமேனியாகவுடையவர். இவ்விலக்கணங்களையுடையவர் அவர் ஒருவரேயன்றி வேறில்லை. ஆதலால் அவரே பசுபதி என்று மெய்யன்புடன் வழிபடுகின்றவர் சைவர் அல்லது சிவனடியார் என்று கூறப்படுவர்.

ஒருவனையே தனக்கு நாயகராகக் கொண்ட பதிவிரதையானவள் தன்னாயகனாற் கொடுக்கப்பட்ட திருமாங்கிலியம் மோதிரம் முதலியவற்றைத் தன் கற்பு நிலைக்குச் சாதனமாகத் தரித்தொழுகுவள். அதுபோலச் சிவபெருமானையே பரமபதியெனக் கொண்டு வழிபடும் ஒவ்வொருவருக்குந் தத்தம் அன்பினிலைக்கு அடையாளமாகத் தரிக்கத் தக்கன சிவசின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கம் என்னும் இரண்டுமேயாம்.

எவள் திருமாங்கிலிய முதலிய அடையாளங்களைத் தரித்தற்குக் கூசுகின்றனளோ அவள் குலமகள் எனப்படாள். அதுபோல விபூதி உருத்திராக்கங்கள் ஆகிய சிவசின்னங்களை எவன் தரிக்கக் கூசுகின்றானோ அவன் சைவன் எனப்படான். மற்றைய ஆபரணங்கள் எல்லாவற்றையுந் துறந்திருந்தாலும் திருமாங்கிலியத்தைக் குலமகளிர் துறந்திருக்கார். அது போல எவ்வணிகளையுந் தரியாமல் இருந்தாலுஞ் சிவசின்னங்களைச் சிவனடியார் (சைவசித்தாந்திகள்) என்றுள்ளார் தரியாது இருத்தல் ஆகாவாம். ஆதலால் யாவர்க்கும் விபூதி, உருத்திராக்க தாரணம் இன்றியமையாததே. விபூதி, உருத்திராக்கம் என்னுஞ் சிவசின்னங்களின் பெருமைகளை எடுத்துரைக்காத தொன்னூல்கள் கிடையா. தமிழ் நூல்கள் எவற்றினும் அப்பெருமை புலப்படும். பரமாசாரி யர்களுள் ஒருவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் தமிழ்வேதத்திலே திருநீற்றுப்பதிகம் என்று ஒரு திருப்பதிகஞ் செய்து, செய்கையினாலும் திருநீற்றின் மகிமையைத் தெரித்தருளினார்.

விபூதி, உருத்திராக்கங்களே போகம், முத்தி என்பவற்றை விரும்பினோர் அணியும் வைதிக சாதனம் எனப்பட்டன.

விபூதி உருத்திராக்கங்கள் பிராமணன் முதல் யாவருக்கும் நித்தியாங்கமாக வேதத்தில் விதிக்கப்பட்டதென்று கந்தபுராணங் கூறுகின்றது. ஞானியாயினும், பிராமணனாயினும், ஏனையோராயினும் இவற்றைத் தரித்துக் கொண்டு தான் தங்கள் கருமங்களில் பிரவேசிக்க வேண்டும். முத்தியை அடைய விரும்புவோன் முக்கியமாக இவற்றை இடைவிடாது அணிதல் வேண்டும். இவற்றைத் தரிப்பவரைச் சிவபெருமான் என்றே நினைக்கக் கடவர். சிவபெருமானுடைய மகிமையை எவ்வாறு அளவிடக் கூடாதோ அதுபோல இச்சிவ சின்னங்களின் பெருமையும் அளவிடக்கூடாதென்றறிக.

விபூதி தாரணமில்லாது நீரையாவது, அன்னத்தையாவது வேறொன்றையாவது தீண்டலாகாது. வேறெந்தக் கருமமுஞ் செய்தலாகாது. பிரமாணன் தானும் சோர்வு காரணமாக இவற்றைத் தரியாது காயத்திரி மந்திரஞ் செபித்தல் ஆகாது. விபூதி உருத்திராக்க தாரணம், நைமித்திகம், காமியம், பிராயச்சித்தம் என்னும் அங்கங்களாவதன்றி நித்தியாங்கமுமாக யாவராலும் கொள்ளத் தக்கது என்பது உண்மை. விபூதி உருத்திராக்கங்கள் சிவசின்னமெனவும், திருவேடம் எனவும்அழைக்கப் படும்

செம்மலர் நோன்றாள் சேரவொட்டா
வம்மலங்கழீ இயன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந்தானு மரனெனத் தொழுமே

எனச் சிவஞானபோதஞ் செப்புதலால் அவையிரண்டுஞ் சிவபெருமான் என்றே கொள்ளற்குரியனவாம். காதற் கிழத்தியரது வடிவிலே காணப்படும் ஆடை, சாந்து, அணிகலன் முதலாயின காதலரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறு போல மெய்யுணர்வுறுவாரைக் காட்சி மாத்திரை அளவிலே வசீகரித்து இன்பஞ் செய்தல்பற்றிச் சிவபத்தியுடையார்க்கு இவை திருவேடமாகக் கொள்ளப் பட்டனவாம்.

அக்கினி சிவபெருமானது வடிவமாகும். சந்திரன் யாக வடிவாய் விளங்குவன். ஆதலால் அவனை அமிர்தம் என்று பெரியோர் கூறுவர் உலகம் அக்கினி சொரூபமே. அவ்வக்கினி சிவரூபமான திவ்விய வடிவேயாம். சந்திரன் சிவசக்தி வடிவாகும். பரிசுத்தம் வாய்ந்த சிவாக்கினியிடத்து நின்றுந் தோன்றிய விபூதியைச் சிவபெருமான் தனது திருமேனிக் கண் தரித்துள்ளார்.

"வெந்த சாம்பல் விரையெனப்பூசியே ..." என்பது தேவாரந் தந்த ஞானசம்பந்தப்பெருமான் திருவாக்கு.



உருத்திராக்கம் கௌரிசங்கம் என்பதனால் அது அர்த்த நாரீஸ்வர வடிவம் என்பது நன்கு புலப்படுகின்றது. சிவம் சத்தியென்னும் இரண்டும் அபேதமாயிருக்கின்றன என்பதை அது கொண்டுணரலாம்.

மேலும் விபூதி வெண்ணிறமுடைய சிவரூபமாகவும் உருத்திராக்கம் கருமை முதலிய நிறங்களையுடைய சக்திவடிவமாகவும் எண்ணப் படுகின்றது. இதனால் சிவமும் சத்தியும் கூடியவழி எல்லாம் ஆகும் என்பது பெறப்படும். சிவஞ்சத்தி என்னும் இரண்டாலுமே முத்தி கைகூடும் என்பது இவற்றின் தாரணத்தால் தெரிகின்றது.

# வேலணைப் பிரதேச அபிவிருத்தியும் முடிப்பிள்ளையார் ஆலய வளர்ச்சியும்

ப. பாலசுப்பிரமணியம் (வேலணை பாலா)
பிரதம எழுதுநர், பிரதேச சபை நல்லூர்.

இந்துமா சமுத்திரத்தின் நன்முத்தாக விளங்கும் ஈழ மணித்திருநாட்டின் சிவபூமி செந்தமிழ் ஓங்கும் பதி யாழ்ப்பாணக் குடாநாடு. இக்குடாநாட்டை மேலும் மெருகூட்டுவன அழகுமிகு தீவகப் பகுதியாகும். இத்தீவகப் பகுதியின் இருதயமாக தலைவாயிலாக மிளிர் வது வேலணை என்னும் நற்பதியாகும். இப்பதியி னுடைய அபிவிருத்தி பற்றி ஆராயுமிடத்து நதிகளோ, பாரிய குள நீர்ப்பாசன வசதிகளோ அற்ற வானம் பார்த்த பூமியாகும். எனினும் நாற் புறமும் கடல் அலை தாலாட்ட செல்வ மிகு கடல் உணவும் நிலமகளின் கொடையென அற்றார் பசி தீர்க்கும் பயிர்ச் செய்கை வளங்களும் கொழிக் கும் மருதநிலமும் ஆங்காங்கே பரந்து காணப் படுகின்றன. மக்களது விடாமுயற்சியும், அயராத உழைப்பும் பனைவளமும் புகையிலையும் கற்பக தருக்களாக காட்சியளிக்கின்றன. மக்களின் கிராமிய வாழ்க்கையில் பனையின் பல தரப்பட்ட பயன்கள் கைத்தொழில் வளர்ச்சிக்கு இட்டுச் செல்கின் றது.


கிராம மக்களின் கடின உழைப்பால் பணப் பயிராக புகையிலை உற்பத்தியும் உணவுப் பயிராக நெற்செய்கையுடன் மிளகாய் போன்ற பல்லின காய்கறி உற்பத்தியும் சுய உற்பத்தி வளர்ச்சிக்கு அவர்களை இட்டுச் செல்கின்றது.

இத்தகைய மக்கள் அபிவிருத்தி உற்பத்தி பாதைக்கு மேல் நகர்த்திச் சென்றாலும் அபிவிருத்தி என்ற நிலையை அடையும் போது பிரச்சினைகளும் தலைதூக்குகின்றது. ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியில் துறைசார் அபிவிருத்தி எவ்வளவு தூரம் முக்கிய இடம் பெறுகிறதோ அதே அளவு இடம்சார் அபி விருத்தியும் முக்கிய இடம் பெறப் படவேண்டும். மேலும் தரமான சரியான இடம் சார் அபிவிருத்தி யுடன் பௌதீக அபிவிருத்தித் திட்டங்களும் சேர்க்கப்படும் பொழுது குறிப்பாக அப்பிரதேசங் களில் காணப்படும் இயற்கை வளங்களை நல்லமுறையில் பயன்பாட்டுக்கு உட்படுத்த முடியும்.

இந்தவகையில் யாழ்.குடாநாட்டின் பெரும்பகுதி உள்ளடக்கும் தீவுப்பகுதி பொரு ளாதார அபிவிருத்தியை நீண்ட கால சமூக ரீதியான பின்னடைவை நிவர்த்தி செய்ய 1961 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண தீவகப் போக்குவரத்துத் தாம்போதிப் பாலம் கைகொடுத்தது. தீவகத்தின் வணிக, விவசாய உற்பத்திப் பொருட்கள் யாழ் நகருக்கு சென்ற டைந்தன. இதனால் கடலால் பிரிக்கப்பட்ட தொடர்புகள் தரைவழிப் பாதையால் விஸ்தரிக் கப்பட்டன.

மேலும் தீவகத்தின் குடிசன செறிவு அபிவிருத்திப் பணியில் வளர்ச்சியடைந்தது. சுமார் 38 411 மக்களைக் கொண்ட தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 15 341 மக்களை தன்னகத்தே கொண்ட சனச்செறிவு கிராமமாக வேலணைக் கிராமம் காணப்பட்டது. இத்தகு சிறப்புமிக்க வேலணையின் அபிவிருத்தியை கல்வி, பொருளாதாரம், சமூகம் என்ற வரையறையில் வகுத்து நோக்கலாம். கல்வி அபிவிருத்தி என்ற ரீதியில் நோக்கும் பொழுது கல்விப் பயிருக்கு நீரோச்சும் கல்விக் கூடங்களாக வேலணை மத்திய மகாவித்தியாலயம், வேலணைத்துறை ஐயனார் வித்தியாலயம், வேலணை மகாவித்தியாலயம், வேலணை சைவப்பிரகாசம், வேலணை ஆத்சூடி வித்தியாலயம், வேலணை நடராசா வித்தியாலயம், போன்றவை தம் பங்களிப்பை வருடா வருடம் நல்கின. 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சுமார் 4500 மாணவர்களுக்கு கல்வியூட்டிய இக்கல்லூரிகளின் கல்வி அபிவிருத்தியில் பல கல்வி மான்களும், பேரறிஞர்களும், அறிவாளிகளும் உருவாகினார்கள். பின்னர் நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை, இடப்பெயர்வு, யுத்த சூழ்நிலையால் இவ் வளர்ச்சிப் பாதையில் மந்த கதி ஏற்பட்டது. எனினும் நாளாவட்டத்தில் இவ் வளர்ச்சி மேன் நிலைக்கு இட்டுச் செல்கிறது. மேலும் அபிவிருத்தி வளர்ச்சி துரிதகதியில் முன்னேற கல்விப் பயிர் வளர்க்கும் தாய்க் கல்லூரியான வேலணை மத்திய கல்லூரியில் போக்குவரத்துத் தடை நீக்கப்பட்டு சுதந்திரமான கற்பித்தல் கற்றல் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கல்லூரியைச் சுற்றி அமைக்கப்பட்ட காவலரண்கள் நகர்த்தப்பட்டு சீரிய முறையில் பிரதான வீதிகள் திறக்கப்படவேண்டும். கடந்த பத்து ஆண்டுகளுக்கு முற்பட்ட நிலை உருவாக்கப்பட்டால் கல்வி அபிவிருத்தி மேன் நிலை அடையும்.

பொருளாதார சமூக அபிவிருத்தி ரீதியில் நோக்கினால் சமூக செயற்பாடுகள் அதிகரிக்கப்படவேண்டும். போக்குவரத்து ஒழுங்குகள் சீர்செய்யப்பட்டு மக்கள் சொந்த குடியிருப்புகளில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். சன சமூக நிலைய செயற்பாடுகள் கிராம அபிவிருத்தி சங்க செயற்பாடுகள் மீள் துரித கதியில் புனரமைக்கப்பட வேண்டும் பரந்த கிராம மக்கள் ஒற்றுமையுணர்வுடன் அபிவிருத்திப் பணியில் ஈடுபட தம்மை அர்ப்பணிக்க வேண்டும். வீதி புனரமைப்பு விடயத்தில் கடல் வழிப்பாதை பண்ணை தாம்போதிப் பாலம் போல அராலித் துறை, வட்டுக் கோட்டை, கல்லுண்டாய் பகுதிகளுடன் இணைக்கப்பட்டு 38411 மக்கள் தொகை கொண்ட



வேலணை கிராமம் யாழ் குடாநாட்டு யாழ்.நகர் பகுதியான அராலி, கல்லுண்டாய் பகுதியுடன் தரைவழிப் பாதையூடாக இணைக்கப்பட வேண்டும். மக்களின் அன்றாட விவசாய உற்பத்திப் பொருட்கள், வர்த்தக ரீதியாகவும் கல்விச் செயற்பாட்டுத் தொடர்புகள் கல்வி அபிவிருத்தியூடாகவும் இணைக்கப்பட வேண்டும். இதன் மூலம் வீதிப் போக்குவரத்து, மக்கள் அந்நியோன்னிய தொடர்பு விசாலிக்கப்பட்டு சமூக அபிவிருத்தி வளர்ச்சியடையும். பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி எனும் போது வானத்தை எதிர்பார்த்து விவசாயம் மேற்கொள்ளப்படும் வேலணைப் பிரதேச பயிர்ச்

செய்கை நிலங்களுக்கு மழைநீரை சேமித்து நீர்ப்பாசன வசதி செய்யும் குளங்கள் ஆழமாக் கப்பட்டு குளங்களின் கட்டுக்கள் செப்பனிடப் பட்டு உயர்த்தி அமைக்கப்பட வேண்டும்.

வேலணைப் பிரதேசத்தில் பரந்து ஆங்காங்கே காணப்படும் தெங்கங்குளம், பெருங்குளம், சிலிந்தாக்குளம், கேணிக்கரைக் குளம், வேனாக்குளம், சிற்பனை கமரவெளி குளம் என்டன இந்த வகையில் செப்பனிடப் படவேண்டும். இதனால் வீணே கடலுக்குள் செல்லும் மழைநீர் தேக்கி வைக்கப்பட்டு வயல் நிலங்களுக்கும் பயிர்ச்செய்கை மேட்டு நிலங் களுக்கும் நீர்ப்பாசனம் செய்யப்படலாம். இப் பணி நிறைவேற்றப்படின் பொருளாதார அபி விருத்தியில் முன்னேற்றமடையலாம். இந்த வகையில் அபிவிருத்தி செயற்பாடுகள் மேற் கொள்ளப்படின் பிரதேசத்தின் மக்கள் மீளக் குடியேற வாய்ப்புகள் அதிகரிக்கப்படும். வேலணைப் பிரதேச மீள் புனரமைப்பு மேற் கொள்ளப்பட்டு பழைய கால வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லப்படும்.

இப்பகுதியில் அருளாட்சி செய்யும் ஆலயமும் மக்கள் வாழ்வில் தெய்வீக ஒளி வீசும். வேனாக்குளம் எனும் போது முடிப்பிள்ளையார் ஆலயத்தின் புண்ணிய தீர்த்தக் கரையாக விளங்குகின்றது. ஆலயத்தின் வரலாறும் வேனாக்குளமும் தொடர்புபடுத்தப்பட்டு தெளிவுபடுத்தப்பட வேண்டும். ஆலயத்தின் பெயருக்கு ஒப்ப அனைத்து பிரதேசத்திலும் உயர்ந்த இடமாக பெருமழை காலத்திலும் வெள்ளம் பரவாது பெரியபுலமாக இவ் ஆலயம் மிளிர்கின்றது. அது மட்டுமன்றி அந்நியர் கால படையெடுப்பில் அனைத்து ஆலயங்களின் முடிகள் தரைமட்டமாக்கப்பட்ட பொழுதிலும் இன்றும் அழிக்கப்படாமல் முடிப்பிள்ளையார் என்ற காரணப் பெயருடன் விளங்குகின்றது. இவை மட்டுமல்லாமல் முற்றிலும் கருங்கல் திருப்பணி கொண்டு அமைக்கப்பட்ட இவ் ஆலயத்தில் தற்கால சிறப்பு அனைத்து ஆலய மும் இடப்பெயர்வினால் பூட்டப்பட்டு தீப ஒளி ஏற்றாமல் காணப்பட ஆலயத்தின் பிரதம சிவாச் சாரியாரின் அயராத தளராத மன உறுதியினால் இன்று வரை தினமும் நித்திய பூசை தீப ஒளி சிறக்கும் ஆலயமாக விளங்குகின்றது. இந்த நிலைக்கு ஆலயத்தை நெறிப்படுத்திய நித்திய பூசை சிவாச்சாரியார் பிரம்ம ஸ்ரீ இ.சோமாஸ் கந்தகுருக்கள் பணி அனைவராலும் சிந்திக்க ற்பாலது.



மேலும் இந்த பெரிய புல மகா கணபதி ஆல யத்தின் அமைப்பு பற்றி நோக்கு மிடத்து தற்போ தைய கும்பாபிஷேக நிலைமையில் வானுயர்ந்த இராஜகோபுர அழகுக் காட்சியும், அடியார்கள் உட்சென்று வணங்க முகப்பில் இரு மருங்கும் ஓம் ஓம் என ஒலிக்கும் கண்டாமணிக் கோபுரங்களும், வாயில் முகப்பு வனப்புறு வெளி மண்டபமும் எல்லாவற்றுக்கும் மேலாக சித்திவிநாயகன் புதிய சித்திரத் தேரில் பவனிவர அழகு மிகு சித்திரத்தேரும் தேர் அமைந்தி ருக்கும் சிறப்பு மிகு தேர்முட்டி கோபுரமும் அடியார்கள் காணக்கண்கோடி வேண்டும். இத்தகு சிறப்பு மிகு பெருமை சேர் புண்ணிய தலத்தின் வரலாற்றைக் கூறிக் கொண்டே போகலாம்.

ஆதி சைவப் பெருங்குடி மக்களால் பேற்றப்பட்ட ஆலயம். அவர்களின் நெறியில் பூசிக்கப்பட்டு அயலில் சூழ்ந்து வாழ்ந்த பூர்வீக சந்ததியினர். அதிசயங்களும் அற்புதங்களும் கூற மெய்சிலிர்த்துவிடும். அருள் இலங்கும் பெரியபுல வரலாறு பற்றி புலவர்கள், அறிஞர்கள் மொழிந்தவை பற்பல.

கும்பாபிஷேகம் பற்றி நோக்குமிடத்து 1840ஆம் ஆண்டு முதல் கும்பாபிஷேகமும் தொடர்ந்து 1920ஆம் ஆண்டு திருப்பணி கருங்கல்லால் மேற்கொள்ளப்பட்டு 1948ஆம் ஆண்டு ஊரெழு சிவஸ்ரீ கு.பாலசுந்தரக் குருக்களால் மீண்டும் நடாத்தப்பட்டது. பின்னர் 1969ஆம் ஆண்டு புனருத்தாரணம் செய்யப் பட்டு சிவஸ்ரீ பா.வைத்தியநாதக் குருக்களால் நிறைவேற்றப்பட்டது. 1990ஆம் ஆண்டு பரிவார மூர்த்திகளுக்கு உள் வீதியில் ஆலயம் அமைக் கப்பட்டு மீண்டும் சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்களாலேயே நிறைவேற்றப்பட்டது. இன்று பதினைந்து ஆண்டுகள் கழிந்து புதுப்பொலி வுடன் வானுயர்ந்த ராஜகோபுரம். கோபுர தரிசனம் கோடி புண்ணியமெனும் தெய்வீக மொழிக்கமைய அழகுமிகு மணிமண்டபம் காணுதற்கரிய கரிமுகக் கடவுள் சித்திரத்தேரில் பவனிவரும் அழகு மிகு தெய்வீகக் காட்சியும். இத்தனையும் காணும் வாழ்வில் பெறுதற்கரிய காட்சி பங்குனித் திங்கள் முப்பதாம் நாள். நாளும் அடியவர்கள் தொழும் வேழமுகன் ஆலய வரலாறு சொல்லி எழுத்தில் வடிக்க முடியாது.

ஆலயத்தின் கடந்த கால வழிபாடு புராணபடனத்திற்கு வித்திட்ட வேலணை பதிக்கு புகழ் தந்த சைவப் பேரறிஞர், சைவ பூஷணம் அப்பாத்துரை வாத்தியார் என அன் புடன் ஊர் மக்களால் அழைக்கப்பட்ட பெரியார் வே.பேரம்பலம் ஆசிரியர், அவர் வழியில் திருமுறை என்றால் ஓதுவார். ஓதுவார் என்றால் பசுபதி வாத்தியார் என வேலணை அனைத்து ஆலயங்களில் திருமுறையால் பாடிப் பரவிய சிவபூஜா துரந்தரர் வே.பசுபதிப்பிள்ளை இவர்கள் நெறியில் தமிழுக்கும், சைவத்துக்கும் என வாழ்ந்த சைவத்தமிழ் அறிஞர், ச.மகா லிங்கம் விதானையார் இவர்களோடு சங்கீதத் தின் ஞானதீபமாய் வேலணைக்கு சங்கீத பூஷணம் எனும் பெயர் ஈட்டிய கலாபூஷணம் பே.சந்திரசேகரம் இவர்கள் எல்லோரும் ஆலயத்தின் சைவத்தூண்கள். இப்பெரியார் களின் துணையால் இன்றும் ஆலயம் பொலிவு டன் சைவ மணம் கமழ்கின்றது. இத்துடன் அல் லாமல் ஆலய வளர்ச்சிக்கு நவீன காலத்திற்கு ஏற்ப வளர்ச்சி காட்டிய இளைஞர் பங்களிப்பை மறக் கமுடியாது. நேர காலம் பாராமல் உடல், பொருளால் திருப்பணி செய்த ஆலய இந்து இளைஞர் மன்றத்தினர் நற்தொண்டால், நல்லிதயம் படைத்து நாளைய இளம் சந்ததியால் மேற்கொள்ளப்பட்ட இவ்ஆலய சிரமதானப் பணிகள், திருவெம்பாவை கால பஜனை, சிவராத்திரிகால விழாக்கள் எல்லாம் ஒன் றிணைந்த கூட்டு ஒற்றுமைக்கு இன்றும் கட்டியம் கூறுகின்றன. இன்றைய ஆலய வளர்ச்சியின் பெரும்பங்குக்கு ஆலய சுற்றாடல் இளைஞர்களின் பெருமனம் கொண்ட நிதி யுதவி.



அவர்கள் ஆலயம் மீது கொண்ட அபிவிருத்திப் பணியின் திடமான மன எழுச்சி சிந்தனைகள் எல்லாம் ஒன்று திரண்டு இன்று

ஆலயத் திருப்பணி நிறைவேற்றப்பட்டு கும்பாபிஷேகம் காண்கின்றது. திரை கடலோடி கண்காணாத உலகில் பெற்ற செல்வம் முடிப்பிள்ளையாரின் வளர்ச்சிக்கு துணை நிற்கின்றது. இம்மண்ணில் பெறுதற்கரிய பேறு கும்பாபிஷேகம் எனும் குடமுழுக்கு வேலணையில் காண்பது. அப்பேற்றினை நடாத்தபெரும் பங்காற்றிய புண்ணிய சீலர் ஆலயத்தின் அயலில் வாழ்ந்து இன்று வெளிநாடுகளில் நிதியுதவியாய் நல்கிய இளைஞர்கள். எனவே அவர்களின் நிறைந்த வாழ்வு மேலும் சிறப்புற்றோங்க இந்நாளில் வேழமுகத்து விநாயகனை வேண்டி அவன் பாதம் தொழுவோம்.

"வேழமுகத்து விநாயகனைத்தொழ
வாழ்வு மிகுந்து வரும்"

"பெரியோர்களைத் தரிசிக்கச் செல்லும் போதும் ஆலயத்திற்குப் போகும்போதும் வெறுங்கையனாய் ஒரு போதும் போகக்கூடாது. பெரியோர்களுக்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு ஏதேனுமொன்றைக் கொண்டு செல்லல் வேண்டும்

– ஸ்ரீ கிராம கிருஷ்ணர்

" மனிதனாகப் பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி ஆதலால் பிறருக்காகத் தியாகம் செய்வதே மனிதன் கடமை. தியாகத்தின் மூலமே பிரமா உலகத்தைப் படைத்தார்; விஷ்ணுவும் அதன் மூலமே உலகத்தைக் காக்கிறார்; படைப்புக்கள் யாவும் தியாகமே"

– மகாத்மாகாந்தி.

# வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம் வரலாறும் வளர்ச்சி நிலைகளும்

பொன்னம்பலம் அருணகிரிநாதன், தலைவர் பரிபாலன சபை

**அறிமுகம்**

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென் மேற்குத் திசையில் அமைந்துள்ள தீவுக் கூட்டங் களுள் லைடன் தீவு முதன்மையானது. இங்கு உலகப்புகழ்பெற்ற இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றான ஊர்காவற்றுறை உண்டு. இத்தீவு களுக்கெல்லாம் ஆட்சிபுரியும் மணியகாரன் பதவி வகித்தோர் நிலைகொண்டிருந்த இடம் வேலணையாகும். இதனால் வேலணை தீவுகளு க்கு ஒரு தலைநகர் போல விளங்குகிறது. வேலணை கிழக்கு, மேற்கு என இரு பிரிவுகளை உடையது.

வேலணை மேற்கில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியவர்களுக்கு எளியவராகி அருள்புரிந்து கொண்டிருக்கிறார் பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார். கோயில் தாபிக்கப் பட்டிருக்கும் தலத்தின் பெயர் பெரியபுலம் என்ப தாகும். இதனால் பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் என அழைக்கப் படுகிறார்.

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலங் களில் பல சைவக் கோயில்கள் இடித்து அழிக்கப் பட்டன என்பது வரலாறு. அப்பொழுது இக்கோயில் அவர்களது கைவரிசைக்கு அகப்படாமல் முடியோடு நித்திய, நைமித்திய பூசைகள் நடைபெற்று வந்தமையால் "முடிப் பிள்ளையார்" என்ற சிறப்புப் பெயரும் இக்கோயி லுக்கு உண்டு. இந்த ஆலயத்தில் தாபிக்கப்பட்ட மூர்த்திக்கு மகாகணபதி என்று கும்பாபிஷேக காலத்தில் நாமகரணம் செய்யப்பட்டதனால் மகா கணபதிப்பிள்ளையார் என்றும் வழங்கப்ப டுகிறது.

இத் திருக்கோயிலைச் சூழ சமய விசேட நிருவாண தீட்சை பெற்ற சைவர்கள் வசித்து வந்ததனாலும் அச்சைவர்களாலே நித்திய பூசைசெய்யப்பட்டு வந்ததாலும் அவர்களுடைய பரம்பரையினால் தாபிக்கப் பெற்றதனாலும் சைவப்பிள்ளையார் கோயில் என்றும் கர்ண பரம்பரையில் பேசப்படுவதுமுண்டு.

இந்த விநாயகப் பெருமான் கரசரணாதி அவயவங்கள் வியக்தமாக தோற்றமளிக்க செய்யப்பட்டிருக்காவிடினும் இம்மூர்த்தியை யாழ்ப்பாணத்து ஊரெமுவிலே பெரியவர் என்று எல்லோராலும் போற்றப்பட்ட சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் சுயம்புமூர்த்திக்கு நிகரா னது என குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மூன்று நூற்றாண்டுகளாக முடிப்பிள்ளையார் ஆலயம் விளங்கிவருகிறது. கர்ண பரம்பரைச் செய்திகளூடாகவும்,

நொத்தாரிசுமார்களின் சாசனங்கள் மூலமான சான்றுகள் மூலமாகவும் பல செய்திகளை அறியமுடிகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக பிள்ளையார்மேல் பாடப்பட்ட பதிகங்கள், ஊஞ்சல் பாடல்கள் பல செய்திகளைச் சொல்லி நிற்கின்றன.

1) இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஆசிரியர் திரு.வி.கந்தப்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட திருவூஞ்சல் பாடல்கள்.
2) முல்லைத்தீவு குமிழமுனையைச் சார்ந்த சரவணமுத்துப் புலவரால் வேலணைமேற்கு மகாகணபதிப்பிள்ளையார் திருப்பதிகம் ஒன்று பாடப்பட்டுள்ளது.
3) சரவணையைச் சார்ந்த ஆ.தில்லைநாதப் புலவரினால் பிள்ளையார் பெயரில் திருப்பதிகம் பாடப்பட்டுள்ளது.

இவற்றை நோக்கும் போது ஆலயம் தோன்றி இரண்டொரு நூற்றாண்டுகளின் பின்னர் இவை பாடப்பட்டிருக்கலாம் என ஊகிக்கலாம்.

சைவமும் தமிழும் ஒருங்கே போற்றப் பட்டது வேலணை மேற்கில்தான் என்று கூறப்படுகிறது. பெரும் அறிவாளிகளாகத் திகழ்ந்த கந்தப்பு உபாத்தியாயர், தம்பு உபாத்தியாயர், நாகலிங்க உபாத்தியாயர், இராசா உபாத்தியாயர், அப்பாத்துரை உபாத்தியாயர், ஆகியோர் வாழ்ந்த பூமி, அதுமட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்தில் முதல் சைவப் பத்திரிகை "சைவ சூக்குமார்த்த போதினி" வேலணை மேற்கு நடராசா அச்சுயந்திரசாலையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. "நெல்லாவில்" என்ற இடத்தில் இந்த அச்சு இயந்திரசாலை அமைந்திருந்தது.

பல சந்ததிகளின் திருப்பணி வேலைகளால் இவ்வாலயம் வளர்ந்து நிலைபெற்று நிற்கின்றது என்றால் மிகையாகாது.

**ஆரம்ப காலம்**

முடிப்பிள்ளையார் ஆலயம் எப்போது? யாரால்? ஆரம்பிக்கப்பட்டது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. வேலணைக்கும் வேதாரணிய ஆதீனத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்தன. வேலணை மேற்குக் கிராமத்தில் வேதாரணிய ஆதீனத்தைச் சார்ந்த வரணி, கரணவாய், சைவக் குருமார் ஆன்மார்த்தம், பரார்த்தம் என்னும் இருநெறிகளுக்கும் குலகுருவாய் அமைந்து தீட்சை கோயில் உற்சவம் முதலிய கிரியைகளைச் செய்து வந்தார்கள். இவர்களுள் சந்திரசேகரக் குருக்கள் என ஒருவர் இருந்தார். இவர் முல்லைத்தீவுப் பகுதியில் அமைந்துள்ள கோயில்களுடனும் தொடர்பு கொண்டிருந்தார்.



கோயில்களில் கும்பாபிஷேக கிரியைகளைச்செய்து வந்தவர் இவர். பெரியபுலத்திலுள்ள சுப்பிரமணியர் என்னும் சைவ உத்தமர் ஒருவரை முல்லைத்தீவுக்கு அழைத்துச் சென்று திரும்பிவரும் வழியில் நிழலுக்கு இளைப்பாறிய மரம் ஒன்றின்கீழ் சருகுகளைக்கூட்ட இப் பிள்ளையார் சிலை அங்கு காணப்பட்டது. "சுப்பிரமணியா இதை எடுத்து பெரியபுலத்திலே கொண்டுபோய் தாபிப்போம்" எனக் குருக்கள் சொல்லியபடியே அம்மூர்த்தியை ஒரு சாக்கில்

கட்டிக்கொண்டு வந்தார். வரும்வழியில் குருக்களும் சுப்பிரமணியரும் மண்டைதீவுக்குச் செல்லும் வழியில் ஆலமரத்தடியில் வைத்து விட்டு மீள அங்கிருந்து வரும்போது பிள்ளையாரையும் தூக்கிக்கொண்டு வந்து சுப்பிரமணியர் தனக்குச் சொந்தமான காணியில் ஒரு ஓலைக்குடிசை அமைத்து பிள்ளையாரை வைத்துப் பூசித்த தாகக் கூறப்படுகிறது.

இதை விட சோழநாட்டில் உள்ள திருப் பூண்டியில் இருந்து வந்து வேலணை மேற்கில் வாழ்ந்தவர் பூண்டிமா முதலியார் என்பவர். இவர் 17ஆம் நூற்றாண்டில் இங்கு வாழ்ந்ததாக குறிப்பிடப்படுகிறது. இவருடைய மூத்த மகள் பெரிய நீலயினார் என்பவர்தான் பிள்ளையாரை வைத்து ஆலயத்தைக் கட்டினார் எனவும் கூறப் படுகிறது. இவருடைய செயற்பாட்டிலும் சுப்பிரமணியம் என்பவர் முல்லைத் தீவிலிருந்து கொண்டுவந்த பிள்ளையாரே இக்கோயிலில் தாபிக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. கொண்டு வரப்பட்ட பிள்ளையார் விக்கிரகம் பெரிய நீலயினார் என்பவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. பூண்டி மாமுதலிக்கும் இதற்கும் தொடர்பில்லை. சுப்பிரமணியருடைய காணியில் அமைக்கப் பட்டது என்று கூறுபவரும் உளர்.

சுப்பிரமணியர் என்பவருக்கு அம்பல வாணர், முருகப்பர், குமாரவேலர் என மூன்று பிள்ளைகள் இருந்தனர். சுப்பிரமணியரின் மனைவி கேணிக்கரையிலுள்ள கந்தர் என்ப வரின் மகளாவார். இவர் பெரும்பொருள் வசதியுள்ளவராக இருந்தபடியால் மருமகன் சுப்பிரமணியருடைய இக்கோயிலை சுதையினா லே கட்டுவதற்கு தொடங்கினார். இப்போதுள்ள கருங்கற்கோவிலுக்கு முன்பிருந்த கோவில் இதுவாகும்.

இக்கோயில் அமைந்துள்ள இடம் பரம்பரையாக சைவர்கள் வாழும் பகுதியாகும். சிதம்பரம், கரணவாய், வரணி, காரைநகர், வேலணை மேற்கு சைவர்கள் நெருங்கிய தொடர்புகள் வைத்திருந்தார்கள். வேத, ஆகம, தேவாரங்கள், புராணபடனம், சிவபூசை ஆகியவற்றில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். அவர்களுடன் சுப்பிரமணியர் இணைந்து கொண்டார். பிள்ளையாருக்கு முதலாவது பூசகராக திருத்தொண்டு செய்யும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது. சைவர்கள் முடிப் பிள்ளையாரின் பூசகர்களாகவும் ஆலயத்தில் தேவார புராண படனங்கள் ஓது பவர்களாகவும் விளங்கினார்கள். இதனால் ஆலய நிர்வாக, நித்திய நைமித்திய பூசைகளில் தம்மை இணைத்துக் கொண்டனர்.



1840ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது. பின்னர் இக்கோவில் ஆரம்ப கர்த்தாக்களினாலும் பொதுமக்களி னாலும் பராமரிக்கப்பட்டு வந்ததை 1880ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட சாசனம் எடுத்துக் காட்டுகிறது.

**இடைக்காலம்.**

பொதுமக்கள் முற்று முழுதாக நிருவாகத்தில் பங்குபற்ற ஆரம்பித்த காலமாக

இது அமைந்தது. 1880இல் இக்கோயிலுக்கான பரிபாலன சபை முதன்முதலாக அமைக்கப் பட்டதென குறிப்பிடப்படுகிறது. இச்செயற் குழுவில் சின்னக்குட்டியார், சண்முகம், கணபதிப் பிள்ளை ஆகியோர் இடம்பெற்றதாக அறியப் படுகிறது. 1902ஆம் ஆண்டு தை மாதம் எழுதப் பட்ட 1702ஆம் இலக்க சாசனப்படி இச்சபை உறுதிப்படுத்தப்பட்டது. இச்சாசனம் நொத் தாரிசு ஐ.அம்பலவாணர் அவர்களால் எழுதப் பட்டது.

1902 ஆம் ஆண்டு கூட்டப்பெற்ற கூட்டத்தில் ஐவர் கொண்ட பரிபாலன சபை தெரிவு செய்யப்பட்டது.

1. க.அம்பலவாணர் (கந்தப்பு உபாத்தியார் மகன்)
2. செ. கனகசபாபதிப்பிள்ளை (இராசா உபாத்தியாயர்)
3. வை. செல்லப்பா
4. சீ. கதிரவேலு
5. நா. முருகர்.

இந்தப் பரிபாலன சபையின் காலத்தில் தான் பிள்ளையாரின் ஆலயத்திற்கு கருங்கல் லால் திருப்பணி செய்யவேண்டும் என்னும் முயற்சி ஆரம்பமானது. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆலயத்திற்கு மடப்பள்ளி, யாக சாலை, வசந்தமண்டபம், சுற்றுமதில் சுதையி னாலே கட்டப்பட்டன. ஆலயத்திற்குக் காண்டா மணியும் இக்காலத்தில் பொருத்தப்பட்டது. ஆரம்ப காலத்தில் ஆலயத்தில் சுதையினால் கட்டப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரம் ஹற்றன் நா.சபாபதிப் பிள்ளை அவர்களால் கட்டப்பட்டது. மணியானது நாகலிங்க உபாத்தியாயரினால் உபயமாக வழங்கப்பட்டது.

இன்றும் எழுந்தருளி அருள்பாலிக்கும் எழுந்தருளி விநாயகர் விக்கிரகம் இக்காலத்தில் உருவாக்கப்பட்டது. திரு.க.அம்பலவாணர் அவர் களால் உபயமாக வழங்கப்பட்டது. இதன்பின்னர் 10 தினங்கள் கொண்ட திருவிழாக்கள் நடைபெற்றன.

கடந்த நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டு களில் கருங்கல் திருப்பணிக்கென 22 வருடங் கள் நிதி சேகரிக்கப்பட்டது. 1920இல் ஸ்ரீலஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள் தலைமையில் கருங்கல் திருப்பணி ஆரம்பமானது. கோயிலின் கர்ப்பக் கிரகம், சபாமண்டபம், மகாமண்டப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இக்கால கட்டத் தில் வை.பொ.சோமசுந்தரம், க. வைத்திய லிங்கம், கபடிகலிங்கம் ஆகியோர் பெரும்பங்கு வகித்தனர். 1930 களில் ஆரம்ப காலத்தில் க.வைத்தியலிங்கம், சே.பொன்னையா, மு.குமாரசுவாமி, சே.கந்தையா, நா.சரவணமுத்து ஆகியோர் கருங் கல் திருப்பணியில் பெரும்பங்கு வகித்தனர். பூசகர்களாக ஆரம் பத்தில் சைவர்களும் பின்னர் பிராமணர்களும் இடம்பெற்றனர்.



1938ஆம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ தி. கைலாச நாதக் குருக்கள் தலைமையில் கூட்டம் கூட்டப் பெற்று 15 உறுப்பினர்கள் கொண்ட பரிபாலன சபை தெரிவு செய்யப்பட்டது. இதனை 1938ஆம் ஆண்டு நொத்தாரிசு கா.விநாசித்தம்பி முன்பாக எழுதப்பட்ட சாசனம் உறுதிப்படுத் தப்படுகிறது. பின்வருவோர் பரிபாலன சபையில் இடம்பெற்றனர்.

01. ம.தம்பு
02. சே. பொன்னையா
03. மு.சின்னையா

04. நா.சுப்பிரமணியம்
05. சு. ஏரம்பு.
06. ம.கணபதி
07. வே.பேரம்பலம்
08. கு.சங்கரப்பிள்ளை
09. இ. வைத்தியலிங்கம்
10. நா. அமிர்தலிங்கம்
11. ச. திருஞானசம்பந்தபிள்ளை
12. த. அருளம்பலம்
13. வே. தருமலிங்கம்
14. வ. அம்பலவாணபிள்ளை
15. வி.நாகலிங்கம்

இப்பரிபாலன சபைக்கு சிறிது காலம் சே.பொன்னையா தலைவராக இருந்தார். இவர் காலமாக 1940இல் சே.கந்தையா தலைவரானார். 1940களில் தொடர் திருப்பணிகள் நடைபெற்றன. 1948 இல் ஊரெழு சிவஸ்ரீ பாலசுந்தரக்குருக்களால் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் சைவக் குருக்கள் மார் பிராமணக் குருக்கள்மார் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**அண்மைக்காலம்**

1950களை அடுத்த காலப்பகுதியில் மீளவும் திருப்பணி வேலைகள் தொடர்ந்தன. 1960இல் உள்வீதிக் கொட்டகைகள் போடப்பட்டன. பொதுமக்கள் பலர் திருப்பணி வேலைகளுக்கு உதவினர். ஆலயத்திருப்பணி வேலைகளில் தொண்டாற்றிய சோ. சீவரத்தினம் அவர்கள் முக்கியமானவர். வீடு வீடாகச் சென்று பிடியரிசி எடுத்து திருப்பணி வேலைகளுக்கு உதவினார். பூந்தோட்டம் அமைப்பதில் பெரிதும் தமது முயற்சிகளை மேற்கொண்டார். ஆலயத்தில் இன்று காணப்படும் தென்னம்பிள்ளைகள் இவரால் நடப்பட்டவையாகும். ஆலய பூந்தோட்டத்திற்கு வளங்களைத் தேடுவதில் முன்னின்றவர். வேனாக்குளத்தில் இருந்து பொருக்கு மண் ஏற்றி பூந்தோட்டத்திற்கு இடுவார். பூந்தோட்டத்திற்கு யாரையாவது பிடித்து நீர் இறைத்து வளப்படுத்துவார். இவரின் வரிசையில் ஆ.வி.நாகலிங்கம் அவர்களும் மனேஜராக கடமையாற்றி திருப்பணி வேலைகளுக்கு உதவினார். பிடியரிசித் திருப்பணியில் திரு. சிவலை கந்தையர் என்பவரும் முக்கியம் பெற்று விளங்கினார். சிறிய பனையோலையால் செய்யப்பட்ட குட்டான்களில் வீடு வீடாகச் சென்று அரிசி பெற்று திருப்பணிக்கு உதவினார். திரு.க.தியாகராசா அவர்களும் மனேஜராக இருந்து பணியாற்றி வந்தார்.



1960 இல் பரிபாலன சபையில் திரு. நா.சரவணமுத்து அவர்கள் தலைவராகவும் க.சண்முகலிங்கம் தனாதிகாரியாகவும் திரு.ந.கணேசபிள்ளை அவர்கள் செயலாளராகவும் கடமையாற்றினர். இவர்களுடைய காலத்தில் ஆலயம் புதுப்பொலிவு பெற்றது. மிக நீண்டகாலமாக ஆலய வளர்ச்சியில் அக்கறை கொண்டு உழைத்தவர் மு.குமாரசாமிப்பிள்ளை அவர்கள். இவரது முயற்சியில் 1950இல் தேர் ஒன்று அமைக்கப்பட்டது. 1969இல் மகா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ பா. வைத்தியநாதக்குருக்கள் அவர்களால் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்தும் திருப்பணி வேலைகள் நடைபெற்றன. ஆலய கோபுர வாசலின் இடப்பக்கத்தில் புதிய மணிக்கூட்டுக் கோபுரத் திற்கு அத்திவாரம் இடப்பட்டது. பொ.சண்முக

நாதன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. சேதுபதி குடும்ப உபயமாக இடம்பெற்றது. இது முற்றிலும் வெள்ளைக் கல்லினால் கட்டப்பெற்றது. தொடர்ந்து "பிள்ளையார் விலாஸ்" கணபதிப் பிள்ளை அவர்களால் இராஜகோபுரத்திற்கு அத்திவாரம் இடப்பட்டது. 1974ஆம் ஆண்டு அம்பலவாணர் கணபதிப்பிள்ளை குடும்பத்த வர்களால் வசந்த மண்டபம் புதிதாக மீள அமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் மெருகு பெற்று விளங்குகிறது.


1976ஆம் ஆண்டு ஆலய பரிபாலன சபை புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டது. அதில் பின்வருவோர் இடம்பெற்றனர்.

1. திரு. க.இராசதுரை – தலைவர்.
2. திரு. நா.வீரசிங்கம் – உபதலைவர்
3. திரு. ப.அரசகேசரி – செயலாளர்.
4. திரு. மு.சுந்தரலிங்கம் – உப செயலாளர்.
5. திரு. க.நாகநாதபிள்ளை – பொருளாளர்.

இப்பரிபாலன சபையில் 24 உறுப்பினர்கள் இடம்பெற்றனர். இவர்களது காலத்திலும் பல திருப்பணி வேலைகள் இடம்பெற்றன.

* வசந்த மண்டபத்திற்கு எதிரே வாசலும் மண்டபமும் அமைக்கப்பட்டது.
* கோபுர வாசலின் வலப்பக்கம் புதிய மணிக்கூட்டுக் கோபுரம் திரு.து. சிற்சொரூபன் அவர்களால் அமைக்கப்பட்டது.
* இராஜகோபுர வேலை தொடர்ந்து நடைபெற்றது.
* உள்வீதித் தரை சீமந்து இடப்பட்டது. வெளிப்பக்க சுவர்கள் புனரமைப்பு செய்யப் பட்டது.
* மின்னிணைப்பு வேலைகள் மேற்கொள்ளப் பட்டன.
* திரு.மு.தியாகராசா அவர்களால் ஒலியமைப்புச் சாதனங்கள் உபயமாக வழங்கப்பட்டன.
* கிக்கடுவ நா. சண்முகம் நினைவாக அவர்களது மக்களால் பூந்தோட்ட மதில் வேலை பூரணப்படுத்தப்பட்டது.

1976ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட நிருவாக சபையின் காலத்திலும் பல திருப்பணி வேலைகள் நடைபெற்றன. இந்த பரிபாலன சபையிலும் சிலர் பதவி மாறினர். திரு.ப.அரசகேசரி இராஜினாமாச் செய்ய திரு.மு.சுந்தரலிங்கம் செயலாளரானார். திரு.க.நாகநாதபிள்ளை இராஜினாமாச் செய்ய திரு.மு.சுந்தரலிங்கம் பொருளாளராக கடமையாற்றினார். பின்னர் இவர் இராஜினாமாச் செய்ய திரு.ந.பாலச் சந்திரன் அவர்கள் பொருளாளரானார். 1985 இல் திரு.க இராசதுரை காலமாக திரு.நா.வீரசிங்கம் அவர்கள் தலைவராகக் கடமையாற்றினார்.



1986ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் புதிய பரிபாலன சபை பொறுப்பேற்றது பரிபாலன சபை உறுப்பினர்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு புரிந்துணர்வு அடிப்படையில் இப்பரிபாலன சபை அமைக்கப்பட்டது. இதில் பின்வருவோர் இடம்பெற்றனர்.

1. திரு. க.நல்லநாதன் – தலைவர்
2. திரு. நா.வீரசிங்கம் – உபதலைவர்
3. திரு. மு.சுந்தரலிங்கம் – செயலாளர்.
4. திரு.பொ.பரராசசிங்கம் – உப செயலாளர்.
5. திரு.மு. மகேந்திரன் – பொருளாளர்.

6. ந.பாலச்சந்திரன்
7. சு.செல்வநாயகம்
8. சி.திருவிளங்கம்
9. அ.இராசகோபால்
10. நா.முத்துலிங்கம்
11. அ. வரதராசா
12. தி. பாலச்சந்திரன்
13. சே. சித்திவிநாயகம்பிள்ளை
14. ஏ.சீவரெத்தினம்
15. சி. கந்தசாமி
16. சு.ஏரம்பு
17. பொ.கமலநாதன்
18. க.பேரின்பநாயகம்
19. சி.சாம்பசிவம்
20. மு. இராசரத்தினம்
21. சி. பூபாலசிங்கம்
22. ந.கணேசபிள்ளை

இந்த பரிபாலன சபையில் 22 உறுப்பினர்கள் இடம்பெற்றனர். இவர்களுடைய காலத்திலும் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. மீண்டும் 1988 ஆம் ஆண்டு புதிய பரிபாலனசபை தெரிவு செய்யப் பட்டது. இதில் பின்வருவோர் இடம் பெற்றனர்.

1. திரு. க.நல்லநாதன் – தலைவர்
2. திரு. க.இராசகோபால் – உபதலைவர்
3. திரு. யா.இராமநாதன் – செயலாளர்.
4. திரு.பொ.கமலநாதன்– உப செயலாளர்.
5. திரு.மு. மகேந்திரன் – பொருளாளர்.
6. திரு. ப. ஆரூரன்
7. திரு. ந. கணேசபிள்ளை
8. திரு. சி. அருளம்பலம்
9. திரு.சொ. மாசிலாமணி
10. திரு. ஆ. பொ. சண்முகநாதன்
11. திரு. ச. சத்தியானந்தர்
12. திரு.க.நற்குணசீலன்
13. திரு. சி. சாம்பசிவம்
14. திரு. தி. பாலச்சந்திரன்
15. திரு. க. பேரின்பநாயகம்
16. திரு. நா முத்துலிங்கம்
17. திரு. அ. வரதராசா
18. திரு. க. செல்வநாயகம்
19. திரு. சி. சிவசுப்பிரமணியம்.
20. திரு. கு. இராமச்சந்திரன்.
21. திரு. ம. விநாயக மூர்த்தி
22. திரு. ச. கணேசலிங்கம்
23. திரு. சி.கந்தசாமி
24. திரு.ம. அம்பிகைகுமாரன்
25. திரு.சு.ஏரம்பு



இப்பரிபாலன சபையில் 25 உறுப்பினர்கள் இடம் பெற்றனர். மகா கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்று திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடைபெற்றன.

* ஆலய வாசலின் இடப்பக்க மணிக் கூட்டுக்கோபுரத் திருப்பணி நிறைவேறியது.
* வாசலின் இரண்டு பக்கமும் மணிக் கூட்டுக்கோபுரம் எடுப்பாக வளர்ந்து நின்று இராஜகோபுர திருப்பணியை துரிதமாக்க வேண்டும் எனக்கூறின.
* கருங்கல் திருப்பணியில் மண்டபங்களில் குறைவேலையாகவிருந்த கருங்கல் வரிகள் புதிதாகக் கட்டப்பட்டன.
* எழுந்தருளி விநாயகருக்கு கருங்கல்லினால் புதிதாக கோயில் அமைக்கப் பட்டது.

* சுற்றுப்பிரகார கோயில்கள் புதிதாக அமைக்கப்பட்டன.

லக்சுமி, கௌரியம்பாள், சந்தானகோபாலர், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், நவக்கிரகம், சண்டேஸ்வரர் இவை அடியார்களால் உபயமாக திருப்பணி செய்யப்பட்டன.

1. லக்சுமி :– திரு. க. யோகலிங்கம் அவர்கள் (யோகு ரேடிங் கொம்பனி)
2. கௌரியம்பாள் :– திரு.ஆ.பொ. பரராசசிங்கம் குடும்பம்
3. சந்தானகோபாலர் :– திரு.ஆ.வி. நாகலிங்கம் குடும்பம் சார்பாக
   திரு மோகனதாஸ் அவர்கள், திரு.மு. சண்முகராசா குடும்பத்தினர்
4. சுப்பிரமணியர் :– திரு.வே. செல்லத்துரை குடும்பத்தினர்.
5. நவக்கிரகம் :– திரு. க. சிவசரணம் குடும்பத்தினர்.
6. சண்டேஸ்வரர் :– திரு.ச.பழனிநாதன், திரு. ச.சிதம்பரப்பிள்ளை

* மூலஸ்தானம் ஸ்தூபி, வசந்தமண்டப ஸ்தூபி புதுப்பிக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டமை.
* சபாமண்டபம், மகாமண்டபம் சிமெந்தினால் புதிய மண்டபமாக அமைக்கப்பட்டது. மகாமண்டப புனரமைப்பு வேலைகள் எமது ஊரைச்சார்ந்த பிரபல வர்த்தகர் திரு.ந.கேசுநாதன் (மாலவன்ஸ்) உபயமாக திருப்பணி செய்யப்பட்டது.
* ஆலய உள்வீதி சுவர்கள் வர்ணம் பூசப்பட்டு சுவர்களில் திரு முறைகள் எழுதப்பட்டன.

இத்தகைய திருப்பணி வேலைகள் பூர்த்தியடைந்து 1990 ஆம் ஆண்டு (11.04.1990) பங்குனி 29ஆம் திகதி ஊரெழு பா.வைத்திய நாதசிவாச்சாரியார் அவர்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து ஆலயத்தில் சதுர்த்தி, விஷேட தினங்கள் பிள்ளையார் கதை, நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

**1991 புலப்பெயர்வுக்குப் பின்னர்**

நாட்டின் இனப்பிரச்சனை தொடர்பாக ஏற்பட்டு வருகின்ற யுத்தங்களின் விளைவாக 1991ஆம் ஆண்டு (18.10.1991) நவராத்திரி காலத்தில் வேலணையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக எமது ஊர்மக்கள் அனைவரும் யாழ்ப்பாண நகரம் நோக்கி நகர்ந்தனர். எமது கிராம சமூக கட்டமைப்புக்கள் எல்லாம் பாதிப்பிற்குள்ளாயின.

இந்த நேரத்தில் எமது ஆலயத்தில் 1965ஆம் வருடம் தொடக்கம் நித்திய பூசை ஆற்றி வந்த இ.சோமாஸ்கந்தசர்மா அவர்கள் இடம் பெயரும் நோக்குடன் சிறிது தூரம் சென்ற பின்னர் பிள்ளையாரின் புதுமையோ என்னவோ திரும்பவும் கோயிலுக்கு திரும்பி வந்து இடம்பெயராமல் பிள்ளையாருடன் தங்கிவிட்டார். புலம்பெயர் காலத்திலும் எமது பகுதியில் பூசை நடைபெற்ற ஒரேயொரு ஆலயம் என்றால் எமது முடிப்பிள்ளையார் ஆலயம்தான். அந்தவகையில் பிள்ளையாரின் திருவருளை வியந்தவர்கள் பலர்.



இடம்பெயர முடியாத வயோதிபர்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு நிலையமாக எமது ஆலயம் விளங்கியது. கோயில் ஐயாவும் பிள்ளையாருக்கும் அவர்களுக்கும் ஆதரவு வழங்கி உதவினார்கள். கோயில் ஐயா அவர்களின் இப்பணி காலத்தினால் மறக்க முடியாத ஒன்றாகும். இது எமது ஆலயத்தின் பாதுகாப்புக்கு பெரும் உதவியாகவிருந்தது.

இடம்பெயர் காலத்தில் எமது ஆலயத்தோடு தொடர்புபட்ட அடியார்கள் பலர் இடம்பெயரா நிலையிலும் எம்பெருமானின் பூசை ஒழுங்குகள் நடைபெற தம்மாலான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டனர். அதற்கேற்ப பயனுறுதி வாய்ந்த பல நடவடிக்கைகளுக்குள் எடுபட்டனர். இவர் பணி போற்றுதற்குரியது. இவர்களுடைய முயற்சிகள் இன்று பயன்கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

**1996 மீள்குடியேற்றத்தின் பின்னர்.**

1996இல் மீளவும் எமது பிரதேச மக்கள் மீள்குடியேற்றத்தை மேற்கொள்ளத் தொடங்கினர். 1996 ஏப்பிரல் மாதத்தில் இருந்து மக்கள் குடியேறத்தொடங்கி விவசாய பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கினர். இந் நிலையில் எமது ஆலயப் பகுதியிலும் மக்கள் குடியேறத் தொடங்கினர். 15.03.1998 எமது ஆலயத்தில் மகா சபைப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. 07 வருடகால இடைவெளியின் பின்னர் ஆலயப் புரைமைப்பு வேலைகள் நடைபெறத் தொடங்கின. இக்கூட்டத்தில் 25 உறுப்பினர்கள் கொண்ட புதிய பரிபாலன சபை அமைக்கப்பட்டது. இதன் தலைவராக திரு. பொ.அருணகிரிநாதன் அவர்களும் உபதலைவராக திரு.ந. கணேசபிள்ளை அவர்களும் செயலாளராக திரு.க.பரமேஸ்வரன் அவர்களும் உபசெயலாளராக திரு.வி.சாம்பசிவம் அவர்களும் பொருளாளராக திரு.மு.மகேந்திரன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**தற்போதைய பரிபாலன சபை உறுப்பினர்கள்.**

திரு. பொ. அருணகிரிநாதன் – தலைவர்
திரு. ந. கணேசபிள்ளை – உபதலைவர்
திரு. யா. இராமநாதன் – செயலாளர்.
திரு. ச. சடகோபன் – உபசெயலாளர்
திரு. மு. மகேந்திரன் – பொருளாளர்.

**உறுப்பினர்கள்**

திரு. கு.கங்கைவேணியன்
திரு. தி. சீவரட்ணம்
திரு. சி. த. மகாலிங்கம்
திரு.ச.இளங்கோவன்
திரு. க.மகேந்திரலிங்கம்
திரு.ந. விஜயகுமார்
திரு.கோ.விஜயரூபன்.
திரு. பு.பாலசிறிதரன்
திரு.ச.சிறிகரன்
திரு.க.பேரின்பநாயகம்
திரு.ந.முத்துலிங்கம்
திரு.அ.வரதராசா
திரு.ப.தேவநாதன்
திரு.தி. பாலச்சந்திரன்
திரு.நா.பரமேஸ்வரன்
திரு.இ.திலீபன்
திரு.சி.சாம்பசிவம்
திரு. து.தவச்செல்வம்
திரு.ப.கார்த்திகேசு
திரு.ந.சிவபாலன்
திரு.ந.பாலச்சந்திரன்



எம் பெருமானுக்கு பாலஸ்தாபனம் செய்யப்பெற்று பல திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அவற்றுள் சில

1. கோபுரவாயில் மணி மண்டம் பூர்த்தியடைந்துள்ளது.
2. யாகசாலை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. (குலசேகரம் குடும்பம் விக்னேஸ்வரா நகையகம்)
3. தீர்த்தக் கேணியில் தீர்த்தமாடுவதற்கான மண்டபமும் இளைப்பாற்று மண்டபமும். அ.வைரமுத்து (செல்லையா வாத்தியார்) குடும்பம்.

4. பாகசாலை (மடைப்பள்ளி) புதிதாக நிரு மாணிக்கப்பட்டது.

5. ஆலய நிர்வாகத்திற்குரிய புதிய அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

6. ஆலயத்திற்கென புதிய நீர்த்தாங்கி அமைக் கப்பட்டு குழாய் நீர் விநியோகம் அமைக்கப் பட்டுள்ளது. (திரு. க. சிவசரணம் குடும்பத்தி னர்) ஆலயத்திற்கு நன்னீர் வசதி கிடைத்தி ருப்பது மகிழ்ச்சிக்குரியது..

1998 ஆம் ஆண்டில் இருந்து வழமைபோல மகோற்சவம் நடைபெறத் தொடங்கியது. புலம் பெயர்ந்த காலத்தில் எமது கோயில் குருக்கள் பிரம்மஸ்ரீ இ.சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து 07 வருடங் களும் பிள்ளையாருக்கு நித்தியபூசை செய்து வந்தார். இது பிள்ளையாரின் பெருங் கருணை யினால் ஆகும்.

இதன்பின்னர் ஒவ்வொரு வருடமும் மகா சபைப் பொதுக்கூட்டம் நடைபெற்று பரிபாலன சபை தெரிவு இடம் பெற்று வருகிறது. இப்பரி பாலன சபையினது காலத்தில் ஆலயத்தில் பெரும் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

**அவற்றுள் குறிப்பிடத்தக்கவை**

1. பஞ்சதள இராஜகோபுர வேலை பூர்த்தியடைந் துள்ளது.

2. வெள்ளைக் கல்லினால் கட்டப்பெற்ற புதிய தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டுள்ளது. – வேலணை மேற்கு முருகேசு செல்லம்மா குடும்பம்

3. தேர் இருப்பிடம் அமைக்கப்பட்டு வருகிறது. மயில்வாகனம் பாக்கியலட்சுமி குடும்பம் சார்பாக திருவிளங்கம் குடும்பம்.

4. எம்பெருருமானுக்கு புதிய சித்திரத்தேர் திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ந.ஜவகர்லால் நேரு குடும்பம்

5. ஆலயத்தில் மின்னிணைப்பு வேலைகள் புனரமைக்கப்பட்டு புதிய மின்பிறப்பாக்கி இயந்திரம் பெறப்பட்டுள்ளது. – ஆ.பொ. பரராசசிங்கம் குடும்பம்

6. ஆலய நாற்புற வீதிகளும் மண் இடப்பட்டு உயர்த்தப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன.

7. ஆலய சுற்றுக் கொட்டகை வெளிப்புற சுண்ணாம்புச் சுவர் அகற்றப்பட்டு மதில்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

8. வருடா வருடம் ஆலயத்தின் உட்பகுதி வர்ண வேலைள் செய்யப்படுகின்றன.

9. அனைத்து வாகனங்களும் மீள்புனரமைப் புச் செய்யப்பட் டுள்ளன.



10. சப்பரம், தேர், புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந் துள்ளன.

11. ஆலய முன் வாயில் மணிமண்டப வேலைகள் நடைபெறு கின்றன

12 ஆலயத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் முழுவீச்சில் நடை பெற்று வருகின்றன.

வருடந்தோறும் மகோற்சவம் வைகாசிமாத பௌர்ணமி திதியில் தீர்த்தோற்சவம் வரத்தக் கதாக 11 நாள் திருவிழா நடைபெற்று வருகிறது. மகோற்சவ காலத்தில் வரும் அடியார்களுக்கு உதவ திரு.க.சிவசரணம் குடும்பத்தினர் தாகசாந்தியும் திரு.ஐங்கரன் அன்னதான சபையால் அன்னதானமும் வருடந்தோறும் தவறாது வழங்கப்படுகிறது.

மேலும் ஆலய வளர்ச்சியில் ஆலய விஸ்தரிப்புப் பணிகளுக்கு பெருமனதுடன் உதவியவர்களில் முக்கியமானவர்கள்.

1. முன்பக்கம் – இராசாவாத்தியார் (செ.கனக சபாபதிப்பிள்ளை) பரம்பரையினர்
2. தெற்குப் பக்கம் – பேரம்பலம் பராசக்தி (அப்பாத்துரை) குடும்பத்தினர்
3. மேற்கு – மயில்வாகனம் இராசரட்ணம் குடும்பம்
4. வடக்கு – கந்தையா பாக்கியம் குடும்பம்
5. வடமேற்கு – பொ.சோமசுந்தரம் (கேணியடி வீடு) குடும்பம்
6. முன்வடக்கு – மு.குமாரசுவாமி குடும்பம்.

இக் குடும்பங்கள் ஆலய வளர்ச்சிக்கும் விஸ்தரிப்புக்கும் பெரும் பங்காற்றியுள்ளனர். இவர்களுக்கு எல்லோரும் நன்றி கூற வேண்டும்.

எம்பெருமானின் திருவருளாலும் எமது கிராம மக்கள் வெளியூரிலும் உள்ளூரிலும் இன்று செய்து வரும் உதவியினாலும் ஆலயம் புதுப்பொலிவு பெற்று வருகிறது. கனடாவில் இயங்கும் வழிபடுநர்களும் லண்டனில் இயங்கும் வழிபடுநர் சங்கம் ஆகிய அமைப்புக்கள் எமக்கு பலவழிகளில் ஆக்கபூர்வமான உதவிகள் செய்து வருகின்றனர். திருப்பணிகளில் சில தனிப்பட்ட அன்பர்களின் உதவியினாலும் நடைபெற்று வருகின்றன.

தொடர்ந்தும் எம்பெருமானின் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் நடைபெறவும் எமக்குச் சாந்தியும் சமாதானமும் தொடர்ந்தும் நிலைத்திட எல்லாம் வல்ல பெரியபுலத்தவனின் பாதார விந்தங்களைப் பணிந்து போற்றுவோம்.

திருப்பணி வேலைகள் நிறைவேறி எம்பெருமானுக்கு 30. 03.2005 புதன்கிழமை காலை 9.13மணி முதல 10.13 மணி வரையுள்ள சுப வேளையில் எம்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் நிறைவேறியுள்ளது. பிரதிஷ்டா பிரதமகுருக்களாக ஊரெழு பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரக்குருக்கள் அவர்களும் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானத்தின் பிரதம குருக்களும் பிரம்மஸ்ரீ.வை.பாலசுந்தரக்குருக்கள் பங்காற்றினார் 11 யாக குண்டம், நவகுண்ட பாகமும் அமைக்கப்பட்டு வெகு சிறப்பாகக் கும்பாபிஷேகம் நிறைவேறியுள்ளது. இந்த முறை நடைபெற்ற கும்பாபிஷேகம் பல்வேறு சிறப்புக்கள் கொண்டதாக அமைந்திருந்தது. கம்பீரமாக எழுந்து நிற்கும் பஞ்சதள இராஜகோபுரம், இந்தியாவில் இருந்து கும்பாபிஷேகத்திற்கு மண்ணும், மரங்களும் கொண்டு வரப்பட்டன. ஆலயத்தின் கோபுரத்தையும், ஸ்தூபியையும் மாலைகள் சிறப்பாக அலங்கரித்தன.



எங்கள் ஊரின் உறவுகள் பலவற்றை இணைத்த ஒரு பெருவிழாவாக அமைந்திருந் தது. புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து கும்பாபிஷேகத்தைக் காண்பதற்கு பலர் வந்திருந்தார்கள் கும்பாபிஷேக நிதி சேகரிப்பில் நாம் ஈடுபட்ட வேளையில் எல்லோருமே பெருவிருப்புடன் பங்களித்தார்கள். எல்லோரும் சேர்ந்து உழைத்ததனால் விழா சிறப்பாக இருந்தது. கட்டடக் கலைஞர்கள் இரவு, பகல் பாராது தமது பங்களிப்பை நல்கினார்கள் பிரதமகுருக்கள், ஏனைய குருமார், எல்லோரும் சிறப்பாகப் பணியாற்றி கும்பாபிஷேகத்தைச் சிறப்பித்தார்கள்.

பெரியபுலத்தானின் பேரருள் எல்லோருக்கும் கிடைப்பதற்கு அவனின் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்குகின்றேன்

# ஆலயமும் கர்ணபரம்பரைச் செய்திகளும்

பொன். அருணகிரிநாதன் (M.E.d)

"வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயிலின் பூர்வ வரலாற்றைத் தெளிவாக அறியத்தக்க சாதனங்கள் எவையுமில்லை. ஆயினும் மிகப் பழமையான தென்பதனை மறுக்க முடியாது..." மேற்படி கூற்று 09.04.1939இல் வெளியிடப்பட்ட பரிபாலன சபையாரின் "இரப்புரை" பற்றிய துண்டுப் பிரசுரமொன்றில் காணப்படுகிறது. இக்கூற்று எமது ஆலயத்தின் சரியான வரலாற்று ஆதாரங்கள் இதுவரை எமக்கு கிடைக்கவில்லை என்பதைக் காட்டி நிற்கிறது. இன்றுவரை வரலாற்றாதாரங்களை பெறுவதற்கான முயற்சிகள் செய்யப்படவில்லை என்பது துரதிஷ்டவசமானது.

இந்த முயற்சியில் ஈடுபட முனைந்தபோது கர்ண பரம்பரைச் செய்திகளை ஆங்காங்கு ஊர்ப் பெரியவர்களிடம் கேட்க முடிந்தது. அந்த செய்திகளும் பல சந்தேகங்களை மனதில் எழுப்புபவையாகவே இருக்கின்றன.

கோயில் வரலாறு பற்றிய தகவல்கள் பல்வேறு சுய விருப்பு சார்ந்த ஆதாரங்களை காட்டி நிற்பதையும் அவதானிக்க முடிகிறது. தாம் சார்ந்த பரம்பரைச் செய்திகளை உள்ளடக்கியதான தகவல்கள் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் பல முரண்பாடுகளும் காணப்படுகின்றன. இந்நிலையில் கர்ண பரம்பரைச் செய்திகள் பற்றிய ஒரு ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

ஏறக்குறைய 350 வருடங்களுக்கு முன்னைய வரலாற்றைக் கொண்டதாக எமது ஆலயம் உள்ளது. இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் பிள்ளையார் விக்கிரகத்தை வன்னிப் பிரதேசத்தில் இருந்து சுப்பிரமணியம் என்பவர் கொண்டு வந்ததாக கூறப்படும் செய்தியை பலர் ஏற்றுக் கொள்கிறார்கள்.

வன்னிப் பிரதேசம் என்று கூறும்போது முல்லைத்தீவைச் சேர்ந்த பகுதி எனக்கொள்ள இடமுண்டு, ஏனென்றால், குமுழமுனை ஸ்ரீமத் க. சரவணமுத்துப் புலவர் அவர்கள் பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் பேரில் பதிகம் ஒன்று பாடியுள்ளார் இப்பதிகம் இன்றும் வழக்கில் உள்ளது.

பிள்ளையார் விக்கிரகம் சுயம்பு விக்கிரகத் தன்மையை ஒத்ததாகக் காணப்படுகிறது. சிற்ப கலைகள் வளர்ச்சியடையாத ஒரு ஆரம்ப காலத்தில் செதுக்கப்பட்ட ஒரு அம்சத்தை

அவதானிக்க முடிகிறது. இயற்கையாகவே உருவாகிய அமைப்பினை முற்றுமுழுதாக ஏற்க முடியாதுள்ளது. அத்துடன் வன்னிப் பிரதேச சூழலைப் புலப்படுத்தும் பாறை அமைப்பினை ஒத்த பாலியாற்றுப் பிரதேச அமைப்புத் தன்மைகள் இருப்பதாகப் பலர் கூறுகின்றனர்.

இவ்விக்கிரகத்தை மாற்றி புதிய விக்கிரகம் ஒன்று பிரதிஷ்டை செய்ய பலர் விரும்பி பிள்ளையாரிடம் பலமுறை உத்தரவு கேட்ட போது உத்தரவு கிடைக்கவில்லையாம் . இதனால் அவரே இன்று இவ்வாலயத்தின் மூல மூர்த்தியாக விளங்குகிறார். விநாயகரின் அருளின் பெருமை பற்றி இவ்வூர்ப் பெரியவர் வகள் பலர் பல கதைகள் கூறுகின்றனர்.

**1. கப்பல் உரிமையாளரின் மனதை மாற்றியது**

எமது ஆலயத்தின் கட்டட அமைப்பினை முழுதும் கருங்கல்லினால் செய்ய வேண்டுமென்று எமது மூதாதையர்கள் பெரு முயற்சி செய்தனர். அதற்காக காலி நகரத்தில் இருந்து கப்பல் மூலம் கருங்கல்லைப் பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவ்வூர்ப் பெரியவர்கள் பலர் காலியில் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்ததனால் இம்முயற்சி அவர்களுக்கு கைகூடியது. காலியில் இருந்து ஊர்காவற்றுறைக்கு கப்பலில் கருங்கல் ஏற்றி வருவதற்கு கப்பல் சொந்தக்காரரிடம் ஏற்பாடுகள் செய்யப்பட்டது. ஒரு கப்பல் சொந்தக்காரன் கடலில் அச்சம் காரணமாக மறுத்துவிட்டாராம். மற்றுமொரு கப்பல் சொந்தக்காரரும் மறுத்துவிட்டாராம் ஒருநாள் இரவு இரண்டாவது கப்பல்க்காரரின் கனவில், ஒருவர் சென்று நான் வேலணை மேற்கில் இருந்து வருகிறேன். உனது கப்பலுக்கு எந்தவித கஷ்டமும் ஏற்படாது. கோயிலுக்கு கருங்கல்லை ஏற்றித் தருமாறு கூறினாராம். உடனே கப்பல் சொந்தக்காரர் தாமாகவே முன்வந்து கருங்கல் ஏற்றுவதற்கு சம்மதித்து எந்தவித இடையூறும் இல்லாது ஊர்காவற்றுறைக்கு கப்பல் கருங்கல்லுடன் வந்து சேர்ந்ததாம். அதேவேளை முன்னைய கப்பல்காரரின் கப்பல் கடலில் பல கஷ்டத்திற்குள்ளாகி சுக்கான் அறுந்து தத்தளித்து கரையேறியதாகவும் பிள்ளையாரின் செயல்தான் அதற்கு காரணமென்று கப்பல் சொந்தக்காரன் கூறியதாகவும் எமது ஊர்ப் பெரியவர்கள் எம்பெருமானின் அருளை வியந்து கூறுகின்றனர்.

**2. பிள்ளையாரின் விருப்பங்கள் சில சம்பவங்கள் மூலம் வெளிக் காட்டப்பட்டமை.**



எமது மூதாதையர்கள் பிடி அரிசி சேமிப்பு மூலம் நிதி சேகரித்தும், பலரிடம் பல ஊர்களுக்கும் சென்று நிதி சேர்த்து இவ்வாலயத் திருப்பணிகளை மேற்கொண்டு வந்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் ஊர்ப் பொதுவான கோயிலை ஒருவருக்கு சொந்தமாக எழுதுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவாம். பிள்ளையார் ஏதோ ஒரு வகையில் தனது வெறுப்பைக் காட்டி அச்செயலை நிற்பாட்டினார் என்று கூறுவர். இது விநாயகரின் அற்புதச் செயலுக்கு ஒரு சான்றாகும். இன்றுவரை பொதுமக்கள் எல்லோருக்குமான ஒரு சொத்தாகவே இவ்வாலயம் விளங்குகிறது.

**முடிப்பிள்ளையார் என்ற பெயர்வரக் காரணம்**

அன்னியர்கள் இலங்கையை கைப் பற்றி ஆண்ட போது அவர்கள் தமது சமயத்தைப் பரப்புவற்காக இங்கு சைவ சமயத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனராம். அப்போது இருந்த சைவ ஆலயங்களின் முடிகள் எல்லாம் அன்னியர் களினால் இப்பகுதியிலும் அழிக்கப்பட்டன. ஆனால் எமது ஆலயத்தின் முடி மாத்திரம் உடைக்கப்படாததனால் "முடிப்பிள்ளையார்" என்ற பெயர் வழங்குவதாக கூறுகின்றனர். இன்னொருசாரார் அந்தக் காலத்தில் கோயில்கள் கட்டும்போது முடி வைத்து தூபி அமைத்து கட்டும் வழக்கம் இல்லாமல் அநேகமான கோயில்கள் மாடக் கோயில்களாகவே கட்டப் பட்டனவாம். ஆனால் எமது ஆலயந்தான் அக்காலத்தில் முடி வைத்து தூபி அமைத்து கோயில் கட்டப்பட்டதனால் "முடிப்பிள்ளையார்" என்ற நாமம் நிலவுவதாக குறிப்பிடுகின்றனர். முன்னைய காரணமே பொதுவானதாக பலராலும் ஏற்றுக் கொள்ளப் படுகின்றது.

**3. இன்னுமொரு பிள்ளையார் கோவிலின் உருவாக்கம்**

முற்காலம் தொடக்கம் எமது ஆலயத்தில் பல்வேறு புராணங்கள் படித்து பயன் சொல்லப்படுவது வழக்கம். இது அண்மைக் காலம் வரை தொடர்ந்து வந்துள்ளது. புராண பயனைக் கேட்பதற்காக பலர் கோயிலில் வந்து கூடுவார்களாம். அவ்வாறு பயன் கேட்கும் போது ஒவ்வொருவரும் தமக்கென்று ஒவ்வொரு இடத்தை ஒதுக்கி வைப்பார்களாம். ஒவ்வொரு தூணையும் தமது இருப்பிடமாக வரித்துக் கொண்டு அந்த இடத்தில் இருந்து பயன் கேட்பார்களாம். அவ்வாறு நடைமுறை இருக்கும் போது ஒரு நாள் ஒருவர் இருக்கும் இடத்தில் வேறொருவர் வந்து அமர்ந்து பயன் கேட்டுக் கொண்டிருந்தாராம். அதைப் பார்த்து விட்டு அந்த இடத்தில் வழமையாக இருந்து புராணம் கேட்பவர் கோபித்துக் கொண்டு பயன் கேட்காமல் திரும்பிச் சென்றுவிட்டாராம். அவர் பின்னர் தனக்கென்று ஒரு கோயில் கட்ட வேண்டும் என்று முயற்சிகள் செய்து அயலில் உள்ள புளியங்கூடல் கிராமத்திற்கு சென்று தமது காணியில் சிறிய குடில் ஒன்று அமைத்து பிள்ளையார் விக்கிரகம் வைத்து வழிபட்டு வந்தாராம். அந்த பிள்ளையாரே இன்று புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் என்ற பெயரில் கோயில் கொண்டருளியுள்ளார். இந்தன் பிள்ளையார் கோயில் என்றும் அழைப்பார்கள். இக்கதையும் இன்று செவி வழிக்கதையாக எமது சமுதாயத்தில் நின்று நிலைத்து வருகிறது. மகாகணபதிப்பிள்ளையார் கோயில் ஸ்தாபக பரம்பரையைச் சேர்ந்த உறவினர்கள் வரிசையில் உள்ளவர்களே அக்கோயிலையும் அமைத்தார்கள் என்றும் கூறப்படுகிறது.



**4.தேர்வடம் ஒன்று கடலில் வந்தமை.**

மிக அண்மைக் காலத்தில் 7,8 வருடங்களுக்கு முன்னர் எமது ஆலயத்திற்கு தென்பகுதியில் உள்ள கடலில் நீளமான தேர்வடம் ஒன்று கடலில் மிதந்து வந்து கரை சேர்ந்தது. இது இப்பிள்ளையாரின் புதுமை யென்று கூறுகிறார்கள் கடலில் இவ்வடத்தைக் கண்ட 'கெட்டில்' பகுதியில் உள்ள மீனவத் தொழிலாளர்கள் எமது பிள்ளையாருக்குத்தான் இவ்வடம் உரியது. என்று கூறி பிள்ளையாரின் புதுமையை வியந்து ஆலயத்திற்கு கொண்டு

வந்து ஒப்படைத்துள்ளார்கள். இந்த வடம் இப்போதும் எமது ஆலயத்தில் வைக்கப்பட்டி ருக்கிறது. பிள்ளையாரின் அருட்செயலுக்கு இந்த நிகழ்ச்சி நல்ல சான்று என ஊர்ப் பெரிய வர்கள் கூறுகின்றார்கள்.

**5. கனவில் சென்று பலருக்கு திருப்பணிகளை செய்யுமாறு கூறுவது.**

பிள்ளையார் எமது ஊரிலுள்ள பல வசதி படைத்தவர்களிடம் கனவில் சென்று தனக்கு தேவையான திருப்பணிகளைச் செய்யுமாறு கேட்டுள்ளார். தனக்கு அது வேண் டும் இது வேண்டும் என்று கனவில் சென்று கூறுவாராம். இதனால் இவ்வூரில் வாழ்ந்த பலர் தாமாக முனவந்து திருப்பணிகள் செய்ததை காணமுடிகிறது. இன்றும் பிள்ளையாருக்கு பயந்து பல சிறப்புகளையும் திருப்பணிகளையும் பலர் செய்து வருகின்றனர். அதுபோல பிள்ளையாரும் பலரை நல்ல முறையில் வேண்டியதை வேண்டியாங்கு கொடுத்து சிறப்பிப்பதையும் பலர் ஏற்றுக்கொள்கிறார்கள். இவ்வூரில் வாழ்ந்து அமரரான பலர் பிள்ளை யாரின் அற்புதங்களையும் புதுமைகளையும் எப்போதும் பேசிக்கொண்டே இருப்பார்கள். அவர்களின் கருத்துகளை பல தடவைகளில் சொல்லக் கேட்ட பலர் அந்த சம்பவங்களை இன்றும் குறிப்பிடுகின்றனர்.

எமது ஆலயத்தின் வளர்ச்சிகளைப் பார்க்கும் போது 1940 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது கருப்பக் கிரகமும் அர்த்தமண்டபமும் கருங்கல்லினால் கட்டி பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. அதன் பின்னரே படிப்படியாக ஏனைய மண்டபங்கள் கருங்கல் லினால் கட்டப்பட்டு வந்துள்ளன. இதற்கான சான்றை 05-04-1944ஆம் ஆண்டு ஆலய பரிபாலன சபையினரால் வெளியிடப்பட்ட திருப்பணி விஞ்ஞாபனம் ஒன்று காட்டி நிற்கிறது 10-04-1944கல் மகா மண்டபத்தின் நிலையின் மேற்புறத்துக்குப் பாவுகல் வைக்கும் வைபவம் நடைபெற்றுள்ளது. இத் திருப்பணிகள் நிறைவேறி மீண்டும் 1948 ஆம் ஆண்டு கும்பாபி ஷேகம் நடைபெற்றது: இதற்கான சான்று இன்றும் எமது ஆலயத்தின் சபா மண்டபத்தின் சுவரில் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மேலும் பல திருப்பணிகள் நடைபெற்று 21 வருடங்களுக்கு பின்னர் அதாவது 25-06-1969ஆம் ஆண்டு சம்புரோஷ்ண மகா கும்பா பிஷேகம் நடைபெற்றுள்ளது. இதில் இன்னுமொரு புதுமை என்னவென்றால் மீண்டும் 21 வருடங்களுக்கு பின் 11-04-1990 இலும் புதன்கிழமையிலும் சுவாதி நட்சத்தி ரத்திலும் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.



எமது ஆலயம் பற்றிய வரலாறு இன்று வரை எமக்கு ஆதாரபூர்வமாக கிடைக்காதி ருப்பது மனவருத்தத்திற்குரியது. வரலாறு தெரிந்த காலத்துக்குரிய சான்றுகள், ஆவணங் கள் பதிவேடுகள் கூட இன்னும் சரியான முறையில் ஆலயத்தில் பேணப்படவில்லை. எமது ஆலயத்தின் வளர்ச்சியை முழு நோக் காகக் கொண்டு அத்தகைய சான்றாதாரங்கள் யாரிடத்தில் எங்கிருந்தாலும் அது உரிய இடத்திற்கு வந்து சேரவேண்டும். அதற்கு

அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும். அத்தகையதொரு முன்னுதாரண மான பங்களிப்பை இவ்வாலயத்துடன் பங்கு கொண்டு உழைத்த அன்பர்கள் அனைவரும் இந்த சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டும். அத்தகைய சான்றுகள் வரலாற்றுப் புகழ் மிக்க எமது ஆலயத்திற்கு மிகவும் அத்தியாவசியமாக உள்ளன. இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் எல்லோரும் மனப்பூர்வமாக, மானசீகமாக தங்களை எதுவித பிரதிபலனும் எதிர்பாராது அர்ப்பணித்தது உண்மையானால் கோயிலுக்குரிய சொத்துகள் ஆதாரங்கள் பிள்ளையாரிடம் வரவேண்டியது இன்றைய காலத்தின் ஒரு தேவையாகும். அதற்கு எல்லாம் வல்ல எம்பெருமான் நல்வழி காட்ட வேண்டும் என்பது பலரது விருப்பமுமாகும்.

(மறு பிரசுரம்)

"உருத்திராட்சமாலை தரிக்காமல் சிவபூசை செய்வோர் அதனால் வரும் பயனைப் பெறார். ஆகையால் உருத்திராட்சம் தரித்துக்கொண்டே சிவபூசை செய் சிவபூசையைக் கூறவே சிவமந்திரசெபம், சிவாலய சேவை முதலிய பிற புண்ணியங்கள் செய்யும் போதும் உருத்திராட்சம் தரித்தல் வேண்டும் என்பது சொல்லாமலே பெறப்படும்

– சைவசமய நெறி

"பூண்பதற்குக் கண்டிகையினைக் கூசியிடும் புல்லியரைக் காண்பதற்குக் கூசும் அரன் கைத்து"

– சைவ சமயநெறி



# விநாயகப் பெருமான் துணை

ந. பாலச்சந்திரன்
நிர்வாக சபை உறுப்பினர்
(பழைய பொருளாளர்).

எனது குலதெய்வம் எம் ஊர் மக்களுக் கெல்லாம் எல்லை இல்லாத அருள் பாலித்துக் கொண்டிருக்கும் வேலணை பதி அமர் பெரிய புலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம் இன்று இந்த மாபெரும் ஒப்பற்ற விழாக் காணுவதை யிட்டு எல்லோரும் பேரானந்தம் அடைகிறோம்.

இதற்கு தாராள மனத்துடன் பாரிய உதவிகளைச் செய்த வெளிநாடுகளில் வாழும் அடியவர்கள் தொண்டால் எம் ஆலயத்தில் என்றும் எங்குமே இல்லாதவாறு ஒரே நேரத்தில் முழுத் திருப்பணி வேலைகளையும் செய்து இப்பெருவிழாக் காணக் கூடியதாக உள்ளது. இவற்றிற்கு எல்லாம் சிகரமாய்ப் போல் இன்றைய காலகட்டத்தில் இநத பாரிய திருப்பணி வேலைகளை செய்து முடித்துக் கொண்டிருக் கின்ற நிர்வாக சபையை குறிப்பாக பொரு ளாளர், தலைவர் ஆகியோரை நாம் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம். அவர்களின் அயராத உழைப்பாலும் நேரம் பாராத சேவையாலும் தான் இவ்வேலைகள் இவ்வளவு தூரம் சிறப்புற நடைபெற்று வருகின்றன. இப்பெரு விழாவோடு இனத்தைச் சூழ்ந்துள்ள இருளை அகற்றி நாம் எல்லோரும் நல்ல அமைதியான வாழ்வு பெற எம்பெருமானை வேண்டிக் கொள்வோமாக.

இந்த விழாவிலே முக்கியமாகக் குறிப்பிடவேண்டி உள்ளது இராச கோபுர கும்பாபிஷேகம். இதனைக் கண்டு கழிக்க எம் ஊர் மக்கள் கண்ட நீண்ட நாள் கனவு இன்று நனவாகுவது எல்லோருக்கும் இரட்டிப்பு ஆனந்தம் எம்பெருமானின் மீது எல்லை இல்லாத பற்றுக் கொண்ட "பிள்ளையார் விலாஸ்" உரிமையாளர் மறைந்த திரு சி.ம. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆலய வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் கொண்டவர். ஆலயம் ஒரு முழு ஆலயமாக காட்சியளிக்க வேண்டுமெனில் அதற்கு ஒரு இராசகோபுரம் அமைய வேண்டும் என எண்ணி தனது குடும்பததாருடைய முழுச் சம்மதத்துடன் அந்தப் பாரிய திருப்பணி வேலையைச் செய்யும் பொறுப்பை தனது மூத்த புதல்வன் 'பிள்ளையார் ஸ்ரோர்ஸ்" உரிமையாளர் திரு க. இராசதுரை அவர்களிடம் ஒப்படைத்து அதற்குரிய அடிக் கல்லை தானே முன்னின்றும் நாட்டி வைத்தார். அவருடன் சேர்ந்து அங்கு அடிக்கல் நாட்டும் பெரும் பாக்கியத்தை அந்த விநாயகப் பெருமான் எனக்கும் அருளினார். இன்று கும்பாபிஷே கத்தில் பங்குபற்றும் பாக்கியமும் பெற்றேன்.

வேலைகள் உடன் ஆரம்பமாகியது. கருங்கல்லால் தான் கட்டி முடிக்க வேண்டும் என எண்ணினார். கருங்கல்லில் படும் உளியின் ஓசை தினமும் கேட்டு பார்த்து அயலவர்கள் மகிழ்ந்தார்கள். வேலைகள் துரிதமாக இடம்பெற வேண்டும் என எண்ணிய திரு. இராசதுரை அவர்கள் நிர்வாக சபை தலைமைப் பொறுப்பை தானே ஏற்று சிலகாலம் நடாத்தி வந்தார். ஏனோ காலத்தின் நியதி அவர் திடீர் இறைவனடி அடைந்தார். வேலையை அவர் மைந்தன் திரு இரத்தினேஸ்வரன் அவர்கள் தொடர்ந்தார். ஆனால் காலத்தின் சூழ்நிலையும் நாட்டு நிலைமையாலும் வேலைகள் யாவும் ஸ்தம்பித்து விட்டன.

காலம் கனிந்தது நிர்வாக சபையின் முயற்சியால் பல புதிய திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. எல்லாம் நிறைவேறும் பொழுது இராசகோபுரம் மட்டும் இப்படியே இருக்கக் கூடாது என எண்ணிய கனடாவாழ் அடியவர்கள் மிகுதி வேலையை பூத்தி செய்து தருவதற்கு நிர்வாக சபை மூலம் அனுமதி கேட்டார்கள். அதன்படியே மிகுதி வேலைகளை தனது குடும்பத்தார் பங்களிப்புடன் அவர்களும் பங்கு கொண்டு வேலையைப் பூர்த்தி செய்ய பூரண சம்மதம் தெரிவித்தார். அது அந்த ஆண்டவன் அருளே. அதன்படி வேலைகள் யாவும் பூர்த்தியடைந்து இன்று இராசகோபுரத்துடன் மகா கும்பாபிஷேக விழாவை அடியவர்கள் யாவரும் கண்டு மகிழ நாமும் மகிழ்வுறுகிறோம்.

மேலும் முடிவுறாத வேலைகள் யாவும் இனிதே நிறைவு பெற எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகிறோம்.

நன்றி.

"நாம் சிற்றறிவு சிறுதொழில் உடையோம் ஆதலால் முற்றறிவு முற்றுத்தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி, பாவபுண்ணியங்களை உள்ளபடி அறிதலும் பாவங்களை ஒறுத்துப் புண்ணியங்களைச் செய்தலும் நம்மால் இயலாவாம்"

–ஆறுமுகநாவலர்.

# சைவ சமய அன்பர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்:-

சைவமும் தமிழும் கிளைகள் பரப்பி பெருவிருட்சமாக நின்று மற்றைய சப்த தீவுகளுக்கெல்லாம் நிழலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த மையப்பகுதிதான் வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம். இவ்வாலயத்தின் பெருமையும் சிறப்பும், அருட்பிரசாதங்களும் சொல்லில் அடங்காது. இவ்வாலயம் அன்றைய பெரும் கொடை வள்ளல்களால் மூலஸ்தானம், அர்த்தமண்டபம், சபாமண்டபம், கோபுரம் வரை கருங்கற்களினால் திருப்பணி செய்யப்பட்டு எங்கள் முன் கம்பீரமாக எல்லோர் மனத்தினையும் உருக வைக்கும் அருட் களஞ்சியமாக காட்சியளிப்பதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். இப்படியான பெரும் திருப்பணிகளை செய்வதற்கு முன் வந்தவர்களுக்கும், அவற்றை முன்னின்று நடாத்திய தலைவர், பொருளாளர், ஆகியோருக்கும் எல்லாம் வல்ல எம் பெருமான் நல்ல பாக்கியங்களையும் செல்வங்களையும் நல்கி உள்ளதைப் பார்க்கும் போது எமது உடம்பெல்லாம் மெய்சிலிர்க்கின்றது. அப்படியான பெரும் கருணை படைத்த உள்ளங்களை மனமார வாழ்த்தி அவர்களது பாதங்களை வணங்கி வாழ்த்துவதிலும் பெருமகிழ்வு அடைகின்றேன். மேலும் இவ்வாலயத்தை சுற்றி வர வாழ்ந்தவர்கள் பரம்பரை பரம்பரையாக ஒரு வித புலாலும் உண்ணாத சைவர்கள், சிவபூசைக்காரர்கள், ஏன் இவ்வாலயம் அவர்களுடைய பரம்பரைகளினால் பூசைகள் நடாத்தப்பட்டதும் வரலாற்றில் உள்ளது. 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து நாங்கள் யாவரும் கிராமங்களையும் வீடுவாசல்கள் கோயில்கள் எல்லாவற்றையும் விட்டுவிலகி யாழ்ப்பாணம் சென்ற போது இவ்வாலயம் மட்டும் தொடர்ந்து பூசைகள் நடைபெற்ற பெருமை அவ்வாலய அர்ச்சகருக்கு (கோயில் ஐயா) சாரும் அவர் இடம் பெயர்ந்து மண்கும்பான் பிள்ளையார் வரை வந்து திரும்பவும் எம்பெருமான் அவரை திருப்பி அழைத்து விட்ட அற்புதத்தை யாவரும் அறிவார்கள். சகல செல்வங்களும் ஒன்று சேர்ந்துள்ள வேலணை எனும் புண்ணிய பூமியில் தற்போது சில விசமிகளினால் எமது சைவத்திற்கும் கிராமத்திற்கும் பெரிய இடையூறுகள் ஏற்படுவதை நீங்கள் அறிவீர்கள். கோமாதா எங்கள் குலமாதாவாகிய பசுக்களையும் இடபங்களையும் வருத்தி, அதை வெட்டி உண்பதை எந்த இந்துக்களாலும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அப்படி உண்பவர்கள் சைவ சமயத்திற்கு அப்பாற்பட்டவர்கள், அவர்களுடைய வீட்டில் கூட சுவாமிஅறையே தேவையில்லை. ***தரித்திரம் குடிகொண்டு வாழ்வர்.*** அடுத்த நாள் தேநீருக்கு கூட வழியில்லாமல் அலைவர். இவற்றை நாங்கள் நேராக கண் கூடாகவே காண்கிறோம். அப்படியான செயல்களுக்கு என்னருமை சகோதரர்களே நீங்கள் உதவி வழங்கவோ ஒத்துழைப்பு புரியவோ, கண்டும் காணாமல் நடக்கவோ, வேண்டாம் என்று இப்புனித நன்னாளிலே பணிவாகவும் அன்பாகவும் வேண்டுகின்றேன். உங்களுடைய குடும்ப நன்மைக்காகவே நாங்கள் வேண்டுகின்றோம். எங்கள் குடும்பத்திற்கோ, எங்களுக்காகவோ ஒரு சிறு துளி கூட தேவையில்லை. எல்லாம் அந்தப் பரம்பொருள் தந்துள்ளார். நன்றி வணக்கம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

கு. கங்கை வேணியன் J.P
பசுக்கள் இடபங்கள் பாதுகாப்பு இணையம்
தலைவர் சத்திரம், ஞானவைரவர் தேவஸ்தானம்.

# இதயம் கனிந்த நன்றிகள்

வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்ட, மகாயாக, நூதன இராஜகோபுர, மகாகும்பாபிஷேக பெருவிழா பல திருப்பணி வேலைகள், நிறைவுற்று பதினைந்து வருடங்களின் பின் பங்குனிமாதம் 17ஆம் நாள் (30.03.2005) புதன்கிழமை, மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மண்டாலபிஷேக பூர்த்தி விழாவும் சிறப்பாக நடைபெற்றது இந்நன்னாளிலே ஆலயத்தின் பாரிய திருப்பணிகள், ஒவ்வொன்றையும், ஆலய நிர்வாகத்தினர் அணுகிக் கேட்காமல் தாங்களாகவே முன் வந்து அத்தனை திருப்பணிகளையும், செய்யவேண்டும் என மனம் உவந்து செய்த அத்தனை உள்ளங்களையும், நாங்கள் நினைவு கூராமல் இருக்க முடியாது.

கடந்தகால கும்பாபிஷேகத்தின் போது கருங்கல்லினால் ஆக்கப்பட்ட வியாழவரியுடன், பூர்த்தியடையாமல் இருந்த கோபுரவேலைகள் ஐந்து தளங்களையும் கொண்டு அமைக்கப்பெற்று புதுப்பொலிவுடன், கம்பீரமாக காட்சியளிக்கிறது.

இக்கோபுர வேலைகள் பூர்த்தியாக நிதியுதவி வழங்கிய யாழ்ப்பாணம், பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு க. இரத்தினேஸ்வரன் அவர்களுக்கும், முன்னாள் பரிபாலனசபைப் பொருளாளர், திரு.ந.பாலச்சந்திரன் அவர்களுக்கும் வெளிநாட்டிலுள்ள, எமது கிராம அடியார்களுக்கும், இக்கோபுரத்தின் கட்டுமானத்தை சிறப்பான முறையில் நிறைவேற்றி உதவிய கோபாலரட்ணம் குழுவினருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள் .

கோபுரம் முன்னுள்ள மணி மண்டபம், புதிதாக அமைக்கப்பட்டு கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. இதற்கு நிதியுதவி வழங்கிய வெளிநாட்டிலுள்ள எமது கிராம அடியார்களுக்கும், இம்மண்டபத்தின் கட்டுமானத்தை நிறைவேற்றித் தந்த இணுவில் சிவபாதம் குழுவினருக்கும், எமது இதயம் கனிந்த நன்றிகள்.

கோபுரம், மணிக்கூட்டுக் கோபுரத்தை சுற்றி பிளேட் வேலைகளும், யாகமண்டபம், வசந்தமண்டப அருகிலுள்ள அறை, அர்ச்சனை அறை, மடப்பள்ளியறை, அலுவலக அறை, என்பன புதிதாக நிர்மாணிக்கப்பட்டு பிளேட் போடப்பட்டுள்ளது. இதில் யாக மண்டபம் அமைக்க, நிதிஉதவி வழங்கிய வேலணை மேற்கு தா. குலசேகரம் குடும்பத்தினருக்கும், மற்றைய வேலைகளுக்கும், நிதி பற்றாக்குறையாக இருந்த போதும் ஓரளவு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இதற்கு வெளிநாட்டு, உள்நாட்டு அடியார்கள் நிதிஉதவி வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன்

எல்லோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள், இத்திருப்பணி கட்டுமான வேலைகளை அமைத்து தந்த அராலியூர் நவரட்ணம் குழுவினருக்கு எமது நன்றிகள்.

ஆலய சுற்றுப்பிரகார அறைகள், சுவர்கள், முன்னர் சுண்ணாம்பினால் கட்டப்பட்டு பழுதடைந்த நிலையில் காணப்பட்டது. இது முற்றுமுழுதாக இடித்து, சுற்றிவர சீமெந்தினால் கட்டப்பட்டது. இதற்கு நிதியுதவி வழங்கிய மு.குமாரசாமிப்பிள்ளை குடும்பத்தினருக்கும், இந்தக் கட்டுமான வேலைகளை அமைத்துத் தந்த வேலணையூர் பாஸ்கரன் குழுவினருக்கும் எமது நன்றிகள்.

ஆலயத்திற்கு திருக்குளம் சரியான இடத்தில் இல்லாத குறை பல ஆண்டுகளாக காணப்பட்டது. இதை நிவர்த்தி செய்யும் முகமாக புதிய திருக்குளம் ஒன்றை அமைப்பதற்கு காணிவசதி வழங்கிய அமரர்களான பேரம்பலம் பராசத்தி (அப்பாத்துரை வாத்தியார்) குடும்பத்தினருக்கும் ஆலயத்திற்கு சிறந்த முறையில் வெள்ளைக்கல்லினால் திருக்குளம் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கிய முருகேசு செல்லம்மா குடும்பத்தினருக்கும், அத்திருப்பணிகளின் கட்டுமானத்தை நிறை வேற்றித் தந்த ஏழாலையூர் இராசரெட்ணம் (சின்னக்கிளி) குடும்பத்தினருக்கும் எமது நன்றிகள்.

ஆலயத் திருக்குளத்தில் விநாயகப் பெருமான் வீற்றிருந்து தீர்த்தம் ஆடுவதற்கு ஓர் பண்டிகையுடன்கூடிய மண்டபத்தையும், இளைப்பாறும் மண்டபத்தையும் அமைக்க நிதியுதவி வழங்கிய முன்னாள் அதிபர் அ. வைரமுத்து குடும்பத்தினருக்கும் இதன் கட்டுமானத்தை நிறைவேற்றிய அராலியூர் கோபாலரட்ணம் குழுவினருக்கும் நன்றிகள்.

பல ஆண்டு காலமாக, தேர்த் திருவிழாவின்போது விநாயகப் பெருமான் கட்டுத்தேரில் பவனிவந்தார். அந்தக்குறையை நீக்கும் பொருட்டு வேலணை மேற்கைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசிப்பவருமாகிய திரு ந. ஜவகர்ல ல் நேரு குடும்பத்தினர் அழகியசித்திரத் தேர் ஒன்றை பல இலட்ச ரூபாய் செலவில் நிர்மாணித்து வருகிறார்கள். இந்த வருடம் இந்தத் திருத்தேரின் வேலைகள் நிறைவுபெறும் என்று எண்ணியிருந்தோம். எதிர்பாராத நிலையில், பூத்தியடையா விட்டாலும், மிகவிரைவில் திருத்தேர் வேலைகள் நிறைவு பெறவேண்டும் என விநாயகப் பெருமானை வேண்டி அத்திருப்பணி வேலைகளுக்கு நிதியுதவி வழங்கிய திரு.ந.ஜவகர்லால் நேரு குடும்பத்தினருக்கும், அதை நிர்மாணித்துத் தந்த வட இலங்கையின் புகழ்பெற்ற சிற்பாசாரியார் அராலியூர் அமரசிங்கம் குழுவினருக்கும் எமது நன்றிகள்.

திருத்தேர் வேலைகள் நடைபெறும் போது அதற்கு இருப்பிடம் தேவையென எண்ணியபோது தேர்த்திருவிழா உபயகாரர்களில் ஒருவரும் வேலணை மேற்கைச் சேர்ந்தவர்களுமாகிய திருமதி, பாக்கியலெட்சுமி மயில்வாகனம் சார்பாக தற்போது லண்டனில் வசிக்கும், திருவிளங்கம்

குடும்பத்தினர் இத்திருத்தேர் இருப்பிடத் திருப்பணியை நிறைவேற்றி வருகிறார்கள். அவர்களுக்கும், திருப்பணி கட்டுமான வேலைகளில் பங்காற்றிய வேணைமேற்கு பாஸ்கரன் குழுவினருக்கும் எமது நன்றிகள்.

ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு ஆலயச் சூழலில் நன்னீர் இல்லாமையை நீக்கும் பொருட்டு, மகோற்சவ காலங்களில் பதினொரு தினங்கள், தண்ணீர்ப் பந்தல்களை அமைத்துத்தாக சாந்தி செய்துவரும் வேலணைமேற்கு திரு க.சிவசரணம் குடும்பத்தினர் ஆலயத்தில் இருந்து ஏறத்தாழ 1500 அடி தூரத்திலிருந்து ஆலயத்தின் வடக்குப் பக்கம் உள்ள நன்னீர்க் கிணற்றில் இருந்து நன்னீரை ஆலய பூந்தோட்டத்தில் 1000 கலன் கொள்ளளவு உடைய நீர்த்தாங்கி அமைத்து இரண்டு மோட்டார் உதவியுடன் நீரைப்பெற்று ஆலயச்சூழலுக்கு விநியோகித்து வருகிறார்கள். இந்த வகையில் ஆலயத்திற்கு நன்னீர் இல்லாத பெரும் குறை நீங்கி விட்டது. இப்பாரிய கைங்கரியத்தை நிறைவேற்றிய திரு க சிவசரணம் குடும்பத்தினருக்கு எமது நன்றிகள்.

ஆலயத்தைச் சுற்றிவர ஏறத்தாழ 500 லோட் ஊரி போட்டு, அதற்கு மேல் மணலிட்டு செப்பமிடப்பட்டுள்ளது. அந்த வகையிலே எமது கிராம ராக்றர் வைத்திருக்கும் அடியார்களுக்கும் அதை செப்பனிடுவதற்கு உதவிபுரிந்த ஆலயபரிபாலன சபையினருக்கும் எமது நன்றிகள்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆலயத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் சிறந்தமுறையிலே வர்ணவேலை செய்து அலங்கரிப்பு செய்த அஜந்தன் குழுவினருக்கும் எமது நன்றிகள்.

இப்பாரிய திருப்பணிகள் நிறைவேற்றித்தந்த ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட நன்றிகள் தெரிவித்தாலும் வெளிநாட்டு அடியார்கள். லண்டன், கனடா, பிரான்ஸ் ஜேர்மனி, சுவிஸ், ஆகியநாடுகளில் தாங்களே சபைகளை அமைத்து அதனூடாக எங்களுக்கு பல இலட்ச ரூபாயினைச் சேர்த்து திருப்பணி வேலைகளுக்கும், குப்பாபிஷேக விழாவிற்கும் அனுப்பியிருக்கிறார்கள். அந்த வகையில் வெளிநாட்டில் உள்ள ஒவ்வொரு அடியார்களுக்கும் நாங்கள் தனிப்பட்ட முறையிலே நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

கும்பாபிஷேக பெருவிழாவிற்கு நிதியுதவி வேண்டி எமது கிராமமக்கள் இலங்கைத் தீவின் எப்பகுதியிலிருந்தாலும் கூடுதலாக ஒவ்வொருவரையும் நேரடியாக சந்தித்தும், தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டும் நிதியுதவி கேட்டபோது பெருந்தொகைப் பணத்தை வாரி, விழா சிறப்பாக நடைபெற உதவியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் எமது நன்றிகள். அத்துடன் கொழும்பு நகரில் இருந்து ஆலயத்தின் பல்வேறு அபிவிருத்தி வேலைகளிலும், கும்பாபிஷேக செயற்பாடுகளிலும் பல வழிகளிலும் உதவிவருகின்ற திரு. ந. கேசுநாதன், திரு. சி. குகநாதன் திரு.ச.பாலேந்திரன், திரு .ம. அருந்தவநாதன் அவர்களுக்கும், அவர்களோடு சார்ந்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

இக்கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா கிரியைகளில் பங்கு பற்றிய பிரதம குருக்கள் சிவஸ்ரீ பா.பஞ்சாட்சர சிவாச்சாரியார் அவர்களுக்கும் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேச்சுரர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ பா.வை. பாலசுந்தரக்குருக்கள் அவர்களுக்கும், அவர்களுடன் உதவியாக பங்காற்றிய ஏனைய சிவாச்சாரியப் பெருமக்களுக்கும், இவ்விழாவை முன்னின்று சிறப்பாக நடத்திய பிரம்மஸ்ரீ வை. சபேஸ்வரசர்மா அவர்களுக்கும், ஆலய பிரதமகுருக்கள், சிவஸ்ரீ.இ. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களுக்கும் ஏனைய அந்தணப் பெருமக்களுக்கும் எமது நன்றிகள்.

கும்பாபிஷேக தினத்தன்று தினக்குரல், உதயன் பத்திரிகைகளில் சிறப்பிதழ்கள் வெளியிடுவதற்கு உதவியவர்களுக்கும் நிகழ்ச்சிகளை நேரடியாக தொகுத்து வழங்கிய யாழ் சேவை, சக்தி ஒளிபரப்பு சேவையினருக்கும் எமது நன்றிகள்.

கும்பாபிஷேக பெருவிழா சிறப்பாக நடைபெற அல்லும் பகலும் பாடுபட்ட ஐங்கரன் அடியார்களுக்கும், பொருள் உதவி, சரீர உதவி, வாகனஉதவி நல்கிய அனைவருக்கும், கும்பாபிஷேக தினங்களில் மதியம், மாலை உணவு வழங்கிய அன்னதான சபைத்தலைவர் திரு. சி. த மகாலிங்கம் மற்றும் ,அச்சபை நிர்வாக உறுப்பினர்களுக்கும், தாகசாந்தி வழங்கிய தி.சிவசரணம் குடும்பத்தினருக்கும் எமது நன்றிகள்.

உங்கள் கரங்களில் தவழ்கின்ற கும்பாபிஷேக சிறப்புமலர் சிறப்பான முறையில் அமைய இடைவிடாது உழைத்த மலர் குழுவினரான முன்னாள் அதிபர் சைவப் புலவர் திரு. மு. திருஞானசம்மந்த பிள்ளை அவர்களுக்கும், எமது ஆலய, பரிபாலன சபைத்தலைவர் திரு. பொ. அருணகிரிநாதன், திரு. ந. பாலச்சந்திரன், திரு. இ. யோகேஸ்வரன் (ஆசிரியர்) திரு. ப. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், மலருக்கு குறித்த நேரத்தில் ஆக்கங்கள் தந்துதவியவர்களுக்கும், மலரை அழகுற அச்சிட்டுத் தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.


எல்லாவற்றிற்கும் மேலாக, எங்களோடு தோளோடுதோள் நின்று உதவிய எமது பரிபாலனசபை உறுப்பினர்கள் எல்லோருக்கும், எமது நன்றியைத் தெரிவித்து, எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பதார விந்தங்களை வணங்கி பேரருள் பெறுவோமாக

நன்றி

திரு. மு. மகேந்திரன்,
பொருளாளர்,
ஆலய பரிபாலன சபை.



வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசைவிளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்



பதிப்பு: கரிகணன் பிறிண்டேர்ஸ், 424 காங்கேசன்துறை சாலை. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 2717,4590123